நிமிளை; 8. துரைச்சி நிமிளை.

நிமீலனம், கண்ணிவைப்பு, twinkling of the eye; 2. மரணம், death.

நிமேசகம், மின்மினிப்பூச்சி, firely, glow-worm.

நிமேஷவர்த்தமம், கண்ணின் இமைச்சந்தில் வாயு நிற்கும்போது, ஓயாது இமைகளைக் கொட்டி ஒரு வேளை மூடவும், திறக்கவும் செய்யுமோர் வகைக் கண்ணோய், an eye disease characterised by constent winking of the eyelids owing to the incarceration of the deranged vayu within the nerves or veins controlling their winking.

நிமேஷா, அடிக்கடி கண் சிமிட்டல், winkling very often.

நிமை, கண்ணிமை, twinkling of the eye; 2. இமைப் பொழுது, as much time as taken for twinkling of an eye-moment; 3. கண் இரைப்பை, eye lid.

II-48

நிமைக்கழலை, கண் இரப்பையில் வரும் கட்டிகள், a tumour in the eyelid — Blepharoneus.

நிமைக்கொட்டல், கண் இரப்பை யை மாறிமாறி வேகமாக மூடவும் திறக் கவும் செய்தல், closing and opening the eye lids alternatively and also rapidly — nictating; 2. சாடை காட்டல், giving a hint or intimation by the motion of eyelids.

நிமைதுனம், புணர்ச்சியினின்று விலகி நிற்றல், obtaining or refraining from copulation.

நிமைத்தடிப்பு, இமைத் தடிப்பு, the morbid thickening of an eyelid — Blepharopachynsis.

நிமைத்தொங்கல், கண்இரைப்பை வாயுவால் செயலற்றுத் தொங்கல், drooping of the upper eyelid from paralysis.

நிமைமூடல், கண் இரப்பை மூடல், shutting or closing of the eyelids.

நிமையழற்சி, கண் இரப்பைக்குக் காணும் அழற்சி, inflammation of the eyelids — Blepharitis.

நிமையாட்டம், கண் இரப்பையின் ஆட்டம், consistant movement of the muscles of the eyelid.

நிமையொட்டல், கண் இரப்பை களைச் சேரத்தைத்தல், to stitch the upper and lower lids together — the plastic surgery of the eye lids — Blepharoplasty.

நிமைவீழ்ச்சி, கண் இரப்பை செயலறல், paralysis of an eyelid — Blepharoplegia.

நிம்தேசன், கொத்தான், air creeper — Cassytha filiformis.

நிம்பகம், வேம்பு, margosa tree — Azadiracta indica.

நிம்பக்காய், வேப்பங்காய், margosa fruit; 2. எலுமிச்சங்காய், lime fruit.

நிம்பங்காய், வேப்பங்காய், margosa fruit.

நிம்பசேதம், முடக்கொத்தான், palsy curer — Cardio spermum halicacabum.

நிம்பச்சளி, வேப்பம் பிசின், resin of gum of margosa tree.

நிம்பச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, juice of lime fruit or margosa fruit.

நிம்பதரு, வேப்பமரம், margosa tree; see நிம்பகம்; 2. எலுமிச்சை மரம், lime tree — Citrusmedica (acida).

நிம்பதேசி, முடக்கொத்தான், see நிம்பதேசம்.

நிம்பதைலம், வேப்பெண்ணெய், margosa oil; 2. வேப்பெண்ணெய்த் தைலம், a medicaed oil prepared with the margosa oil as the chief ingredient along with other drugs.

நிம்பத்தோல், வேப்பம்பட்டை, bark of margosa tree.

நிம்பநெய், வேப்பெண்ணெய், margosa oil; 2. வேப்பெண் ணெயினின்று கசப்பெடுத்த நெய், ghee extracted from the margosa oil by getting rid of its bitterness — Margo ghee.

நிம்பபஞ்சகம், வேப்பமரத்தின் ஐந்து பாகங்கள் அதாவது இலை, பட்டை, பூ, காய் அல்லது பழம், வேர், the five products or parts of the tree — root; bark, leaf, flower and fruit.

நிம்பபத்திரி, வேப்பிலை, margosa leaf.

நிம்பப்பழம், வேப்பம்பழம், margosa ripe fruit; 2. எலுமிச்சம்பழம், lime fruit.

நிம்பப்பாசி, வேப்பம்பாசி, an acquatic plant — Moschara corallina.

நிம்பப்பாசிகம், எலுமிச்சம் பழச்சாறு juice of lime fruit.

நிம்பப்பூ, வேப்பம்பூ, margosa flower.

நிம்பமரம், வேப்பமரம், margosa tree, see நிம்பதரு.

நிம்பமேற்புல்லுருவி, வேம்பின் புல்லுருவி, a parasitic plant growing on margosa tree — Margosa parasite.

நிம்பமோலி, வேப்பம்பட்டை, bark of margosa tree.

நிம்பம், வேம்பு, margosa tree; 2. எலுமிச்சை, lime tree.

நிம்பயிலை, வேப்பிலை, margosa leaf; 2. கறிவேப்பிலை, curry leaf used in preparation of food — Murraya koenigi.

நிம்பயீர்க்கு, வேப்பிலையீர்க்கு, the leaf stock of margosa tree.

நிம்பவித்து, வேப்பங்கொட்டை, margosa seed.

நிம்பழச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, juice of margosa fruit or lime fruit.

நிம்பாதிச்சூரணம், நிலவேம்பு ஆதியாக மற்ற கடைச் சரக்குகளுடன் சேர்த்து விஷசுரத்துக்குக் கொடுக்கும் (ஆ.வே.) சூரணம்.an Ayurvedic powder preparation containing the powder of ground neem as chief ingredient useful for fevers.

நிம்பிச்சி, சர்க்கரை வேம்பு, sweet margosa so called from its bark being sweet after some years.

நிம்பியம், வாழை, plantain tree — Musa paradisiaca.

நிம்புகம், எலுமிச்சை, lime — Citrus medica.

நிம்பெண்ணெய், வேப்பெண்ணெய், margosa oil

obtained from the seeds of the tree.

நியக்கி, மான் deer, 2. நியக்கு, which see

நியக்கியம், நரிமுருங்கை, tranquebar genderussa — Justicia tranque barensis.

நியக்கு, நாளவம், elder wood tree wine — Leea sambucena.

நியக்குரோதம், ஆலமரம், banyan tree — Ficus bengalensis.

நியங்கு, பொன், gold.

நியதி, கிரமம், fixed order of things; 2. ஊழ், destiny, fate; 3. செய்கடன், religious or moral duty;4. தத்துவம், one of the thirty six principles in mystic philosophy.

நியதீசம், சுனைப்புன்கு, rusty soap nut — Erioglossum adule.

நியதேந்திரியன், இந்திரியங்களை அடக்குபவன், one who suppresses the five senses. one restraining his passions.

நியமம், நீர்முள்ளி, water thistle — Barleria longifolia; 2. இடம், place, location, 3. ஒவ்வொரு வரும் அனுசரிக்க வேண்டிய கடமைகள், certain minor duties to be observed by every man; 4. செய்கடன், moral obligation or duty; 5. முறைமை, established course rite or ceremony; 6. அஷ்டயோகத் தொன்று, (in philosophy) one of the eight stages of yoga. i.e. the second stage of yoga. 7. மதக்கொள்கை, religious observances, a rule or precept laying down or specifying something otherwise optional; 8. மனவடக்கம், restraint of the mind. 9. யோகாப் பியாசத்தில் இயமம் என்பதைத் தவிர்த்து மற்ற முறைகளை அனுசரிப்பது, any act of voluntary penance or meritorious piety in yoga practice other than yamam; restraint of appetite especially a lesser vow or minor dependant on external condition, not so obligatory as இயமம்; 10. உலோகங்களில் அவைகளில் முக்கியமாக இரச முறையில் அனுசரிக்க வேண்டிய கோட்பாடு, a process applied to minerals especially to quick silver.

நியமனம், வேம்பு, margosa.

நியமித்தல், பிறப்பித்தல், causing to originate, bringing into being.

நியரசம், see நியரதம்.

நியரதம், வேம்பு, margosa tree.

நியா, சிவதுளசி, Shiva's basil — Basilicum alba.

நியாக்கியம், பொரியரிசி,fried rice.

நியாக்குரோதம், see நியக்கு ரோதம்.

நியாசதி, அனிச்சை, snake jasmine — Rhinacanthus communis.

நியாசம், முணுமுணுத்தல், uttering words with a low voice and compressed lips — muttering; 2. அங்கநியாசம், கரநியாசம். இது அனுஷ்டான முறை களைச் சேர்ந்தது, appropriation or the assignment or various parts of the body to tutelary divinities. while repeating incantations in the daily worship; 3. வேம்பு, margosa tree; 4. துறவு, renouncement.

நியாசிசம், a painless circular eruption of dark colour — Chloasma.

நியாதம், வேம்பு, margosa tree.

நியாயம், தர்க்கம், logical conclusion; 2. நையாயிகம், Nyaya philosophy one of the six schools of philosophy; 3. தரிசனம் அதாவது ஆத்மத்தின் தெய்வத் தன்மை யையும், மூலகாரணத் தையும், உலக விஷயத்தில் மாயையின் சம்பந்தமும் அதன் கோட்பாடுகளும், கடைசியாக அதினின்று விலகி பரமாத்மாவில் ஐக்கியப்படும் என்பதையும் உணர்த்தும் தத்துவம், the study of philosophy which teaches man the devine nature and origin of his immaterial part with unreality of corporeal enjoyments or worldly forms and which separating him during life from terrestrial objects secures him after death a final emancipation from existense and reunion with the universal spirit.

நியானம், பொதுவாக ஞானம், knowledge in general; 2. தத்துவஞானம், knowledge of a specific and religious kind derived from meditation and study of philosophy, 3. ஆண்

அல்லது பெண்ணின் பெயர், name of male or female especially among christians.

நியுத்தன், பொருளில் இச்சை யுள்ளவன், materialist; 2. பொருளாசையில் மனங்க விந்தவன், one engrossed in matter or material.

நியுப்பிசம், நோய், disease; 2. உப்பிசமில்லாமை, not shout but thin and slender; 3. வீக்கமின்மை, absence of swelling.

நியோதூற்றி, கடம்பு, cadamba tree — Nanclea cadamba alias N.purpurea

நிரகுள்ளி, நொச்சி, five leaved chaste tree — Vitex negundo.

நிர ச சாஸ்திரம், விளைதாதுவைப் பற்றிக் கூறும் நூல், the science which treats of the properties of mineral substances and their classifications — Mineralogy.

நிரசநூல், see நிரசசாஸ்திரம்.

நிரசபாஷாணம், விளைதாது வினால் ஏற்பட்ட விஷம், minoral poison.

நிரசம், ரசமற்றது, சாரமற்றது, juiceless,inorganic.

நிரசவஸ்து, தாதுப்பொருள், mineral substance.

நிரசவர்க்கம் தாதுவர்க்கம், mineral kingdom.

நிரசவிஷம் see நிரசபாஷாணம்.

நிரசவுப்பு, தாதுவுப்பு, mineral salt.

நிரசனம், வாந்தியெடுத்தல், vomiting.

நிரசன்னி.

நிரஞ்சத்திமூலி, நிலத்துளசி, ground basil Ocimum Prostatum.

நிரஞ்சனம், இரசகற்பூரம், Subchloride of mercury — Hydrargiri Subchloridum 2. ஞானக்கண், eye of wisdom; 3. உணவு கொள்ளாமை, abstaing from food.

நிரட்டிகா, கண்டங்கத்திரி, yellow berried night shade — Solanum jacquini.

நிரந்த நிரமற்ற exsanguini, colourless.

நிரந்தரம், குரங்கு monkey; 2. சமம் equality; 3. நெருக்கம் closeness.

நிரத்திரியம், பேடித்னம், impotency; 2. ஆண்மை யில்லாமை, destitute of manly power.

நிரபம், நீரற்றது, sapless ness; 2.சாறற்றது, devoid of juice.

நிரபி, மரமஞ்சள், tree turmeric — Coscinium fenestrutum.

நிரப்பலா, ஆசினிப்பாலா the bread fruit tree — Artocarpus incisa.

நிரம்பியபுட்பம், வாழைப்பூ, plantain flower.

நிரம்பியமரம் வாழைமரம், plantain tree — Musa paradisiaca; 2. தென்னை மரம், cocoanut tree — Cocos nucifera; 3. ஆலமரம், banyan tree — Ficus bengalansis.

நிரயாசிப்பால், see நிரியாசப்பால்

நிரா, தென்னங்கள்ளினின்று உண்டாகும் ஓர் தித்திப்பான மது, a sweet drink extracted from the cocoanut toddy — coconut wine.

நிராகம், உடலின்மை, not having a material body — Incorporeality.

நிராகாரநிலை, உண்ணாமலே நிற்கும் யோக நிலை, a stage of yoga in which the practising yogi remains abstaining from food and drink.

நிராகாரம், உணவின்மை, want of food; 2. உணவு வேண்டாமை, no appetite for food.

நிராசிராவம், மாதவிடாய் இரத்தம் படாமை; absence of discharge of blood.

நிராடகோலம், வேங்கைப்புலி man-eater.

நிராடபதி, உடும்பின் கொழுப்பு , fat of guana.

நிராதாரம், சுவாதிட்டானம், which see. One of the six regions of the body situated in genitals.c.f. ஆறாதாரம்.

நிராதேவி, வட்டத்திருப்பி, sickle leaf — Sidaacuta.

நிராபாதை, துன்பம் அல்லது வலியற்றது, not causing any ijury or pain — Painles ness.

நிராமச்சுரம்,(நிர் + ஆமச்சுரம்) ஆமாசயக் கெடுதியால் புசிக்கும் அன்னம் சீரணியாமல் அதிகபேதி, தாகம், நாவறட்சி முதலிய குணங்களைக் காட்டும் ஓர்வகைக் காய்ச்சல், இது 7 நாளைக்கு மேற்பட்ட சுரம், a kind of fever arising from gastricdisorders in the stomach. It is marked by indigestion, violent diarrhoea, thirst, dryness of the tongue etc. It continues for over seven days.

நிராமயசெயநீர், அண்டச் செயநீர், a pungent liquid extracted from a fowl's egg or from the foetus.

நிராமயதி, கலவியின் பந்தருகை giving pleasure by sexual union.

நிராமயம், நோயின்மை, absenee of illness; 2. சௌக்கியம், healthy; 3. பன்றி, hog.

நிராமயன், நோயற்றவன், one who is free from illness, healthy man, 2. கும்பிப்பவன், one who suppresses respiration; 3. யோகி, a yogi.

நிராமலம், விளா, wood apple tree — Feronium elephantum.

நிராமாதிசாரம், உஷ்ணபேதி, diarrhoea from excessive heat of the body; 2. சீதபேதி, dysentery.

நிராமாலு, விளாமரம், see நிராமலம்.

நிராமிலம், திராவகச் சத்தற்ற, non acid.

நிராலம்பம், that which has no support i.e. by which the mind's connection with the world has been removed and realisation of the infinite etablished.

நிரிகதபம், இருதயத்தின் உட்புறத்து சவ்விற்குக் காணும் அழற்சி, இது வாதசூலை, அதிதசுரம் முதலிய நோய்களிற் காணும், inflammation of the epithelial lining of the heart (endocardium) — Endocarditis. It is generally associated with acute rheumatism and febrile diseases.

நிரிகதாபனரோகம், முட்டையின் வெள்ளை அம்புலியைப் போன்ற திரவம் யோனியி லிருந்து வெளிப்படும் ஓர் நோய், a whitish viscid discharge like the white of an

egg from the vagina and uterine cavity — Leucorrhoea.

நிரிகம், தாமரைக் காயின் அல்லது இருதயத்தின் உட்புறத்து சவ்வு, the membrane lining the interior of the heart — Endocardium.

நிரியசம், வேம்பு, margosa or neem tree — Azadirachta indica.

நிரியம், தினை, Italian millet — Panicum italicum.

நிரியாசப்பால், எரிகாசு, java storax — Althingia excelsa, See நெரியாசிப்பால்.

நிரியாசம், மராமரம், Indian dammar, black dammar — Shorea robusta; 2. ஓர் பிசின், gum or resin of Engnia racemosa; 3. மரத்தின்பால், Exudation from tree as சால நிரியாசம், அசுவகரண நிரியாசம், which means shorea resin; 4. பூண்டின்பால் அல்லது ரசம், juice of plants resin, milk any thick fluid substance from plants, see நெரியாசிப்பால்.

நிரியானக்குறி மரணக்குறி, symptoms of death.

நிரியாண திசை, சாவுங்காலம், period of death.

நிரியாணம், மரணம், death; 2. பிறவி நீங்கல், freedom from birth.

நிரீட்சணம், பார்வையின்மை, blindness; loss of sight.

நிருகம், மானிடருக்கடுத்த வியாதி, diseases peculiar to human beings — Endemic.

நிருக்கிட்டுக்கொடுத்தல், மருந்தை அளவிட்டுக் கொடுத்தல், giving medicine in proportionate doses.

நிருக்கிரம், (நிர் + உக்கிரம்) கொடுமையின்மை, absence of violence, non-violent; 3. உக்கிர மற்றது, non-malignant as in fever, tumour etc.

நிருச்சுவாசம், மூச்சின்மை, absence of breath; 2. மூச்சடக்கம், suppression of breath; 3. மூச்சொடுக்கம், suspension of breath.

நிருதிதா, கோடாசூரி, a virulent mineral poison.

நிருதிரம், குரத்தம் அதாவது இரத்தமின்மை, (நிர் +

உதிரம்), bloodless ness — Anemia.

நிருத்தக்கண்டம், மூச்சுவிட முடியாமை, having the breath obstructed; suffocated 2. தொண்டை அடைப்பு; obstruction in the throat.

நிருத்தகுதம், ஆசனச் சுருக்கம், constriction of the anus stricture of the rectum;contraction or obstruction the anus. In this cathetars should be used or inserted in the same way as in case of urethra.

நிருத்தப்பிரகாசம், வாயுவினால் இலிங்க மணிக்கு மேலாக இழுத்த முன் தோல் அம்மலரில் பிகுவாக பிடித்து அதனால் கீழுக்குத் தள்ள முடியாமலும், மூத்திரத் தாரையை நீர் வெளிவராது அழுத்தியும் வலியை யுண்டாக்கி துன்பத்தைக் கொடுக்கும் ஓர் நோய், the prepuce affected by deranged vayu when once drawn quite behind the glans penis cannot be drawn down to its original position owing to its contraction by which the passage of the urethra is obstructed and the emission of urine is completely stopped — Paraphimosis, see நிருதி மொய்த்தல்; 2. மேக சம்பந்தத்தினால் மூத்திரத் தாரை அடைப்பட்டு, அதனால் சிறுநீர் வெளிவராது வருத்தத்தையும் வலியையும் உண்டாக்கும் ஓர் நோய், obstruction to the free passage of urine due to the abnormal narrowing of the urethra either from contraction or from deposit of abnormal tissue. This condition is attributed to venereal or syphilitic causes.

நிருத்தப்பிரசவம், பெண்ணின் யோனித் தாரையில் கழலை யாவது தடுத்தும் அல்லது மேற்படி தாரைச் சுருக்கம் அடைந்தும் இருப்பதால் கருப்பிண்டம் வெளிவர முடியாது கஷ்டப் படும் பிரசவம், child birth which is attended by some mechanical hindrance as from a tumour or a contracted parturient cannal — Obstructed labour.

நிருத்தமணி, வாயுவினால் ஆண்குறி முனைத்தோல் சுருக்கமடைந்து அதனால் மேலுக்குப் போகாமல் துன்பத்தையும், வலியையும் உண்டாக்கும் ஓர் நோய், இதனால் மூத்திரம் சன்னமாக இறங்கும். a disease in which the foreskin of the penis becomes contracted and consequently it cannot be drawn backwards without much pain and difficulty. In Sanskrit it is called பரிவர்த்திகம் — Phimosis. seeநிகுதிமுருத்தல் நோய்.

NOTE: Even if it is drawn behind the head of the penis it takes the form of a knotly growth hanging down wards.

நிருத்தமண்டலம், iris.

நிருத்தம், எந்த தாது பற்பமாக செய்யப்படுகிறதோ அந்தத் தாதுவை எவ்வித உபாயத் தினாலும் அப்பற்பத்தினின்று பிரித்தெடுக்கக் கூடாமை, the impossibility of eliminating by any contrivance or means. the element from the calcined compound of which it formed a component part.

நிருபாதி, வருத்தம் அல்லது வலியின்மை absence of pain or suffering.

நிருபாதிகம், உபாதியில்லாமை, freedom from secularities.

நிருமலம், பால் துத்தம், white vitriol — Sulphate of zinc.

நிருமாலியம், கூவிளம், garlic pear — Crataeva religiosa (nurvala).

நிருமிதி, நிருவானம், nakedness.

நிருமூலி, நிர்மூலி,see நீர்மூலி.

நிரும்போன், இரும்பு, iron — Ferrum.

நிருவாகசக்தி,power of retension.

நிருவாகம், complete realisation.

நிருவாணதீட்சை, சிவதீட்சை மூன்றில் ஒன்று, the last of the three introductory rites & cermony of intiation by a spiritual Guru according to Saiva system.

நிருவாணம், 1. அம்மணம், nakedness, quite naked — Inpuris naturalibus.

2. அமைதி, absolute repose; freedom from disturbance or agitation.

3. மௌன நிலை, quietude of an ascetic.

4. அபேத நிலை, indifference to pain or pleasure insensibility to bodily or mental pain — Stoicism.

5. ஆத்ம விமோசனம், (in Philosophy) emancipation of the soul.

6. ஆத்ம லாபத்தைப்பற்றிய புத்தமதக் கொள்கை, (In Budha Philosophy) a term used for final emancipation from matter and reunion with the deity.

7. நிவிருத்தியாலும் உண்மை அறிவை அடைவதினால் உண்டாகும் ஆத்ம விமோசனம், the final emancipation conferred upon the soul by the right apprehenson of truth.

8. விதேகமுத்தியைப் பற்றிய ஜைன்ய அல்லது சமண மதக் கொள்கை, (In Jain philosophy) the highest state of bliss to which a man is exalted by meditation and renunciation.

9. நீதிமுறை பிசகாது தியாகத்தை மேற்கொண்டு நடத்தலினால் ஏற்படும் ஆத்ம விமோசனம், (in Moral Philosophy) the transcendant perfections of conduct and self mortification leading one to the spiritual goal.

நிருவாணி, சக்தி, the Universal energy represented in the form of a naked woman; 2. தேவிதச வித்தைகளிலொன்று, one of the ten active powers of the female energy or deity.

நிருவாணி பூண்டகிண்ணி, அப்பிரகத்தில் சத்தெடுத்து அதை உருக்கிச் சாய்த்து வார்த்த கிண்ணி, அப்பிரகக் கிண்ணி, micadish, which is made from the essence of mica by melting it and casting in a mould.

நிருவாலி, காட்டுப்பூவரசு, false fern tree — Folicium decipiens.

நிருவிகற்பசமாதி, சவ்விகற்ப சமாதி முற்றி அருளம் மையால் அறிவிக்கப்பட்ட அருளாளன் ஆகிய அப்பனை அறிந்த ஞான்றே சிவ தத்துவங்களும் அவற்றின் செயற்கைகளும் நன்கு விளங்கப் பெற்று, அந்தப் பரம்பொருளைக் கூடி நின்று விட்டுப் பிரியாது மகிழ்வதாம், a state of ecstacy in which one obtains wisdom by the grace of the diety and enjoys the bliss by the union with the almighty.

நிருவிகற்பசமாதி, தன்னை மறந்து தூக்கமுறும், மயக்கம்போல பிறர்சத்தம் காதிற் கேளாது ஐம்புலனும் ஒடுங்கி, சித்தமானது பூரணத்தில் இலயித்திருக்கும் ஓர் யோக நிலை, விவகாரத்தாலே உலகமே பொய்யென்று உணர்ந்து உலக பாசத்தைத் தள்ளி நிற்பதினால் அடையும் சைதன்யநிலை, that state of perfect and spiritual ecstacy experienced by a sitting yogi, in which he remains in audible to the surrounding disturbances beig absorbed in eternal bliss. Saitanyam (சைதன்யம்)is a stage where nothing exists but the trasformation of mental consciousness in the form of Atman (Soul). It is an abstract meditation.

நிருவிகற்பதோஷம்,

நிருவிகற்பமாதல், விவகாரத்தாலே உலகமே பொய்யென்று தனக்குள் நினைத்து உலக பாசத்தைத்தள்ளி சைதன்ய நிலையை அடைதல், that state of insensibility to one's own surroundings, arrived at by a practising yogi by renunciation being appraised of the supreme knowledge that the material world is false. This stage can only be acquired by those who altain super natural illumination without the aid of physical or mental organs.

நிருவிகற்பவாழ்க்கை, மவுனம் சாதித்தல், to remain silent.

நிருவிஷப்பாம்பு, நஞ்சு இல்லாத பாம் பு, serpent with poison.

நிருவிஷம், விஷமற்ற ஓர்வகை நாபிக்கிழங்கு, இதற்கு வடமொழியில் நிர்பிஸி என்றும், அரபிபாஷையில் ஜாத்வார் என்றும் சொல்வதுண்டு, இது ஓர் கடைச்சரக்கு, வடசீனத்திலிருந்தும், இமயகிரிக்கு அப்பாலிருந்தும் ஏற்றுமதியாகும், இதற்கு சீமை சாத்துவார் என்றும் பெயர்; இது ஓர் புல் செடி, இது முளைத்திருக்கும் இடத்தில் நாபி முதலிய விஷப்பூண்டு முளைத்தால் இதன் சக்தியால் விஷத்தன்மை மாறிப்போம், இது ஐதராபாத் பம்பாயில் விலை சரசமாயும், சென்னை பட்டணத்தில் ஏற்றமாயுமிருக்கும், ரூபா எடை 1 — 10 ரூபாய் போலி சரக்கும்

விற்பார்கள், இது உளுக்குந் தன்மையது, சரியான கசப்பாயிருந்தால் உளுக்காது. இது நரம்பாதிகளை முறுக்கேற்றி பலப்படுத்தும்; ஆண் சக்தியை உண்டாக்கும்; இது 5-7 வகையெனினும் மூன்றுவகைதான் பிரதானம், அதிலும் ஒன்றுதான் சிறந்தது. இது 1/2 - 1 அங்குல நீளம், கோரைக் கிழங்கைப் போல் உள்ளே துளையுள்ளது. தாமரை முகிழ் போல் கூம்பினதாய் இருக்கும். சுருங்கித் திரைந்து மடிப்புள்ளதாயும், கரடு முரடுள்ளதாயுமிருக்கும், கத்தியால் இலேசாய்த் தறிக்க முடியாது, உள்ளும் புறமும் கருப்பு அல்லது ஊதா நிறம் பெற்றதாயிருக்கும். கலப்பற்ற சிறு கசப்பும் விருவிருப்பும் கரகரப்புமுள்ளது, உளுக்க மாட்டாது, மற்றொரு இனம் முதல் தரத்தைப் போலிருந்தாலும் கரடுமுரடு இல்லாதது, உட்பக்கம் இருண்ட ஊதாவும், வெளிப்பக்கம் சுத்த ஊதாவர்ணமும் பொருந்தியது. சிறு கசப்பு உருவத்தில் நாபியைப்போலவிருக்கும். ஆகையால் இதை நீக்குவதே உத்தமம், மூன்றாவது இனம் $1\frac{1}{4}$ x 1 x $1\frac{1}{2}$ அங்குலம் திரண்ட வடிவு, தாமரை முகிழ்போலும் சல்லிவேர்க் கணுக்கள் கரடுமுரடாயுமிருக்கும், வெகு லேசாய்க் கத்தியால் தறிக்கலாம். ஆனால் முதலில் சொன்ன இனந்தான் மருந்திற் குபயோகமாகும்; இது வியாத பேதகாரி, காமவிர்த்தினி, சடராக்கின வர்த்தனி, பலகாரி, விஷநாசகாரி இக்குணங்கள் பொருந்தியது, இது பார்வைக்குக் கருநாபியைப் போலவிருக்கும், இதன் வேரைச் சிறிது வாயிலிட்டு மெல்லப் பல்வலி நீங்கும், அன்றியும், வாதக் குடைச்சல், சுரம், வாதப்பிடிப்பு, பாம்பின் விஷம் இவைகள் நீங்கும், இதன் சன்னவேரைக் கஷாயமாகவும், சூரணித்து தேனிலும் உட்கொள்ள சுரம், அதனாலுண்டான நரம்பிசிவு, கைகால் குடைச்சல் மேகம் இவைகள் போம்.

இதைச் சூரணித்து அம்பர், குங்குமப்பூ இவைகளுடன் சேர்த்து மாத்திரையாகச் செய்து கொடுக்க இந்திரிய உடைச்சலையும், ஆண்குறித் தளர்ச்சியையும் குணப்படுத்துவதல்லாமல் இருதயம்,

மூளையைப் பற்றிய நோய்களுக்கும் கொடுக்கலாம்.

சாதாரணமாக மருந்துக் கடைகளில் ஆகாசக் கருடன் கிழங்கின் வற்றலை நிர்விஷம் என மோசடியாய்க் கொடுப்பது வழக்கம், ஆனால் இங்கு கூறப்பட்ட சரக்கு வேறு இனம், non — poisonous aconite root — Delphinium denudatum. In Sanskrit it is known as Nirvishi, in Arabic 'Jadwaur', it is a bazaar drug. It is exported from North China and far regions of Himalayas. It is also called foreign Jadwaur. It is a grassy plant and in places where it is found grown, the other poisonous plants lose their efficacies and are reudered inoperative. It is sold cheaply in Hydrabad and Bombay, but is very dear in Madras for the reason that one rupee weight of this drug is sold for 1.7 Re. sometimes substitutes are also sold. It is worm eaten and as such is unfit for use. If bitter, it will not be affected by worms. It tones the nervous system and promotes verile power. Although the drug consists of 5 or 7 varieties only three of them are generally spoken of and out of them only one is selected for use in medicine.This variety is 1/2 to 1 inch in length resembling the tuberous korray root (cyperus pertenuis) with a cone shaped like lotus bud, slightly wrinkled longitudinally, marked with rough surface. difficult for cutting into slices, purple or dark purple in and out, slightly bitter and acrid, not worm eaten.

The second variety though resembling the first is devoid of rough surface, internally dark purple and purple out side, slightly bitter, appearance like aconite, found unfit for use. Where as the third variety $^1/_4$ X 1 X $1^1/_2$ inches cylinderical in shape, tapering towards a point like lotus bud, surface rough with root let scars, easily sliced.

The first variety is the one useful in medicine. It is altrative, aphrodisiac and stomachic, a tonic and also an antidote. It resembles black aconite in

appearance the root when chewed removes the tooth ache. It acts successfully in rheumatic pains, fever, gout, snake poison etc. The tender roots as decoction or as powder mixed with honey are found useful in nerous pain, rheumatic pains of the limbs veneral complaints etc. Powdered drug mixed with amber and European saffron is made into pills and prescribed for seminal disorders, impotency and also in cardiac and cerebral complaints. The dried sky root is substituated and sold in bazaars. The root here dealt with is quite a different drug.

NOTE:- This should not be confounded with கஸ்தூரி மஞ்சள், round zedoary — Curcuma zedraria also called Nirvisham and Jadwaur referring to non poisonous aconite little has no connection with zedoary. The Singalese name Nirvisha is often applied to the root of வசநாபி (Aconitum ferox) but it is not restricted to that drug.

நிருகணம், வஸ்திப் பிரயோகத் தினால் மலங் கழுயும்படி செய்தல், causing to purge with the aid of a clyster.

நிருகம், மலங்கழிவதற்காக ஆசனத்திற்குள் புகட்டும் யந்திரம், a purging clyster, an enema not of an oil kind.

நிருகவஸ்தி, கஷாயம் முதலியவைகளை ஆசன வழியாய் உள்ளுக்கு செலுத்திக் குடலைக் கழுவல், a liquid form of medicine as decoction etc. thrown into the rectum by a clyster.

நிருபணம், மெய்ப்பித்தல், to prove.

நிரூபம், உருவில்லாமை, shapeless ness.

நிரை, பசு, cow; 2. பசுக்கூட்டம், herd of cows.

நிரைகர்ப்பம், பூரணகர்ப்பம், full term pregnancy.

நிரைகிளம்பி, சூலாடு, a pregnant sheep.

நிரைசன்னி, சுரம் அதிகரிப்பதால் தொண்டைத் துடிப்பு முதலிய குறிகளை உண்டாக்கும் ஓர்வகைச் சன்னி, paroxysm attended with affection of throat in febrile delirium.

நிரைபாரமாய்ப்பூட்டல், அம்மை நெருங்கக் காணல், confluent small pox; confluent variola.

நிரைபூத்தி, கோடகசாலை, coromandal genderussa — Justicia procumbens alias J. ascendens, very common in pasture ground in coromandal coast. Juice of the leaves is squeezed into the eyes in ophthalmia.

நிரைமணி, அவுரி, indigo plant — Indigofera tinctoria.

நிரைமதி, பௌர்ணமி, full moon.

நிரைமாதம், பூரணகர்ப்பம், full term pregnancy.

நிரோகி, நோயில்லாதவன், one free from disease, healthy man.

நிரோதகரணி, மின்சார சக்தியைத் தடுக்கும் வஸ்து, a substance which does not transmit electricity — Non-conductor.

நிரோதம், தடை, obstruction; 2. சுருக்கம், stricture.

நிர்க்கிரந்தம், தங்குதடை யில்லாமை, free from all ties and hindrances; 2. உலகத்தை வெறுத்து துறவறம்பூண்டு நிர்வாணமாய்த் திரியும் சன்னியாசி, a saint who has with drawn from the world, living as a hermit or religious mendicant and wandering about naked.

நிர்க்குணம், without attributes.

நிர்க்குண்டி, வெண்ணொச்சி, white notchi — Vitex negundo; 2. தாமரைக் கிழங்கு, lotus root; 3. கருநொச்சி black variety of five leaved chaste tree — Vitex negundo — (nigrum).

நிர்கூடம், மரப்பொந்து, hallow of a tree.

நிர்ச்சலதேசம், நீர்வறட்சியுள்ள நாடு dry or barren country.

நிர்த்தகனம், சேரான்கொட்டை, marking nut — Semi carpas anacardium alias Sansviera roxburghiana; 2. புதைத்தல், burying not burning.

நிர்த்தித்தம், கண்டங்கத்திரி, yellow berried night shade — Solanum xanthocarpum.

நிர்த்துகம், கஷாயம், decoction.

நிர்ப்பத்தியம், பத்தியமின்மை, no restriction in diet; non-diet.

நிர்மலத்துவம், நிர்மலமாயிருத்தல், the state of being pure.

நிர்மலம், அழுக்கின்மை, free from dirt; freedom from impurity; 2. சுத்தம்; pure: 3. ஓர்பூடு horse shoe fenugreek — Trigonella corniculata.

நிர்மலிபாவனம், தேத்தான் கொட்டை, water clearing nut — Strychnos potatorum.

நிர்மாலியம், நிர்மலம், which see.

நிர்மாலினியம், கண்சுத்தம் அல்லது துலக்கம், clear eyes.

நிர்மூலி, ஒரு பூடு, Aglaia minutiflora.

நிர்லோகம், வெள்ளைப்போளம், myrrh — Balsmodendran myrrha.

நிர்வமிசியம், வீணாத் தண்டின்மை, absence of spine, absence of back bone or veretral column; having a body consisting of single cavity enclosing all their vital organs as sponges, corals, starfish, worm, centipede spider insect etc., It is opposed to வமிசியம்.

நிர்வாகம், புணர்ச்சியில் ஏற்படும் நீண்ட போகம், prolonged inter course.

நிர்வாணி, ஆடையில்லாது அம்மணமாயிருப்பவள், a naked woman; 2. சக்தி, Godess of power energy.

நிர்வபனம், சமனப்படுத்தல், soothing.

நிர்விஷக்கிழங்கு, சதாவேரிக் கிழங்கு, water root — Asparagus racemosus.

நிர்விஷம், விஷமில்லாதது, non-poisonous; non-venomous; 2. விஷமில்லாத பாம்பு, non-venomous snake; 3. கஸ்தூரி மஞ்சள், round zodoary — Curcuma zedoaria; 4. ஜாத்துவார், non-poisonous aconite root — Delphimium denudatum. See நிருவிஷம்.

நிர்விஷம், bite or mark without inflammation or changes of blood.

நிர்விஷம்சுத்தி, நிர்விஷத்தைத் துண்டு துண்டாக நறுக்கி எருமைச்சாணியும், எருமை மூத்திரமும் கலந்து அதிலிட்டு எரித்துக் கழுவி உலர்த்தி

யெடுப்பது ஓர் சுத்தி முறை, cleaning process of non poisonous aconite root. In this the root drug is sliced and soaked in buffalo dung and urine mixture and boiled. The product is then taken out, washed and dried.

நிர்விவரம், நெருங்கவிருத்தல், (உ-ம்) பெண் முலை, contiguousness as of female breasts.

நிர்வீரியம், ஆண் தன்மை யில்லாமை, impotency; 2. சோர்வு, exhaustion.

நில, நிலத்தைச் சேர்ந்த, pertaining to land as distinguished from water; 2. பூண்டின் முதற் பெயர், plant first term as referring to lowly habit, often joining the two genera.

நிலஅவுரி, பேராவுரி, a large variety of indigo plant — Indigofera tinctoria.

நிலஆவாரை, நிலாவாரை, senna leaf — Cassia angustifolia alias C.senna; see நிலாவாரை.

நிலஇலந்தை, see நிலவிலந்தை.

நிலகடகம், சிவதுளசி, Shiva's basil — Basilicum alba.

நிலகந்திகம் நொச்சி, notchy — Vitex negundo.

நிலகாருடம், கருநாய், black dog.

நிலகி, கள்ளிக் கொடி, creeping milk hedge — Sarcostemma intermedium.

நிலகிக்கொத்தவரை, சீனிக் கொத்தவரை sweet cluster bean — Cyamopsis psoralioides.

நிலக்கடம்பு, சீமை நிலக்கடம்பு; இது ஐரோப்பியா, அமெரிக்கா, இந்தியா இவ்விடங்களில் உண்டாகும்; இதன் மூலம் வாசனையா யிருக்கும்; இலைகள் அகலம்; மேற்பக்கம் சிறுபச்சை; உட்பக்கம் நீலம்; மஞ்சட் கலப்பு, பூ இந்திர நீலநிறம், காரம், விருவிருப்பும் வாசனையும் பொருந்தியது; இதைக் கஷாயமிட்டுக் கொடுக்க வாந்தியையும் பேதி யையுமுண்டாக்குவதுடன் வாயுவைக் கண்டித்து, நீரை வடித்து ஈரல், மண்ணீரல் இரைக்குடல் இவற்றி லுண்டாகிய அழுக்குகளை அகற்றும்; இதன் சமூலத்தைச் சூரணித்துத் தினம் கொள்ள கீல்வாயு, காமாலை, கபம், கல்லடைப்பு, உதிரச்சிக்கல்

இவைகள் போம், இச்சாற்றைக் கண்ணைச் சுற்றிப் பற்றுப்போட கண்வலி நீங்கும், இதை நல்லெண்ணெயுடன் சேர்த்துத் தைலமாகக் காய்ச்சி மூழ்கிவர பைத்தியம், சித்தபிரமை முதலிய நோய்கள் குணமாகும். இதன் இலையைச் சூரணித்து நசியமிட மூக்கின் சளியறும், foreign kadamba; asarabaeca — Asarum Europaeum. This is not a native of India but a foreign plant and it is generally found in Europe. America and some parts of India where it is naturalised. The plant is aromatic, leaves broad, greenish out ward and blue inside with a yellowish linge; flowers blue like saphire pungent and acrid to taste with a fragrant smell. It is diuretic and antispasmodic. The leaves as a docoction cause violent purging and vomiting and as such curing liver and spleenic disorders. The powdered dried plant is given internally with great success in rheumatic artheritis, jaundice, phlegm, stranguary, menstrual disorders etc. The juice of the leaves applied externally round the eyes in ophthalmia; medicated oil prepared by mixing the juice with gingelly oil etc., is applied to the head in bath in cases of insansity and other cerebral disorders. The leaves are also used as an errhine.

நிலக்கடம்பு, நீபமரம், which see; 2. சிறு கடம்பு, small Kadamba — Justicia acaulis; 3. குதிரைக்குளம்பு, horse hoof plant.

நிலக்கடலை, வேர்க்கடலை, இதற்கு மணிலாகொட்டை எனவும், கடலைக்காய் எனவும் பெயர் வழங்கும்; இது தென் இந்தியாவிலும்; பம்பாய், வங்காளத்தில் சில பாகங்களிலும்; மணிலா தீவிலும் விசேஷமாய் விளையும், மற்றும் தென் அமெரிக்கா, மேற்கு அமெரிக்காவிலும் உற்பத்தியாகும். இது ஓர் படர்கொடி; பூமிக்குள் விதையுண்டாகும். இது வருஷத்திற் கொருமுறை பயிராகி அழிந்து விடும்; மணற்பாங்கு நிலங்களிற் செழிப்பாய் வளரும், இலைகள் இரண்டு ஜதை, கொடிகள் நீளம், பூக்கள் மஞ்சள், காய்கள் நீளம், விதைகள் அடுக்காயும் ஒரே

கூட்டில் 2-3 விதைகள் இருக்கும். ஆனி மாதத்தில் பூக்கும், இதன் விதையினின்று எண்ணெய் எடுக்கலாமெனக் கருதி நமது நாட்டில் மிகுதியாகப் பயிரிடுவார்கள். அமெரிக்காவில் இதன் வறுத்த பருப்பை சாக்லெட்டுக்குப் பதிலாக உபயோகிப்பார்கள். ஏழை சனங்கள் இதன் பருப்பைத் தின்பதுண்டு, எண்ணெயை விளக்கெரிக்கவும், பதார்த்தங்களுக்கு சமையல் பாகத்திலும் உபயோகிப்பார்கள். இதன் கொட்டை பூமிக்குள்ளிருந்து பிடுங்கி எடுக்கப்படும், இலைகள் ஆடு மாடுகளுக் குணவாகும். இக்கடலை வெளியூர்களுக்கு விசேஷமாய் ஏற்றுமதியாகும். இது இரண்டு விதமாயிருக்கும், இதற்கு நாட்டுக் கடலை, மணிலா அல்லது சீமைக் கடலை என்று பெயர், நிறமும் கபில நிறம், வெள்ளை நிறம் என இருவகையாயிருக்கும்.

வைத்தியத்தில் இவ்வெண்ணெயை ஆலிவ் எண்ணெய், பாதாம் எண்ணெய் இவைகளுக்குப் பதிலாக உபயோகிப்பார்கள். இதற்கு மலத்தை இளகச் செய்யும் குணமுண்டு, இதை உணவாகவும் கொள்ளலாம். இதன் பிண்ணாக்கு நிலங்களுக்கு எருவாக உபயோகப்படும், இது மற்ற எண்ணெயைப் போல் சீக்கிரம் கெடாது. ஆகவே வீடுகளில் மிகுதியாக உபயோகமாகும். Manilla nut. It is also called by other names as peanut, earth nut etc — Arachis hypogaea alias A. americana alias A.africana. It is commonly cultivated in South India and is also grown in Bombay and some parts of Bengal. It is also cultivated in South America. West Africa, Manilla island and other parts of the globe. It is a creeper and the seeds are dug out from the earth, an annual plant, common in sandy places, diffuse stem hardy, leaf lets 2 pair, creepers long, flowers yelow, legumes long stalked; seeds found in layers, 2-3 seeded flowering in June.

It is chiefly cultivated for the sake of the oil yielded by the seeds. The seeds are roasted in America and are substituated for choclate. Oil expressed from

them is much used in India for lamps and also in curry preparations. Dehydrated oil is much freely used in preparations of sweet etc. The people boil or roast the fruits and eat the nuts. The leaf affords excellent food for cattle. The cake after extracting the oil from the seeds is also a good food for cattle and is also used as manure. The seeds are largely exported to foreign countries. It consists of two kinds country and froeign nut, the one is brown and the other white. It forms a substitute for almond and olive oils. It is a laxative and an emollient. It is advantageously used as food for the reason that the ground nut meal is superior to any other vegetable product of a similar nature. It does not become rancid so quickly as other oils, as such is much esteemed for domestic purposes.

NOTE:- 1. The plant வேர்க்கடலை is so called from the pods burying them selves in the earth where they ripen. After they ripen they are dug out.

NOTE:- 2. (byC.D.) There is another variety of short duration which is not a creeper but an erect plant, its nut is called pea nut. Its fruit is also found under the ground It is only two seeded. It is harvested by pulling out the plant.

நிலக்கடை, see *நிலக்கடலை.*

நிலக்கடற்செடி, *கடலாரை*, sea sorrel — Marsiles genus.

நிலகஸ்தூரி, *கருமத்தை*, black datura.

நிலக்கரி, விளைகரி, இது பூமிக்குள் அகப்படும் கரி, சாதாரணமாகப் பூமியில் அனேக காலமாகப் புதைந்து கிடக்கும் மரம், கட்டை முதலிய எரியும் வஸ்துக்கள் பூமியின் உஷ்ணத்தால் தீய்ந்து மாறும் வஸ்து, மற்ற உலோகவஸ்து, வாயு சம்பந் தத்தைவிட கரி அதிகமாகக் கொண்ட வஸ்து, இது கரியினின்று வாலை ரூபமாக இறக்கும் எண்ணெய்ச் சத்துக்குத்தான் தார் என்று பெயர் சொல்வது, இதினின்று மருந்து தயாரிக்கப்படும், நிலக் கரியில் அனேக விதங்களுண்டு, Coal. It is a black solid inflammable substance dug out of the earth and used as fuel. It is formed

from vast masses of vegetable matter deposited under the earth partially burned. It is a general term for various substances, characterised especially by the presence of carbon in excess among smaller quantities of other matters gaseous and mineral. The dark semiliquid product extracted from coal by distillation is called coal tar from which many medicines are derived.

1. *சரக்கரி*, Ligniteore brown coal; 2. *சமைந்தகரி*, Pitch or just coal; 3. *கல்கரி*, Anthracite coal;4. *பொய்க்கரி*, Fossil coal; 5. *விறகு கரி*, Peat coal; 6. *நைப்புக்கறி*, Bituminous coal; 7. *சிடுசிடுப்புக்கறி*, cannel coal.

NOTE:- it is the result of mineralization of vegetable remains. That is to say vegetable tissue converted into a substance proportionately poorer in water and volatile ingredients but richer in carbon. The different varieties of coal are only transformations in the stages of metamorphosis due to pressure of the deposits of sand mud etc., extending over long periods of time.

நிலக்கரிவாயு, *நிலக்கரிப்புகை*, coal gas.

நிலக்கருணை.

நிலக்கருவேல், see *கொடிக்கருவேல்.*

நிலக்கறையான், *புற்றுக்கட்டும் கறையான்*, white ant that builts anthill on the ground which serves as a hole for snakes to rest.

நிலக்கலி, *பெருங்கட்டுக்கொடி*, big broom creeper — Cocculous villosus.

நிலக்கலியானபூசணி, see *நிலப்பூசினி.*

நிலக்கன்று, *இளம்பயிர்*, tender plant; 2. *சிறுபயிர்*, small plant.

நிலக்காரை, *முட்காரை* thorny webra — Webra tetranda.

நிலக்காடை,

நிலக்காலி, *அவுரி*, indigo plant — Indigofera tinctoria.

நிலக்காளான், *குப்பையில் முளைக்குங் காளான்*, fungus growing on rubbish — Toad stool.

நிலக்காற்று, பூமியினின்று வீசுங் காற்று, land breeze.

நிலக்கிழங்கு, see நிலப்பனங் கிழங்கு, 2. பிண்டம், foetus.

நிலக்கிழவி, மூவிலைக் குருந்து, thin leaved wild lime — Trichillia spinosa.

நிலக்கீல், கீல், bitumen, as phalt.

நிலக்குண்டி, குன்றிமணி, jeweller's bead.

நிலக்குதம், சேனைக்கிழங்கு, elephant ham — Typhonium trilobatum alias Dracontium maxima.

நிலக்குமிழ், இதுவே நீலக்குமிழ், இது ஓர் செடி, இலைகள் நேர் நேராகவும் காம்புகள் உடைய தாகவும் இருக்கும். முட்கள் வாய்ந்தது, கிளைகளின் முனையில் பூக்கும், பூக்கள் பெரியவை, மஞ்சள் நிறம், வருஷ முழுவதும் பூக்கும், இது பித்தகாரி, காமவிர்த்தினி, இது சல மந்தபேதி, வாதக் கடுப்பு, வெட்டைச் சூடு, வாதப்பிடிப்பு, மந்தம் இவைகள் போம், இதன் இலையைக் கத்தையாகக் கட்டி, தண்ணீரில் சிறிது பொழுது வரை அலசிவர நீர் குழம்பாகத் தடிப்பேறும், இதை உட்கொள்ள, பிரமேகம், மேக வெட்டை, நீர் எரிச்சல் இவைகள் குணமாகும், இதன் வேரை அரைத்து காலையில் நீராகாரத் தண்ணீரில் கலந்து கொடுக்க உட்சூடு போம்; இதை கண் எண்ணெயில் சேர்த்து குழந்தைகளுக்கு கொடுக்க கணச்சூடு, இரத்தக் கழிச்சல் முதலியவை போம், small Cashmere shrub — Gomelina asiatica. Leaves opposite, petioled. Spines axillary flowers from the end of the tender twigs on peduncles, flowers large and sulphur coloured, flowering all the year. It is demulcent and aphrodisiac.

Leaves lied in lumps and tossed about in water renders the water musilaginous, which taken internally proves a useful remedy in gonorrhoea and other venereal affection. It is also employed for the cure of the scalding of urine in gonorrhoea. The root ground into a paste and taken in the morning, mixed with cold rice water tends to

remove the internal heat in the system. It also forms one of the ingredients in the preparation of medicated oil prescribed for tabes mesentrica in children.

நிலக்குமிழ், சிறுகுமிழ், இது கர்ப்பத்தை வெளிப்படுத்தும், a shrub of the Gmelina genus — Gmelina asiotica. It is said to be capable of causing miscarriage. It is an abortive drug.

நிலக்குரா, நிலக்குரோசினை, இது பித்தளையின் களிம்பை அகற்றும் வெடியுப்பைச் செந்தூரம் செய்யும், an unknown drug capable of removing verdigris from brass and converting nitre into a red calcined powder.

நிலக்குரோசினை, நிலக்குரா, which see.

நிலக்குழி, பூமியில் தோண்டும் குழி A pit dug out in the ground.

நிலக்குழியிலிடல், பூமிக்குள் புதைத்தல், burying under-neath the earth.

நிலக்கூந்தல், see எலிச்செவிப் பூடு, rat's ear — Evolvulus emarginatus.

நிலக்கொடிவேலி, see நீலக்கொடிவேலி,

நிலக்கொட்டு, ஓர்வகைக்காளான், a kind of fungus.

நிலக்கொட்டை, see நிலக்கடலை; 2. ஓர் செடி, a plant — Tragia chamaelia.

நிலசம், துருசு, blue vitriol — Copper acetate.

நிலசம்பங்கி, flowering plant — Polyanthus tuberosa alias Koemp feria rotunda.

நிலச்சருக்கரை, பூமிசருக்கரைக் கிழங்கு wild ground potato — Merma arenaria.

நிலச்சாதிரசம், நிலத்திலூறும் தண்ணீர், well water.

நிலச்சுருங்கி, தொட்டாற் சுருங்கி, sensitive plant — Mimosa pudica alias Oxalis sensitive.

நிலச்சேனை,

நிலஞ்சோதி, see நீலஞ்சோதி.

நிலஞ்சோதி, சோதிவிருட்சம், tree luminous in the dark burning tree.

நிலத்தண்டு, வேர்த்தண்டு, a stem resembling a root — Rhizome; 2. கீரைத்தண்டு, garden green — Amaranthus blitum.

நிலத்தாமரை, முட்செவ்வந்தி, rose flower — Rosa damascena; 2 அடுக்கு ரோசா, cabbage rose — Rosa centifolia.

நிலத்தாமை, பூமியில் வாழும் ஆமை, இதன் தலை, கால், வால் முதலியவைகளும் ஓட்டிற்குள் அடக்கி வைத்திருக்கும், நீரில் வாழும் ஆமை வேறு, அது மெதுவாக ஊரும். இது கொரநாட்டுக் கடலோரங்களிலும் புதர் களிலும் உஷ்ண வேளையில் மறைந்து கிடக்கும், land tortoise — Testudinidae. The starred tortoise. It has the head, feet and tail concealed or retracted completely within the shell. It is opposed to sea — tortoise, movements very slow. It is found in coromandal coast and low jungles of the Carnatic remains in concealment beneath shrubs or tufts of grass during the heat of the day.

நிலத்திநாகம், பூநாகம்,earth worm.

நிலத்துத்தி, அரிவாள்மனைப் பூண்டு, இது ஓர் செடி, பூக்கள் நடுத்தரம், மஞ்சள் இதில் வரும் சளிபோன்ற சாற்றில் அன்னத்தைக் கலந்து கொடுக்க சீதபேதி, சுரம் குணமாகும், விதைகளை வயிற்றுவலி, முக்கல் வெள்ளை முதலிய நோய் களைக் கேட்கும், அன்றியும் ஆரம்ப மூலரோகத்தையும், வித்திரதிக் கட்டிகளையும் போக்கும், கருவங்கத்தைப் பற்பமாக்கும், வேருடன் சுக்கு சேர்த்தக் கஷாயமிட்டுக் கொடுக்க முறைசுரம் போம், வேர்ப்பட்டைத் தூளுடன் பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க அடிக்கடி உண்டாகும் நீர்ப்போக்கு, பெண்களுக்குக் காணும் வெள்ளை முதலியவை நீங்கும்.shruby balah, ground mallow — Sida cordifolia. A shruby plant, flowers middle sized, yellow its mucilege mixed with rice is given in dysentery and fevers, its seeds in colic, tenesmus and gonorrhoea and also early piles and abscess. Decoction of the root with dry ginger cures intermittent fever, powder of the root bark is given with milk and sugar for frequent micturition and leucorrhoea. It calcifies black lead.

நிலத்தும்பை, தும்பை, leucas flower — Leucas genus.

நிலத்துழாய், see நிலத்துளசி,

நிலத்துளசி, தரையோடு தாழ்ந்து முளைத்திருக்கும் துளசி, holy basil grown lowly on land — Geniospermum prostratum.

நிலநாவல், Premna herbacia.

நிலநீர்முள்ளி,

நிலநெல்லி, நிலக்கடம்பை, இது ஓர் தாழ்ந்த மரம், நேராகவும், குறுகலாகவும் இருக்கும். விசாலமான கிளைகள், பூ, காம்பு இவைகள் சிறியவை, காயின் விதைகள் பளபளப்பா யிருக்கும், சாம்பல் நிறம், இதைத் தண்ணீரிலிட்டு ஊற வைக்க தண்ணீர் சளியைப் போல் வழவழப்பாயிருக்கும். இக்குணத்தைக்கருதி மருந்திற் குபயோகிப்பதுண்டு, இதன் பருப்பிலிருந்து எண்ணெய் எடுப்பதுண்டு; இது கொட்டையைப் போல் ருசிக்கும், Madras phyllanthus — Phyllanthus Madras - patensis it is a lownelly tree, very variable in habit, erect or decumbent below, stem low with spreading branches flowers, pertioles, leaves small, the seeds are polished, grey colour, soaked in water, they become thickly coated mucilage on account of which they are used in Medicine. Kernel is only and the nut has a sweet nutty taste.

நிலப்பயிர், நிலத்தில் விளையும் பயிர், land crops; 2. பெண், girl.

நிலப்பரணி, சிற்றீஞ்சு, small date fruit - Phoenix farinifera.

நிலப்பலா, வேர்ப்பலா, trunk fruit — Artocarpus integrifolia.

நிலப்பனங்கிழங்கு, நிலப்பனை, which see.

நிலப்பனை, இது ஓர் செடி, ஆகவே அடிமர மற்றது, இதன் வேர் துவாரமுள்ளது, பல இழைகளுள்ளது, இலைகள் குறுகியவை, பூக்கள் மஞ்சள் நிறம், வருஷமுழுவதும் பூக்கும், இலைகள் முனை பூமியில்பட அனேக முளைப்பூண்டுகள்

உண்டாகும். ஈரம் வாய்ந்த காடுகளில் முளைக்கும், இதன் வேர்க்கிழங்கு சுருங்கி துளை வாய்ந்தது, 4 அங்குல நீளம், ருசிக்க வழவழப் பாயும், சிறிது கசப்பாயு மிருக்கும், இக்கிழங்கு பல விருத்தி உண்டாக்குந் தன்மையது. இதைச் சூரணித்து சாப்பிட வெண்குட்டம், பெரும்பாடு, மேக வொழுக்கு, விலாக்குத்து இவைகள் நீங்குவதுடன் தாது விருத்தியும், காம இச்சையும் உண்டாகும். இதை லேகியத்தில் சேர்த்துக் கொடுக்க மூத்திரநோய் வெள்ளை, உடம்பு உஷ்ணம் போம், இதை சிறுதுண்டு களாக நறுக்கி, பாலில் இட்டு அவித்து வர்த்தி சூரணம் செய்து உட்கொள்ள, இடுப்புவலி, மாரடைப்பு, மூலரோகம், சொறி, சிரங்கு, மேகவூறல், இவைகள் மாறும். அன்றியும் பால் சருக்கரையுடன் இச்சூரணத் தைக் கலந்து கொடுக்க பலவீனம், ஆண்தன்மைக் குறைவு, காசம் காமாலை, கழிச்சல், வயிற்றுவலி முதலியவைகள் போம், இச்சூரணத்தை பாலிலிட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிட, பெண்களுக்குண்டாகும் வெள்ளை, உதிரச்சிக்கல் போம், இதைத் தண்ணீர் விட்டான் கிழங்கு முதலிய மற்ற சரக்குகளோடு கலந்து சூரணித்து தேன் அல்லது வெண்ணெயில் குழைத்துச் சாப்பிட, கிழத்தனத்தினா லேற்பட்ட பலவீனம் போம், ground palm — Curculigo orchioides. It is a stemless plant, root tuberous with many fine tissue fibres, leaves narrow, slender, flowers yellow flowering nearly all year, a peces of the leaves are viviparous and will produce young plants if allowed to rest on ground, grows in moist forests, roots 4 inches long, wrinkled, slightly bitter and mucilaginous to the taste. The root has tonic qualities, it is considered demulcent, diuretic and restorative. Powdered root is said to be a useful remedy in cases of white leprosy, menorrhagia and gonorrhoea, side pain, it is an aphrodisiac and as such promotes lasciviousness. It is prescribed in the form an electuary for

urinary diseases, gonorrhoea aad bodily heat. The root when sliced, soaked in milk and then dried and pulverised forms an useful remedy in cases of lambago angina pectoris, piles, scabbies pruritis from venereal causes etc. The said powder mixed in milk and sugar is given for debility, impotence asthma, jaundice, diarrhoea and colic. The tubers mixed with other drugs such as asparagus etc., and taken internally forms an efficacious remedy in the debility of old age.

நிலப்பாகல், தரையோடு படர்ந்த பாகற்கொடி, a lowly creeper of bitter gourd, ground pagal, lowly pagal — Mimordica humitis.

நிலப்பாகை, see நிலப்பாகல், Mimordica humilis.

நிலப்பாசம், நாகப்பாம்பு, cobra.

நிலப்பாலை, see நிலம்பாலை; 2. ஒருகு, ground paulay, round leaved discous feather foil — Cleistanthus collinus alias Amanoa collina; 2. அம்மான் பச்சரிசி, which see.

நிலப்பாலை, see பாலை.

நிலப்பாளை, பங்கம்பாளை, Indian worm killer — Aristolochia bracteata.

நிலப்பாறைச்சத்து, பலகல்லின் சத்து, rock which had undergone fusion, igneous rock.

நிலப்பிப்பிலி, ஒருபூடு, Lippia nodiflora.

நிலப்பிரண்டை ஓரிலைத்தாமரை, one leaf lotus — Ionidium suffruticosum.

நிலப்பீர்க்கு, நிலத்தில் படரும் பீர்க்கு, ridged gourd that spreads on the ground.

நிலப்புரண்டி, இது ஓர் மாந்திரீக மூலிகை, இது பூமியின் மேல் மற்ற செடிகளைப் போல் தழைத்து வளர்ந்திருப்பினும், மனிதர் வாடை பட்ட மாத்திரத்தில் பூமியைச் சீய்த்துக் கொண்டு மண்ணிற்குள் விறங்கி மறைந்து விடுந் தன்மையது, இதைக் கண்டு பிடிக்க வேண்டின் இரண்டொரு தேத்தான் கொட்டையைக் கையில் வைத்துக் கொண்டு போக அச்செடியுள்ள

விடத்தில் அக்கொட்டை தானாய் வெடிக்கும், அப்பொழுது அம்மூலிகை கண்களுக்குத் தெரியும். பிறகு பூமியில் இறங்காது, இதனால் புதையல் இருக்குமிடம் அறியக் கூடும். இதை அரைத்து ஒரு செம்பு கலத்தில் பூமியில் தெளித்த மறுநாள் காலையில் நோக்க வெடித்துக் காணும், இதனால் அற்பவிஷ ரோகங்கள் நீங்கும், புருஷ விசியம் உண்டாம்.

இப்பூண்டை அரைத்துக் கொட்டைப் பாக்களவு தினம் இருவேளை 3 நாள் கொடுக்க அற்ப விஷங்களினால் ஏற்பட்ட ஊறல், தடிப்பு இவைகள் போம், இதை வசியத்திற்காக ஞாயிற்றுக் கிழமை காப்புக் கட்டி பிடுங்கி குளிசமாவ துண்டு. தேள் விஷத்திற்கும் கொடுக்கலாம். an unknown psychic with magical virtues. Though it is found grown luxuriently on the ground like other plants, it has the peculiarity of disappearing from men's sight on their approach by burying itself under the earth. For discovering this plant it is said that a man taking with him two water clearing nuts will find the nuts crack on his approach near the plant and the plant will then be visible without concealing itself under the earth as before. Therefore with the aid of this plant buried or hidden treasure can be discovered. The plant is well ground and macerated in a vessel with water and then sprinkled on the ground which will be found in next morning leaving cracks. The well ground plant is made into small balls of areca-nut size and are given both morning and evening for three days for small poisonous bites marked by severe itching and raised patches or swelling. It is used for enchanting men and the ceremony performed in this case is to root out the plant after tying it with a yellow thread ceremoniously on one sunday selected for the purpose. The root is then taken and enclosed in a talisman and then worn by woman to fascinate men. The plant is also used as an antidote for scorpio sting. c.f. நின்றாட் சுருங்கி having similar properties and magical virtues.

நிலப்புழு, தரைப்புழு, earth worm in common; 2. பூமிநாகம், worm dug out from red soil; 3. ஓர் பூண்டு, an unknown plant.

நிலப்பூ, தாளி, convolulus genus; 2. நால்வகைப் பூவிலொன்று, one of the four kinds of flowers. see நாற் பூ.

நிலப்பூசினி, நிலப்பூசினிக் கிழங்குச் செடி; இதற்குப் பால்மோடிக்கம் என்றும் பெயர்; இதற்கு வட மொழியில் பூமிக்கூழ் மாண்டம் எனச் சொல்வ துண்டு; இதன் அடித்தண்டு முருக்கேரியது; கனதியாயும் வழவழப்பாய் மிருக்கும்; இலைகள் பெரியவை; விரல்கள் விரித்த கையைப் போன்றது; 5-7 பிரிவுகள் உள்ளது. வழவழப்பும் காம்பு களும் பொருந்தியது; பூக்காம்பு இலைக்காம்பை விட நீளம்; அனேகம் பூக்கள் உடையது; உச்சி முதல் அடிவரையில் இரட்டைப் பூக்களாகப் பிரிந்துள்ளது; பூவின் உள்ளிதழ் ஊதா நிறம்; அடிப்பாகம் குறுகியது; மழை காலத்தில் பூக்கும்; விதைகள் நீளமாயும் மொசமொசப் பாயுமிருக்கும்; பூக்கள் பெரியவை, ரோஜாவைப் போல் சிவந்த நிறம்; கறுப்பும் ஊதாவும் கலந்த புள்ளி யுடையது; கிழங்கு தனியாயும் கிளைகள் கூடியதுமானது; இது 40-50 பவுன் கனமுள்ளது; வெளிப்பக்கம் கபில நிறமாயும் முடிச்சிகள் பொருந்திய தாகவுமிருக்கும்; குறுக்காக அரிந்தால் உட்புறம் சிறிது வெண்ணிறமாயி ருக்கும்; இதினின்று பிசுபிசுப் பானபால் கசியும்; துவர்ப்பும் விறுவிறுப்புமுள்ளது; பால் வடியும் கண்கள் அனேகமா யிருக்கும்; இக்கிழங்கை எடுத்து வெயிலில் காய வைத்து மேற்றோலை நீக்கி தூள் செய்து பால் சர்க்கரை சேர்த்துக் கொதிக்கவைத்து மருந்தாக உபயோகப் படுத்தப்படும்; இது பலவிருத்தி, காமவிருத்தி, அழற்சி நிவர்த்தி பால்விருத்தி இலகுமலகாரி, பால்காரி முதலிய குணங்கள் வாய்ந்தது.

இக்கிழங்கினால் தளர்ந்த தேகம் இறுகும்; இளைத்த சப்த தாதுக்களுக்குச் செழுமையும் சரும தாதுவிற்கு ஒளியும் நுட்பமான அறிவும்

உண்டாகும்; மலமந்தம் நீங்கும்; இளைத்த தேகம் புஷ்டியாகும்; சய நோயாளிக்குக் கொடுத்துவர உடம்பை இளைக்கவிடாது; பிரசவித்த பெண்களுக்கு பால் அதிகமாகச் சுரக்கும்; மூத்திரத் திலுள்ள அழுக்குகளை போக்கி உடம்பின் சூட்டை அடியோடு களையும்படி செய்யும்; இச்சூரணத்துடன் கோதுமை மாவு, அல்லது பார்லி அரிசி மாவைக் கூட்டி அடையாகச் சுட்டு, குழந்தை களுக்குக் கொடுக்க உடம்பு புஷ்டியாகும்; அடிவேர்த் தண்டைச் சூரணித்து, சாராயத்தில் குழப்பிக் குழந்தைகளுக்குக் கொடுக்க உடம்பிளைப்பு, பலவீனம், செரியாமை இவைகளைப் போக்கும்; கிழங்கின் சூரணத்தை நெய்யோடு கலந்து வேகவைத்து, பெண் களுக்குக் கொடுக்க உடம்பு தடித்து மாதருது போக்கைச் சாந்தப்படுத்தும்; கிழங்கின் சூரணம் பேதியை உண்டாக்கிப் பித்தத்தை அகற்றும், giant potato; earth pumpkin — Ipomaea digitata. It is also called in Tamil Palmodikka (milk plant) and in Sanskrit Bhumi kushmandam (ground pumpkin) stem twining, glabrous thick; leaves large palmate 5-7 cleft, glabrous, petioled; peduncles much exceeding the petioles; many flowered dichotomous; corolla purple, narrowed at the base; seeds long hairy, flowering in the rainy season; flower large rose coloured with a dark purple eye. The root is simple or branched tuber sometimes weighing 40-50 lbs; externally it is of a brown colour and some what warty and scabrous; when a transversa section is made, the cut surface is of a dirty white colour and from the laticiferous vessels a viscid milky fluid exudes. The taste is astringent and some what acrid.

Root dried in sun reduced to powder and boiled with sugar and butter is medicinally a tonic, alterative, aphrodisiac demulcent, lactogogue. It is also laxative. It strengthens the broken down body by old age; fertilises the seven constituent parts of the human body; lends vitality to the subcutaneous tissue and promotes lustre to the body; restores keen intellect. It also removes constipation and tones the emaciated body. It also protects asthmatic patients by preventing them from emaciation increases secretion of milk in women after child birth. It forms an useful remedy in eleminating the impurities from the urine and allaying or soothing out the bodily heat. The powdered root mixed with wheat or barely flour and made into round cakes and baked is prescribed for children who are weak and emaciated. Powdered root stalk mixed in wine serves as a useful remedy especially to children in cases of emaciation, debility, indigestion and also in spleen complaints. Powdered sun dried root boiled in sugar and butter when taken internally has the effect of promoting obesity and moderating menstrual discharge. The powdered root also acts as a purgative and chologogue and is useful in liver complaints.

NOTE:- This plant is indigenous to the hotter parts of India and largely cultivated as an ornamental plant. The roots of a smaller variety are known in Bombay as asgand and used for the same purposes as the above.

There is also another variety Hill giant potato — Ipomaea pentaphylla.

நிலப்பூசினிக்கிழங்குக் கட்டி, பிதாரிகை என்னும் ஓர் வகைக் கட்டி, இது நிலப்பூசினிக் கிழங்கைப் போல் பருத்து வட்டமாயி ருப்பதாலிப் பெயர், a hard round abscess as large as a full grown earth pumpkin.

நிலப்பூசுணை, நிலப்பூசினி, which see.

நிலப்பூச்சி, தரையில் வசிக்கும் பூச்சி, ground insects. see நிலப்புழு.

நிலப்பொட்டு, ஓர் வகைக் காளான், a kind of fungus.

நிலமகள், சீதா செங்கழுநீர், which see.

நிலமல்லி.

நிலமாதுளை.

நிலமுள்ளங்கத்திரி.

நிலம், பூமி, earth; 2. கள்ளி, milk spurge — Euphorbia genus; 3. தாளி, a running plant of the convolvulus genus; 4. நீரிழிவு, diabetes; 5. ஐவகை நிலம் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என்பவை, the five kinds of tracts viz, Hilly, agricultural, sylvan, maritime and arid or desert tracts.

நிலம்பாலை, கும்பம் பாலை, blue dyeing rose bery — Wrightia tinctoria.

நிலம்புரண்டி, கார்த்திகை முதலிய மழை காலங்களில் புல்லில் நுரைபோல் தோன்றி அதற்குள்ளிருக்கும் பச்சைப் பூச்சி, a green insect found in the middle of frothy substance that appears on grass during rainy seasons.

நிலம்பூ, see நிலப்பூ; 2. கள்ளி, milk spurge — Ephorbia genus; 3. கொசு, mosquito; 4. சீதா, custard apple — Anona squamosa; 5. தாளி, a running plant of convolvulous genus.

நிலலோகபற்பாந்தம், நறும்பிசின், a fragrant resin or gum; 2. see குந்திரிக்கம்.

நிலவடலி, சிறுபனை, small palm — Borrasus genus.

நிலவம், சோதிவிருட்சம், see நிலம்சோதி.

நிலவறுகு, .

நிலவாகு, நிலத்தின் தன்மை, nature of the soil c.f. தேசவாகு; 2. நிலச் செழுப்பின் வேறுபாடு, difference in the fertility of the soil.

நிலவாகை, நிலாவிரை, East Indian senna — Cassia angustifolia; see நிலாவாரை.

நிலவாகைச் சூரணம், நில ஆவாரையைச் சூரணித்து பேதிக்காகக் கொடுக்கும் மருந்து, senna powder given as a purgative.

நிலவாமியம், சீதா செங்கழுநீர், purple Indian water lily — Nymphae odorata.

நிலவாவிரை, See நிலாவாரை.

நிலவாழை, கல்வாழை, rock plantain Indian shot — Canna indica.

நிலவிந்தை,

நிலவிப்பனை, நிலப்பனை, which see.

நிலவிலந்தை, இலந்தைமரம், கொடியிலந்தையென்னும் வகையினின்று வேறுபடுத்திக் காட்ட நில என்னும் அடை மொழியைக் கட்டப்பட்டது, Common jujuba tree. The term நில is prefixed to distinguish it from jujuba creeper.

நிலவிழுது, see நிலப்பனை.

நிலவிளா, குற்றிவிளா அல்லது குட்டி விளா, monkey fruit; 2. சிறு விளா, a smaller variety of wood apple tree -Feronia elephantum.

நிலவிளாத்தி, see நிலவிளா.

நிலவிரியம், see நிலவீரம்.

நிலவீரம், பூநீறு, soda earth; fuller's earth; 2. நிலத்தின் கொடுமை, the virulity of the soil; 3. குட்டிவேர், side roots under the earth.

நிலவு காய், எருக்கங்காய், fruit of sun plant -Caltropis gigantia; 2. உகாய் மரம், mahomadon tooth brush tree -Salvadora persica.

நிலவுப்பு, நிலத்திலிருந்து வெட்டி எடுக்கப்படும் உப்பு. இதனால் பொரிகாரம் சாகும். இத்துடன் ரெங்கு சேர்ந்தால் கைக்கு சுங்கணமாகும். இது சலத்தில் கரையாது. இதனால் பழந்துணி வெளுக்கப் பார்க்கும். any salt dug outfrom the earth. It is opposed to நீருப்பு, salt prepared from sea water or salt dug out from the rocks at the bottom of the sea; 2. வீரம், per chloride of mercury.

நிலவுமரி, உமரிக்கீரை, sea side Indian salt wort -Suacda martimima a species of salsola.

நிலவூமத்தை, நீல ஊமத்தை, blue flower datura.

நிலவேம்பு, சிரட்குச்சி. இது ஒரு வருஷத்திற்குள் அடிக்கடி பயிராகும் பூண்டு. இதன் அடிமரம் 1/2 அடி நீளமாயும், நாலு மூலையாகவும் வழவழப் பாயும் சிறிது கருப்பாயும் இலைகள் இரு பக்கங்களிலும் நேர் நேராகவும் நுனியில் கூராகவும் பூக்கள் தூரமாக மாறி மாறி ரோசாப்பூ நிறத்தில் அல்லது வெள்ளை நிறத்தில் ஊதாவரிகளையுடைய தாயு மிருக்கும். விதைகள் 3-4 அங்குலம், பூண்டு 1-2 அடி உயரம். இது வங்காள தேசத்தில் ஈரமில்லாத மரத்தடி நிழலிலும்

விளையும். விசேஷமாய் திருநெல்வேலி, தென்தேசம், ஆந்திர தேசத்தின் வட பகுதிகளிலும் இந்தியாவின் பலவிடங்களிலும் வேலிகளிற் காணலாம். இது ஐப்பசி மாதத்தில் பூக்கும். இதன் உலர்ந்த குச்சி எல்லாக் கடைகளிலும் விற்கப்படும். இதன் சமூலம் மிகக் கசப்பு.

இதன் இலைக்கஷாயம் குழந்தை வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், வாதசுரம், பித்த மயக்கம், இவைகளுக்கும் பெரியவர்களுக்கு நாள்பட்ட சீதபேதி, சுரதோஷம், நீர்க்கோவை, இவைகளுக்கும் கொடுக்க குணமாகும். இதற்கு பலகாரி, சடராக்கினி வர்த்தினி, சுரகரகாரி குணங்கள் வாய்ந்தது. இதை மற்ற கடைச் சரக்குகளோடு சேர்த்துக் கொடுக்க சுரத்தைக் கண்டிப்பதில் மிக்க சிறப்பு வாய்ந்தது. பஞ்ச மூலிக் கஷாயத்திலும் சேர்ப்பதுண்டு. இதை சில வேளை வாந்தி பேதி, சீதபேதிக்கும் கொடுப்ப துண்டு. இதை அரிஷ்டமாகச் செய்து பல வித குன்ம நோய்களுக்கும் உணவு செல்லும் பாதை சோர்வுற்ற காலத்திலும் கொடுப்பதுண்டு. இதன் இலைச்சாறு குழந்தை களின் உடற் கோளாறுகளைக் கண்டிக்கும்.

Indian chireta - Andrographis paniculata ahas justicia paniculata. It is known as ground neem. It is an annual and is frequently cultivated.

Stem quadrangular about $1^1/_2$ ft. in length pointed and smooth; dark in colour, leaves opposite,lanceolate on short petioles, flowers remote alternate rose coloured or white streaked with purple, seeds 3-4 in each, the whole plant is 1-2 ft. high. It is found grown in Bengal in dry places under shades of trees, commonly caltivated in Tinnevelly, southern districts and the northern districts of the Andhra province. It is common in ledge rows throughtout the plains of India. Dried stems are sold in all bazaars of India. The whole plant is very bitter.

It is an authelmintic, stomachic, tonic, febrifuge and antiarthritic and antibilious. Decoction of the leaves is generally prescribed by

Vaidyans in Children's diseases such as colic, flatulency, fevers, biliousness etc. and in adults for chronic dysentery, fevers cold etc. The plant is much valued for its stomachi and tonic properties. Mixed with other bazaar drugs it is successfully used in general debility and convalascense after fevers. It forms an ingredient in the decoction extracted from a mixture of five drugs. It is occasionally used in cholera and dysentery. The tincutre is a stimulant and a gentle aperiant and so proves valuable in the treatment of several forms of dyspepsia and also in the torpidity of the alimentary canal. The expressed juice of the fresh leaves is a domestic remedy in the bowel complaints.

NOTE: It is a Non aryan bitter plant. It has properties similar to these of chiretta. The bitter is due to a non basic principle there being no alkaloid Medicinally it forms basis of French and Portuguese bitter tincture known as drogue amere. It is very analogus to quassia or gentian in action.

The Indian varieties though differ more or less from the officinal chiretta in many respects are similar in bitterness and possesses the same medicinal properties. Thebitterness is due to the two principles viz Ophetic acid cheratin.

நிலவேர், நிலத்தின் வேர், root found under the earth; *2.* பூ நாகம், earth worm; *3. நாக்கில்லாப்பூச்சு,* tongueless worm; *4.* ஆண், male, *5.* குற்றி விளா; a variety of wood apple.

நிலாக்கிளத்தி, முதியோர் கூந்தல், which see.

நிலாப்பிறை, சந்திரனின் மூன்றாம் பிறை, the third phase of the moon, seen on the third day of full or new moon -Crescent shaped semilunar.

நிலாமணி, சந்திர காந்தக்கல், moon stone.

நிலாமுகி, see நிலா முகிப்புள்.

நிலாமுகிப்புள், சகோரப்பட்சி, bartavelle or greek partridge feeding on moon beams -Perdii rufa.

நிலாவல், பரவுதல், spreading, extending.

நிலாவாரை, நிலவாகை. இது ஆவாரை இனத்தைச் சேர்ந்தது. இது இந்தியாவில் குஜராத் முதலிய பலவிடங்களில் காணப் பட்டாலும், தென் இந்தியாவில் திருநெல் வேலியில் விளைவதுதான் மிகச் சிறந்தது. இது பம்பாயிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகும். இதைப் போலவே சூரத்து நில ஆவாரை என்றும் ஓர் இனம் உண்டு. இதனின் நியும் சீமை நிலாவாரை என்றும் உண்டு. சென்னாமுக்கி என்பது ஓர் வகை. இது அரேபியாவில் ஏராளமாய் பயிராகி ஏற்றுமதி யாகும். எகிப்து, இத்தாலியிலும் பயிராகும். ஆனால் திருநெல்வேலி ஆவாரைதான் சிறந்ததாகும். இது வருஷத்திற்கொரு முறை பயிராகி ஓயக் கூடியது. அடி மரம் நேராகவும் மிருதுவாகவும் இறகைப் போலவும் இருக்கும். இலை குறுகல், இலைக் கொழுந்து 4-8 ஜோடி கூர்மை, மேற்புறம் வழவழப்பு, அடிபக்கம் சொரசொரப்பு, இலைக்காம்பு இலையை விட நீளம், இதழ்கள் முழு மஞ்சள் நிறம், காய்கள் 1.5 அங்குல நீளம், அநேக விதைகள் உள்ளது. ஐப்பசி, மார்கழி, தை மாதங்களிற் பூக்கும். இதன் இலை கசப்பும்; வெகுட்டலு முள்ளது. கடைச் சரக்கு சுத்தமாயிராது. இவ்விலைகள் விரேசன மருந்தாய் உபயோகப் படும். இது சில சமயம் வயிற்றுக் கடுப்பு குமட்டலையும் உண்டாக்கும். சுரத்தால் பீடிக்கப்பட்ட காலத்திலும் கர்ப்பினி யாயிருக்கும் காலத்திலும் இது உதவாது. மூல ரோகிகளுக்கு இதைக் கொடுக்கப்படாது. இதைக் குழந்தைகளுக்கும் தக்க அளவில் பயமின்றிக் கொடுக்கலாம். இலையிலிருந்து எண்ணெயும், இறக்குவதுண்டு. இலையைக் கஷாயமிட்டுக் கொடுக்க குன்மம் வயிற்றுப் பிசம் ஆசன வெடிப்பு மலச்சிக்கல் இவைகள் நீங்கும். சூரணித்துச் சாப்பிட அதே குணங்களுண்டு. இது கபம், பித்தம், வண்டல் (வாதம்) இவற்றை பேதி மூலமாய்க் கழக்கும். தீய்ந்து போன சத்துக்களை வெளிப்படுத்தும் மூளையில் தங்கி நிற்கும். வாத நீர் பித்த நீரைப் போக்கும்.

காசம், அதி மூச்சு இவைகளைக் கண்டிக்கும். வாயு, கீல் வாயு, பக்க நோய், குலை நோய், உடம்பில் ஆழ்ந்து கிடக்கும் துர்நீர், நரம்பிசிவு, வயிற்றுப் புழு இவைகள் போம். இத்துடன் பாதம் நெய் அல்லது ரோஜாப்பூ சேர்த்து உபயோகிக்க மெத்த அனுகூல மாயிருக்கும். அன்றியும் மூலவாயுவுக்கும், சீழ்ச் சிரங்குகளுக்கும் இது சிறந்தது. இதன் இலையைக் கஷாயமிட்டு இத்துடன் காடி சேர்த்து சொறி, சிரங்கு, படை இவைகளுக்குப் பூச ஆறும். கூந்தல் உதிரும் இடங்களில் இதைப் பூசி வர உதிராமல் தடுக்கும். இவ்விலையுடன் மருதோன்றி இலையையும் கூட்டிஅரைத்து செம்பட்டை அல்லது சிவந்த மயிருக்குப் பூச கருக்கும். இத்துடன் மற்ற கடைச்சரக்குகளையும் சேர்த்து கஷாயமாக தேக வாகுக்குத் தக்கப்படிபிரயோகிக்கலாம்.

Indian senna, Tinnevelly senna -Senna indica alias cassia lanceolata alias c. elongata. Though it is grown in many parts in India as Guzarat, Surat, Bombay, state etc. the one grown in south India, Tinnevelly is considered the best of its kind. It is exported to foreign countries from Bombay presidency. There are different varieties as Surat senna, Foreign senna, Italian senna, Arabian senna, Egyptian senna etc. which are not in anyway superior to Tinnevelli senna.

It is annual stem erect, smooth pinnated leaf lets 4-8 pairs lanceolate smooth above rather downy beneath, staks longer than leaves petals bright yellow, legumes pendulous about 1.5 inch long many seeded. Flowers in October to December. Leaves are bitter and cause nausea. Those that are sold in bazaars are often found adulterated with rubbish and are not pure. The purgative properties of senna are well known and it is the most commonly employed of all cathartics. It is apt to gripe and cause nausea it should not be prescribed in cases of fever not during pregnancy nor in the existence of piles. It may be given safely to children and elderly persons. Volatile oil is also extracted from the leaves.

Decoction of the leaves is successfully given in cases of dyspepsia flatulency, fissure of the anus, constipation. Powdered leaved have the same effect. More over it is given with great advantage for phlegmatic and bilous complaints, removes impurities through motions, eliminates the burnt or dead useless matter from thesystem bringing bad accumlation of the fluid in the cerebral region Checks asthma and moderates hard breathing. It is found to be a useful remedy in arthritic complaints, side pains, paraplegia heart disease accumulation of bad fluids in the system, speasms, worms in the intestines etc. It is always good to mix the decoction in fusion with almond oil or rose bud. It has long been held in high repute inflatulency and suppurating itch, Decoction of the leaves mixed with venigar forms an efficacious application for scabbies, ring worm and other cutaneous diseases. It is also applied by women for falling hairs, the leaves mixed with naildye ground into a paste and applied to brown hairs on the head changes the colourinto black. The leaves are also mixed with other bazaar drugs in infusion or decoction and administered according to the disease of the patients or other idiosyncrasis.

NOTE: 1. The leaf of the Indian senna (Tinnevelli) is nearly two inches long while the Alexandrian, Egyptian senna are only one inch long. It is acute in shape also unequal at the base, green in colour and of sweet taste. Senna is often aduterated with a similar looking leaf of the Argel- Salenostemma Argel, but these leaves are thicker and stiffer than that of senna, they are equal at thebase and bitterest intaste. Both Indian senna and Argel are purgative like Egyptian seen but they gripe which alexandria senna rarely does.

Senna is a safe and efficient purgative well adapted for childhood for old age and for delicate or weak persons. But it is not so well adapted for nursing woman as it may render the milk purgative and so cause colic in the child. The taste

of senna may be distinguished by sweeting the infusion by adding milk, when it resembles an ordinary tea infusion of senna with epsom salt constitute the once much used black draught.

NOTE: 2. In commerce three kinds of senna are distinguished. 1. Bombay or Mocha or East Indian senna; 2. Tinnevelli senna; 3. Alexandrian senna. The 3rd is most used in Europe, the first is a branch of the second, and the second is much used in India. The confection of powdered leaves commonly called Laxative electuary is also a mild Laxative Syrup is also made from this and given to children infusion is an excellent family medicine. A table spoonful of brandy will add to its stomachic properties.

Tinnevelli senna is highly esteemed in Britain and is preferred to all other sorts as being both purer and cheaper. The cause of griping after being taken is due to its being adultered with other poisonous leaves. It is often adultered with Argel leaves which are thicker and stiffer. Indian senna is divided into Tinnevelli senna and East Indian Indian senna and they are obtained from one variety viz Cassia elongata.

Senna is purgative increasing considerably the peristaltic action and also to some extent the liquid flow from the intestines. It appears to act chiefly on the small intestines and less on the colon and the rectum than aloes. It is sometimes combined with salines as epsom salt or taratlic of potash and some are matics.

It is prescribed when constipation is present in dyspepsia and in alsmot all febrile and inflammatory diseases. It should not be given when the ealimentary canal is much affected. Syrup is also an effectual preparation.

The following are the different varieties:-.

1. நில ஆவாரை, ground senna or Aleppo senna -Cassia obovata.
2. எகிப்து நில ஆவாரை, Alexandrian senna - Senna Alexandrina.

3. திருநெல்வேலி நிலாவாரை, Tinnevelly senna -Cassia angustifolia.

4. பம்பாய் நிலாவாரை, Bomay senna -Cassia lanceolata.

5. நாட்டு நிலாவாரை, the same as No.3.

6. கீழ்நாட்டு நிலாவாரை, East Indian senna -Cassia elongata.

7. சீமை நிலாவாரை, foreign senna or Nubian senna -Cassia acutifolia.

8. சூரத்து நிலாவாரை, Surat senna -Cassia acute folia same as No.7..

9. மோகா நிலாவாரை, Mocha senna the same as No.3.

10. காட்டு நிலாவாரை, Italian senna -the same as No.1.

நிலாவிரை, நிலாவாரை, which see.

நிலாவிரைலேகியம், நில ஆவாரையைக் கொண்டு தயாரிக்கும் இலேகியம். இது மலச்சிக்கலுக்கு கொடுப்பது, confection of senna prescribed for constipation.

நிலாவிழுது, see நிலப்பனை.

நிலிகாவியங்கம், முகத்திற் காணும் ஓர் வகைப்பரு, a variety of mole.

நிலிஞ்சிகை, பசு, cow.

நிலிநாதியம், பாண்டுக்குக் கொடுக்கும் ஓர் சூரணம், medicinal powder for dropsy.

நிலுமைக்கல், இராசவர்த்தக்கல், a kind of gem -Lupis luzuli.

நிலை, குணம், character; 2. நிலைத்தல், being settled in a place; 3. இடம், place; 4. பொழுது time; 5. நிற்கு நிலை, posture as in யோகநிலை.

நிலைகுலைதல், see நிலைபெயர்ச்சி.

நிலைகுலைந்தேகல், இருந்த இடத்தை விட்டகலல், leaving away the original seat said of a disease.

நிலைகுலைந்தோடல், see நிலைகுலைந்தேகல்,.

நிலைக்கண் சிமிட்டாக்கண், fixed eyes- no reflex action.

நிலைக்கணபட்டிருத்தல், see நிலைக்குத்திடல்.

நிலைக்கல், ஆட்குக்கல், sheep's bazoer.

நிலைக்கால், முடவாட்டுக்கால், see ஆட்டுக்கால்.

நிலைக்குத்தல், கண் சிமிட்டாமை, gaze, stare look; 2. ஓர் மரணக்குறி, see நிலைக்குத்திடல்.

நிலைக்குத்திடல், கண் சிமிட்டாது நிலையாக விழித்தபடியே இருத்தல். இதுசில நோய்களில் காணும் குறி, eye becoming fixed as a symptom of some diseases; 2. கண் விழித்தபடி யேறி நிற்றல், upward and inward turning of the eyes simultaneously -a death system c.f. ஆணியாடுதல்.

நிலைக்குற்றிடல், see நிலைக்குத்திடல்.

நிலைக்கூடம், பித்தளை, brass; 2. யோகநிலையிலிருக்கும் பிரத்தியேகமான இடம், a secluded hall intended or set apart for yoga practice.

நிலைசன்னி, மாறாத சன்னி, an irrecoverable apoplexy; 2. நிலைக்கண்ணிட்ட சன்னி, appolexy marked by a fixed look.

நிலைத்தல், நிலை பெறுதல்; becoming permanent or fixed to a place.

நிலைத்துத்தி, see நிலத்துத்தி.

நிலை பாஷாணம், பரங்கிப் பாஷாணம், a mineral poison sublimate of mercury.

நிலை பெயருதல், குறித்த அல்லது ஏற்பட்ட விடத்தை விட்டகலல், the act of removing or being removed from the normal position or place, displacement -Ectopia.

நிலை பெயர்ச்சி, நிலை குலைதல், removal from the usual or proper place -Displacement; 2. இடம் விட்டு இடமகலல், (in physiology) mal position of an organ in the body.

நிலை பெயர்ப்பு, see நிலை பெயர்ச்சி.

நிலை பெறுதல், பெயராது நிற்றல், get fixed as opposed.

நிலை பெற்ற சூடா, சுழல் வண்டு, whirling beetle often found in water.

நிலை பெறுத்துகை, பழைய நிலைமையடைகை, classticity. see சித்தாபகம்.

நிலை பெற்ற காயம், கற்பத்தினால் நெடுங்காலம் சீவித்திருக்கும் உடம்பு, a rejuvenated body living for long ages.

நிலை பெற்ற நோய், உடம்பை விட்டு அகலாத நோய், a chronic disease.

நிலை பெற்ற மனம், ஒரு வழிபட்ட மனம், settled mind -Cocentrated mind.

நிலைப்பூசினி, see நிலப்பூசினி.

நிலை மந்தம் வேர், மேகநோய்க்கு உபயோகிக்கும் வேர், a root of used for diseases of venereal orgin.

நிலைமை குணம், quality; 2. இருக்குந்தன்மை, state; 3. கால நிலைமை, condition of time.

நிலையற்ற தேகம், நிலையில்லாத காயம், body not lasting or continuing in the same state.

நிலையற்ற நாடி, அலைவுற்ற நாடி, undulating pulse.

நிலையற்ற மனம், தளும்பு மனம், wavering mind; 2. அடிக்கடி மாறும் மனம், fickle mind.

நிலையாத்தாபம்,.

நிலையாவாரை, see நிலாவாரை.

நிலையிற் பிரியான், தான் கொண்ட கொள்கையினின்று மாறாதவன், one who does not change his view.

நிலையிற் பிரியான், சதா யோக நிலையில் நிற்பவன், one who is obsorbed in yoga; 2. சமாதி நிலையில் நிற்பவன், one in the stage of samathi.

நிலையுரல், பெருவிரல், thumb; 2. ஒரு இடத்தில் பதிந்த உரல், mortar fixed in a place.

நிலையுறதல், நிலைத்தல், becoming fixed or permanent.

நிலைவிட்டுப் பெயர்தல், நோய் குணப்படுதல், disease getting cured.

நிவசதி, ஓர் பூண்டு, an unknown plant.

நிவசனம், சீலை, cloth; 2. சீலைத்துண்டு, piece of cloth.

நிவர்தல், ஓங்குதல், growing high.

நிவலம், அவுபல பாஷாணம், one of the 32 kinds of native arsenic.

நிவாரணம், நீங்குகை, removal; 2. குணமாதல், cure; 3. பழைய நிலையைப் பெறுதல், restoration to the former state or position; 4. சாப நிவாரணம், making reparation for expiration.

நிவாரணி, நோயைக் குணப் படுத்தும் மருந்து, curative agents or medicines.

நிவாரம், காட்டு நெல், see நிவாரி.

நிவாரி, see நிவாரணி; 2. காட்டு நெல், wild paddy; 3. காட்டரிசி, wild rice; 4. மலை நெல், mountain paddy.

நிவி மரம், மாமரம், mango tree -Mangifera indica.

நிவிருத்தப்பிரசவம், பிரசவத் திற்குப் பிறகு ஐந்து வருஷத்திற்கு மேலாகும் வரையில் பிள்ளை இல்லா திருத்தல், a woman in whom conception does not occur for a period more than five years after a previous child birth.

நிவிருத்தி, பிறப்பறல், release from transmigration; 2. ஆன்மா கதி பெறல், final emancipation of the soul; 3. குணமாதல், யcure; 4. the return or dissolution process in the yoga practice; 5. ஒழிவு, extinction or cessation; 6. லயம், dissolution c.f. பிரவிருத்தி.

நிவிர்த்தி, see நிவிருத்தி; 2. துறவு, renunication; 3. அசையா நிலை,cessation of action or motion.

நிவிர்த்தன், ஆசாபாசங்களை அறுத்தவனாகிய துறவி, ascetic free from bondage of life.

நிவிருத்தி, the cessation from all acts and freedom from desire. It leads to emancipation.

நிவேசம், உடம்பில் ஊசியேற்றல். இது ஓர் பிரார்த்தனை. (in Religion) hook swing in satisfaction of a vow; 2. நோயால் வேண்டி உடம்பில் மருந்தை ஊசியால் புகட்டல், the act of throwing of a liquid medicine into the body through a needle -Injection; 3. உடம்பில் ஊசிப் பிரயோகம், insertion of a needle into the body for any purpose -Inoculation.

நிழலில், சாயைபடுதல், casting a shadow.

நிழலி, காற்று, wind; air.

நிழலுணர்த்தல், *நிழலுலர்த்தல்,* drying in the shade.

நிழலுலர்த்தல், *சூடு காட்டி உலர்த்துவதால் மூலிகைச் சத்து போய் விடுமெனக் கருதி, நிழலில் காய வைத்தல்,* the drying of drugs in the shade -Airefaction. This is done before powdering because of the fact that drugs would lose their virtue by either exposing them to the sun or by heating them in fire.

நிழல், *சாயை,* shadow; 2. *வெயில் மறைப்பு,* shade; 3. *குளிர்ச்சி,* coolness; 4. *நோய்,* disease.

நிழல் நாவல், *ஓர் வகைக் காட்டுப் புதினா,* a kind of fragrant wild mint -Ocimum menthoides; 2.*கருநாவல் மரம்,* a kind of black jaumoon tree.

நிழற்காத்த *விருட்சம்,* see *நிழற்காந்தம்.*

நிழற் காந்தம், *சாயா விருட்சம்,* a tree which does not cast shadow for the reason it allows the sun's rays to pass through.

நிழனாவல், see *நிழல் நாவல்,.*

நிறக்குமஞ்சள், *கப்பு மஞ்சள், பூசு மஞ்சள்,* turmeric used by women while bathing.

நிறக்குருடு, *உள்ள நிறம் புலப்படாமை,* colour blindness.

நிற சாயம், *மூன்றெழுத்தில் ஒன்றாகிய கிலி,*one of the three mystic letters viz *ஐயும், கிலியும் சவ்வும்.*

நிறஞ்சனாதிமூலி, *சிவ துளசி,* shiva's basil -Ocimum hirsutum.

நிறஞ்சோதி, *மரமஞ்சள்,* tree turmetic — coscinium fenestratum.

நிறத்தகண்காரி, *குண்டு மணி,* wild licorice -Abrus precatorius.

நிறப்பதார்த்தம், *நிறத்தைக் கொடுக்கும் வஸ்து,* colouring matter; 2. *உடம்புக்கு மேனியைக் கொடுக்கும் வஸ்து,* that which gives beauty or lustre to the body.

நிறமாறி, *நிறம் மாறும்படியான வஸ்து,* anything in which the colour in changed; 2. *பச்சோந்தி,* chameleon capable of changing its colour.

நிறமாற்றி, *நிறத்தை மாற்றச் செய்யும் வஸ்து,* anything capable of altering the colour of a substance.

நிறமான பழத்தி, *மணித்தக்காளி,* black berried solanum -Solanum nigrum.

நிறமுற்ற நிட் களன், *துரிசு,* blue vitriol -Copper acetate.

நிறம், *உடம்பு,* body; 2. *வர்ணம்,* colour; 3. *குணம்,* quality; 4. *மார்பு,* breast; 5. *நவச்சாரம்,* salammoniac -Ammonium chloride.

நிறுத்தல், *நிறுக்குதல்,* weighing; 2. *தடைபடுதல்,* stopping as in bleeding, purging, vomiting, coughing etc; 3. *ஒரு வஸ்துவின் இடை, கனம் முதலிய குணங்களை நிர்ணயிப்பதற்காக தராசு கொண்டு நிறுத்தல்,* determining the natural property of matter proportionate to its bulk and density of its parts by balancing in a scale against some known or acknowledged weights placed on the opposite side. This is done by jewellers gold smiths, merchants, physicians etc.; 4. *நிலைப்படுத்தல்,* establishing settleing; 5. *கொடாமை,* putting off, keeping back.

நிறை, *நிறுத்தளவு,* Indian standard weights; 2. *நூறு பலம்,* hundred palams; 3. *நிறைவு,* perfection, fullness; 4. *நீர்ச்சால்,* a large water pot; 5. *வரையறை,* standard degree.

நிறைகருப்பம், *பூரண கருப்பம்,* full term pregnancy.

நிறை கருப்பினி, *பூரண கர்ப்பப் பெண்,* woman quick with child; 2. *மாதம் நிறைந்த பிள்ளைத்தாய்ச்சி,* a woman with full term pragnancy.

நிறைச்சன்னி, *மூடுசன்னி,* cerebral apoplexy marked by fatal comatose.

நிறைசூல், see *நிறை கருப்பம்.*

நிறை தருதுறு, *சீந்தில்,* moon creeper -Menispermum cordifolium alias Tinosphora cardifolium.

நிறைநாடி, *பூரண நாடி,* full pulse as opposed to feeble pulse.

நிறைந்திடல், *நிறைதல்,* becoming full; 2. *பெருகுதல்,* over flowing, suffusion.

நிறை பிள்ளைத்தாய்ச்சி, *பத்து மாதமும் நிறைந்த பூரண கர்ப்பினி,* a woman of full termed or advanced pregnancy.

நிறைப்பிணி, see *நிறைகருப்பிணி;* 2. *முழுப்பிணி,* disease in full.

நிறைப்பு, *உடம்பினுள் சத்துக்களையூட்டு மருந்து,* a medicine that gives tone to the system -Tonic.

நிறைப்புறை, see *நிறைப்பு;* 2. *மூன்று வகை மருந்துகளில் ஒன்று. அதாவது உடம்பினுள் உலோகச்சத்து, உப்புச்சத்து முதலியவைகள் குறைந்த காலத்து அதை நிரப்பும்படி உண்ணும் பற்பம், செந்தூரம், இலேகியம் முதலிய மருந்து,* one of the three kinds of medicines for reestrblishing healthy functions of the system. ie. a medicine which produces favourable changes in the process of its repair when vital essences are found wanting in the system.

நிறை மாதம், *கழிந்த பத்து மாதம்,* full term of ten months when referring to pregnancy.

நிறை வீக்கம், பூரண வீக்கம், full swelling.

நிறோவடி, *பொன்னாங்காணி,* sessile plant- Illecebrum sessile.

நிற்காங்கு, see *நிருவாலி.*

நிற்குண்டி, *வெண்ணொச்சி,* negundo -Vitex negundo.

நிற்சரம், *அமுதம்,* nectar.

நிற்பீசம்,

நிற்மலம், *குற்றமற்றது. இது சிவனைக் குறிக்கும்.* free from all dirt referring to God Shiva.

நிற்மலன், *குற்றமற்றவன்,* one who is free from all faults as Shiva.

நினைவு *தடுமாற்றம், புத்தி மாறல்,* mental derangement; 2. *மனமாற்றம்,* confusion of mind; 3. *சித்தப்பிரமை,* delirium; 4. *சுவர்ணை மாறல்,* change of consciousness; 5. *ஓர் மரணக்குறி,* a death symptom; 6. *நினைவு கெடல்,* failure of memory.

நின்பம், *நிம்பம் அல்லது வேம்பு,* neem tree -Margosa tree -Azadirachta indica alias Melia indica.

நின்மலரசம், *பத்து வகை ரசச் சத்துக்களில் ஒன்று. இது சாரணைக்குதவும். இதை 201 தரம் சாரணைத் தீர்த்தால் கவுனம் பாயலாம்.* (in Alchemy) one of the ten kinds by which

mercury is animated. If this process is continued to 201 times. it will enable one to travel in the aerial regions and round the planets.

நின் மலாவஸ்தை, *சாக்கிர முதலாயுள்ள ஐந்து வகையான உயிர் நிலை உபாதிகளை நீக்குவதற்காக அடையும் நிலைகள்.* (in Philosophy) the physical and in tellectual state attained by a practising yogi in each of the five stages when reaching the respective five stations of the soul with a view to seek deliverance from Malam. They are five fold viz;

1. *நின்மலசாக்கிரம்,* soul coming to a full vision.
2. *நின்மலசொற்பனம்,* soul being affected by dream.
3. *நின்மல சுழுத்தி,* insensibility to sinful disires.
4. *நின்மலதுரியம்,* reaching the regions of happiness.
5. *நின்மலதுரியாதீதம்,* enjoying transcendental bliss which is the highest state of the soul free from all corporal entanglements.

NOTE: This kind of practice leads a practising yogi to those great planes of mental activity out side of the ordinary field of consciousness and shows him the wounderful things to be found there.

1. The peaks and valleys of the self.
2. The mental spectrum with its wealth of mental colouring.
3. The nature and cause of feeling and how it affects our lives and influences our judgements.
4. The cause of instinct and the influence of instinctive feelings upon our actions and thought.
5. The operations of the sub conscious mental faculties.
6. The higher powers of the soul -the super consciousness.

நின்றவிடம் தீஞ்சான், *குருவிச்சை,* honey suckle mistle toe -Loranthus elasticus;
2. *புல்லுருவி,* a parasitic plant -Strigalut.

நின்றாட்சிணுங்கி, see *நின்று சிணுங்கி.*

நின்றால் மேனி, மனிதர் நிழல்பட்டால் பொன்னிறமாக மாறும் பூடு. இதில் இரசங்கட்டும் வங்கம் சுண்ணமாகும். a plant that turns to golden colour when men's shadow fall on it. It is capable of binding mercury and calcifying tin.

நிற்றிகா, சிற்றேலம், small cardamom.

நின்றிடம், தீஞ்சான், see நின்றவிடம் தீய்ஞ்சான்; 2. பல்லிப்பூடு, lizard plant -Buchnera asiatica or strigalutea (lour).

நின்றிதம், தரைப்பசலி, malabar night shade -Basella prostratum.

நின்று சிணுங்கி, சிறியாணங்கை, a herb that is contionously emitting water c.f. அழுகண்ணி. இது பாம்பின் விஷத்தை நீக்கும். பெண் வசியத்திற்கு உதவும். cures snake bites and is used to enchant women.

நின்றோசி, நாகப்படக் கற்றாழை, thorn less aloe.

நீ

நீ மலைவேம்பு, hill neem -Melia composita.

நீகம், தவளை, frog; 2. மேகம், cloud.

நீகாரம், பனி, dew, frost.

நீக்கம், இது காப்பு, நீக்கம், நிறைப்பு என்னும் மூன்று வகை மருந்துகளில் ஒன்று. இது வந்த நோய்களைத் தீர்க்குமருந்து, one of the three kinds of treatment by medicine ie. curing diseases; 2. நீக்குகை, act of separating.

நீக்கல், தன்னையடைாது தடுத்தல், preventing so as not to over take one; 2. கொல்லல், killing.

நீக்குப்பல்லன், குட்டிப்பல்லன், one having snaggy teeth; 2. சிங்கப்பல்லன், one having high teeth ie. with one cuspid or point.

நீங்கல், குணமாதல், as நோய் நீக்கல், (lit) leaving as disease, leaving the body ie. being cured of the disease; 2. காட்டுப் பூவரசு, false bern tree -Filicium decipiens; 3. நீங்குதல், being liberated or released from; 4. பிரிதல், separating from; 5. அகற்றல், removing expelling; 6. மாறுதல் (in Astrolgy) being changed as planets.

நீங்காசலமலம், கடற்பாசி, sea weeds -Gracilaris lichenoides alias G.confervoides.

நீங்காதவோசையோன், சங்கு, conch.

நீநிங்கா விக்கல், non stopping or contionous hiccups.

நீசகம், தண்ணீர், water.

நீசடுவா, பால், milk.

நீசம், மஞ்சள், turmeric-Curcuma longa.

நீசரக்கு, see நீசம்.

நீசப்புணர்ச்சி, குறைந்த அளவுடைய ஆண் அளவு மிகுதியாயுள்ள பெண்ணுடன் கூடினால் அப்பெண்ணுக்குக் காம விகாரம் அடங்காது, the passion of women will not abate when a man smaller than she copulates with her.

நீச்ச சலம், மூத்திரம், urine.

நீச்சத்தாணி, இரசம், mercury.

நீச்ச நாற்றம், ஓர் இழிவான அல்லது கெட்ட வாசனை, stink offensive smell.

நீச்சு பிரமேகம், கோசத்தில் குத்தலுடன் விறுவிறுப்பு உண்டாகி, நரம்பு, சுருங்கி, அடிவயிறு வலித்துக் கள்ளைப் போல் மூத்திரம் இரங்கி சீழ் வடியும் ஓர் வகைப் பிரமேகம், a catarrhal inflammation of the genital mucous membrane marked by contraction of nerves pain in the abodomen, discharge of milky urine with pus -Gonorrheal urithritis.

நீடசம், குருவி, a kind of sparrow.

நீடசேந்திரன், கருடன், brahmini kite.

நீடல், நீளுதல், elongating growing long; 2. பரவுதல், spreading, extending as disease.

நீடாணம், கறிக்குழம்பு, curry soup, soup extracted from mutton or meat.

நீடாலைக்கோடு, சூடாலைக்கல். இது உபரச் சரக்கிலொன்று, load stone which forms one of 120 kinds of natural substances contemplated in Tamil Siddha Medicine.

நீடித்தசுரம், பழஞ்சுரம், long continued or chronic fever.

நீடித்த துன்பம், நெடுநாளாய் அனுபவிக்குந் துன்பம், long standing suffering.

நீடித்த நோய், நெடு நாளாக உடம்பில் தங்கி நிற்கும் நோய், long standing disease or complaint, chronic ailment.

நீடித்த பிடிப்பு வாதம், நாட்பட்ட வாதப் பிடிப்பு நோய், chronic rheumatism.

நீடித்த பிரசவம், கிரமப்படி யில்லாது அதாவது வழக்கத்துக்கு விரோதமாக அதிக நேரமாகத் துன்புறுத்தும் பிரசவம், labour which is prolonged beyond the ordinary limit -Protracted labour.

நீடித்த மல பந்தம், நெடு நாளாக இருக்கும் மலச்சிக்கல், chronic constipation.

நீடித்த தாகம், விடாய் நீங்காத தாகம், unquenchable thirst.

நீடு, நீண்ட காலம், long time; 2. நீளுதல், prolonging.

நீடு நினைத்திரங்கல், நெடுங் காலமாக கடவுளை நினைந்து வாடல், being afflicted with by constantly thinking of God; 2. நீடு நினைந்துருகல், pining away by continued attention of the mind in looking forward to the appearance of God.

நீடு நினைந்துருகல், see நீடு நினைந்திரங்கல்,.

நீடுருவாணி, சித்திரத்தை, lesser galangal -Alpinia galanga (minor).

நீடுவாளி, நீடுழி காலம் உயிரோடிருப்பவன், one who is living for ages or for long time.

நீடுவாளி செயநீர், சாகாவுப்பு செய நீர், a pungent saline preparation retaining the body for a long time as contemplated in Tamil Siddha Medicine.

நீடுரம், பாஷாணம், poison.

நீடுழி, நெடுங்காலம், long time, ages.

நீடுழி காலம், நெடுங்காலம், great lenth of time, நீடுழி வாழ்தல், அநேக காலம் உயிரோடிருத்தல், living to a great age as Rishis.

நீடோத்பவம், பறவை, bird; 2. காக்கை, crow.

நீட்டக்கத்திரி, நீண்ட கத்திரி, long brinjal.

நீட்டக்காவிதம், சுரைக்காய், bottle gourd -Cucurbita lagenaria.

நீட்டக்கொத்தவரை, பெருங் கொத்தவரை, long clusterbean -Cyamopsis psoralioides.

நீட்டச்சோதி, சோதி விருட்சம், a tree luminous in the dark-Phosphorous tree.

நீட்டப்பாகல், கொம்பன் பாகல், long balsam pear -Momordica charantia.

நீட்டல், கை, கால் நீட்டுதல், stretching of the limbs; 2. கொடுத்தல், (உம்.) ''தேனதிலே நீட்டிப்பாரு'' given as in the above pharse, 3. காலங்கடத்தல், postponing, extending the time.

நீட்டல் குறுக்கல், நீட்டுதல், முடக்குதல், stretching and folding of the limbs contraction and relaxation as of muscles and nerves.

நீட்டாகவம், பம்பிளிமாசு, Batavian lemon -Citrus decumana.

நீட்டாக்கால்கை, குறுகிய அல்லது முடங்கிய கை, கால், contraction of the limps not enabling one to stretch out.

நீட்டித்தல், பொழுது போக்கல், spending long time; 2. முடித்தல், accomplishing.

நீட்டின விரல் குறித்தான், கிரந்தி நாயகம், ulcer plant -Ruellia stupens.

நீட்டுக்கதியோன், வெள்ளாடு, goat.

நீட்டுக்கால், முடவாட்டுக்கால், goats foot -Ipomea biloba.

நீட்டு செடிச்சி, பேய்த்தும்பை, devil toombay -Leucas linifolia alias Phlomis zeylanica.

நீண்ட கண், தூரப்பார்வையுள்ள கண், see நெடுங்கண்.

நீண்ட கையான், காண்டா மிருகம், rhinoceros.

நீண்ட தும்பை, see நீட்டிச்செடிச்சி.

நீண்ட மயல், காமத்தாற் பெருமயக்கம், long cherished sensual infatuation or lust by either sex.

நீண்ட மலக்கிருமி, குடலில் இருக்கும் நாகப்பூச்சி, round worm -Ascaris.

நீண்ட விந்து, சுக்கிலம், semen.

நீண்ட விலை, ஆடாதோடை, Malabar nut -Adathoda vasica.

நீண்டொழுகு மேகம், see தந்து மேகம்.

நீதகம், நீர் வல்லி, betel leaf vine -Piper betle.

நீதசெம்மன், மேல் பூமி மண், the red soil of a table land.

நீதச்சிலை சூதம், நீலாஞ்சனம், black antimony; sulphate of antimony -Stibium.

நீதப் பரிமளம், சீதாங்க பாஷாணம், a kind of native arsenic.

நீதம், தானியம், grain; 2. நவச்சாரம், sal ammoniac; 3. நீதி, equity justice; 4. நன்னெறி, correct deportment.

நீதர சிதம், வெள்ளி, silver.

நீதியாசம், கடல் நுரை, cuttle fish; Sepia octopodia; 2. மீன் எலும்பு, fish bone.

நீதுரசு, காடிக்காரம், silver nitrate.

நீதுரிக்கமிலம், வெடியுப்புத் திராவகம், nitric acid.

நீத்தம், தண்ணீர் விட்டான் கிழங்கு, water root asparagus -Asparagus racemosus; 2. வெள்ளம், flood.

நீத்தல், துறவறமேற் கொள்ளல், renouncing the world as ascetic; 2. பிரிதல், seperating from; 3. நீங்கல், deparling from.

நீத்த வஞ்சி, ஓர் வகைப் பூவாந்தி, a kind of soap nut tree -Sopindas tripoliatus.

நீத்திருணி, காமப்பால், semen virile.

நீந்தல், கடத்தல், (in philosophy) passing over or through escaping from.

நீபம், கடம்பு, cadamba- Eugenia racemosa; 2. வெண்கடம்பு, white Indian oak -Barringtonia racemosa; 3. நீபமரம், Niepa bark tree -Samadera indica.

நீமம், ஒளி, light; 2. பிரகாசம், lustre.

நீம், வேம்பு, margosa tree, neem tree -Azadiracta indica.

நீம்பயம், பனி தாங்கி, southern wood -Artimisa abrotanum.

நீம்பல், வெடியுப்பு, nitre -Potassium nitrate.

நீயம், see நீபம்.

நீரங்கொண்டி, நொச்சி, five leaved notch -Vitex negundo.

நீரிசம், தாமரை, lotus flower -Nelumbium speciosum; 2. மாதுளை, pome granate -Punica granatum; 3. சலவாயு, hydrogen.

நீரடி, நீரடி முத்து, which see.

நீரடி முத்தம், see நீரடி முத்து.

நீரடி முத்து, நீர் வெட்டி முத்து. இதற்கு மரவெட்டி என்றும் பெயர். இது திருவாங்கூர், மலையாளம், இலங்கை இவ்விடங்களில் உள்ளது. இம்மரம் 50 அடி. இலை வழவழப்பு, காய் உருண்டை, வெகு கடினம். ஆப்பில் பெரிதிருக்கும். விதைகள் அனேகம். பூக்கள் சிறியன. வெண்மை நிறம். கொட்டையின் உள் சதைப் பற்று முகட்டல், வாசனை, வழவழப்பு, சிறிது விருவிருப்பு உள்ளது. இதினின்று எடுக்கும் எண்ணெய் பாதம் எண்ணெய் போலிருக்கும். ஆனால் மிக்க தடிப்பாயிருக்கும். இது மிக்க கொடுமையுள்ளது. குஷ்டம் முதலிய சர்ம நோய்களுக்கு மேலில் தடவவுதவும். மேலோட் டைத்தூள் செய்து காடி அல்லது விளக்கெண் ணெயில் குழைத்து கால் சிரங்கு, சொறி சிரங்குக்குப் போடலாம். பழத்தைச் சாப்பிட மயக்கத்தை உண்டு பண்ணும். இதன் விரை மீனைக் கொல்லும். விரையைச் சூரணித்து சாப்பிட வாத நோய், நமைச்சல் போம்.

விதையைச் சூரணித்து மெழுகுச் சேர்த்து சரும நோய்களுக்குத் தடவலாம். எண்ணெய் குறைந்த அளவில் உள்ளுக்குங் கொடுக்கலாம். கண்ணில் அதிகமாக நீர் வடிந்தால் இவ்வெண்ணெயை உபயோகிக்கலாம். வேப்பம் பட்டை, பூவரசம் பட்டை சிவனார் வேம்பு இவைகளை இடித்து கஷாயமாக இறக்கி அத்துடன் இவ்வெண் ணையையும் சேர்த்து காய்ச்சி வடித்துச் சர்க்கரையிற் கலந்து சிறிதளவு கொடுக்க தோல் சம்பந்தமான நோய்கள் போம்.

இதன் பருப்புடன் சுக்கு, அமுக்கிரா, நன்னாரி வேர், பறங்கிச் சக்கை இவைகளைப்

பாலில் அவித்துக் காய வைத்துச் சூரணித்துச் சர்க்கரையும், நெய்யும் சேர்த்து இலேகிய பாகத்தில் கொள்ள தோலைப் பற்றிய நோய்கள் போம்.

இதன் எண்ணெயை வடக்கே தயாரிக்கும் சால்முகரா எண்ணெய்க்குச் சமமாகச் சொல்லலாம். சால்முகரா கிடைக்கா விடத்தில் இதை உபயோகிக்கலாம்.

fish poison tree -Hydnocarpus incbrians alias H. venenata alias H.wightiana. It is also called jungle almond, Maravatty, Hydragogue nut tree Tamana oil tree. Tree is 50 ft. high and common in Travancore, Malabar and Ceylon, leaves glabrous, fruit globose, very hard as large as an apple seeds numerous, flowers smell, white, kernel of seed has a nausesus smell and tastes unctous and a little acrid.

Oil got from the seed by expression resembles almond oil in appearance, but much thicker. Oil is in great repute as drastic. It is applied externally for leprosy and other cutaneous diseases kernels and thin shells sometimes ground together, mixed with castor oil or vinegar is applied externally to cure scabbies and uclers in the feet. Fruit if eaten occasions giddiness, seeds act as poison to fish; powdered seeds are used in rheumatic complaints and itching. It is also mixed with wax and used as an ointment for skin affections. Oil can be taken internally in small quantities and applied to the eyes externally in cases of ophthalmia marked by increased flow of tears. The kernel mixed with other ingredients viz dry ginger horse root sarsaparilla and china root and ground into a powder to which are added subsequently sugar and butter and used for skin affections. The oil almost the same in effieacy as chalmoogra oil prepared in the North and it may be used with great advantage in places where the latter is not procurable Margosa bark. Portia bark and Shiva's neem are all pounded together and boiled with water and the extract is filtered out. To this equal quantity of this oil is added and boiled and filtered. This oil will be found very useful and effective in skin affections.

NOTE: The tree is very common on the Western coast and is generally found over hanging tanks. The fruit is greedily devoured by fishes which are therefore rendered unfit for eating. The oil from the seeds is sedative and used as a remedy in scabbies. Some writters call this as chaulmoogra oil itself an this is wrong although the effect is the same.

The oil prepared with other ingredients such as Margosa bark etc. is found to be very an efficacious remedy in venereal and syphillitic sores and ulcers.

நீரடி முத்தெண்ணெய், நீரடிமுத்துக் கொட்டையினின்று தயாரிக்கும் எண்ணெய், oil prepare from the kernel of Hydnocarpus wightiana nut is almost equal to chaulmoogra oil. See நீரடிமுத்து.

நீரடை, பன்றிப்புடல், hog snake gourd or small snake gourd -Trichosanthes dioica; 2. ஓர் அப்பம், a kind of confection or coke.

நீரடைத்தல், see நீரடைப்பு.

நீரடைப்பன், ஆட்டுக்குக் காணும் ஓர் அடைப்பான் நோய், the symptomatic anthrax of sheep due tosome organism or infections bacilla through wounds -Braxy; 2. மூத்திரத்தைத் தடுப்பது, anything that obstructs the passage of urine.

நீரடைப்பு, இதுவே மூத்திர கிருச்சிரம், மூத்திரப் பையிலி ருக்கும் நீர் அக்கிரமமாய் வெளிப்படல் அல்லது வெளிப்படாமல் அடைப்பட்டு தங்கல். இதனால் மூத்திரம் சரி வர வராமற் படிக்குத் துன்புறுத்தும். இதுபல காரணங்களை முன்னிட்டு ஏற்படும். மேக வெள்ளை சம்பந்தமாகவும் புண்களாலும் கல்லடைப்பாலும் இத்தகைய நிலைமை உண்டாகும். இந்நோயின் குறிகளாவன; மூத்திரம் பெய்ய அடிக்கடி விருப்பங் கொள்ளல், முக்கிய மாக இராக்காலங்களில் ஆண் குறியின் முனையில்தினவு, மூத்திரப் பை உப்பிக் காணல், அடிவயிற்றில் கழலையைப் போல் காணல், ஆசன வாயண்டை குத்தல் வலி, நாக்குக் கரு நிறமடைதல், நாடி தளரல், சன்னியால் பிதற்றல்

முதலியன. கடைசியாக விக்கல் காணில் மரணமே என்று நிச்சயிக்கக் கூடும்.

obstruction of the urethral passage stricture of urethra causing retention of urine or discharge by other unusual ways urine dribling out after micturition, increasing difficulty in making water. This may be due to several causes such as attacks of gonorrhoea local lessions, stone in the bladder etc. There is also frequently sudden stoppage of the stream of urine owing to the contraction of urethra in one or more places or to the stone blocking the passage or lodging in the urethra. The following are the symptoms. frequent desire to pass water especially at night, itching at the tip of the penis distension of the bladder appearing like a tumour in the lower part of the abdomen smarting pain about the anus black tongue, feeble, pulse, and muttering delirium. Hiccup coming after delirium is a sign of determining the fatal termination -Anuresis; calculous anuria. See மூத்திரக்கிரிச்சரம்,.

நீரட்டை, நீரில் வாழும் அட்டை, water leech.

நீரணுவாய்ப் போதல், ஆவியாய் போதல், evaporating.

நீரண்டம், பிடுக்கில் பீஜத்தைக் கவர்ந்துள்ள பையில் நாளா வட்டத்தில் நீர் சேர்ந்து காணும் அண்ட வீக்கம், இவ்வீக்கம் பிடுக்கின் அடிபாகத்திலிருந்து தொடங்கி, மேல் பாகம் வழவழப்பாயும், தொடுவதற்கு மிருதுவாயும், வலியில்லாமலும் கனத்தினால் தொந்திரவாகவும் காணப்படும். இது சில சமயம் காயப்படுவதாலும் பிறப்பிலே ஏற்பட்டதாயும் அல்லது பிறதொரு காரணமில்லாமலும் ஏற்படலாம். இதற்கு குடலண்ட விருத்திக்கும் வெகு வித்தியாச முண்டு. இதைக் குத்தி நீர் எடுப்பதாலும் அல்லது சத்திர சிகிச்சையாலும் குணப்படுத் தலாம். Hydrocele which is due to a collection of fluid in the serous covering or bag enveloping the testicle which comes on gradually. It begins from the bottom of the Scrotum and forms a swelling smooth on its surface soft to the feel, free from pain and tenderness but causing uneasiness from its weight it may orginate from injuries or may be congenital or occur without any assignable cause. It may be easily distinguished from rupture (hernia). It may be cured either by tapping or surgical operation.

NOTE: The distinctive features are contrasted as shown below:.

Rupture

1. comes on suddenly.
2. disappears on lying down and reappears when standing up.
3. gurgling noise may be felt or heard inside.
4. tumour tense.
5. when coughing impulse in felt.
6. tumour does not obscure the testicle.—
7. dangerous to life.
8. liquid thrill cannot be felt.

Hydrocele

1. comes on gradually.
2. does not disapper or reappear.
3. no such noise is heard.
4. tumour smooth.
5. no such impulse or shake is felt.
6. obscures the testicle.
7. no danger to life.
8. liquid thrill is felt.

நீரண்டி,

நீரதம், மேகம், cloud.

நீரதி, சமறு, juice, essence.

நீரத்தி, மஞ்சள் அத்தி, yellow fig-Ficus callosa; See கொடியத்தி.

நீரம், நீர், water; 2. பானம், drink, liquor.

நீரம்பலி, see நரம்பிலி.

நீரரவு, நீர்ப்பாம்பு, water snake -Hydrus.

நீரருகல், நீர் கட்டல், நீர்ச்சிறுப்பு, suspension of urine.

நீரருக்கல், நீர்க்கட்டு, suspension or retention of urine.

நீரரும்பல், நீர்ப் பொசித்தல், oozing out of water.

நீரலரி, நீரரளி, water gaunair -Polygonum barbata; 2. முதலைப்பூண்டு, alligator's nose -Polygonum genus. See ஆற்றலரி.

நீரல்லி, see நக்கேணி.

நீரழி, see நீரழிவு.

நீரழிவு, பிரமேகம். இந்நோய் தெரியாமலே இரகசியமாக உடம்பினுள் அடங்கி நிற்கும். மூத்திரம் அளவுக்கு மீறி இறங்கும். இதில் சர்க்கரை இராது. இதில் மற்றொரு இனம் அதில் மூத்திரத்தில் சர்க்கரை இருக்கும். இதற்கு மதுமேகம் என்று பெயர். இம்மூத்திரத்தில் ஈ எறும்பு மொய்க்கும். வெகுநாள் வரை பசி குறையாது. சில சமயங்களில் அதிகப் பசிஎடுக்கும். உடம்பு வறட்சியாக காணும். மலச் சிக்கல் ஏற்படும். நாவறட்சி, தாகம் காணும். உடம்பின் வல்லமை நாளுக்கு நாள் குறைந்து நாடி தளர்ந்து இடுப்பிலும் விலாப் பக்கங்களிலும் குடைச்சல் உண்டாகும். நாளாக பசி குறைந்து வியர்வை கண்டு இருதயம் பலவீனப்பட்டு சில சமயம் பாதமும் வீங்கும். பெண்களுக்கு மர்ம ஸ்தானத்தில் அதிக நமைச்சலும் தினவும் காணும். ஆண்களுக்கோ குறி நுனியிலுள்ள தோல் வெந்து காணும். கண்ணில் துர் நீர் சேர்ந்து பார்வையைக் குறைக்கும். சில சமயங்களில் மயக்கம் கட்டி முதலியவைகள் காணும்.

இது சாதாரணமாக உட்புறத்தி லுள்ள ஈரல், குண்டிக்காய் முதலிய உறுப்புகள் சீரழிவதால் சிலருக்கு உண்டாயினும் பெரும் பாலும் தகுந்த செல்வாக்கில் உள்ளவர்களுக்கே பீடிக்கும். உழைப்பில்லாமலும் மித மீறி நெய், அரிசி, மிட்டாய், சர்க்கரை முதலியவைகளைப் புசிப்பதாலும் இன்னும் பலவித உணவுக் குற்றங்களினாலும் உற்பத்தியாகும். இது மருந் தினால் வசப்படாத காலத்தில் மருந்தை நிறுத்தி, பத்தியக் கிரமங்களைக் கைக்கொண்டு ஒழுகுவதே உத்தமம். சீரண உறுப்புகள் தாங்க முடியாத அளவு உயர் தரமான உணவுகளைச் சாப்பிடுவதாலும் மூளைக்கு சதா வேலையைக் கொடுப்பதாலும் இந்நோய் ஏற்படுவது கண் கூடாய்ப் பார்க்கலாம். ஆகவே இந்நோயாளிகள் தேகத்திற்கு உழைப்புக் கொடுத்தும், மிகவும் சிந்தனை செய்யாமலும் அமைதியாக விருப்பது உத்தமம். இதனால் தசை நார்கள் எல்லாம் பலப்பட்டு உடம்பி னுள்ள உறுப்புகள் வலுவடைந்து

மூத்திரம் குறைந்து சர்க்கரை நீங்கி நோய் சாந்தப்படும். உணவுகளை திடீரென்றில் லாமல் நாளடைவாக மாற்றி வரவும். இதன் குறிகள் அடியிற் கண்ட செய்யுளாலினிது விளங்கும்.

'தாகமே யதிகமாகித் தளர்ந்து நா உலர்ந்த மிக்க
சோகமாய்க் கிறுகிறுத்துத் தொடர்ந்துகை காலும் சோர்ந்து
ஏகமாய்ப் பகலும் அல்லும் விடாது நீ ரிறங்கும் அன்றி
மோகமாய் மழைப னிக்கு முதிர்ந்திறங் கிடுஞ்ச லந்தான்:

(வைத்திய விளக்கம்)

'துனியுறக் களையுண்டாக்கும் தோமில்போ சனம் வெறுக்கும்
நனிவயி றெரிவுண் டாகும் நாள் கழிந் திடுகிற்றேகம்
இனிவெளுத்தாளும் வற்று மிரு செவியடைத்து நிற்கும்
தினநலி சலரோகத்தின் தீக்குண மிது வென்றாரே'

diabetes. It comes on insidously remaining concealed in the system. It is characterised by frequent passing of urine in large quantities without sugar. This is known as diabetes insipidus. If urine contains large amount of sugar it is known as diabetes mellitus. This diabetic urine attracts flies and ants in large numbers. The appetite for a long time remains good and sometimes horactious. The skin becomes dry and the bowels costive, the tongue becomes dry and there is constant thirst. As emaciation progresses general health suffers pulse becomes feeble. There is great debility followed by acute pain in the loins and on the sides. After some time the appetite declines, perspirations occur, heart becomes weak and the feet may also swell. In women will be found frequent intense itching in the private parts and in men balanities (inflammation of the fore skin of the penis). Sometimes they are liable to cataract and also attacks of coma and to carbuncle.

The cause of this disease is generally due to the liver and kidneys not acting properly and errors in various organs. Thedisease is very very prevalent

among well-to-do people who lead indolent lives and indulge in consuming abundance of ghee or butter, rice, sweet and sugar and other errors in diet. When treatment cannot be resorted to by medicine it can be regulated to a successful end by appropriate diet, physical rest. The causes for this disease are generally ascribed to rich meals which cannot be sustained by the digestive organs and also to mental strain and so physical exercise and absolute rest are most essential. By adopting this, there is every hope to rebuild the constitution to improve the toning of the nerves and muscles and strengthen the relative organs, thus paving the way for reducing the secretions of urine and disappearance of sugar. Any change of diet should be gradual and not abrupt.

நீரறளி, see நீரலரி.

நீருகல், சிறு நீர் சொட்டு சொட்டாக விழுதல், passing of urine in drops.

நீரற்ற வியாதி.

நீரளவைக் கருவி, நீராழத்தை நிர்ணயிக்குங் கோல், a gauge or instrument for measuring or ascertaining the height or depth of water in a reservoir, river or tank.

நீரளி, நாவல், which see.

நீராகசிதம், நான்முகப் புல், wild sugarcane four faced stalk grass -Saccharum genus.

நீராகாரத் தண்ணீர், சோற்றி விட்டத் தண்ணீர். இதனால் வாத, பித்த, சிலேட்டும வறட்சி தாகம் போம். சுக்கில விருத்தி யுண்டாகும். cold rice water. It is capable of alleviating thirst and scartching due to disarrangement of the three humours and increasing the secretion of semen.

நீராகாரம், சோற்றில் தெளிந்த தண்ணீர், cold rice water; 2. கொதித்தண்ணீர், boiled rice water; 3. அன்னாகாரம், rice gruel water, conjee or any liquid diet.

நீராகாரி, see பாலாட்டங்கொடி, a twiner.

நீராடல், குளித்தல், bathing.

நீராட்டல், தண்ணீர் விட்டரைத்தல், grinding by adding water to it; 2. குளிப்பித்தல், to give bath.

நீராத்தோற்பலம், செங்கழு நீர், red Indian water lily.

நீராமக்கணம்,குழந்தைகட்கு மயக்கமும், கடுப்பும் கண்டு சீதமாய்க் கழியும் ஓர் வித கண நோய், a kind of tabes in children characterised by giddiness, irritation of the anus, mucous discharge and other symptoms of dysentery.

நீராமம், see நீராமை.

நீராமயம், நீரேற்றம், dropsy, See நீராம்பல்.

நீராமை, ஓர் வகை மகோதரம். இதனால் வயிறு பருத்து, வீங்கி, ஆமையோடு கவிழ்ந்தது போற் காணப்படும் ஓர் நோய். அன்றியும் அக்கினி சுவா லையைப் போல் சுரம் காய்ந்து வெதுப்புண்டாகி, அன்னம் செல்லாது வயிற்றுக்குள் கட்டி யுருள்வது போல் காணப்படும். இது சாதாரணமாய் சுனைத் தண்ணீர் குடிப்பதனால் மண்ணீரல் வீங்கிக் காணும். இது வயிற்றில் கண்டால் ஆமைக் கட்டி என்றும், இடது புறம் வலி கண்டால் கெண்டைக் கட்டி என்றும் சொல்வதுண்டு. a kind of dropsy marked by swelling of the abdomen which almost resembles the shell of a tortoise. The symptoms are malarial fever, feeling of fullness and pain on the sides loss of appetite, fancing as if a tumour is rolling in the abdomen. It is said to be due to drinking water of malarial hill tracts and consequent enlargement of the spleen arising from congestion. If pain is confined to abdomen it is known as tortoise tumour but pain spreads to the left side it is known as spleenic tumour (enlargement).

நீராமை, கடலாமை, see tortoise; 2. பெண்களுக்கு கருப்பையிற் காணும் கட்டி, overian tumour occuring in women.

நீராமைக்கட்டி, see நீராமை.

நீராம்பல், நீரேற்றத்தினால் காணும் வீக்கம். இது முக்கியமாய் வயிற்றைப் பற்றியது. இதனால் நெஞ்சுக்கு மேல் உடல் வற்றி, நரம்பு தோன்றி, மார்பின் கிழ் வயிறும், கால்களும் வீங்கி, நாவும், கண்ணும், பாதமும் வெளுத்து, ஆண் குறியும்,

அண்டமும் வீங்கி மலந் தீய்ந்து மேல் மூச்சு கண்டு புறங்கால் தடித்து புளிப்பிலும் பல திண் பண்டங்களிலும் இச்சை உண்டாக்கும். a kind of dropsy attended with swelling due to the escape of the watery portion of the blood to the surrounding tissues and cavity. It affects the belly which swells due to accumulation of fluid known as ascites. It is characterised by the following symptoms viz. emaciation of the parts of the body above the chest; distinct appearance of the veins, swelling of the abdomen and the lower extremities including the genitals and the scrotum anaemic appearance of tongue eyes and the feet; loud breathing swelling round the ankles etc. It is associated with a craving for sour substances and other eatables. See கொடியாம்பல்.

நீராரை, இதுவே ஆரைக் கீரை. நீர் ஓரங்களில் விளைவதால் இப்பெயர். அதிமூத்திரம் இரத்த பிரமேகம் போம், a vegetable green of the marseilia genus- Marsilea qudrifolia it is so called from its being found grown near the borders of water in tanks, rivers etc.

நீராலாட்டல், See நீராட்டல்; 2. குளிப்பித்தல், causing to bathe.

நீரால், ஓர் வகை ஆல், narrow leaved fig- Ficus nervosa.

நீராவி, சூட்டினால் தண்ணீரி னின்று எழும் புகை போன்ற ஆவி, the vapourous or gaseous substance into which water is converted under heat; steam reek.

நீராவியம், பாற்கடுக்காய், white myrobalan of Cudappah -Terminalia pallida.

நீராவியாதல், நீர் ஆவியாய் மாறுதல், evaporating.

நீராவேசம், தண்ணீரைக் கண்டால் வெறி கொள்ளும் இந்த ஆவேசம் நாய்க் கடியா லுண்டாகும், a morbid and unnatural dread of water from frenzy. It is produced by the bite of a mad or rapid dog- Hydrophobia.

நீராழி, கடல் sea.

நீராளம் மயக்கமில்லாத பானங்கள், palmyra toddy free from intoxication; 2. புதிதாக இறக்கிய தித்திப்புகள், sweet toddy drawn a fresh; 3. மருந்து முடிச்சு போட்டக்கள், palmyra toddy to which medicinal ingredients are added or mixed.

நீரான, நீர்த்தன்மையான, of the nature of water, watery, Aqueous.

நீரிடம், நாவல், which see.

நீரிடை, செயநீர், a pungent saline liquid.

நீரிண்டம், நுரையிண்டு, a variety of Mimosa.

நீரிண்டு, see நீரிண்டம்.

நீரிரத்தம், மூத்திரத்துடன் இரத்த மிறங்கல், discharge of bloody urine -Hematuria.

நீரிலா நிலம், பாலை நிலம், desert -barren tract.

நீரிலை, நூல்தாளி, larger chinese laurel -Antidesma menasu; 2. பொன்னாங்காணி சக்களத்தி, water leaf, river blatty -Hydrolea zeylanica.

நீரிலோடி, ஓர் வகை நெட்டி, a kind of pith plant.

நீரில்லாத் தாமரை, கல்தாமரை, stone lotus, dry lotus.

நீரிவிடல், தண்ணீர் போலாதல், becoming watery, turning to a fluid state.

நீரிழிவு, நீரழிவு, which see.

நீரிற்று விழல், மூத்திரம் துளிதுளியாய் விழல், urine falling in drops, dribbling of urine; 2. தண்ணீர் சொட்டல், water falling in drops.

நீரிறக்கம், see நீரழிவு; 2. தண்ணீர் இறங்கல், water fall; 3. மூத்திரம் பெய்தல், making water.

நீரிறங்கல், சாதாரணமாக மூத்திரம் பெய்தல், passing urine.

நீருக்கிருக்கல், see நீருக்கிருத்தல்.

நீருக்கிருத்தல், மூத்திரம் பெய்தல், making water.

நீருடும்பு, நீர் முசலி, water guana -Newt.

நீருடை, நீர் உடை மரம், rubber thorn -Acacia latronum.

நீருடைதல், நீர்பிரிதல், free flow of urine as opposed to நீர் கட்டல், suppression of urine.

நீருணவு, நீராகாரம், சூப், கஞ்சி முதலியன, liquid diet as soup, conjee etc.

நீருதடன், (நீர்+உதடன்) அட்டை, leech so called from its sucking blood.

நீருதிபாசம், கடற்பாசி, sea moss -Gracilaria lichenoides.

நீருமரி, ஆற்றுமரி, bastard cyprus -Tamarix articulata alias Tamarisk dioisa; 2. கடற்கரை உமரி. இது கடலோரங்களில் விளையும் செடி. தரையில் தாவிச் செல்லும் அநேக தண்டுகள் வாய்ந்தது. இளந்தண்டுகள் வழவழப் பாயும், சிவப்பாயுமிருக்கும். இலைகள் மாறி மாறியிருக்கும். சதைப் பற்றுள்ளது. பூக்கள் மிகவும் சிறியன. பச்சை நிறம். இது கடலோரங்களிற் காணலாம். பூடு, உப்புக் கரிக்கும். இது கண்ணாடி, சோப் செய்வதற்கு உபயோகப்படும். இதன் சாம்பல் எருவாக உதவும். seaside Indian salt wort- Suaeda nudiflora alias S.aritina. It has many stems spreading close upon the ground and often rooting, young parts of the branch are smooth and coloured reddish. Leaves alternate and fleshy, flowers very small greenish. It is common in salt barren land near the sea and has a very saline taste. It is used as mordant. It is opposed நிலவுமரி, which see.

நீருரிஞ்சி, நீரிழுக்குந் தன்மை, nature of attracting or absorbing moisture from the air -Deliquescence as salts.

2. உப்பு, salt.

3. வாத நூற்படி நீர்த் தன்மையாக இருக்கும் இரசத்தை மணியாக மாறச் செய்யு மருந்து, (in Alchemy) any medicine capable of converting the liquid mercury into a solid state.

4. உடம்பினின்று கெட்ட நீரை வெளிப்படுத்து மருந்து, (in medicine) any drug or medicine with virtue of eliminating bad or morbid fluid from the human body.

5. தண்ணீரை இழுக்கும் எந்திரம், sucking pump.

6. உடம்பிலுள்ள கெட்ட நீரை தோல், சளி, சவ்வு, மூலியமாய் வெளிப்படுத்து

மருந்து, any medicine or agent that promotes aborption. i.e. the taking up of fluids by the skin or mucous membrane -Absorbent.

7. நெருப்பு, fire.

8. உஷ்ணம், heat.

9. ஒட்டை, camel.

நீருவஞ்சி, வஞ்சி மரம், common willow of India south indian willow -Sabix tetrasperma.

நீருளாரை, நீராரை.

நீருள்ளாரை, see நீராரை.

நீருள்ளி, வெண்காயம், onion -Allium sepa.

நீருறை, நீர் ரூபமாகவுள்ள மருந்து, liquid medicine, lotion; 2. மருந்துநீர், mixture of solution.

நீறுறைக்கட்டி, பனிக்கட்டி, snow.

நீறுற்றமிர்தம், புளிக்கறி, any preparation of curry with a tale excess of salt; 2. தண்ணீர் விளாவிய பால், milk adulterated with water.

நீரெட்டி முத்து..

நீரெட்டி விதை, see நீரடி முத்து.

நீரெரிச்சல், மூத்திரம் பெய்யும் பொழுது ஏற்படும் எரிச்சல். இது மூத்திர தாரை அழற்சியால் உண்டாகும். burning pain in the inflamed urethra during micturition -Ardor urinae.

நீரெரிப்பு, நீர்ச்சுருக்கு, painful or difficult urination -Dysuria; 2. மூத்திர வெரிச்சல், a scalding sensation during the passage of urine.

நீரெரிவு, நீரெரிச்சல், which see.

நீரெலி, தண்ணீருக்குள் வாழும் எலி, a rat that lives about water -water rat.

நீரெழுகாசம், கண்ணுள் நீர் கோத்துத் திரண்டுப் பூப்போல் தோன்றி பாவையையு மறைக்கும். இதனால் கருவிழிக்கு மேற்புறமும், கீழ்ப் பக்கமும் சிவந்து மின்னலைப் போல் வலியும் கூச்சமும் தோன்றி மறைந்து கண்ணில் நீர் வடிந்து பேசுவதினால் வலியுண்டாகித் துன்புறுத்தும் ஓர் கண்ணோய், a film or cataract in the eye caused by collection of morbid fluid thus screening the lens and affecting

the eye sight. It is marked by inflammation of the black of the eye on the upper and lower portions; pain due flashes before the eyes discharge of tears pain on talking etc.

நீரெழுச்சி, வெள் விழியில் நீர்த் துளியைப் போல் தளதளப்பான சதையை உண்டாக்கும் ஓர் கண்ணோய், a film flesh growth on the scleriotic of the eye as transparent as drop as water.

நீரேற்றம், வெள் விழியில் ஏற்படும் ஓர் நீர் திரட்சி, accumulation of morbid fluid in the white of the eye; 2. இந்திரிய விருத்தியால் ஏற்படும் மதம், sexual excitement due to the secretion of semen in excess; 3. சலதோஷம், cold, catarrh; 4. நீர்ப்பாண்டு, dropsical swelling due to accumulation of bad fluid from the surrounding tissues.

நீரைப் போக்கி, மூத்திரத்தைப் பிரிக்குமருந்து, medicine that increases the secretion and flow urine Diuretic.

நீரொடி, see நீரொட்டி.

நீரொடை, see நீருடை.

நீரொட்டி, see நீராரை; 2. நீரை இழுக்கும் வஸ்து, that which imbibes or absorbs moisture or water-imbiber.

நீரொழுக்கு, மூத்திரம் வெளி வருவதை அடக்க முடியாத செயலினால் மூத்திரம் சொட்டு சொட்டாக ஒழுகல், inability to restrain a natural discharge of urine as a result of which a continous dribbling of the urine ensues -Incontinence of urine.

2. மூத்திரப்பை நிரம்பியும், வழக்கமாகப் பெய்ய முடியாத தன்மையால் மூத்திரம் நெருக்கடியினால் சதா கசிவது, incontinence of urine in which the bladder is full and cannot be emptied in the normal way, but the urine drikbbles away from mere pressure -Passive incontinence.

3. நித்திரையில் தன்னை யறியாமலே மூத்திரம் வெளிப்பட்டு ஒழுகல், involuntary discharge of urine occuring at night during sleep- Nocturnal enuresis.

நீரொளிகாசம், see நீரெழுகாசம்.

நீரோகம், see நீரோருகம்; 2. நீர் ரோகம், urinary disease.

நீரோருகம், நீரில் எழும்புவது. அதாவது தாமரை, that which springs in water as lotus.

நீரோட்டம், தண்ணீர் ஓட்டம், running of water as in a river of a stream; 2. இரத்தினங்களில் அமைந்த பிரகாசத்திற்குண்டான நீர்ப்பாய்ச்சல், transparency and brilliance of gems-water mark (gem of the first water -gem of finest quality).

நீரோட்டம் பாயுங்கால், வெள்ளை சுக்கான் கல், white lime stone.

நீரோம்பல், நீர்க்கடம்பு, water cadamba -Nanclea parviflora alias N.purpurea; 2. பேய்க்கடுக்காய், narrow leaved myrobalan -Terminalia travancorica; 3. மூத்திரத்தைப் பரிசோத னைக்காக வேண்டி பாதுகாத்தல், preserving urine for exmaination.

நீரோளி, see நீர்வாளி.

நீர், தண்ணீர், water; 2. மூத்திரம், urine; 3. பன்னீர், rose water; 4. பனி நீர், dew water; 5. நீலோற்பலம், blue Indian water lily -Nymphaea stellata; 6. பூண்டின் முதற் பெயர், plants first term as நீர்க்கடம்பு நீர் முள்ளி, etc.; 7. மொழிக்கு இறுதியில் வந்து பல வகை நீரைக் குறிக்கும், a suffix denoting several kinds of water as பனி நீர், ஆலங்கட்டி நீர், etc; 8. குணம், disposition; 9. தன்மை, nature; 10. காடி நீர், vinegar; புளித்த நீர், any fermented liquid.

நீர், அப்பு. இது தத்துவ நூல்படி பஞ்ச பூதப் பிரிவினுள் ஒன்று. பிரகிருதியில் ஒவ்வொரு சடப் பொருளிலும் பஞ்ச பூதம் பொருந்தியுள்ளது என்று முன்னோர் துணிபு. ஆகவே அண்டத்திலும் பிண்டத்திலும் இப்பஞ்ச பூதமே பொருந்தி யுள்ளது. உலகத்தில் பஞ்ச பூதப் பிரிவு இல்லாத பொருளே கிடையாது. ஆகவே உலகமே பஞ்ச பூதத்தாலாக்கப்பட்டது. அதே மாதிரி மனிதர் முதலிய உயிர் வாழ் பிராணிகளில் எல்லாம் பஞ்சபூதம் பொருத்த மென்பது ஒன்றுண்டென்று துணிந்தேசொல்ல ஏதுவாகும். இதனால் அப்பு என்ற நீருக்குள்ள மகத்துவம் இப்பஞ்ச பூத வொடுக்கத்தில் தெற்றென

விளங்கும். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதத்தில் இதை இரண்டாவதாக கூறப் பட்டுள்ளது. இதன் குணத்தைச் சற்று யோசிக்குமிடத்து இதற்கு சப்தம், பரிசம், நீபம், உருசி இவைகள் இயல்பாகவே பொருந்தியுள்ளது. கூட்டுறவில் குளிர்ச்சி, நீர்த்தன்மை, கனதி, வழவழப்பு இவைகளைக் கொடுக்கும் சக்தியுள்ளது. சாத்துவ குணமும் பொருந்தியது. ஒளி பாயக் கூடியது. உலக பாஷையில் இது தண்ணீரென வழங்கும். இது பொதுப்படி ஆழிநீர், ஆற்று நீர், ஊற்று நீர், கொண்டல் நீர் என 4 வகையாயினும் இதில் அடியிற் கண்டபடி அனேக வகையாக கொள்ளப்படும். (in philosophy) water one of the five elements. In the material world according to the early philosphers, every material substance in this world is composed of five distinct principles or entities and so the five elements theory is equally applicable to both the world and the living being including man. So there is nothing in this world that does not come under this five element theory which in themselves make up the world. So, the importance of this 2nd element water is clear from the operation of these five elements viz. Earth, Water, Fire, Air, and either (sky) over the material substances of this world. When considering the properties water possesses sound, tangibility, visibility and taste and it bestows the sense of coolness, fluidity, weight and smoothness on bodies. it has the qualities of happiness or satuagoonam and of interness or tamogoonam and it is transparent producing light and weight. It forms the different fluids of the body. Colloquially, it is known as water (cold). Although it is divided into fourkinds in general. It is subdivided as mentioned below:.

(A) 1. கடல் நீர், sea water containing several salts in solution.

2. ஆற்று நீர், river water from rivers require no special mention.

3. ஊற்று நீர், spring water issuing from the surface of the ground.

4. மழை நீர், rain water from the clouds,.

5. சுனை நீர், water flowing from tops of mountains and hills.

6. உலோக நீர், mineral water containing minerals in Solution.

7. கொதிப்பு நீர், hot springs (in the middle of Godaveri).

8. சுக்கான் பாறை நீர், hard water from calcoreous or gypreous (chunam) soils.

9. ஏரிநீர், lake water.

10. குளத்து நீர், tank water, with organic and inorganic impurities.

11. கேணி நீர், shallow well water.

12. பாறை நீர், rock water flowing through granites.

13. காட்டாற்று நீர், water from forests.

14. ஓடை நீர், stream water.

15. கிணற்று நீர், deep well water.

16. பனி நீர், dew water.

17. அருவிநீர், water from water falls.

18. அடவிநீர், water flowing through forests.

19. குட்டை நீர், pit water pool water.

In physiology

B) 1. இரத்த நீர், serum of blood -Plasma -Liquor sanquinis.

2. பித்த நீர், bile.

3. பாசக நீர், gastric fluid or juice.

4. சிறுநீர், urine.

5. அன்ன ரச நீர், chyle.

6. அன்ன குழம்பு நீர், chyme.

7. சளி நீர், mucous fluid.

8. நிண நீர், lymph fluid.

9. இரத்தம், blood.

10. உமிழ் நீர், saliva.

11. கண்ணீர், tears from the eye.

12. குடல் நீர், intestinal juice -Liquor entericus.

13. விந்து நீர், (சுக்கிலம்) seminal fluid.

14. ஊனீர், serum of the muscles.

15. வியர்வை நீர், perspired water.

16. விசர்க்க நீர்,.

17. பனிக்குடத்து நீர், liquor amni- Amniotic fluid.

18. சிரசு அல்லது கபால நீர், water.

19. மூளை நீர், cerebral fluid.

20. செவி நீர், labyrin thine fluid -Perilymph.

21. முள்ளந்தண்டு நீர், spinal fluid.

22. விழி நீர், liquid of the cornea- Liquor conreae.

23. சினை நீர், fluid within the ovary -liquor folliculi.

24. கணைய நீர், pancreatic juice.

25. சந்திக நீர், synovial fluid.

26. ருது நீர், menustrual fluid.

27. வாத நீர்.

28. பித்த நீர், morbid fluids arising from derranged humours.

29. புண்ணீர், the serous fluid from sores and wounds.

30. கவிகை நீர், the serous fluid collected in ascites.

31. கபால நீர், water in the brain -Hydro cephalus.

32. மேக நீர், morbid fluid from venereal and syphilitical causes.

33. விஷ நீர், toxicfluid.

34. திராவக நீர், acid water.

C) 1. வெட்டை நீர், same as மேகநீர்.

2. காடி நீர், fermented liquid.

3. வாலை நீர், distilled water.

4. நீராகார நீர், cold rice water.

5. கஞ்சி நீர், (கோதுமை, யவா, அரிசி) liquid diet.

6. புனற்பாகநீர், water of double boiled rice.

7. அரிசி களைந்த நீர், rice washed water.

8. இளநீர், tender cocoanut water.

9. குடிநீர், drinking water, decoction.

10. குளிநீர், bathing water.

11. கழுநீர், lotion.

12. தீநீர், distilled water.

13. தெளிநீர், filtered water.

14. செய நீர், pungent water extracted from a product exposed to night dew.

15. வெந்நீர், warm water.

16. சுண்ணாம்பு நீர், hard water.

17. பந்நீர், rose water; பனி நீர், dew water.

18. ஆலங்கட்டி நீர், hail stone water.

19. உப்பு நீர், saline solution to improse digestion.

20. வயல் நீர், rice field water.

21. நண்டுக் குழிநீர், crab hole water to cure hiccup.

22. பாசி நீர், moss water.

23. சருகு நீர், சருகூறல் நீர், water in which dry leaves are soaked causing filarial fever and elephantasis.

24. கடல் நீர், sea water curing ascites, dropsy, spleen enlargement.

25. நாவல் நீர், water under the root of jaumoon tree used for diabets.

26. கருங்காலி நீர், water under the root of black wood good for diabetes dyspepsia dropsy etc.

27. இலவு நீர், water under the root of silk cotton tree good for diabetes, dyspepsia internal heat.

28. வாழை நீர், water from the rhisome of plantain cures supperession of urine and useful to purify nitre and salt.

29. மட்டை நீர், water in which cocoanut leaf is soaked.

30. ஆறிய வெந்நீர், hot water cooled.

31. வெள்ளாட்டு நீர், goat's urine.

32. பசு நீர், cow's urine.

33. மது நீர், any fermented liquor tincture.

34. கழுதை நீர், asses urine.

Miscellanious

1. குடத்து நீர், potted water.
2. களிமண் நீர், water of clayey soil.
3. குட்டை நீர், pool water or stagnant water.
4. கழி நீர், back water from the sea.
5. வாய்க்கால் நீர், canal or channel water.
6. தாமரைக் குளநீர், lotus tank water causes excess of thirst, increase fever.
7. அல்லிக்குள நீர், Indian water lily tank water causes diarrhoea, itch etc..
8. கட்டுக்கடை நீர், water from the reservoir.
9. குழாய் நீர், pipe water.
10. அருவி நீர், water fall.
11. ஓடை நீர், stream water.
12. கழு நீர், rice washed water.
13. தேக்கு நீர், staghant water.
14. ஆலங்கட்டி நீர், hail stone water.
15. அடவி நீர், jungle water.
16. கரும்பாறை நீர், black granite water.
17. செம்மண் தரை நீர், red soil water.
18. பாகு நீர்,
19. செவ்விள நீர், tender red cocoanut water.
20. வெந்நீர், hot water, ஆறிய வெந்நீர், hot water cooled.

(In Surgery)

அகஸ்தியர் இரண வைத்தியத்தில் சொல்லியுள்ள மருந்து நீர், கள், குக்கில், குங்கிலிய முதலியவை.

Agastyar in his work Viranavaidyam' has mentioned several lotions to wash, clean and dress the wounds, sores, sinuses, ulcers etc.

1. சிவப்புத் தண்ணீர், மருந்து சரக்குகளை சாராயத்தில் அரைத்து கலந்த நீர் இதை திரி செய்து புரையோடும், ரணங்களுக்கும் ஆறாத ரணங்களுக்கும் போட ஆறும்.

(கருங்கார நீர்) துணியில் நனைத்துப் போட ஆறும், red lotion used for sinuses.

2. சிவப்புக் கடுங்காரத் தண்ணீர், red corrorive or alkaloid lotion used for sinuses and obstinate and adament ulcers.
3. பச்சை நீர், மிருதார சிங்கி, மயில் துத்தம், பால் துத்தம் இவைகளுடன் மற்ற ஏழு கடைச் சரக்குகளையும் அரைத்து திராட்சைக் காடியில் கலந்த நீர். இது மூல முளை, குதி காளான், நுணுப்பரு, பரங்கிப் புண், குட்டரணம், பிளவை, பௌத்திரம் இவைகளுக்குப் போட ஆறும், green lotion used for heel abscess, carbuncle, chancre, piles etc.
4. பச்சைக் கடுங்கார நீர், green corrosive or alkaloid lotion used for stubborn ulcers, carbuncles etc as No.3.
5. மஞ்சள் நீர், கௌரி அரிதாரம், மஞ்சள் தூள், குங்கிலியம், குக்கில், கற்பூரம் முதலிய சரக்குகளை சம எடை கொண்டு அரைத்துத் திராட்சைக் காடியில் கலந்த நீர் இரணத்திற்குப் பூசி வர, பிளவை, கட்டி, ஆறாத ரணம் ஆறும். yellow lotion can be used for abscess and ulcers that are not healing.
6. நீலக்கார நீர், காந்தம், பாதரசம், கௌரி, வெள்ளை படிகாரம், நீலம், பச்சை, வெட்டு படிகாரம் முதலிய வைகளை முட்டை வெள்ளை கருவாலரைத்து திராட்சைக் காடியில் கலந்த நீர், பரு, சண்டிப்புண், குட்டம், பரு முளைகள் போம், blue corrosive or alkaline lotion for adamant ulcers, sores cysts etc.
7. குளிந்த நீர், குளிர்ச்சிதந்து ரணத்தை ஆற்றும் மருந்து நீர், cooling or soothing lotion used for ordinary sores and ulcers.
8. சிவந்த குளிர்ந்த நீர், பாதரசம், சங்கு, தலையோடு, பால் துத்தம், கடுக்காய், துருசு இவைகளுடன் காவிக் கல் இலிங்கம் சேர்த்து தூள் செய்து கள் வார்த்து அரைத்தெடுத்த நீர். இது ரணத்திற்குப் போட எரிச்சல் நீங்கி ஆறும், red soothing lotion for irritatiring ulcers and ulcer giving burning sensation.
9. குளிர்ந்த நீல நீர், பாதரசம், கெந்தி, தலையோடு, குங்கிலியம் இத்துடன் மயில்

துத்தம் நீலம் சேர்த்து மேற்சொன்னபடி அரைத்த நீல நீர், blue soothing lotion used for over granulated ulcers.

10. குளிர்ந்த வெள்ளை நீர், சங்கு, படிகாரம், வெங் காரம், பால் துத்தம் சாம்பிராணி, தலையோடு குக்கில் இவைகளை மேலே சொன்னபடி அரைத் தெடுத்த நீர், white soothing lotion used for injuries and wounds.

11. கருத்த குளிர்ந்த நீர், மஞ்சள், வசம்பு சுட்டகரி, பாதரசம், கெந்தகம், படிகாரம், நீலம், மேற்கண்டபடி அரைத்து எடுத்த கருத்த நீர், black soothing lotion used for ulcers and sores.

12. குளிர்ந்த மஞ்சள் நீர், கஸ்தூரி மஞ்சள், மிருதார சிங்கி, கடுக்காய் பூ, கடுக்காய் தோல், சூரணம், பால் துத்தம் இவைகளை மேற்சொன்னபடி அரைத் தெடுத்த மஞ்சள் நீர், yellow soothing lotion used for ulcer and sores.

13. புண் கழு நீர், உதியம்பட்டை அல்லது கருவேலகம் பட்டை, கஷாயம், படிகாரசலம், புளியிலை, பழங்காடியில் வேக வைத்த நீர், இதில் ஏதேனும் ஒன்றால் கழுவும் நீர், washing lotion used for cleaning ulcers, sores etc.

14. கடுங்கார நீர், கடைச் சரக்குகளைக் கோழி முட்டை வெண் கருவால் அரைத்து மூல முளை சதை வளர்ச்சி, ஆறாத விரணம், குட்ட ரணம் முதலியவை கட்கு துணியில் நனைத்துப் போட ஆறும். very corrosive or alkaline lotion to dress the ulcers that have over grown granules and piles.

Every lotion is prepared as contemplated in the Virana Vaidyam by Agastiyar.

நீர் கக்கி, நீர் சப்பி, chiness laurel -Daphniphy llum glancescens.

நீர் கடுத்தல், see நீர் கடுப்பு

நீர் கட்டுதல், கொப்புளம், புண், புரைகளில் நீர் கோத்தல், accumulation of morbid fluid in boils, wounds injuries etc; 2. மூத்திரம் போகாமல் தடை படல், retention of urine.

நீர் கசிதல், நீர் பொசிதல், oozing of water passing of a liquid through a porous body -Percolating.

நீர்க்கசிவான, நீர் ஊறும்படியான affording watery secretion- Aquiparous.

நீர்க்கசிவு, புண்ணினின்று கழியும் நீர், a thin serous or sanious fluid from a sore or wound -Ichor; 2. ஈரம், moisture.

நீர்க்கஞ்சி, நீர்க்கக் காய்ச்சிய கஞ்சி, thin liquid pottage; 2. நொய்க்கஞ்சி, a thin gruel made with water and meal or other farinaceous substance -Water gruel.

நீர்க்கடம்பு, பட்டைக்கடம்பு. நீரோரங்களில் முளைப்பதாலிப் பெயர். இதற்கு பெண் நடம்பு என்றும் பெயர். மரம் 30-40 அடி. இலைகள் எதிரெதிராகவும், அண்டவடி வாயு மிருக்கும். காம்புகளில் இரண்டு இலைகள், காய்கள் இரு பிளவாயுள்ளது. பூக்கள் சிறியன. மஞ்சள். இதன் காய் கண்ணோய்களுக்கு அஞ்சன மாக உபயோகப்படும். விதையினால் விஷக்கடி போம். பூச்சாற்றினால் இரச பற்ப மாகும். இதன் மரம் அநேக சாமான்கள், பெட்டிகள் செய்ய உபயோகமாகும். elliptic leaved kadamba -Stephegyne parviflora alias Nanclea purpurea. It is so called from its being found generally grown near stagnant waters or on the shores. It is also known as female Kadamba. Tree 30-40 ft. with small yellow flowers, stem glabrous; branches brachiate, leaves opposite, terminal, peduncles bear a pair of small leaves, capsules. 2. cocci splitting. The juice of the fruit is used as a collyrium for the eyes in eye diseases, seeds an antidote for poisonous bites, juice of the flowers used for calcining mercury.

நீர்க்கடலை, பேய்க்கடலை, bitter Bengal gram, devil's gram -Cicergenus.

நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், burning sensation while passing urine, painful or difficult urination -Dysuria; 2. நீர் கஷ்டமாக இறங்கல், slow and painful discharge of urine -Stranguary; 3. நீர்ச்சுருக்கு, which see.

நீர்க்கட்டி, பனிக்கட்டி, snow, ice; 2. மது மேகத்தினால் ஏற்படும் பிளவைக் கட்டி, carbuncle arising from excess of sugar in diabetes -Carbuncle; 3. கொப்புளம், boil containing

watery fluid inside; 4. மடையான், see நீர்க்குண்டி

நீர்க்கட்டு, நீர் மறிப்பு, absolute suppression of urine; 2. மூத்திரம் இறங்காமல் கஷ்டப்படுதல், strictre of urine; 3. நீர் வெளிப் போகாது மூத்திரப்பையில் தங்கல், retention of urine in the bladder stoppage of urine; 4. ஓர் கண் ரோகம், an eye disease marked by collection of morbid fluid in the eyes.

நீர்க்கட்டுக்கொடி, பெருங்கட்டுக் கொடி, a bigger variety of coagulating creeper- Cocculus villosus.

நீர்க்கணமாந்தம், see நீர் மாந்தம்

நீர்க்கணம், குழந்தைகட்கு சுரம் விட்டு விட்டுக் காய்வதினால் வாய் வெடித்து புண்ணாகி, கை, கால் மினுமினுத்துக் காணும் ஓர் வகை கண நோய், a kind of tabes in children marked by intermillent fever, fissure of the mouth, swellings of the limbs with shining of the parts. It is a wasting disease in children.

நீர்க்கண்டகி, நீர் முள்ளி, water thistle -Barleria longifolia.

நீர்க்கண்டம், பனிக்கட்டி, ice, snow.

நீர்க்கத்திரி, நீர் மிகுதியாகக் கொண்ட கத்திரி, water brinjal -Solanum melongina.

நீர்க்கபம், தண்ணீரைப் போற் சுழலும் கபம், watery phlegm; 2. கோழை, mucous matter or other morbid fluids from the lungs and trochea.

நீர்க்கமல்லி, அல்லி, nymphae lotus -Nymphae edulis.

நீர்க்கம்பம், நீர்த்திவலைகள் காற்றினால் சிதறுண்டு மேலெழும்பி கம்பத்தைப் போற் காணப்படல், rising of water from the sea or lake in spray or jets to a certain level giving the appearance of a pillar due to a violent wind -Water spout.

நீர்க்கம்மல், கண்ணில் துர் நீர் சேருவதால் பார்வைக் குறைதல், affection of sight due to accumulation of bad fluids in the eyes.

நீர்க்கலங்கல், மூத்திரம், முட்டை, வெண்கருவைப் போன்ற வஸ்துவின் சம்பந்தத்தால் கலங்கலாய்க் காணல், turbid urine due to the presence of albumin in the urine, turbldity of urine -Albuminorrhea.

நீர்க்கல்லடைப்பு, மூத்திரப்பையில் கல்லுண்டாகி, நீர் துவாரத்தை அடைத்துக் கொண்டு அதனால் நீர் இறங்காமல் கஷ்டப்படும் நோய், retention of urine due to the obstruction of calculus or stone in the passage of urethra. This stone is the formation in the bladder.

நீர்க்கவிதை, ஓர் வகை மகோதரம். இது உடம்பினில் காரி ரத்தம் தடைப்பட்டு, மண்ணீரல், ஈரல்களில் தங்குவதால் அவ்விடத்தில் அழற்சி கண்டு இரத்த நீர் ஊனீராக மாறி, கீழ் வயிற்றை அனுசரித்து வீங்கி மினு மினுப்பாய்க் காணல். இந்நீர் மஞ்சள் நிறமாயிருக்கும். dropsy of the abdominal cavity due to the accumulation of serious fluid arising from the inflammation of spleen and the liver caused by the obstruction of the venous circulation -Ascites. It is an abdominal dropsy due to weakness of the digestive fire. Food producing indigestion and accumlation of serious fluid in the heritoneum of the abdomen obstract the water bearing ducts of the body and vitiate the upward and downward breath and the digestive fire and the result is this disease. So is nothing but a collection of fluid in the abdominal cavity arising from the inflammation of spleen and the liver. General symptoms -Flatulence of the stomach, loss of uppetite, swelling sluggish condition of the bowels, drowsiness burning sensation in the body. It consists of different varities and charactioned according to the derengements of the three humones in the system and the hurts affected as spleen or the liver. When the liver or spleen is enlarged there is fever, langour, loss of appetite palenes of the body in the emeut the liver, the right side and spleen the left side of the abdomen is enlarged. In cases of dropsy due to accumulated storts, that part of the abdomen above the navel is found to swell stors then is passed with difficulties and in small quantities.

நீர்க்கழலை, கண்ணிமையின் மேற்புறத்தில் ஆலங்கட்டியைப்

போல் எழும்பும் ஓர் கழலை, tumour in the upper eyelid of the size of a hail stone.

நீர்க்கழற்றல், சாறு வாங்கல், extracting juice; 2. விந்து விடல், discharge semen; 3. மூத்திரம் பெய்தல், making water; 4. ஓர் வஸ்துவினின்று நீரைப் பிரித்தல், the process of freeing the substance from the water contained -Dehydration.

நீர்க்கழிச்சல், நீரிழிவால் மூத்திரம் அடிக்கடி போதல், frequent discharge of urine from diabetes; 2. நீர்ப்பேதி, water diarrhea as in cholera.

நீர்க்கழிவு, see நீரிழிவு. 2. உடம்பினின்று வியர்வை மூத்திரம், துர்நீர் முதலியவை கழிதல் excretion and secretion as perspiration urine etc.

நீர்க்காகம், see நீர்க்காக்கை.

நீர்க்காக்கை, நீர் வாழ் காக்கை. இது தண்ணீரில் மூழ்கும் பறவை, crow of the pelican family. It is a during water bird -Cormcrant.

நீர்க்காங்கு, நீர்வாளி, false fern tree -Filicium decipicus. See நீங்கல்

நீர்க்காசம், இருமலினால் கோழை அதிகமாக வெளிப்படும் ஓர் வகை ஈளை நோய். இது சீந்தல் காலத்தில் உண்டாகும், a free discharge of mucous fluid from cough in asthma -Caterrhal asthma. It is a humoural asthma aggravated by cold during rainy and cold weather; 2. கண்ணில் நீர் தங்கிப் பார்வையைக் கெடுக்கும் ஓர் வகைக் காசம், a form of cataract in the eye due to accumulation of morbid fluid -Fluid cataract c.f. நீரெழுகாசம்

நீர்க்காயம், நத்தை, snail.

நீர்க்காய்ச்சுப்பு, இந்துப்பு, rock salt; 2. ஆறாங்காய்சலுப்பு,

நீர்க்கால், வாய்க்கால், a channel for water -Water course.

நீர்க்காவி, கருங்குவளை, blue Indian water lily -Nymphae shellata.

நீர்க்காற் கோழி,

நீர்க்கிராம்பு, ஓர் வகைக்காட்டுக் கிராம்பு. இது சதா பூத்துக் கொண்டேயிருக்கும். பூ பெரியது, மஞ்சள் நிறம், மழை காலத்தில் பூக்கும். இதன் சமூலத்தை சிறிது அரைத்து

மோரில் குழப்பி சாப்பிட சீதபேதி நிற்கும். கஷாயமாக வைத்துச் சாப்பிட பேதியாவதுடன் பூச்சிகளையும் கொல்லும். wild clove, primrose willow -juslaea suffruticosa alias jussiena repens perinnial flowers large, yellow flowering in rainy season. The plant is ground and steeped in butter milk is a good remedy in dysentery, decoction acts like a purgative and vermifuge.

நீர்க்கிரிச்சினம், மூத்திரம் தடைபடுதல், stricture of urine.

நீர்க் கிருமிக் குட்ட ரோகம், நீர்க்கிருமியினால் தோற்று விக்கப்பட்ட சர்ம நோய், cutaneous disease caused by Neerkirumi.

நீர்க்கிழங்கு, சிறு கிழங்கு, small water root; 2. see தண்ணீர் விட்டான் கிழங்கு

நீர்க்கீரி, நீர் வாழ் கீரிப்பிள்ளை. இதன் தோல் பேர் போனது. an aquatic carnivorus animal resembling weasle but larger -Otter its fur is remarkable.

நீர்க்கீரை, நீரில் முளைக்கும் கீரை (lit),greens found grown in water; 2. ஆரைக்கீரை, which see .

நீர்க்குடத்தி, தண்ணீர் விட்டான் கிழங்கு, water root -Asparagus racemosus.

நீர்க்குட்டம், சதா ஊனீர் வழிந்து கொண்டிருக்கும் ஓர் வகைக் குட்டம், a kind of leprosy constantly attended with discharge of matter from the lesions -Water leprosy.

நீர்க்குண பாடம், பதார்த்த குண சிந்தாமணியில் சொல்லியபடி ஆறு, ஏரி, அருவி, கடல் முதலியவைகளின் தண்ணீரில் பொருந்திய மருந்து குணத்தைப் பற்றிய ஓர் தனி நூல், The science which deals about the medicinal properties of the principle rivers and different waters like tank, lake, shallow, well, deep well, stream, sea water etc.

நீர்க்குண்டி, வெண்ணொச்சி, a white variety of notchi, white negundo -Vitex negundu. It is opposed to கருநொச்சி, 2. மூத்திர குண்டி, in continence of urine -Nocturnol enuresis; 3. மடையான், one who distributes water for irrigation keeper sluice.

நீர்க்குண்டிக்காய், மூத்திரம் உற்பத்தியாகும் குண்டிக்காய், பிருக்கம், கவிகை, an organ that secretes urine -Kidney.

நீர்க்குத்தி எடுத்தல், நீர்க்கவிசை நோயில் வயிற்றிலுள்ள நீரைக் குத்தி எடுத்தல், surgical puncture of the abdominal cavity for the removal of the accumlated fluid as in ascites, tapping -Paracentesis.

நீர்க்குத்திரம், see நீர்ச்சுண்டி

நீர்க்குத்து, மூத்திரம் தடைப் படுவதால் நீர்ப் பாதையில் ஏற்படும் குத்தல் வலி, an acute pain caused in the urethra from suppression or retention of urine; 2. கல்லடைப்பினால் மூத்திர தாரையில் (மிகனி அல்லது சலவாகியில்) உண்டாகும் குத்தல், வலி, pin prick pain felt in the urethra (மிகனி அல்லது சலவாகி) due to obstruction of calculus in the urethra, a urinary disease.

நீர்க்குந்தன்மையது, கரைக்கக் கூடியது, a solvent medium that which is capable of dissolving substances -Dissolvent; 2. நீரை அதிகப்படுத்தி அழற்சியைப் போக்கும் தன்மையது, an agent that dilutes or renders less irritant -Diluent.

நீர்க்குமிழம், See நீர்க்குமிளம்

நீர்க்குமிழ், ஓர் வகைக் குமிழ், water coomiz -Gmelina genus; 2. கடைக் கண்ணில் நீரொழுகும் ஓர் வகைக் கண்ணோய், a disease of the corners or angles of the eye (inner) attended with watery discharge.

நீர்க்குமிளம், வெள் விழியில் சங்கம் பழத்தைப் போல் கொப்புளத்தை உண்டாக்கும் ஓர் வகை கண்ணோய், a bubble like boil develping in the white of the eye (sclerotic).

நீர்க்கும்பி, see நீர் முள்ளி

நீர்க்குரட்டை, ஓர் தண்ணீர் பாம்பு, a kind of water snake -Tropidonotus.

நீர்க்குரு, வியர்க்குரு, prickly heat -Miliaria; 2. நீர்க்கொண்ட சிறிய குரு, pimple, pastule; 3. குருப்பொது, any papule; 4. தேரையர் கரிசலில் ஔடதவர்க்கங்களில் ஒன்று, one of the medicinal classificatios referred to in the karisal work of Theraiyar -an authority in Tamil Medicine.

நீர்க்குருவி, நீர் வாழ் குருவி, any water bird of the finch famiy.

நீர்க்குவளை, நீலோற்பலம், blue indian water lily -Mymphae stillata.

நீர்க்குவை, கடைக்கண்ணில் சிலேட்டும மொத்தைப் போல் துண்ட மாமிசத்தை வளர்ப்பிக்கும் ஓர் கண்ணோய், a disease of the inner corner or angle of the eyes marked by a mucous growth.

நீர்க்குழல், உடம்பினின்று கழிவு நீரைக் கொண்டு செல்லும் அல்லது ஓடும் தாரை, a tube for the passage of excretion or secretion -Duc; 2. தண்ணீர் செல்லும் பீங்கான் குழல், water tube; 3. நீர்க்குழாய், which see.

நீர்க்குழாய், குடிக்கும் நீர் செல்லும் தாரை, water pipe; 2. மூத்திரக் குழாய், சலவாகி அல்லது மிகனி, passage of urine urethra.

நீர்க்குழி, மூத்திரப்பை அல்லது சலப்பை, urinary bladder.

நீர்க்குழைக்கருவி, மூத்திரப் பாதையை பெரிதாக்கவும் அல்லது அடைப்பட்ட மூத்திரத்தை வெளிப்படுத்தவும் உபயோகிக்கும் குழாயைப் போன்ற கருவி, a tubular surgical instrument for discharging suppressed or retained urine ordistending the urethral passage- Catheter.

நீர்க்குழைக்காது, நீர்க்குழாயின் துவாரத்தை அடைக்கவும், திறக்கவும் செய்யும் திறவு கோல், a turning lock or key used to stop or open or regulate the flow of water from a pipe -Stop cock.

நீர்க்குளிரி, கல்லாரைச் செடி, unknown creeper of the Marsella genus; 2. நீர்ச்சேம்பு, water archer -Sagitharia obtusifolia alias S.cordifolia, See குளிரி; 3. தண்ணீர்க் குளிரி, flowering water plant -Damasonium indicum.

நீர்க்குளுவன், See நீர்க்கொள்ளுவான்

நீர்க்குறி, தேரையர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல். இது மூத்திரத்தைப் பரிசோதித்து நோயை நிர்ணயிக்கும் முறையைக் கூறும், a tamil medical work compiled by Theraiyar. It treats of diagnostic examination of urine in detail before acertaining or determining the disease; 2. மூத்திரப் பரீட்சை, the medical examination of urine

-Urinos copy, Uroscopy; 3. தண்ணீர் ஏறுவதையும், இறங்குவதையும் காண்பிக்கும் அடையாளம், a mark indicating the raise and fall of water -Water mark.

நீர்க்குறிஞ்சா, தண்ணீரில் முளைக்கும் குறிஞ்சா, swallow root in water- Asthmatic swallow root- Asclepias asthmatica alias Tylophora asthmatica.

நீர்க்குறிஞ்சா, வெண் குறிஞ்சா, common indian ipecacuanha -Tylophora asthmatica alias Asclepias asthmatica.

நீர்க்குறுகல், மூத்திரம் குறைவு படுதல், a decrease in the secretion of urine; 2. நீர்ச் சுண்டல், diminution of water through boiling or evaporation; 3. தண்ணீர் குறைவு படல், defficiency of water; 4. தண்ணீர் வற்றல், drying up of water.

நீர்க்குன்று, நத்தை, snail.

நீர்க்கூடம், பித்தளை, brass.

நீர்க்கொண்ட, நீர்ப்பிடிப்புள்ள, watery; 2. நீர் நிரம்ப விளாவிய, highly diluted -Washy.

நீர்க்கொண்ட வீக்கம், நீர்க்கோவையினால் ஏற்பட்ட வீக்கம், swelling due to catarrh.

நீர்க்கொதி, நீரெரிவு. அதாவது மூத்திர எரிச்சல், burning sensation while passing urine; 2. மூத்திரம் பெய்யும் போது சூடாயிருத்தல், feeling hot while making water.

நீர்க்கொதிப்பு, தண்ணீர் கொதித்தல், boiling of water; 2. சூரிய வெப்பத்தினால் தண்ணீர் சூடாதல், water rendered hot through sun's rays.

நீர்க்கொத்தை, ஓர் தண்ணீர்ப் பாம்பு, a kind of water snake.

நீர்க்கொப்புளக்கரு, கருவாய்ந்த நீர்க்கொப்புளம், pellucid cyst containing fluid -Hydatid.

நீர்க்கொப்புளக் கருப்பம், கர்ப்பாசயத்தில் அநேக கொப்புளங்கள் ஏற்பட்டு இவைகளெல்லாம் கொத்துக்களாக இணைக்கப்பட்டும் ஒவ்வொரு கொப்புளத்திற்கும் உடல், தலை 3 அல்லது 4 நகங்கள் போன்ற உறுப்புகளும் உண்டு, womb containing in numerable vesicles with a limpid fluid usually united in clusters by some common structre of the womb itself. Each vesicle in the womb is said to have a body, a head and 3 or 4 claws -Hydatid cysts.

நீர்க்கொப்புளம், சலங்கொண்ட யெழுச்சி, boil consisting water, furuncle.

நீர்க்கொப்புளம், கொப்பளித்த புண, water blister.

நீர்க்கொள்ளல், சலதோஷங் கொள்ளுதல், catching cold; 2. நீர் கொள்ளுதல், consuming water.

நீர்க்கொள்ளுதல், சலிப் பிடித்தல், catching cold. See நீர்க்கொள்ளல், 2; புண்ணில் சீழ் கொள்ளல், getting matter collected in boils; 3. நீர் கொண்டு வீங்கல், swelling from accumulation of morbid fluid in the tissues of the body.

நீர்க்கொள்ளுவான், ஓர் வகை அம்மை அல்லது வைசூரி. இது சாதாரணமாய் குழந்தைகளுக்குக் காணும் கொடிய தொத்து நோய். இதனால் சுரம் காய்ந்து, மூன்றாம் நாள் சிறு சங்கம் பழம் போல் குருக்கள் மேலாகத் தோன்றி, பால் கொள்ளாமலேயே 3 நாள் காய்ந்துதிரும். அனேகமாய் தழும்பிராது, தொந்திரவில்லாமல் நீங்கும், a kind of chicken pox -Vaniceilla. It is an acute contagious disease attacking principally young children. It is marked by slight fever and eruptions of mascular vesicles which appear in crops on the third day, but they are superficial. They rarely become pastular but dry up and are only occasionally followed by scars. The duration of the disease is about a week during which time it turns a very mild course, See கொப்பளிப்பான்.

நீர் கோத்தல், சலங்கொள்ளல், becoming purulent as boil.

நீர்க்கோசம், ஊத்தாம்பிள்ளை, urinary bladder.

நீர்க்கோரைக் கிழங்கு, இதனால் குட்டம், விஷம், மாலைக்கண், தினவு போம், a kind of korai.

நீர்க்கோவை, உடம்பின் கண்ணறைகளில் துர் நீர் சேருதல், accumulation of morbid fluid from the surrounding tissues of the body; 2. கண்ணறைகளின் துர் நீர் அதைச் சார்ந்த

உறுப்புகளிற் கோத்தல், infiltration of an organ with any morbid fluid derived from the surrounding tissues.

நீர்க்கோவை, சீதளத்தால் தலையில் நீர் கொள்ளல், accumulation of water in the head from cold.

நீர்க்கோவை நோய், துர் நீர் சேருவதால் நேரும் வியாதிகள். அதாவது வீக்கம், மகோதரம், நீர்க்க விசை, நீர்ப்பிடிப்பு, பீனசம் முதலியவை, diseases arising from the accumulation of morbid fluids viz oedema, dropsy, ascites, anusarca, catarrh of the nose etc.

நீர்க்கோழி, தண்ணீர்க் கோழி, water hen, the gallina hen or moon hen thin limbed water fowl.

நீர்க்கொறட்டை, ஓர் வகைத் தண்ணீர்ப் பாம்பு. இது தண்ணீரில் வசிக்கா விட்டாலும் நீர் தங்கி நிற்கும் நெல் வயல்களில் அடிக்கடி உலாவுவதால் இப் பெயர் கொண்டது போலும். இத கடித்தால் விஷமிராது. ஆயினும் கடிக்கும் போது சதை கிழியும் வரை விடாது பிடித்தபடியே நிற்கும், a kind of water snake-Tropidonotus quincunciatus alias Ophidii colubriformis. The term literally means water hold fast. the snake is so called from the fact that when it bites. it will not let go till the flesh is torn out. Although it is not water born it is named so from its frequenting wet paddy fields and therefore it is commonly reckoned a water snake. It is not venomous.

நீர்ச்சங்கு, ஓர் வகைச் சங்கஞ் செடி, four spinad monetia -Azima tetracantha.

நீர்ச்சப்பி, நீர்க்கக்கி. கெட்ட நீரை இழுக்கும் ஓர் பூண்டு, a kind of chinese laurel plant -Daphniphyllum glancescens. It is so called from its probability of absorbing morbid fluid from the body.

நீர்ச்சாடி, தண்ணீர் வைக்கும் பாண்டம், water jar.

நீர்ச்சாணை, ஓர் வகை சாணைக்கல், whet stone giving out moisture when rubbed as opposed to நெருப்புச் சாணைக்கல், which see.

நீர்ச் சாம்பிராணி.

நீர்ச்சாரை, தண்ணீர்ச் சாரைப் பாம்பு, male cobra water rat snake -Ptyas mucosus.

நீர்ச்சால், மழைத் தண்ணீர் பிடிக்கும் பீப்பா, a cask used as a reservoir for rain water.

நீர்ச்சி, சலங் கோத்தல், containing both serum and purulent matter -Sero purulent as in boils.

நீர்ச்சிக்கு, See நீர் அடைப்பு.

நீர்ச்சிங்கி, ஓர் விரண நோய், an ulcer.

நீர்ச்சித்திரம், நீரடி முத்து, which see.

நீர்ச்சிரங்கு, சேற்றுப்புண், itching sore in the crevices of toes- Sore foot.

நீர்ச்சிவப்பு,.

நீர்ச்சிறுத்திறங்கல், மூத்திரம் கொஞ்சமாக இறங்கல், dribbling of urine due to stricutre.

நீர்ச்சிறுப்பு, சொட்டு மூத்திரம், drippling urine.

நீர்ச்சிறுகீரை.

நீர்ச்சிறுசிறுத்தல், சிறு நீர் படிப்படியாக குறைந்து போதல், the quantity of urine passed gets gradually decreased.

நீர்ச்சின்னி, ஓர் வகைச் சின்னி, birch leaved acalypha -Acalypha betulina alias Urtica glomerata.

நீர் சுண்ட காய்ச்சல், கஷாய வகைகளைத் தண்ணீர் வற்றும்படி காய்ச்சுதல், boiling down to a reduced quantity as decoction.

நீர்ச்சுண்டி, சுண்டைக்கிரை, floating desmanthus, floating sensitive plant -Neptumia genus; 2. ஓர் சுண்டி, water mimosa -Mimosa virgata alias desmanthus virgata as opposed to வறட்சுண்டி, which see.

நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, dysurea -ardor urinae.

நீர்ச்சிவறல், நனைதல், becoming wet or moist.

நீர்ச்சுறப்பு, பாண்டு ரோகத்தில் நீர்க்கோவையினால் காணும் வீக்கம். இது பிடங்கு நாறியிலையால் குணப்படும், swelling from accumultion of bad fluid -Oedema. It is cured by

the decoction containing the leaves of Krishnapalai as chief ingredient.

நீர்சுசும், நீரடி முத்து, which see.

நீர்ச்சூடு, தண்ணீரின் உஷ்ணம், temperature of water.

நீர்ச்சூலை, புறங்காலில் தினவு உண்டாகி, வீங்கிப் பொருத்துகள் உளைந்து குதிக்காலில் கொப்புளங் கண்டு திரண்டு உடையும் ஓர் வகைக் குத்தல் நோய். குதிக்கள்ளன், a boil or abscess on the heal marked by itching and swelling on the back foot; acute pain at the joint arising from accumulation of fluid; 2. நீர் அண்டம், a circumscribed collection of fluid in the scrotum -Hydrocele.

நீர்ச்செம்பை, தண்ணீரில் முளைக்கும் செம்பை sensitive pea- Sesbania aculeata alias Coronillia aculeata.

நீர்ச்செரிப்பு.

நீர்ச்செவ்வில்லிக் கொடி, red Indian lily plant. See செவ்வல்லி.

நீர்ச்சேம்பு, சேம்பு, Indian kales -Colocasia genus; 2. தண்ணீரில் முளைக்கும் சேம்பு, water kachvee pit nelumbo -Saggitaria obtusifolia.

நீர்ச்சேவல், நீரில் வாழும் சேவல், water cock -Gallicrex criststus.

நீர்ச்சோகம், தண்ணீர் தாகத்தால் காணும் சோர்வு, fatigue or weariness due to thirst of water.

ஹுநூது சூநு(ஞுது), நெட்டி தளம்.

நீர்ச்சோறு, தண்ணீரும் சோறும், cooked rice and water; 2. பழஞ்சோறு, cold rice with water.

நீர்ச்சோனம், நீர்ப்பிரமி, which see.

நீர் தரையில் சிறந்தசத்தி, சத்தி சாரணை, spreading hog weed -Boerhavia procumbens.

நீர்தன்னில் குடிச்சி, நீரறளி Indian willow -Polyganum genus.

நீர்தாய்க்கிராணி.

நீர்தெளிந்த சுண்ணம், தாளித்த சுண்ணாம்பு, slaked lime.

நீர்த்தகஞ்சி, பால் சேர்க்காமல் தண்ணீரும் நொய்யும் சேர்த்து நீர்க்கக் காய்ச்சிய கஞ்சி, water and meal without milk -Water gruel.

நீர்த்த தும்பல், கண்ணில் நீர்க்கலங்கல், fullness of tears as from mental agitation.

நீர்த்தல், சாதல், dying; 2. சாம்பலாதல், being reduced to ashes; 3. தண்ணீராகச் செய்தல், turning into a liquid, making watery.

நீர்த்த வீரியம், உடைந்த இந்திரியம், watery semen thin ness of semen.

நீர்த்தவுப்பு, முடியண்டபடருப்பு, a mystic salt prepared from the skull of the foetus.

நீர்த்த வெட்டை.

நீர்த்தன்மை, திரவம், fluid or liquid state or form.

நீர்த்தாரா, நீர் வாத்து, water duck.

நீர்த்தாரை, மூத்திரத்தாரை சலவாகி, urinary passage urethra; 2. தண்ணீர் செல்லும் வழி, water course; 3. உடம்பிலுள்ள பல விடங்களில் உள்ள நீர் கொண்டு செல்லும் குழல், ducts or canals conveying liquids or fluids to the various parts of the body -Aqua duct.

நீர்த்தாரைக்கல், மூத்திரத் தாரையை அடைக்குங்கல். இது கொள்ளு ரசம், சிவப்பு முள்ளங்கியினால் கல்லு பொடியாகி நோய் தீரும், calculus obstructing the passage of urine. It is cured by eating carrot or taking Horse gram decoction.

நீர்த்தாரைப்புண், மூத்திரப் பாதையில் தாபிதங்கண்டு அங்குள்ள சளி சவ்வு புண்ணாகி சீழொழுகும் ஓர் விரண நோய், a ulcer in the urethral passage marked by discharge of pus due to its inflammation.

நீர்த்தாரையடைப்பு, மூத்திர தாரை அடைபடல், obstruction to the free passage of urine -Stricture of urethra.

நீர்த்தாரையெரிச்சல், மூத்திரத் தாரை எரிச்சல், inflammation of urthera — Urithritis.

நீர்த்தாரை விரணம், மூத்திரத் தாரையினுள்ள புண், ulceration of the urethra.

நீர்த்தாளி, தண்ணீரில் முளைக்கும் தாளி, a running plant of the convolulus genus, See வெண் கூதாளம்.

நீர்த்திசம், மஞ்சள், Indian saffron, turmeric -Curcuma longa.

நீர்த்திப்பிலி, நீர்ப்பிப்பிலி. இது வருஷ முழுவதும் பூக்கும். பூ மிகச் சிறியது. வெள்ளை நெல் வயல்களிற் காணலாம். water long pepper -Sphenoclea zeylanica, flowers all the year, flowers very small white common in rice fields.

நீர்த்திமிரம், கண்ணில் விரணத்தை உண்டாக்கி, கருவிழிப் பக்கங்களில் குத்தலையும், நடுவில் புகைச்சலையும் உண்டாக்கும் ஓர் கண்ணோய், a disease of the black of the eye marked by lesion of the eye, acute pain and dimness of vision.

நீர்த்திரிப்புல், சன்னிப்புல். இதனால் மூளையைப் பற்றிய ரோகங்கள் போம், an unknown variety of grass said to be used for brain apoplexy.

நீர்த்தும்பல், ஓர் கண்ணோய், an eye disease.

நீர்த் தும்பை, ஓர் வகைத் தும்பை. இது தாம்பிரத்தைத் பற்ப மாக்கும். a kind of toombay of the leucas genus. It reduces copper into calcined powder.

நீர்த்துவாரம், மூத்திரத்துவாரம், urethral opening; 2. சிறு நீர் வரும் வழி, opening of the urinary passage.

நீர்த்துவாரவுள்ளரிப்பு, நீர்த்தாரைத் தினவு, itching of the urethra.

நீர்த்துலக்கி, பிரசவ காலத்தில் நீரை எடுப்பதற்காக உபயோகிக்கும் கருவி, a delicate probe used for causing escape of fluid from the womb during labour.

நீர்த்துளக்கி, நீர்க்குழலின் துளக்கி, stilette of probe, a delicate probe; 2. நீர்க்குழலின் கம்பி, a wire used to stiffen or clear a catheter.

நீர்த்துளசி,.

நீர்த்தெளிவி, தண்ணீரைத் தெளியச் செய்யும் ஓர் கருவி, water filter; 2. தேத்தான் கொட்டை, water clearing nut -Strychnos potatorum.

நீர்த்தேய்வு, தண்ணீர் ஓடுவதால் ஏற்பட்ட வழவழப்பு, smoothness or worm condition.

நீர்த்தைலம்,

நீர்த்தொட்டி, ஆடு, மாடுகள் தண்ணீர் குடிப்பதற்கு இயற்றிய தொட்டி, water trough; 2. மனிதர் குளிக்கும் தொட்டி, water tub.

நீர்த்தோஷம், சலதோஷம், attack of cold; 2. மூத்திர தோஷம், urinary disorders.

நீர் நாகம், நீர் ஓரங்களில் காணப்படும் நாகப்பாம்பு, cobra found on the sea coasts -Water cobra; 2. மோதக்கொண்டை, large eyed carp -Megalops.

நீர் நாங்கள், நீர் நாங்கு, which see.

நீர் நாங்கு, ஓர் வகை நாங்கு; a kind of Ceylon iron wood -Mesua ferrea (speciosa).

நீர் நாய், நீரில் வாழும் நாய், a kind of water dog -Otter dog; 2. நீண்ட மயிர் வாய்ந்த நீந்து நாய், a long haired swimming dog- Water spaniel; 3. ஏரியில் காணப்படும் நாய்; a rodent animal haunting streams and lakes -Beaver; 4. நாய் மீன் என்னும் கடற் சுறா, a kind of shark in the sea -Dog fish.

நீர் நாய் சவ்வாது, நீர் நாய் விரை which see.

நீர் நாய் விரை, நீர் நாயின் விதை நுனித் தோலினின்று கசிந்து காய்த்திருக்கும் வஸ்து அடங்கிய பை. இப்பை இரட்டையாகவும், மூன்று அங்குல நீளமாயும் இருக்கும். இது விரையிலிருக்கும் எண்ணெய்ப் பையினின்று விலகியிருக்கும். இக்காய்ந்த வஸ்து அதிக வாசனையுள்ள தாயிருக்கும். இது இந்நாயின் குதத்திற்கும் குய்யத்திற்கும் மத்தியிலுள்ள பையினின்று உற்பத்தியாகும் பார்வைக்குக் கருப்பாயும், விசித்திர வாசனையாயுமிருக்கும். இதற்கு ஜிந்து என்று யுனானில் பெயர். இது சுறுசுறுப்பைத் தந்து இசிவைப் போக்குந் தன்மையது. ஆகவே இதை வயிற்று வலி, சூதக சன்னி, காக்கை வலிப்புக்குக் கொடுப்பதுண்டு. சன்னி, பாத சுரத்தினால் ஏற்பட்ட பலவீனத் திற்கும் கொடுக்கலாம். சுபவாத சுரத்திற்குச் சிறந்ததாகும். the dried follicles of the prepuce of the beaver filled with a peculiar secretion. Castor -Castoreum. The follicles are in pairs, about 3 inches long. They are separated from the smaller oil sacs. The dry resinous secretion is highly odorous. The membraneous follicles containing this substance are situated between the anus and external genitals (ofcourse united by a common duct) it is dark

coloured matter of the consistency of pully with a peculiar odour. It is called 'Gint' by Unani doctors. It is a stimulant and antispasmodic and so prescribed mostly by Unani doctors in colic hysteria and epilepsy and also to rouse the system in cases of a dynamic type. It is an excellant remedy in typhoid pneumonia.

NOTE: The castor of commerce is of two kinds Russian and Canadian the former is the most highly prized. The Russian castor has a stronger smell the other is inferior. The consistency of the contents varies with the amount of water present. Castor contains volatile oil, uric, phosphoric and benzoic acids with potash, sodium, lime and carbonate of ammonia. it is soluble in rectified spirit and ether.

நீர் நாவல், ஈரம் பற்றிய நிலங்களில் விளையும் நாவல் மரம். ஆகவே இதற்கிப் பெயர். மேற்கு மலைச் சார்பையடுத்த தென் கன்னடம் முதல் கன்னியா குமரி வரையிலும் இவை விசேஷமாய்க் காணலாம். உயரம் 12-20 அடி. இலைகள் 6-9 அங்குல நீளம், பூ வெண்மை, குணத்தில் நாவலைப் போன்றதே, water jaumoon -Eugenia munronic. It is so called from its being found grown in moist places. In western ghats, it is found in great abundance from Canara to Cape comerin. It is a middle sized tree between 12-20 ft. high, leave 6-9 inches long, flowers white, resembles the regular jaumoon in properties; 2. கருநாவல், gardener's black plum -Eugenia gardneri.

நீர்நிதி, செந்தாமரை, red lotus flower -Nelumbium speciosum.

நீர் நிலப்பிராணி, நீரிலும், நிலத்திலும் வாழக் கூடிய தவளை முதலிய செந்து, a class of vertebrata living during their life both in the water and the land -Amphibian.

நீர் நிலை, தண்ணீர் நிலையாயுள்ள இடம், place where from water can be obtained as lake, tank, river etc; 2. குளம், tank.

நீர்தொட்டி, நீர் அருகில் காணும் தக்கைப் பூண்டு, a kind of pith plant found near shores.

நீர் நெரிசல், கண் விழி நடுவில் மாந்தளிர் நிறத்தையும், நீர்க் கோவையையும் உண்டாக்கும் ஓர் கண்ணோய், a disease of sclerotic coat of the eye marked by red swelling accumulation of morbid fluid and ulceration.

நீர் நெருப்பு, நீர் மேல் நெருப்பு, fire on water. See நீர் மேல் நெருப்பு; 2. கல்லுருவி gravel plant -Ammrnnia vesicatoria alias A baccifera; 3. ஆகாசத்தாமரை, sky lotus -Pistia stratiotes; 4. கொட்டைப்பாசி, green moss found on the surface of water.

நீர் நொச்சி, சிறு நொச்சி. இது சாதாரணமாகத் தண்ணீர் ஓரங்களில் வளரக் கூடியது. இது கொர நாடு கடற்கரைகளிலும் கண்கான் தட்சண தேசத்திலும் மிகுதியாகக் காணப்படும். இச்செடி சுமார் 10 அடி உயரம், இலைகள், கொம்புக்கு மூன்று அல்லது ஐந்தாகவுமிருக்கும். இலைத் துளிர் அண்ட வடிவு, அடியில் வெண் சாம்பல் நிறம், பூந்தாது இறகைப் போன்றது. காம்புகள் இரண்டு பிளவு, பூக்கள் ஊதா நிறம், சித்திரை வைகாசி மாதத்தில் பூக்கும். இலைகள் சிறிது கசப்பு, வாசனையாய் இருக்கும். வேரினின்று பச்சை நிறமான எண்ணெய் எடுப்பதுண்டு. இது கழலை வீக்கத்தையும், துர் நீரையும் கலைக்கச் செய்யும். ஆகவே சுதேச வைத்தியர்கள், வற்றச் செய்யவும், வடிவிக்கிற மருந்தாகவும் உபயோகிப் பார்கள். இதன் காய் அல்லது பழம் சிறியது. கசப்பு, அழுத்தம், இலைகளைச் சூரணித்து தண்ணீரில் கலந்து கொடுக்க முறை சுரம் போம். இதன் பழத்தை சூரணம், இலேகியம், கஷாயம், இவைகள் செய்து வைத்தியர்கள் நரம்பு வலி, தலைவலி, சூதகச் சிக்கல், இவைகளுக்குக் கொடுப் பார்கள். இலை வெந்நீரிலிட்டு முழுகவும் ஒத்தடங்கொடுக்கவும் உதவும். அன்றியும் பெரிபெரி சுரம் முதலிய அறியா நோய்களுக்கும், கால் எரிச்சலுக்கும் உபயோகப்படும். இதன் காய் மிளகுக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இலைகளை நரம்பு சுளுக்கு, வாதப் பிடிப்பு, உள்காயம் இவைகளுக்கு ஒத்தடம் கொடுக்கலாம். இலையை வதக்கி வாதப் பிடிப்பு, உடம்பில் ஓர் பாகத்தில் உண்டாகும் வலிக்கும் வைத்துக் கட்டலாம். இதன் வேரை வெந்நீரில் கலந்து சூலைப் பிடிப்புக்கு உபயோகிக்கலாம்.

Indian privet, water nochy -Vitex trifolia alias V. integrrima. It is often found grown near the shores or margins of water. It is common in coromandal coast konkon and Deccan. The shrum is 10 ft. high leaves ternate and quinate, leaf lets ovate, hoary, beneath, panicle with straight rachis, pedicles dichotomous flowers violet, flowering in April and May. Leaves lightly bitter and aromatic taste. Sweet oil of greenish colour is extracted from the root. It has medicinal properties, leaves and young shoots are powerful discutient. The fruit is small, bitter and rigit. Leaves powdered and taken with water are a cure for intermittent fever. It has a high repute in native practice and the fruit is said to be nervine, caphalic and emmengagogue and is prescribed in the form of powder, electuary and decoction. It is highly extolled by the Vaidyans as anodyne and diuretic and is found useful in fomentations and baths in the treatment of beriberry and other obscure affections called burning of the feet. Fruit sometimes used for pepper. Leaves are applied warm in cases of sprains, rheumatism contusion, swellings and diseases of the skin, root and cataplasm of leaves are externally applied rheumatism and local pains.The root mixed with hot water is used in gout.

நீர் நொச்சி, பூவான் குருந்தலை, kinka oil plant -Vernonia anthilmintica; 2. மயிலடி நொச்சி, peacocks foot tree -Vitex altisima; 3. காட்டு நொச்சு, water peacock's foot tree -Vitex leucoxylon; 4. see நெய்ச்சிட்டி, 5. ஆற்று நொச்சி, litoral small leaved glory tree- cledendron inerme.

நீர்ப்பகண்டை,.

நீர்ப்பகன்றை, ஓர் பூடு, a kind of water plant -Stemodia aquatica.

நீர்ப்பசு, see காளிந்தி.

நீர்ப்பச்சை, ஆமை, tortoise; 2. கடலாமை, see turtle; 3. see கடலாரை.

நீர்ப்பஞ்சு, கடற்காளான், a kind of moss sticking to rocks -Sponge; 2. காந்த பாஷாணம், one of the 32 kinds of native arsenic; 3. தண்ணீரிழுக்கும் பஞ்சு, absorbent cotton.

நீர்ப்படர்த்தி, கடைக்கண்ணில் நீரொழுகச் செய்யும் நோய், an eye disease marked by discharge of watery fluid from the corners of the eye.

நீர்ப்படலம், கருவிழியின் மேல் மேகம் கம்மியது போல் மறைப்பு கண்டு, சலங்கோத்து, வடிந்து, தலைக்குத்தல் முதலிய குணங்களைக் காட்டுமோர் நோய், a disease of the black of the eye charactrised by dulness of vision, accumulation of morbid fluid, purulent discharge, head ache etc.

நீர்ப்படுவன், காலின் கீழ் சதா நீர் கசிந்து கொண்டிருக்கும் ஓர் வகை நீர்ச்சிலந்தி, an ulcer below the knee marked by constant watery discharge.

நீர்ப்பட்டை, பிசின் பட்டை, gum bark.

நீர்ப்பணைப்பு, நீர் கோவை யினால் உடம்பு பருத்து காணல், corpulency due to accumulation of morbid fluid in the system.

நீர்ப்பதுமம், இமை தடித்து சிவந்து அனல் போல் எரிச்சலுண்டாகி, அருவி போல் நீர் ஒழுகி தினவையுண்டாக்கும் ஓர் கண்ணோய், a disease of the eyelids marked by burning sensation (inflammation) and constant watery discharge and itching -Blepharitis.

நீர்ப்பந்தி, நீர்க்கட்டு. அதாவது மூத்திரம் தடைபடல், suppres-sion of urine; 2. கட்டுக்கொடி, which see.

நீர்ப்பயறு, மின்னிப்பயறு, a sepecies of jungle green gram.

நீர்ப்பரிசகம், ஆமை, tortoise.

நீர்ப்பரிசை, see நீர்ப்பரிசகம்.

நீர்ப்பருகல், தண்ணீர் குடித்தல், drinking (water).

நீர்ப்பருத்தி, கடற்கரைப் பருத்தி, sea coast rose mellow -Hibiscus tiliaceous.

நீர்ப்பவுத்திரம், மூத்திரப் பாதையில் ஏற்படும் பவுத்திரம், an abnormal opening into some part of the urinary apparatus -Urinary fistula.

நீர்ப்பறவை, நீர் வாழ் பட்சி, water bird in common, 2. புறாவைப் போன்ற அழகான நீர்ப்பட்சி, a handsome bird about the size of a pigeon peewit lapwing -Plover family.

நீர்ப்பறிதல், நீரரும்பல், water soaking through.

நீர்ப்பனை, புல்லாமணக்கு, creeping castor plant -Sebastiana, chamaelea alias Melanthium indica; 2. see *நீர்ப்பன்றி.*

நீர்ப்பாக்கு, *ஊறல் பாக்கு,* areca nut soaked in water.

நீர்ப்பாசி, *தண்ணீர் பாசி,* duck weed it has cooling property; *2. ஓர் வகை வைப்புப் பாஷாணம்,* a kind of prepared poision.

லூயூநூதூரூதூரூமு, *நீர்க் கழிச்சல்,* watery motion.

நீர்ப்பாடி, see *நீராரை.*

நீர்ப்பாட்டு சன்னி, *ஓர் சன்னி,* a variety of delirium.

நீர்ப்பாண்டு, see *நீர்க்கவிசை.*

நீர்ப்பாம்பு, *தண்ணீர் பாம்பு,* water snake; *2. கடற்பாம்பு,* sea snake.

நீர் பாம்புக்கிருமி, *சிலேட்டு மத்தால் இரைப்பையில் உண்டாகும் நூல் போன்ற கிருமி,* a small thread like worm in the stomach stomach worm -Strongylus contortus.

நீர்ப்பாய்ச்சல், *இமை நீர்ப் பாய்ச்சல், இமையைப் பற்றிய நோய். இதனால் கண்ணிமை குழிந்து, நீர் வடிந்து சதை வளர்ந்து அரிப்புண்டாகி, கருவிழி உறுத்தி, கனத்து எரிச்சலை உண்டாக்கும். நீர்ப்பாய்ச்சல் 4 விதம்; 1. இமை நீர்ப் பாய்ச்சல், 2. சுற்றுக் குலைவு, 3. புழுவெட்டு, 4. இமையிறைச்சி,* a disease of the eye lids marked by relaxation discharge of water, morbid growth itching irritation of the pupil fullness of head and inflammation of the lids. It is of four kinds as pointed before; *2. மூக்கு நீர்ப்பாய்ச்சல்,* inflammation of the mucous membrane of the nose with a free discharge -Nasal catarrah, glanders; *3. (இரத்தினங் களின்) நீரோட்டம்,* transparency and brilliancy of gems.

நீர்ப்பாறை, *நீர் தங்கும் பாறை,* aquecous rocks which are deposited by water -Sedimentary rock -Nepturnic rock.

நீர்ப்பானை, *நீர்ச்சால்,* a pot for holding water -Water pot.

நீர்ப்பிடி, *நீர்ப்பிடிப்பு,* which see.

நீர்ப்பிடிப்பு, உடம்பினுள் இரத்த வோட்டம் சில பாகத்தில் தடைபடுவதால் அவ்விடத்தில் இரத்த நீர் சேர்ந்து காணப்படும் நோய், effusion of fluid into serous cavities of the body due to some mechanical obstruction to the free flow of blood in the part -Anasarca; 2. வீக்கம், swelling -tunic faction.

நீர்ப்பிடிப்புள்ள, நீர் கோத்து வீக்கமுள்ள, being affected by swelling due to accumulation of fluid in the tissues -Oedematus; 2. சலதோஷமுள்ள being affected by cold; 3. மூத்திர தடையுள்ள, being affected by stricture of urine.

நீர்ப்பிப்பிலி, see நீர்த்திப்பிலி.

நீர்ப்பிரமி, பிரிமியப்பூடு. பிரமி வழுக்கை, இது வருஷப்பூடு. கொடி. இது தண்ணீருள்ள இடங்களில் முளைக்கும். இலைகள் நேர், வழவழப்பு, சதைப் பற்று, புள்ளிகள் வாய்ந்தது. இலைக்காம்புகள் இலையை விடக் குட்டை யானவை. ஒரே புட்பம், நீல நிறம், விதைகள் பல, வருஷந் தோறும் பூக்கும். இதன் வேர், தண்டு, இலை, மூத்திரம் வடிக்கும், மலத்தை இளக்குந் தன்மையது, சமூலம் சூரணித்துக் கொடுக்க பேதியாகும். கொடியிலைச் சாற்றுடன் மண் தைலம் சேர்த்து கீல் வாயுவுக்கு தடவலாம். இதன் சமூலத்துக்கே மருந்துக் குணமுள்ளதால் இதை நரம்பு நோய்களுக்கும் பைத்தியம், காக்கை வலிப்பு, மல சலக்கட்டு முதலானவை களுக்குக் கொடுக்கப்படும். இதை அவித்து குழந்தை இருமலுக்கு மார்பில் கட்டுக் கட்டலாம். இதைச் சூரணித்து சம பாகமாக வசம்பு கடுக்காய், ஆடாதொடை வேர், திப்பிலி இவைகளின் தூள்களையும் கலந்து தேனில் கொடுக்க சயரோகத்தில் தொண்டை கம்மல் நீங்கும், Indian bramy; water hyssap, diabetes plant -Herpestis moniera. It is common in moist situation near streams and in the borders of tanks and ponds, Annual & creeper leaves opposite smooth, fleshy, dotted with minute spots peduncles shorter than leaves, seeds numerous, flowering al the years. The root stalk and leaves are used medicinally as diuretic and aperient.

The entire plant powdered and given as a purgative the expressed

juice of the creeper and leaves mixed with petroleum is rubbed on the part affected with rheumatism. The whole plant is employed medicinally in cases of nervous disorders or affections insanity and epilepsy. The leaves and stalk are particularly useful in the stoppage of urine and obstinate constiveness. A poultice is made of the boiled palnt and applied to the chest in cough of children. A powder of the dried plant mixed with equal parts of powdered sweet flag gall nut, root of malabar nut (adhatoda) and long pepper mixed with honey is given in hoarseness of pthisis.

நீர்ப்பிரமியம், see நீர்ப்பிரமி; 2. see, நீர்க்கடுப்பு.

நீர்ப்பிரளயம், அதி மூத்திரம், excess of secretion of urine -Diabetes insipidus.

நீர்ப்பிரியாமை, மூத்திரம் கட்டுப்படுதல், supression of retention of urine.

நீர்ப்பில்லம், ஒரு நீர்ப்பில்லம், கண்ணிமையைப் பற்றிய நோய். இதனால் இமை கடுத்து, பீளை கட்டி, நீர் வடிந்து, கண் சிவந்து, மேலிமை தடித்து, சதை வளர்ந்து அத்துடன் கண்ணுறுத்தல், கண் கூச்சமும் கண் சிவப்பதும் வெளுப்பது மாகவிருக்கும். a disease of the eye lids characterised by the following symptoms viz. irritation, mucopurulent discharge, discharge of water, inflammation, thickening of the upper eye lid, morbid growth acute pain of the eyes photophobia etc. Eyes inflamed off and on -Trachoma.

நீர்ப்பிளவை, பிளவைக் கட்டி. இது நீரிழிவினால் வரும் கட்டியாதலால் இப்பெயர். இது சாதாரணமாக இரத்தம் பலவீனப்பட்ட 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குக் காணும். இக்கட்டி பிடரி, பிட்டம், முதுகு இவ்விடங்களில் காணும். முகத்தில் காணுவது மிக்க கொடியது. இது வீங்கிப் பழுத்து முகங் காணாமலே சிவப்பு காணும். கிச்சிலிப் பழம் பருமன் உள்ளது. கடினமாயும், வலியுள்ளதாயும் இருக்கும். இது உள்ளில் சீழுண்டாகி பல கண்கள் காணப்படும். உள்ளாகக் குடைந்து செல்லும் தன்மையது. இதனால் சுரம், வியர்வை, பலவீனமுண்டாகும். சீழ், இரத்தம் வெளிப்பட உள்ளாக குழியுண்டாகும். இதை சத்திரம் செய்வதே உத்தமம். an exaggerated boil occuring in diabetic patients. It results from an impure vitiated and debilitated condition of blood found in persons over 40 years of age. It appears on the nape of the neck, buttocks and the back and the one occuring on the face is the serious form. It is sometimes as large as an orange in size, hard, painful causing a reddened skin without pointing it sloughs away leaving a deep cavity, the matter escapes from several small openings. It burrows under the neighbouring sinews. It is followed with constitutional symptoms such as fever, perspiration and debility -Aspiration is the best kind of treatment -Carbuncle.

நீர்ப்பீச்சான், நேர்ப்பிசின், false zedoary -Koemferia rotunda alias K.longa.

நீர்ப்பீப்பாய், நீரைத் தேக்கி வைக்க பயன்படும் மரத் தொட்டி, water cask.

நீர்ப்பீனசம், விஷ பித்தமும் வெட்டையும் அதிகரித்து சிரசிலேறி மூக்கின் வழியாய் நீர் வடிந்து பனி வாடையாலும் மழையினாலும் அதிகரித்து, தும்மலுடன் பிடரியும் முகமும் ஊரலெடுத்து தலையும், கண்ணும் கனத்துக் காணும் ஓர் வகைப் பீனசம், catarrh of the nose due to the vitiated bile and excess of venereal head finding its way into the head. It is associated with the following symptoms viz free running from the nose, constant sneezing itching in the nape of the neck and face, heaviness in the head and eyes etc -Nasal catarrh. it may also be caused by exposure to dew and rain.

நீர்ப்புங்கன், see நீர்ப்புங்கு.

நீர்ப்புங்கு, நீரில் முளைக்கும் புன்கு, Indian beech -Pongamia glabra.

நீர்ப்புடையன், ஆற்றுப்புடையன், river wart snake -Hydrus granulatus; 2. புடையன். இது கடற்கரை யோரங்களில் 3 அல்லது 4 மைல் தூரத்திலும் வசிக்கும், விஷமிராது, wart snake- Chersydrus granulatus. It will be found frequenting even 3 or 4 miles from the sea coast. It is not poisonous.

நீர்ப்புள் தோஷம், குழந்தைகளுக்கு நெஞ்சு வறண்டு, மிக வியர்த்து

இரு கண் குழிந்து கண் வெளுத்து பால் குடியாது நீர் கழிச்சல் காணும் ஓர் வகைப் பறவை தோஷம். இது குழந்தைகளைத் தெரு கடக்கக் கொண்டு போகும் போது பறவை நோக்கத்தால் ஏற்படும், according to Indian Medicine it is a disease affecting only the children at a certain age (within one year) and said to be due to the evil influence caused by exposing the children in the early hours of the morning or evening to the evil influence of birds which are vitiated it may happen by thier look or their shadow falling on the children. It is marked by depression of chest and anterior fontanele, profuse perspiration sunken and anamic eyes aversion to suckling, diarrhoea etc.

நீர்ப்பூ, நால்வகைப் பூவிலொன்று, one of the four kind of flowers. See நால்வகைப் பூ; 2. ஆம்பல், அல்லி முதலியன, aquatic flowers such as Nimphae genus.

நீர்ப்பூண்டு, நீர்முள்ளி, which see; 2. தண்ணீரில் முளைக்கும் பூண்டு, any aquatic plant.

நீர்ப்பூலா, See பூலா, black honey shrub- Phyllanthus multiflora.

நீர்ப்பூல், See நீர்ப்பூலா.

நீர்பூட்டிய வன்னம், நீர்ச்சாதம், cooked rice and water.

நீர்ப்பெருக்கல், see நீரிழிவு, 2. தண்ணீர் அதிகமாகக் கலத்தல், adulterating with more water.

நீர்ப்பெருக்கி, மூத்திரத்தை அதிகமாகப் போக்குவிக்கு மருந்து, drugs medicines having the power of exciting the secretion of urine -Diuretic.

நீர்ப்பேதம், தண்ணீரிலுள்ள வித்தியாசம், the differential properties in water; 2. பல்வகை நீர், the different kinds of water; 3. தண்ணீரின் மாறுபாடு, change of water; 4. இடத்தின் வித்தியாசம், change of place.

நீர்ப்பேதி, ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic preparation; 2. தண்ணீராக பேதியாகு மருந்து, a medicine causing watery discharge -Hydragogue; 3. தண்ணீராகப் போகும் பேதி, watery motion; 4. See நீர்ப்பெருக்கி; 5. தண்ணீர் சோதனை, examination of water; 6. தண்ணீரையே மந்திரித்துக் கொடுத்துப் பேதியாகும்படி

செய்தல், giving magic water as a purgative.

நீர்ப்பை, மூத்திரப்பை, சலப்பை, urinary bladder; 2. வெந்நீர்ப்பை, water bag used for hot fomentation.

நீர்ப்பைக்கொதிப்பு, மூத்திரப் பைக்குக் காணும் சோபம், irritation of the urinary bladder.

நீர்ப்பை தாபனம், மூத்திரப்பைக்கு காணும் அழற்சி, inflammation of the bladder.

நீர்ப்பையழலை, see நீர்ப்பைத் தாபனம்.

நீர்ப்பொருள், திரவமான வஸ்து, liquid substance.

நீர்ப்போக்கு, மூத்திர வியாதி, urinary disease; 2. நீரழிவு which see.

நீர்ப்பௌத்திரம், see நீர்ப்பவுத்திரம்.

நீர்மகளிர், கடல் மாதர், sea nymphs.

நீர்மடந்தான், ஆகாயம், sky.

நீர்மட்டம், நீர் சம அளவு, water level.

நீர்மட்டி, see நீர் மருந்து.

நீர் மருது, ஓர் வகை மருத மரம், a kind of marudah tree -Terminalia arjuna (typica).

நீர் மருத்துவம், பொதுவாக தண்ணீரைக் கொண்டு செய்யும் வைத்தியம். treatment of diseases in general by the application of water -Water cure; 2. தண்ணீரைக் கொண்டு எல்லா நோய்களையும் குணப்படுத் தலாம் என்கிற கொள்கையை மேற்கொண்டு செய்யும் வைத்தியம். நம் நாட்டில் நீர்மந்திரித்துக் கொடுத்தல் என்று வழங்கும், a particular system of treatment which professes to cure all diseases by the use of water i.e. water cure through magic spell as prevailing in India.

நீர் மருந்து, நீர்த்தன்மையுள்ள மருந்து, liquid medicine.

நீர் மறிப்பு, மூத்திரம் வெளிப்படாது தடைபடல், suppression of urine either from obstruction of the bladder or in the urethra slow and painful discharge of urine due to spasm of the urethra and bladder -Stranguary.

நீர் மனிதன், ஓர் நீர் வாழ் பிராணி. இதை மேற்கடற்கரை யோரங் களிலும் கான்கான், மலையாளக் கரையோரங்களிலும் காணலாம். இதைக் கண்ட மாலுமிகள் கடற்கன்னி எனவும் மயங்குவார்கள். இதற்கு கடற் பாபா, கடற்பிள்ளை என்றும் பெயர் வழங்கும். இது சாதாரணமாக 5-7 அடி உயரம் உடம்பு நீல நிறமாயும், சில பாகங்களில் வெண்மையான குருக்களும் காணப்படும். இதினின்று எண்ணெய் எடுத்துக் காதுவலிக்குப் உபயோகிப்பது உண்டு. இது மீன் ஈரல் எண்ணெய்க்குச் சமமாகவே சொல்லலாம். இதன் எலும்புகள் தந்தத்தைப் போல் கடினமாயும், நேர்த்தியாயும் இருக்கும். இதன் இறைச்சியை மீன் இறைச்சியைப் போல் கருதி உண்பதுண்டு. dugong- Halicore dugong. It is a water animal found chiefly in the seashores of west coast and in the salt water inlets of the concon and Sonth Malabar. ON seeing their bodies partially out of water, the mariners will mistake it for sea nymphs sirens and mermaids. It is also called water baby or water child. It is usually 5 to 7 ft. in length blue in colour and with white blotches in some parts of the body. Oils is extracted from the blubber and it is equal to codliver oil. It cures diseases of the ear. The bone of the animal in fineness and hardness approaches nearly to those of ivory. The flesh is also eaten like that of the fish.

நீர்மாங்காய், அடைமாங்காய், salt pickle of mango.

நீர்மாதளம், வில்வம், lingam tree -Cretaeva religiosa.

நீர்மாந்தம், இரைந்திரைந்து வயிறு கழிந்து, முக்கலுடன் நீர் இறங்கி ஒக்களித்து உடம்பு முழுவதும் வியர்த்து உடல் மெலிந்து கை கால் வீங்கி, முகம் மினுமினுத்துக் காணும் ஓர் வகை மாந்த நோய், a kind of dyspeptic diarrhoea in children characterised by difficulty in passing urine, rumbling noise of the stomach, frequent purging and vomiting, profused perspiration, emaciation, swelling of the limbs, shining of the face etc.

நீர்மானி, தண்ணீரை நிர்ணயிக்கும் கருவி, an instrument for measuring water -Water meter;

2. தண்ணீர் ஆழம் அல்லது உயரத்தை நிர்ணயிக்கும் கருவி, a gauge or instrument for ascertaining the depth or height of water -Water gauge; 3. தண்ணீரின் அல்லது வேறு வித திரவப் பொருளின் தடிப்பைக் குறிக்கும் ஓர் கருவி, an instrument for measuring or determining the density of water or other liquids -Hydrometer.

நீர்மிட்டான், தண்ணீர் மிட்டான், water root -Asparagus racemosus.

நீர் மிட்டான், see நீர்மிட்டான்.

நீர் முட்டல், ஓர் கண்ணோய், an eye disease.

நீர் முலாம், முலாம்பழம், water melon; 2. வெளிரிப்பழம், country melon.

நீர்முள்ளி, ஓர் நீர் முட் (செடி), பூண்டு. இது வருஷத்திற்கு ஒரு முறை காய்த்து ஒயும். அடித்தண்டு நேராகவும், நாற்கோணமாகவும், இலைகள் நேர் நேராகவும் நீளமாயும், பூக்கள் நீலம் அல்லது ஊதா நிறமாகவும் இருக்கும். ஆடி முதல் தை வரையிலும் பூக்கும். இது மலையாளம், வங்காளம் முதலிய செழிப்பான நிலங்களிலும் நெல் வயல் அருகேயும், குளம் குட்டைகள் சமீபத்திலும் மற்றும் ஈரமுள்ள விடங்களிலும் காணலாம்.

இதன் வேர் மல விருத்திக்கும், சல பேதி மருந்தாகவும் கஷாயம் வைத்துச் சாப்பிடலாம். மகோதரத்திற்கும், உபயோகப்படும். காடியில் கலந்து பேதிக்கு கொடுக்கலாம். இதன் வெந்நீர் கஷாயத்தினால் விஷப் பாண்டு நீங்கும். இதன் விரை பிரமேகம், மூலம், நீர் எரிச்சல், உடம்பின் சூடு, அதிசாரம், கபம், சோபை முதலியவைகளைப் போக்கும். தாது விருத்தியுண்டாம். இதன் இலை அல்லது சமுலத்தை கஷாயமாக வைத்துக் கொடுக்க சோகை, காமாலை, வயிற்றிலுள்ள கட்டி, மகோதரம் முதலிய நோய்கள் போம். இதன் சாம்பலை சிறு நீர் அல்லது வெள் ஆட்டு மூத்திரம், பசுவின் கோமயத்திலாவது கரைத்து பாண்டு வீக்கமுள்ள விடங்களில் பூசி வர வீக்கம் போம்.மேலும் இது இரத்தத்திலுள்ள மாசுகளை நரம்பின் வழியாக குண்டிக் காய்க்கு கொண்டு வந்து அதன்பின் நீர்ப்பை நீர்தாரை மூலமாய் வெளிப் படுத்தும்.

அன்றியும், நீர்த்தாரையிலுள்ள மாமிச வளர்ச்சி, சவ்வுகள் முதலிய தடங்கள்களைக் கரைத்து, நீரடைப்பு ரோகத்தைக் குணப்படுத்தும், இத்துடன் இதரச் சரக்குகளைச் சேர்த்தும், கொடுப்பதுண்டு. அவித்துக் கடைந்து கொண்டு கடுகு, உள்ளி, மஞ்சள் இவைகளை அரைத்துக் கூட்டி அடுப்பில் வைத்து குழம்பாகக் காய்ச்சி, உட் கொள்ள நீர்க்கட்டு, நீரேற்றம், மகோதரம், பித்த பாண்டு, நீர்ச் செரிப்பு, போம். நீர் முள்ளிச் சாற்றுடன் சிற்றாமணக் கெண்ணெய் சமமாகச் சேர்த்துக் கொண்டு அதில் நவாச் சாரம் பலமிட்டுக் கலக்கி, பதமுறக் காய்ச்சி வேளைக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள பாண்டு, சோகை, காமாலை, மகோதரம், வயிற்றிலுள்ள பலவிதக் கட்டிகள், கல்லடைப்பு, சதையடைப்பு, கை, கால் பிடிப்பு, மூலம், வெள்ளை, குன்மம் முதலிய நோய்கள் போம். புளி தள்ளி இச்சாபத்தியமாக இருக்க வேண்டும். இதன் விதையை இடித்துச் சூரணமாகக் கொள்ள நீர்க்கோர்வை இரைப்பு, இருமல், இவைகள் தீரும். இரத்தமும் சுத்தமாகி விந்தூறும்.

நீர்முள்ளிக்காடி, நீர் முள்ளி இலையைக் காடியில் ஊற வைத்துப் பிழிந்தெடுத்த சாறு, expressed juice of the leaves of water thistle plant soaked in vinegar, distilled vinegar combined with juice of the leaves of water thistle plant.

நீர்முள்ளி வகை, *1. ஊதா நீர் முள்ளி, 2. வெள்ளை நீர் முள்ளி, 3. பேய் நீர் முள்ளி,* water thorn -Hygrophila spinosa alias Astercantha longifolia. It is an annual plant, stem erect, bluntly quadrangular; leaves opposite, very long flowers blue, or bright violet, flowering in rainy season. It is abundant in Malabar Bengal and common in moist places in most part of India. It is also to be found near paddy fields, tanks, pools etc. It is full of thorns.

The root of this plant is laxative and diuretic, As a decoction it is useful in dropsical affections, mixed with vineger is used for promoting secretion of urine, infusion is used in swellings of the body and boils. Its seeds are

a good remedy in cases of urinary diseases piles,dysuria, internal heat, diarrhoea phlegmatic anemia etc., promotes secretion of semen. Decoction of the leaves or the entire plant is highly reputed for curing cases of anemia, jaundice, abdominal tumours, dropiscal swelling etc. The burnt ashes of this plant mixed with urine of child or goat or cow is externally applied to the parts affected by dropsical swellings. The plant is said to possess the extra ordinary virtue of removing the bad fluids of the blood to the bladder and from there discharged as urine through the urethra it removes the stones in the bladder and gravel in the urinary passages.

The plant is mixed with other drugs for treatment of diseases the entire plant is boiled and pulverised or crushed and to it are added mustard, garlic and turmeric and boiled like broth and taken internally for anasarca, jaundice and dropsy. sometimes the juice of the leaves mixed with an equal quantity of custor oil and a plam of powdered Salammona "C" is boiled down toi required standard and taken in spoonfuls is said to be a highly useful remedy in cases of the said dropsical affections jaundice, stricture of urine, stone in the urinary system and other diseases of urogenital tract, rheumatic affections, piles gonorrhoea dyspepsia etc. For such treatment elimination of tamarind in diet is essential. Powdered seeds are found efficacious in cases of anasarca, asthma, cough etc. It purifies the blood and increases the secretion of semen.

நீர்மூலப்படுத்தல், அடியோடு நீக்கல், as disease to cure entirely

நீர்மூலம், தண்ணீர் விட்டான் கிழங்கு, see நீர்மிட்டான்

நீர்மூலி, ஓர் வகை மரம், downy many leaved tree of Beauty -Aglaiya minutiflora

நீர்மூழ்கி, தண்ணீரில் நடந்துலாவும் பறவை, the dipper that can walk about under water -Water ozsel

நீர் மேல் செவ்வந்தி, செந்தாமரை, red lotus

நீர்மேல் நெருப்பு, கல்லுருவி, fire plant -Ammannia vesicatoria. It

is a kind of herb cool to the touch but causing blisters after wards -Ammannia debilis; 2. கொட்டைப்பாசி, which see; 3. வழலை, mystic salt supposed to be extracted from fuller's earth. 4. ஓர் பச்சிலை, இச்சாற்றில் 2 நாழி இரசத்தை டோலா யந்திரமாக கட்டி எரிக்க இரசம் கட்டுமெனக் கருதப்படும், an unknown plant said to consolidate mercury which is tied in piece of cloth and hung over a pot containing this juice which is heated.

நீர் மேல் நெருப்பு, இதை அரைத்து அரையாப்பு படைக்குப் பூச எரிச்சலுண்டாகி, பிறகு ஆவி உலரும். இது வயல்களில் வளரும் சிறு செடி. உமியளவு இலை இதனால் மகாவாத ரோகம், திமிர்வாதம் போம், an unknown plant having small leaves and growing in paddy fields. It cures magah vatham and thimir vatham. It applied externally the ring worm in the groin disappears after being blistered.

நீர் மேல் பச்சிலை, see ஆகாசத்தாமரை; 2. தாமரை, lotus

நீர்மேல் வெள்ளி, ஓர் வகைப் புழு, a kind of water worm

நீர்மை, குணம், quality; 2. தன்மை, nature, inherent quality

நீர்மோர், மோர், butter milk, whey; 2. நீர் கலந்த மோர், butter milk, diluted with water

நீர் யானை, ஓர் நீர் வாழ் மிருகம். இது நீர்ப்பூண்டுகளைத் தின்று வசிக்கும். இது பெரிய ஆறுகளில் வசிக்கும். a large animal chiefly found in large rivers (as Nile in Africa) living mainly onvegetable food -Hippopotamous

நீர்வஞ்சி, தண்ணீரில் முளைக்கும் பிரம்பு, water rattan -Calamus rotang

நீர் வடிதல், நீரொழுக்கு, which see 2. புண்ணினின்று ஊனீர் ஒழுகல், discharge of ichor from wounds and sores

நீர் வண்டல், தண்ணீரின் அடியில் படியும் வண்டல், sediment deposited under water

நீர் வண்டு, தண்ணீரில் சுழலும் வண்டு, . kind of beetle found whirling on the surface of water; 2. நீராம்பல், white Indian water lily -Nympae genus

நீர் வண்டுக்கடி, நீர் வண்டு கடிப்பதினால் உடம்பில் ஏற்பட்ட தழும்பு, a kind of ring worm due to the bite of water beetle.

நீர் வண்ணம், ஓர் வகைச் சாயம், a kind of pigment ground with water and some mucilage instead of oil -Water colour

நீர்வல்லி, வெற்றிலைக்கொடி, beetle creeper -Piper batle; 2. see தண்ணீர் விட்டான் கிழங்கு, 3. see, மலைவல்லி

நீர்வல்லிக்காலா, ஓர் வகைப் புல்லூரி, a kind of parasitic plant

நீர் வள்ளி, See நீர் வல்லி

நீர் வள்ளிக்கிழங்கு, see தண்ணீர் விட்டான் கிழங்கு

நீர்வற்றறேங்காய், நீர் சுண்டிய தேங்காய், ripe cocoanut with or without water; 2. கொப்பறைத் தேங்காய், dried cocoanut kernel

நீர் வாகை, நீர்வாழை, which see

நீர் வாங்கல், சல தோஷத்தைப் போக்கடித்தல், getting one self freed from cold (nasal catarrh); 2. ஈயம், இரசம் முதலியவைகளினின்று நீர்த் தன்மையைப் போக்கி வெள்ளியாக்கல், (in Alchemy) getting rid of the fluid nature or watery property of metals like tin, mercury etc. thereby converting them into silver

நீர் வாசி, see நீர்ப்பாசி; 2. தண்ணீரால் நோயைக் குணப்படுத்தல், water cure

நீர்வாசியாக்கல், தாதுக்கள் கலந்துள்ள நீரைக் கொடுத்து நோயைக் குணப்படுத்தல், a mode of treating diseases by frequent use of mineral waters both internally and externally -Water cure; 2. தண்ணீரை மந்திரித்துக் கொடுத்து நோயைக் குணப்படுத்தல், (in Mantric Science) treating diseases by water through magic spell.

நீர்வாத்து, நீரில் வாழும் வாத்து. இதற்குக் காட்டு வாத்து என்றும் பெயர். ஆண் இனம் மூக்கு மஞ்சள் கலந்த பச்சை நிறம், தலை கழுத்து பளபளப்பான பச்சை நிறம். கழுத்தைச் சுற்றிலும் வெண்மை, மார்பு, தோள், மங்கல் சிவப்பு, வயிறு சாம்பல் நிறம், வரிகள் வாய்ந்தது. கால்கள் மஞ்சள், 2

அடி நீளம், தின்பதற்குதவும், பெண் இனத்திற்கு மிக வித்தியாசமுண்டு, fenduck-water duck. It is also called wild duck.Malard- Anasboschas. Bill Yellowish green, head and neck shining pure green; White collar round the neck part of the breast and shoulders chest nut colour, breast and belly gray marked with lines; legs orange yellow 2 feet in length very good for eating; Female greatly differs from male

நீர்வாயு, water gas

நீர்வாரம், குளநெல், a kind of paddy; 2. தினை, Italian millet

நீர்வாழி, நீர் வாழ்வன, those living in water -Aquatic

நீர் வாழை, நீர் வாகை. இதற்கு இராவண வாகை அல்லது சீமை வாகை என்றும் பெயர். இதில் வாழையைப் போல் நீருள்ளதால் இதற்கிப் பெயர். அன்றியும் வாழையைப் போல் இலையின் அடிக் காம்பு கனதி, நீளம், அகலம் ஆனால் இவ்விலைகள் தண்டைச் சுற்றிலுமல்லாமல் நேர் நேராக விருக்கும். மரம் பார்வைக்கு வறியைப் போல் தோன்றும். இலைகளின் அடித் தண்டில் தண்ணீர் இருக்கும். வழிப் போக்கர்கள் தங்களுக்கு தாக விடாய் வரும் போது இம்மரத்திலுள்ள தண்ணீரை உபயோகப்படுத்தித் தாகத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். நிலத்தி லிருந்து உச்சி வரையிலும் அடுக்கடுக்காய் நேர் வரிசையி லுள்ள இலைகள் அநேகம், 30 அடி உயரமிருக்கும். traveller's palm or Madagascar palm -Ravenalia Madagascariensis. As it contains water like plantain tree and the leaves resembling those of the plantain, the tree is named so. Thick succulent stem long board leaves like those of the plantain tree but not rising round the stalk but in two lines on opposite sides, tree presents an appearance of a large open fan, it contains fresh water in the thick firm ends of the stalks of the leaves and so travellers passing by the side would make use of this water collected in the tree when they feel thirsty. The tree is about 30 ft. from the ground to the lowest leaves.

நீர் வாழைக்காய், மீன். இது மறைவாகச் சொல்லும் பெயர், an euphe mistic term for fish

நீர் வாழையங்கம், மீனெலும்பு, fish bone

நீர்வாழ் செந்து, தண்ணீரில் வாழும் பிராணி, aquatic creature

நீர்வாழ் பறவை, தண்ணீரில் வாழும் பட்சிகள். water birds

நீர் வாளம், நேர் வாளம், which see

நீர்வாளி, நீர்காங்கு, false fern tree -Filicium decipiens

நீர்விளா, நீரில் விளையும் விளாச் செடி, wood apple growing in water

நீர் விசர்க்குழல், கோசத்தின் அடிப்பாகத்திற்கு சமீபத்திலுள்ள ஓர் குழல், the canal by which the urine is conducted from the bladder and discharged -Urethra

நீர் விடல், மூத்திரம் பெய்தல், making water, urining; 2. தண்ணீர் கொட்டல், pouring water; 3. இந்திரியம் விடல், discharging semen; 4. வியர்த்தல், perspiring

நீர்விட்டான், see தண்ணீர் விட்டான்

நீர் வியாதி, see நீரழிவு

நீர் விரியன், தண்ணீரில் வாழும் விரியன் பாம்பு, water viper -Ophidii viperiformis

நீர் விரை, தண்ணீர் கொண்ட பிடுக்கு, a circumscribed collection of fluid in the scrotum -Hydrocele

நீர் விளா, குட்டி விளா, small wood apple tree -feronia elephantum; 2. மாவிலங்கை, water wood apple -Capparis nurvala

நீர் விளாவல், தண்ணீர் விளாவல், adding or mixing cold water

நீர் விளைவமை, உப்பு, common salt

நீர் வீக்கம், நீரேற்றத்தினால் உடம்பில் பல பாகங்களில் காணும் வீக்கம், swelling in many parts of the body due to accumulation of fluids in the cavities or tissues of the body -Oedema

நீர் வீழ்ச்சி, நீர் அருவி, water falls

நீர் வெட்டிக்கொட்டை, see நீர் வெடிமுத்து,

நீர் வெடிமுத்து, see நீரடிமுத்து

நீர் வெள்ளரி, வெள்ளரிக்காய், water cucumber -common cucumber -cucumis sativus

நீர் வேட்கை, தண்ணீர்த் தாகம், thirst for water

நீர் வேட்டல், see நீர் வேட்கை

நீர் வேணிப்பாசி, கடற்பாசி, sea moss

நீர் வேம்பு, நீரில் முளைக்கும் வேம்பு. அதாவது நீர்க்கொடி, (வேப்பம்பாசி), ferns brake fern -Pteris genus; 2. பரனை அல்லது தாவுங்கொடி, common brake fern -Pteris aquilina; 3. கடற்பாசி, see mass; 4. கடற்காளான், sea fungus, sea mushroom

நீர் வைத்தியம், தண்ணீர் வைத்தியம் water cure -Hydropathy; 2. எல்லா நோய்களையும் தண்ணீர் மந்திரித்துக் கொடுத்துக் குணப்படுத்துமோர் வைத்திய முறை, a particular system of treatment which professes to cure all diseases by the use of water through magic spell.

நீர் வைத்தியன், தண்ணீரைக் கொண்டு வைத்தியம் செய்பவன், hydropathist; 2. மூத்திரத்தைப் பரிசோதித்து நோயைக் குணப்படுத்துபவன், one who divines diseases by examination of urine water doctor

நீல, நீல வர்ண, azure; 2. பிராணிகளின் முதற் பெயர், mammals first term as நீல மந்தி; 3. பூண்டின் முதற் பெயர், நீலக்கொடி வேலி, plants first term as நீலக்கொடி வேலி, 4. மொழியின் இறுதிப் பெயர், words suffix of second term as இந்திர நீலம், sapphire

நீலகண்ட செயநீர், சாகாவுப்பு, செயநீர், a pungent liquid extracted from the mystic salt obtained from the foetus by a secret process known only to siddhars. it is known by its peculiar virtue of averting death; 2. துருசைப் பிரதானமாகக் கொண்டு செய்யும் செயநீர், a pungent liquid prepared with copper acetate as chief ingrident

நீலகண்ட நிருவிஷம், ஓர் கொடிய விஷம், a virulent poison; 2. see நீருவிஷம்

நீலகண்ட மந்திரம், ஓர் சிவ மந்திரம். இதை இலட்சம் தரம் செபித்தவன் சித்தனெனக் கருதப்படும், a holy mantram relating to Siva. He who chants this mantran one lakh times is considered to be a siddhar.

நீல கண்டம், பெரிய முள்ளங்கி, country raddish of a bigger variety -Raphanus sativus; 2. கட்டுக்காடை, Indian jay -Coracias indica

நீலகண்ட வாலை, ஓர் வகை வாலு காயந்திரம், a variety of sand bath

நீல கண்டனிலை, வெற்றிலை, betel leaf -Piper betle

நீலகண்டன், துரிசு, blue vitriol-Copper acetate; 2. ஓர் பூரம், a kind of mineral compound; 3. முருங்கை, horse raddish

நீலகண்டி, நீலகண்டமுள்ள ஓர் வகைப் பாம்பு, a kind of snake with throat and breast shining azur blue -Cyancula indica.

நீலகத்திரி, நீல வர்ணமுள்ள ஓர் வழுதுணை, blue brinjal -Solanum melingena

நீலகந்தி, ஓர் வகைக் கெம்பு, a kind of ruby with blue lustre.

நீல கமலம், நீலச் சாயலுள்ள ஓர் வகை உயர்ந்த வைரம், a superior diamond with blue lustre; 2. நீரிலாற் பலம், blue indian water lily -Nymphae stillata

நீலகம், கருப்பு, impure or black salt; 2. blue vitriol copper acetate.

நீலகாசம், கண்ணின் கரு விழியைப் பற்றிய ஒரு கண்ணோய். இதனால் தலை நொந்து கண்மணியில் வலியுண்டாகி பாசி போல் நீர் படர்ந்து நாளுக்கு நாள் கண் புகைந்து நுட்பமாக நீர் வடிந்து பாவையானது கரு விளப்பூ நிறமடைந்து அதனால் ஒளி மயங்கி காணும், a disease relating to the black of the eye associated with the affection of the lens. It is marked by the following symptoms; head ache, pain in the pupil, accumulation of bad or morbid fluid in the cornea, progressive dullness of vision, scanty discharge ofwater, change of colour of the lens into azure blue; 2. கருவிழியின் நடுவிலுள்ள நிறத்தை நீல நிறமாக மாற்றி விழியைக் கல்லு போல் வெகு கடினமாக இருக்கி உள்ளுறுப்புகளை உருமாறச் செய்யுமோர் வகைக் கண்ணோய். இது மன வருத்தத்தினால் தலைவலி பித்த ரோகம் இவைகள் உண்டாகி

நாளுக்கு நாள் பார்வையை மிகுதியாகக் குறைக்கும். நாட்பட்ட வியாதியானால் தீர்வதரிது, disease in which the black of the eye is completely turned in which the black of the eye is completely turned into blue. It is marked by tense intraocular pressure resulting in hardness of the eye ball and at rophy of the optic disk -Glaucoma.

It is said to be due to mental worry giving rise to disease as head ache, bilious disorders etc and consequently attacks of dimness of vision which at any time may become rapid and end with total destruction of the eye.

நீலகாந்தி, ஓர் வகை நீல புட்பம், a kind of azure blue flower; 2. நீலம், sapphire; 3. நீலவொளி, blue brilliancy; 4. கழியைப் பற்றிய ஓர் வகைக் கண்ணோய், a kind of eye disease affecting the pupil

நீலகாம்போசி, நீர்ப்பூலா அல்லது பூலா, black honey shrub -Phyllanthus multiflorus

நீலகிரிகரணி, நீலக்காக்கணம், blue mussell shell creeper -Clitoria ternatea (typica)

நீலகிரி காஞ்சிரைப் புல்லுருவி, நீலகிரி மலையில் விளையும் எட்டி மரத்தின் புல்லுருவி, a parasite plan grown on the branches of Nilgiri nuxvomica tree -Nigiri nuxvomica loranthus

நீலகிரி காஞ்சொறி, நீலகிரியில் முளையும் காஞ்சொறி, இதன் கொழுந்து விஷத் தன்மையது, பூக்களைத் தலைவலிக்காக நெற்றியில் கட்டலாம். இப்பூவை மலையர்கள் தின்பார்கள். இதினின்று ஓர் தித்திப்பு தயாரிக்கலாம். இதன் கட்டை அடுப்பு விறகெரிக்க உதவும், Nilgiri nettle, itching plant- Girardina hetero phyllo. Young leaves poisonous, flowers medicanally applied to forehead for headache they are eaten by hill tribes, flowers make a sub acid jelly, used for fuel charcoal.

நீலகிரி சண்பகம், நீலகிரியில் விளையும் ஓர் வகை சண்பகம். இதன் பூ வெண்ணிறம், சில சமயம் மஞ்சள் சாயலுண்டு. மழை காலத்தில் பூக்கும். Nilgiri champak -Michalia nilgirica alias M.Pulneyansis. Flowers white sometimes with yellow tinge, flowering in rainy seasons. It is a Magnolia like tree.

நீலகிரி பூமரம், சிவந்த பூக்களை உடைய ஓர் குட்டையான மரம், dwarf rose bay large ixora -Rhododendron aboreum.

நீலகிரிபூதாப்பூ, நாய்ப்பாலை, Indian ipecacuanha -Asclipias asthmatica.

நீலக்கடம்பு, நீலவர்ணக்கடம்பு, blue cadamba -Stephegyne geneus.

நீலக்கடம்பை, நீலநெல்லி, lowly nelly, Madras phyllanthus -Phyllanthus Madras patensis. See நீலநெல்லி.

நீலக்கட்டி, நீல நிறக்கட்டி, blue abscess; blue boil.

நீலக்கத்திரி, நீலநிறக் கத்திரி, see நீலக்கத்திரி,.

நீலக்கபித்தம், மாங்காய், mango -Mangifera indica.

நீலக்கல், இராசவர்த்திக்கல், one of the two inferior varieties of gem with yellow specks Lapis Lazuli; 2. துரிசு, blue vitriol -Copper Acetate; 3. பெர்சியா தேசத்திய நீல வர்ணக்கல். இது தாம்பூரச் சத்து அமைந்த ஓர் மிருகத்தின் பல், blue gem from Persia. It is the tooth of an animal penetrated with blue calx of copper.

நீலக்கள்ளி, அறுகோணக்கள்ளி, six angled torch light -Cercus hexagonus.

நீலக்காக்கட்டான், நீலக்காக்கணம் கொடி, mussell-shell creeper with blue flower -Clitoria ternatea (typica).

நீலக்காக்கணம், see நீலக்காக்கட்டான்.

நீலக்கார நீர், சதை முளை பரு முதலியவைகளைக் கரைக்க வேண்டி இரணங்களுக்கு துணியில் நனைத்துப் போடும் ஓர் வகைத் தண்ணீர் மருந்து, a pungent liquid preparation for dissolving flesh, pimple, wart or any hard portion or over growth in a wound. A piece of cloth is soaked in the liquid and applied to the wound; 2. துரிசு நீர், a solution of blue vitriol also used for wounds.

நீலக்காரம், துரிசு, blue vitriol- Copper acetate; 2. see நீலக்கார

நீர்; 3. சங்கு, மயில் துத்தம், பால் துத்தம், வெள்ளைப் பாஷாணம், நீலம் அல்லது வெள்ளைத் துணி, சுட்ட சாம்பல் இவைகளை அரைத்து விரணங்களின் மேல் தூவ ஆறும். கார மருந்து, chunk (white) copper sulphate, zinc sulphate, white arsenic ash of blue or white piece of cloth all these are ground into fine powder and used as dusting powder to heal very bad ulcers.

நீலக்காலி, அவுரி, indigoplant -Indigofera tinctoria, yields blue dye; 2. ஓர் வகை நண்டு, a kind of crab so called from its blue legs.

நீலக்கிரந்தை, விஷ்ணு கரந்தை, Vishnu's basil -Sphaeranthus indicus.

நீலக்குக்கில், அரபிக்குக்கில், Arabian bolellium with a bluisntinge- Balsmodendum mukul. It is a resin from a small thorny tree. It is so called from being a product of Arabia.

நீலக்குமிழ், குமிழ்க்கொடி, small Cashmere tree -Gmelina asiatica alias Gordonia obtrosa.

நீலக்குருந்து, மூவிலைக்குருந்து, three leaved wild lime -Trichilia spinosa.

நீலக்கொடி, கருங்குவளை, blue indian water lily, blue nelumbo -Monochoria vaginalis.

நீலக்கொடி வேலி, நீலசித்திர மூலம், blue flowered lead wort-Plumbago capensis.

NOTE: This should not be confounded with கருங்கொடி வேலி, which is a quite a different variety. It is an unidentified plant supposed to be found grown in pothigal Hills near Tinnevelly. It is used for rejuvenation but in some books it is synomously used.

நீலக்கொண்டி, புல்லாமணக்கு, creeper ammanac, small castor plant -Sebastiana chamaelea.

நீலக்கொழுந்து, உலோகங்களை உருக்கும் போது நெருப்பில் காணப்படும் நீலவெளிச்சம், a blue glow found when melting metals.

நீலங்காலி, see நீலஞ்சோதி.

நீல சம்பங்கி, ஓர் வித நீல சம்பங்கி, blue champauk -Polianthus tuberosa.

நீலசம்பு, சம்பு நாவல், jaumoon tree -Eugenia jambolina.

நீலசம்பூடம், ஓர் வகை நாவல், a variety of jamoon -Eugenia genus.

நீலசாமந்தி, நீல நிற சாமந்திப்பூ -a blue variety of chrysanthemum.

நீலச்சிகை, நீலச்சிகைப்பூடு, blue crest plant -Plumpago zeylanica.

நீலச்சித்திர மூலம், see நீலக்கொடி வேலி.

நீலச்சீரா,.

நீலச்சுழல் வண்டு, தண்ணீரிற் காணும் நீக நிறமான சுழல் வண்டு, blue whirling beetle found on the surface of water.

நீலச்சூலி, மூவிலைக்குருந்து, see நீலக்குருந்து.

நீலஞ்சூத்திரன், புட்பராகம், a kind of white stone -Lupis lazuli.

நீலஞ்சோதி, திருகுகள்ளி வேர், the root of the twisting spurge tree -Euphorbia tortilis (root of); 2. சோதி விருட்சம், a tree luminous in the dark; 3. கற்பவகையிலொன்று; one of the classified rejuvenating drugs; 4. புல்லூரி, a parasitic plant -Loranthus genus.

நீலதரு, தெங்கு, cocoanut tree -Cocos nuciferra; 2. See நீலத்திருவாத்தி.

நீலதுத்தம், மயில் துத்தம், blue vitriol -Copper acetate.

நீலத்தாமரை, கருங்குவளை, blue nelumbo -Monochoria vaginalis.

நீலத்துருவாத்தி, பெரிய ஆத்தி, purple mountain ebony -Bauhimia purpurea.

நீலத்துத்தம், மயில் துத்தம், see நீலத்துத்தம்.

நீலத்தூரி, நீல ஊமத்தை, a variety of datura bearing blue flowers -Datura fastuosa.

NOTE: This should not be Confounded with கருமத்தை a quite distinct black variety used by siddhars for rejuvenating their bodies.

நீலநாரை, நீலநிற நாரை, blue stork, indian bustard -Eupodolis edwardsii.

நீலநிரியாசம், வேங்கைப்பிசின், gum of kino rosewood tree -Pterocarpus indicus.

நீலநிர்க்குண்டி, நீல நொச்சி, blue notchy -Justiica gendarussa.

நீலநிறக்கள்ளி, see நீலஞ்சோதி.

நீல நிறக்காலி, see நீலநிறக் கள்ளி.

நீலநிறக்கொடிவேலி, see நீலக் கொடிவேலி.

நீலநிறக்காளி, see நீலஞ்சோதி; 2. துரிசி, bluevitriol -Copper sulphate.

நீலநெல்லி, see நீல நெல்லி.

நீலநொச்சி, see நீலநிர்க்குண்டி.

நீலபங்கம், கருஞ்சேறு, black mire.

நீலபடிகம், நீலப்பளிங்கு, blue crystal stone.

நீலபதுமம், நீலத்தாமரை, see நீலோற்பலம்.

நீலபம், தேனீ, honey bee.

நீலபாஷாணம், ஓர் வகை வைப்புப் பாஷாணம், a kind of prepared arsenic. It is prepared as said below; மச்சமுனி (800) சொல்லியபடி கெவுரி, லிங்கம், வீரம், கெந்தி, சிலை, தாரம், சூதம், நாகம் இவைகளை குழைய பொடித்து, குப்பியி லிட்டு தாழியில் மணலிட்டு வைத்து, தீயை எரித்திடு 22 சாமம்பின் சரக்குக் கட்டி குளிர்ந்த பின் குப்பியை உடைத்து எடுத்துப் பார்க்க பழுத்து நீல வர்ணமான கட்டியாயிருக்கும்.

நீலபுட்பசேவிதம், கண்டங்கத்திரி, yellow berried night shade -Solanum jacquini.

நீல புட்பம், அவுரி, indigoplant -indigofera tinctoria; 2. எட்டி மரம், nuxvomica tree -Strychnos nuxvomica; 3. மயில் துத்தம், blue vitriol -copper acetate; 4. விஷ்ணு கரந்தை, see நீலபுட்பி; 5. நீலஞ்சோதி; which see; 6. நீலநிறப்பூ, any blue flower; 7. நொச்சி, five lobed notchy -Vitex negundo.

நீலபுட்பாசம், விஷ்ணு காந்தி, vishnu blue -Evolvulus alisinoides.

நீலபுட்பி, விஷ்ணு கரந்தை, vishnu's basil -Sphaeranthus indicus.

நீலபுட்பி, விஷ்ணு காந்தி, see நீலபுட்பாசம், நீலபுட்பிகை, see நீலபுட்பம்,.

நீலப்பசு, நீல நிறப்பசு, bluecow -Portux pictus.

நீலப்பத்திரம், see நீலபதுமம்.

நீலப்பிசின், கற்பூர மரம், camphor tree -bluegum -Eucalyptus genus.

நீலப்பிட்டம், நீலநிறச் சதையுள்ள பிட்டம், blue coloured buttocks -Blue bottom.

நீலப்பிரமி, பிரமிப்பூடு, indian brami -Gratiola monnierii.

நீலப்புறா, கோயிற் புறா, blue rock pigeon -Colomba intermedia.

நீலப்பூ, See நீலபுட்பம்.

நீல மணல், கருமணல், black sand.

நீலமணி, பனை மரம், palmyra tree -Borassces flabellifer; 2. ஓர் இரத்தினம், blue gem -Sapphire.

நீலமணிகாசம், See நீலகாசம்.

நீலமண்டலம், சிற்றீச்சை, small date fruit -Phoenix farinifera.

நீலமந்தி, கருங்குரங்கு, black monkey -Macacus silenus.

நீலமருந்து, அவுரி, indigo plant -indigofera tinctoria.

நீலமலிக்கம், வில்வம், bael fruit tree -Crataeva religiosa.

நீலமல்லிகை, See நீலமலிக்கம்; 2. நீல நிற மல்லிகை, blue jasmine -Agle marmelos.

நீலமாதகம், see நீல மார்க்கம்.

நீல மார்க்கம், கையாந்தகரை, eclipse plant -Eclypta prostrata.

நீலமாலிகம், விஷ்ணு கரந்தை, see நீல புட்பி.

நீலமுள்ளி, நீலாம்பரம், thorny sky blue, fragrant sky blue -Daedalacanthus nervosus.

நீலமேகம், மூத்திரமானது. இந்திர நீலத்தைக் கரைத்து விட்ட தண்ணீரைப் போல் இறங்கும் ஓர் மேக நோய். இது நுரையாயும் பளபளப்பாயு மிருக்கும். இது வெகு அபூர்வமாய்க் காணும், a venereal disease attended with bluish dark coloured urine which is brothy and transparent. It is a morbid urine found in certain rare cases -Melanuria.

நீலமேனியன், துருசு, blue vitriol -Copper acetate; 2. பாம்புகடி

முதலியவைகளால் விஷமேறி உடம்பெல்லாம் நீலம் பூத்தவன், a blue bodied person bitten by snakes or by other means of poisoniong. *3.* ஓர் *கடற் சுறா*, a kind of blue sea shark.

நீலம், see *கருங்குவளை; 2. அவுரி*, indigo plant -indigofera tinctoria; 3. நஞ்சு, poison; *4. அஞ்சன பாஷாணம்*, which see; *5. கறுப்பு*, blackness; *6.* நீல நிறம், purple or blue colour; *7. உபரச வகையிலொன்று*, one of the 120 kinds of natural substances classified according to Tamil medical science; *8.* இருட்டு, darkness; *9. காற்று*, wind; *10. நீலமணி*, sapphire; *11. பனை மரம்*, the palmyra tree.

நீலம் படர்தல், உடம்பு நீலம் பூத்தல். இது கடியினாலும் விஷங் கொள்வதாலும் உண்டாகும், body becoming blue due to poisoning or by poisonous bites blue discolouration of the skin -Cyanoderma; *2.* பிறந்த குழந்தைகளுக்கு உடல் நீலம் பூர்த்தல் உண்டு, See கருங்கிரந்தி; *3.* குழந்தை பிறந்தவுடன் இருதயத்திலி ருக்கும் fosaovalis என்னும் துவாரம் தூர்ந்து பூரணமாக அடைப்படட வேண்டும். அப்படி அடைபடாது கொஞ்சம் திறந்திருப்பினும் அசுத்தமான இரத்தம் சுத்த இரத்தத்துடன் கலந்து உடம்பில் பரவும். இதனால் உடல் நீல நிறமாகும். due to the improper closer of fosaovalis, venous blood spreads in the body and causes the blue discoloraion.

நீலம் பாய்தல், See *நீலம் படர்தல்,.*

நீலம்பாரித்தல், See *நீலம் படர்தல்; 2.* இருதய அமைப்புக் கெடுதியால் இரத்தக் கேடடைந்து உடம்பு அதிக நீல நிறமாதல், blueness of the skin, often due to cardiac malformation causing insufficient oxygenation of the blood -Cyanosis; *2.* சீலைப்பேன் கடி முதலிய நோயினால் உடம்பில் ஏற்படும் நீல நிறத் தழும்புகள், blue patches on the body seen in certain diseases as pediculosis -Maculae caeruleac.

நீலம்பாலை, *பாலை*, blue dying rose bay -Wrightia tincloria.

நீலம்பிரமி, see *நீலமுள்ளி.*

நீலம்பூரித்தல், See *நீலம்பாரித்தல்,.*

நீலம்பூர்த்தல், கண்கள் நீல நிறமாக மாறுதல். இது ஓர் மரணக் குறி, bluish discolouration of the eyes which is considered as a symptom of death; *2.* இரத்தக் கேட்டினால் கண் நீல நிறமாதல், bluish discolouration of the eyes in Cyanosis.

நீலரெங்கு, *நீல வர்ணம்*, blue colour; *2. துரிசு*, blue vitriol; *3. நீலிச்சாயம்*, indigo dye.

நீலரெத்தினமணி, see *நீல ரெத்தினம்.*

நீலரெத்தினம், *நீலமணி*, sapphire.

நீலரோகம், இரத்த வோட்டக் குறைவினாலும் இரத்தம் சுத்தி படாத காரணத்தை முன்னிட்டும் உடம்பை நீல நிறமாகச் செய்யும் ஓர் நோய், a disease in which the body is rendered blue or has a blue tint arising either from imperfect circulation of the blood or due to in sufficient oxygenation of the blood -Cyanosis, blue disease.

நீலவச்சிரம், வச்சிரக்கல். நீல சொலிப்புள்ளது, a diamond with a blue tinge.

நீலவந்தி, நீல நிற அந்தி மல்லிகை, evening jasmine of a blue colour.

நீல வர்ணத் தைலம், வராகத்தைக் கீறி அதனுள் தாளகம், வீரம், கெந்தி முதலிய மருந்துகளைப் புகட்டி பூமியில் புதைத்து, புழுக்க வைத்துப் பிறகு அப்புழுக்களினின்று வடிக்கும் ஓர் வகைத் தைலம். இது வாதத்திற்கு உபயோகப்படும், a medicated oil prepared as follows for use in Alchomy -An incision is made in the body of a pig and orpiment corrosive sublimate and sulphur are inserted into its body and then buried deep under the earth. Time is allowed until the body is decomposed and worms are formed and when these worms are sufficiently developed they are unearthed and taken out. Oil is extracted from these worms and it is said to be of a blue colour.

நீலவர்ண மேனி, நெட்டி தளம், an unknown plant, See Bogar's vocabulary *(போகர் நிகண்டு).*

நீலவல்லி, நீல அல்லி, *(நீலம்+அல்லி)* நீலோற்பலம்,

blue Indian water lily -Nymphae stellata.

நீலவல்லிக்கிழங்கு, நீல அல்லிக்கிழங்கு, bulb of Nymphae stellata.

நீல வழுதலை, நீல நிறக் கத்தரிக்காய், blue coloured brinjal, See நீலக்கத்திரி.

நீல விஷம், பாம்பு விஷம், snake poison.

நீலவேலி, See நீலக்கொடி வேலி.

நீலன், கருங்குரங்கு, blue black monkey -Macacus genus; 2. துருசு, blue vitriol; 2. கருநெல்லி, blue black gooseberry.

நீலா, கண்டத்திற்கு இரு பக்கத்திலுமுள்ள காரி ரத்தக் குழல்கள், large veins one on either side of the neck by which blood is carried from the head to the heart -Jugular vein (external).

நீலா, அவுரி, indigo plant -indigofera tinctoria.

நீலாங்கம், மலைத்தேன், mountain honey.

நீலாங்கு, நீல நிறப்புழு, blue earth worm.

நீலாசயம், கோசத்திராவகம், secreation of an organ.

நீலாஞ்சனக்கல், *100* வருஷத்திய அண்டங்காக்கைத் தலையில் இருக்கும் ஓர் வகைக் கல். இக்கல்லை உள்ளங் கையில் வைத்துப் பார்க்க பூமியில் இருக்கும் நிதிகள் தோன்றும், a stone of or calculus in the head of a currion crow living over 100 years. when the stone is kept in the palm of the hand and gazed at carefully, hidden treasures are said to appear distinctly.

2. டில்லியில் பூமிக்குள் விளையும் சுருமாக்கல்லின் அடி மட்டத்தில் பாறையாக வளர்ந்திருக்கும் ஓர் வகைக்கல், below the earth in Delhi will be found collyrium in layers under which on the surface of separation occurs in rhomboid prisms sulphuret of antimony. Antimonium sulphuretum.

NOTE: 1. This generally found in the regions along the indus in

India. Greater part of native antimony met with in bazaars is now brought from Siam. It was also exported from Egypt. It is sold in the bazaars of india under the Hindustani names of Surma (சுருமா) Unjan (அஞ்சன்) kull (கல்) sulphuret of lead is often included under the name of சுருமா, but it was found to be sulphate of Strontia. Another lighter and softer variety was found to be fiberous gypsem. See அஞ்சனக்கல்.

NOTE: 2. Antimony is nearly always accompanied by some arsenic. It occurs combined with oxygen as 1. antmony bloom Sb_2-O_3); 2. anitmony ochore Sb_2O_4; 3. combined with sulphur as grey antimony sb_{2S3}; 4. red antimony Sb_2S_2O. Some of the early writers confused bismuth with antimony. It is said that one man's life is too short to be perfectly acquanited with all the mysteries of anitimony.

நீலாஞ்சனக்கல், இது கடைகளில் சுருமாக்கல் என்று வழங்கும். இது வியதா பேதகாரி, சுவேதகாரி, வமனகாரி அதாவது இது நோயை மெதுவாக குணமாக்கி ஆரோக்கியத்தை உண்டாக்குந் தன்மையது. அன்றியும் வியர்வையையும், வாந்தியையும் உண்டாக்கும். இதை நமது நாட்டு வைத்தியர்களும் யுனானி வைத்தியர்களும் பலவிதமாக மருந்தில் உபயோகிப்பார்கள். இது நாட்பட்ட சரும நோய், கோள வீக்கம், மேகக்கிரந்தி, தீரா வாதப் பிடிப்பு முதலிய நோய்களுக்கு உபயோகமாகும். இது கால் நடைப் பிராணிகள் வைத்தியத்திலும் உபயோக மாகும். இதை மகமதியர்கள் சாய மேற்றவும், கண்ணிற்கு குளிர்ச்சியாயிருக்கு வேண்டி மைத்தீட்டவும் பெண் பிள்ளைகள் புருவத்திலும் கண் இரப்பையிலும் மை தீட்டு வதற்கும் உபயோகிப்பார்கள், Sulphurated antimony -Antimonium sulphuratum. It is also known as Soorma cull in bazaars. It is aterative, diaphoretic and emetic. Native physicians as wells as Unani doctors are using it in their medicine in several ways. In chronic skin diseases, glandular swellings, secondary sphilis and chronic rheumatism it

has been employed with great advantage. It is also used in veterinary practise along with other medicines for cutaneious diseases. It is employed by Muslims for dying and cooling the eyes and also by the females for painting the eye brows and eye lashes.

NOTE: Antimony exists principally in combination with sulphur or oxygen. The metal is bluish white lustrous and brittle. It ismuch used in making alloys. Black antimony (*கருநிமிளை*) -Antimonium nigrum is a native sulphide of antimony. (Sb S_3 or Sb_2 S_3) is purified from Siliccous matter by fusion and afterwards reduced to fine powder when it will be found to be greyish black.

நீலாஞ்சனக்கல், கருப்புக்கல், black antimony -Antimonium nigrum; 2. துரிசு, blue vitriol.

நீலாஞ்சனச்சத்து, நீலாஞ்சனக்கல் சுத்தி செய்த உலோகம், purified antimony metal -Antimonium.

நீலாஞ்சனத்தூள், நீலாஞ்சன பற்பம், oxide of antimony -Antimonium oxidum; 2. பொடி செய்த நீலாஞ்சனக்கல், powder of antimony -Antimonium pulvis; 3. கருப்பு நீலாஞ்சனப்பொடி, greyish black crystalline powder known as black antimony -Antimonium nigrum.

NOTE: Black antimony (of the Sindhu Mountain) removes several diseases of the eye such as irritation, burning, hyper secretion of the mucous painful lachrymation and renders the eyes beautiful and enables them to stand the flare and the wind.

நீலாஞ்சனம், காரீயம், hard lead pewter; 2. அஞ்சனக்கல், sulphate of antimony; 3. கருநிமிளை, Stibium.

நீலாதாரம், ஆகாசக்கொடி. சீதை நூல். இது ஓர் வேரில்லாப் பூஞ்செடி. புல்லுருவியைப் போன்றது. பூக்கள் கொத்தாயிருக்கும். சிறியன, வெள்ளை நிறம், இதன் விதைகள் வாயுவைப் போக்கி சீரண சக்தியைக் கொடுக்கும். நோயைத் தணிக்கும். இதன் ஊறற் கஷாயம் புண்ணின் அசடைப் போக்கும். இதன் காய்ந்த பூடு சாயம் நனைக்க

உபயோகப்படும். இதன் வேரைக் கண்டால் அஷ்ட ஐஸ்வரியமும் உண்டாவதுடன் தன்னை ஒருவரும் காணாச் சக்தி இதற்குண்டு, sky creeper sitas thread -Cuscuta reflexa alias C.verucosa. It is a parasitic herb; flowers racemose each flower; pedicled flowers small, white, seeds carminative and ananodyne cold infusion is given as a depurative. The dried plant is used as a dye. There is proverb that he who finds the root of this plant will become possessed with bound less riches and the power of invisibility.

நீலாட்சம், அன்னப்பறவை, swan.

நீலாம்பரம், மஞ்சட் செம்முள்ளி. இதன் பூ வெளிர் நீலமாயிருக்கும், முட்களுள்ளது, blue nail dye -Barleria strigosa; 2. See நீலாம்பரி; 3. வெள்ளை நீலாம்பரம், white nail dye-Barleria iristata.

நீலாம்பரி, கருப்பு நீலாம்பரி, black nail dye -Ecbolium linneanum alias Justica ecbolium.

நீலாம்புசம், கருங்குவளை, black waterlily, blue lotus -Monochoria vaginalis.

நீலாம்புரி, காசாங்கம். அதாவது காசாவின் சமூலம், the entire iron wood tree -Memycylon edule; 2. நிலவு, moon; 3. நீலாம்பரி, which see.

நீலாம்புரியாள், அலரி, oleander -Nerium odorum.

நீலாரம், நீவாரம், which see.

நீலி, அவுரிச் செடி, which see; 2. நீலநொச்சி, blue nochy -vitex negundo; 3. துரிசு, blue vitriol; 4. நீலப்பூ மருதோன்றி, fragrant nail dye with blue flowers -Lawsonia genus; Lrwsonia spinosa; 5. நீல பாஷாணம், which see; 6. கருங்குட்டம், black leprosy; 7. See நீலாம்பரம்; 8. நாகத்தின் கீழ் வரிசைப் பல், the lower set of teeth in cobra.

நீலிகம், தண்ணீருக்கேற்படும் சுரம், fever occuring to water.

நீலிகற்பம், கிழ வயதை மாற்றி பால்ய வயது கொள்ளும்படிக்கு நீண்ட ஆயுள் வரை இருக்கவும் கொள்ளும் கற்ப மூலிகை. இதைச் சூரணம் செய்து மற்ற செந்தூர வகைகளோடு சேர்த்து சாப்பிட வேண்டும், a rejuvenating drug taken for longevity; The indigo plant which

is dried in shade and powdered is mixed with red oxide of iron or other minerals and taken internally as prescribed siddhar's book.

நீலிகா ரோகம், வாத பித்தாதிக் கத்தினால் முகம் சிறுத்து கறுத்து வட்டமான மச்சங்களை உண்டாக்கும் ஓர் சரும நோய், a cutaneous affection marked by diminution and darkening of face, and by round patches all over the face. It is said to be due to excess of the two humours wind and bile in the system; 2. கண்ணின் பார்வையைக் கெடுத்துக் குருடாக்கும் ஓர் கண்ணோய், an eye disease in which the lens is affected thereby causing blindness. See இலிங்கநாசம்.

நீலிகை, அவுரி, indigo plant-Indigofera tinctoria.

நீலிக்கற்கோதனம், காமாலைக்காக கொடுக்கும் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic preparation given for jaundice.

நீலிசம், பசலை, spinach -Portulaca qudrifida.

நீலிச்சொரி, சொரி வழுக்கை, an unknown plant.

நீலிபட்சி தோஷம், குழந்தை களுக்குண்டாகும் ஓர் வகை தோஷ நோய். இதனால் சீறியழுதல், கண்ணோக்காடு, விக்கல், வாய் நீரூறல் முதலிய குணங்களைக் காட்டும். இது கழிப்பினால் நீங்கும், morbid affection in children marked by the following symptoms screaming pain in the eyes, hiccups, salivation etc. It is said to be cured by process of expulsion ie. the act of propitiating on appearing the evil spirits of deities by offerings.

நீலி மருந்து, அவுரிச்சாயம், indigo dye; Indigofera.

நீலியட்சுரம், குழந்தைகளுக்கு நாக்கு வெந்து மாப்போலாகி குளிர் சுரத்துடன் தலைவலி காணும் ஓர் நோய், a disease in children sometimes called white mouth, marked by eruption in the tongue with white coating, feverishness, head ache etc -Apthae.

நீலியம், மருதோன்றி, fragrant nail dye; mindic -Lawsonia alba.

நீலியாவரை, சூரத்து நிலாவரை, surat senna -Cassia acutifolia.

நீலிவேர், சாய வேர், root of indigo plant -indigofera tinctoria.

நீலினி, see அவுரி, நீலி; 2. See நிலவாகை.

நீலோற்பலம், கருங்குவளை, பெரும்பாடு, கப நோய், விஷ பாகம் போம், பிசரவித்த பெண்களைத் தேற்றும், blue indian water lily -Nymphae stillata. It cures menorragia; disease due to phlegm humours and petty poisons. It is tonic to delivered women; 2. கருநெய்தற்பூ, black water lily -Pontederia.

நீலோற்பலமேனி, பத்மினியில் மத்திம சாதிப் பெண், see செண்பக மேனி.

நீல, நீலம், indigo, கருப்பு அல்லிக்கிழங்கு, black bulbous root of water lily; 2. காற்று wind; 3. வாதம், one of the three humours in the human body ie. wind.

நீவரசிகம், பிச்சிப்பூடு, spanish jasmin Jasminum grandiflorum.

நீவரம், நீர், water Acqua.

நீவல், See நீவுதல்.

நீவாரம், செந்தினை, red millet; 2. குள நெல், paddy growing wild with cultivation.

நீவார், see நீவாரம்.

நீவுதல், உருவி விடுதல், the process of with the fingers or the hand with pressure down with the limb or the affected part to allay pain or to remove the sprain, the process of kneading; 2. தடவுதல், handling softly.

நீழல், நிழல், shade; 2. நோய், disease.

நீழசத்து, கோமுத்திர சிலாசத்து, a dark sticky unctuous substance exuding from rocks in hot water -Bitumen.

நீழி, மர மஞ்சள், tree turmeric -Coscinium fenestratum.

நீளல், நீளுதல், becoming long elongating; 2. ஓடல், running.

நீளச்சம், கொன்ரை, cassia -Cassia fistula.

நீளப்பூச்சி, நீண்ட நாக்குப்பூச்சி, an intestinal worm -Tape worm.

நீளவெலும்பு, நீண்ட எலும்பு, as longum.

நீளிப்பு, நீண்ட ஆயுள், long life, longevity.

நீள், உயர்ச்சி, talness; 2. ஒளி, lustre, brightness.

நீள் குடரி, நீண்ட குடல், சிறுகுடல், small intestines.

நீள் சடையோன், see நீளச்சம்.

நீள் வயிரம், குருந்தக்கல், corundum; adamantine spar.

நீறணிந்தோன், சிவதுளசி, Shiva's basil -Ocimum.

நீறப்பண்ணல், சாம்பலாய்ச் செய்தல், reducing to ashes; 2. பற்பமாக்கல், calcining to a white a powder.

நீறாகக்கருக்கல், சாம்பலாய்ப் போகும்படி எரித்தல், reducing to ashes by scorching through heat.

நீறிப்போதல், சாம்பலாய்ப் போதல், being reduced to ashes; 2. பற்பமாதல், becoming an oxide by calcination.

நீறுதல், சாம்பலாதல், see நீறிபோதல்.

நீறு, சுண்ணம், calx; 2. சாம்பல், ash; 3. விபூதி, holy ash; 4. பூனீறு, saline effiorescence; 5. பற்பம், oxide.

நீறுண்டி, தண்ணீர் விட்டான், water root -Asparagus racemosus; 2. நன்னாரி வேர், root of sarasparilla.

நீறுபூத்தல், சாம்பற் பொடித்தல், effiorescence becoming covered with a whitish crust.

நீற்ற சுண்ணம், தாளித்த சுண்ணம், slaked lime.

நீற்றல், எரியிட்டுச் சாம்பலாய் போகும்படி செய்தல், see நீறப்பண்ணல்.

நீற்றாத, சுடாத, unslaked.

நீற்றினத் திராவகம், சாம்பலாய்ப் போகச் செய்யும் திராவகம், acid capable of reducing to ashes.

நீற்றினத்துக்காதி, பற்பமாகச் செய்வதற்குக் காரணமான வஸ்து. அதாவது பூநீறு, சவர்க்காரம், புனுகு, வீரம், பச்சைக் கற்பூரம், குருவண்டு, சூடன் இதனால் சுண்ணமாகும். கடுஞ் சுண்ணமும் சூட்சமா யாகும், that which is capable

of calcining into oxide eg. salt in the soil of fuller's earth, per chloride of mercury, civet crude camphor etc.

நீற்றினம், பற்பமாகச் செய்யும் சரக்கு, that which has the virtue of cinverting any given substance into an oxide.

நீற்றுண்டவூமை, முட்டை, egg.

நீற்றுண்டை, see நீற்றுண்ட வூமை.

நீற்றுதல், see நீறப்பண்ணல்,.

நீற்றுப்பூசினி, கல்யாண பூசினி, ash pumpkin or ash gourd -Benincasa cerifera.

நீற்றுப்பூசினிக் குழம்பு, கல்யாணப் பூசினி நெய், a medicinal ghee, prepared with ash pumpkin as chief ingrediant.

நீற்று மருந்து, புடமிட்ட மருந்து, calcined medicine.

நீற்று விடல், see நீறப்பண்ணல், 2. தண்ணீரைப் போல் செய்தல், making or converting into a fluid or liquid.

நீனிறவியலகம், கடல், sea.

நு

நு, தியானம், contemplation; 2. நேரம், time.

நுகம், வலிமை, strength, force, power.

நுகர், see நுகர்தல்.

நுகர்ச்சி, உண்ணுகை, act of eating; 2. அனுபோகம், enjoyment, experience of pleasure; 3. பிரார்த்தம், pain from former deeds.

நுகர்தல், தின்னல், உண்டல், eating; 2. விழுங்குதல், swallowing; 3. அனுபவித்தல், experiencing; 4. வேதனை, suffering.

நுகர்த்தல், தின்னச் செய்தல், causing one to eat; 2. தின்னுதல், eating; 3. அனுபவித்தல், see நுகர்தல்.

நுகும்பு, பனை, வாழை முதலியவைகளின் மடல் விரியாத குருத்து, the unfurled tender leaves or shoots of palms plantains etc.; 2. பனையோலை, palm leaf; 3. நொங்கு, kernel of the young palmyra fruit.

நுகை, சிவதை வேர், turbith root -Ipomaea turbithum; 2. நுகைதல், அதாவது இளகுதல், becoming soft; 3. தளர்தல், getting loose.

நுகைதல், see நுகை.

நுகைத்தல், இளகச் செய்தல், making loose; 2. மலம் இளகச் செய்தல், loosening or opening the intestines as from constipation.

நுகைப்பு, நுகைத்தல், the act of loosening.

நுகைவு, இளக்கம், quality of being laxative or relaxing- Laxativeness; 2. மனக்கனிவு, softness or tenderness of mind; 3. இளக்கமானது that which is sax; 4. மிருது, softness.

நுக்கிணா, ஊக்குணா,.

நுக்கு, எட்டி மரம், nuxvomica tree -Strychnos nuxvomica; 2. பொடியாக்கு, reducing to powder; 3. நுங்கு, kernel of young palmyra fruit; 4. விழுங்கு, to swallow.

நுக்குடம், எட்டி see நுக்கு.

நுக்குகி, தெல்லுக்கொடி, creeping mimosa -Mimosa entada.

நுக்குணா, see நுக்கிணா.

நுக்குதல், பொடியாக்குதல், to reduce to powder to pulverise.

நுங்கல், விழுங்குதல், swallowing; 2. பருகல், eating, taking food; 3. குடித்தல், drinking.

நுங்கி, அன்னவாகி, the passage through which food and drink enter the stomach; 2. இரைக்குழல், oesophagus; 3. கண்ட நாளம், the passage in the neck of an animal through which food and drink are taken to the stomach -Gullet.

நுங்கு, பனையிளங்காய், pulpy edible kernel of a young palmyra fruit; 2. நுங்குதல், swalloing.

நுங்குகை, விழுங்குகை, the act of swallowing -Deglutition.

நுங்குதல், see நுங்கல்.

நுங்கு நீர், பனையிளங்காயின் தண்ணீர். இது தாகத்தையடக்கி வெப்பத்தைத் தணிக்கும் வேர்க்குருவில் உடம்பில் தடவ குணமாகும். water of young palmyra fruit. Taken internally it quenches thirst and cools the system externally applied to the skin removes prickly heat.

நுங்குப் பாக்கு, பச்சையிளம் பாக்கு, raw tender areca nut.

நுங்குப் பற்று, கட்டி முட்டி, irregular masses formed while boiling a solution due to imperfect process (lack of proper stirring) in preparation (in chemistry) uncry stallined salts or amorphous minerals due to defective preparation; 2. கட்டியும் குழம்புமாகக் கலந்த கலப்பு, a colloid solution in which the particles or solid suspended as it were in the fluid part of the solution -Suspension colloid.

நுசுப்பு, இடை, waist, middle part of the body; 2. பெண்ணிடை, woman' waist.

நுசை, see நுகை.

நுச்சிலி, ஏழிலைப்பாலை, seven leaved milky plant -Alstonia scholaris alias A.oleandrae folia.

நுஞ்சு, அதி மதுரம், honey creeper -Glycirrhhiza glabra.

நுடக்கதாரி, நோயாளி, sickly person, patient.

நுடக்கம், தள்ளாட்டம், a sudden swaying or reeling of the body, as if the person were about to fall -Stagger; 2. முடக்கம், condition of being bent as limbs; 3. புழுக்கைப்பட்டை அல்லது கனகிப்பூடு, round leaved tadda -Grewia orbiculata.

நுடக்கல், தள்ளாடல், threatening to fall tottering.

நுடக்கு, தள்ளாட்டம், see நுடக்கம்; 2. முடக்கு, bend as limbs.

நுடக்குதல், கழுவுதல், washing; 2. துவட்டுதல், removing moisture by rubbing or wiping.

நுடங்கல், துவளல், vascillating, drooping; 2. கை, கால் மடக்கிப் படுத்தல் அல்லது கிடத்தல், lying or laying down by folding the limbs; 3. முடங்கல், bending of the body; 4. அசைதல், moving.

நுடங்குதல், see நுடங்கல்.

நுட்டம், எருக்கு, sun plant -Calotropis gigantea.

நுட்ப பாகம், சூக்கும பாகம், finer parts; 2. எளிதில் மாற்றமடையக் கூடிய பாகம், the part of a substance which changes by yielding to slightest pressure, the fluid part.

நுட்பம், நுண்மை, acuteness, subtility; 2. அறிவு நுட்பம், keeness of intellect; 3.கால நுட்பம், minute portion of time.

நுணகம், பொன், gold.

நுணக்கம், வாட்டம், withering state, a state in which native freshness and bloom is lost.

நுணங்கல், துவளல், being in a flexible condition; 2. நுட்பமாதல், being in an acute stage, becoming subtle; 3. முடங்கல், bending.

நுணங்கு,தேமல், a skin disease attended with the formation of smooth light coloured yellowish patches- Vitiligo. In women this is considered as adding beauty to their features; 2. நுண்மை, minuteness, subtility, fineness.

நுணங்குதல், see நுணங்கல்; 2. வாடல்,drooping withering; 3. மெலிதாதல், becoming thin and soft.

நுணலி, நுணக்கு, small dyeing mulbery -Morinda umbellata.

நுணலை, ஓர் மீன், a kind of fish, herring; 2. தவளை, frog, toad; 3. ஒர் கடல் மீன், a sea fish known as sardine; 4.மணற் காடை, a kind of frog found on the sea shores with golden spots, mud frog -Rhacophorus plavrostictus.

நுணல், தவளை பேதம், a species of frog, frog fish; 2. ஓர் கடல் மீன், sardine.

நுணவம், நுணா, which see.

நுணவு, தணக்கு, see நுணலி, 2. அணி நுணா, west Indian custard apple -Anona reticulata; 3.சோதிப்புல், a luminess grass -Burning bush.

நுணவை, see நுணவு.

நுணா, இது ஓர் சிறிய மரம். இதுவே நுணா மரம். இதற்கு மஞ்சட் பாவட்டை என்றும் பெயர். இலைகள் நேர் நேராகவும் பளபளப்பாகவும் இரு பக்கமும் மாறி மாறியுமிருக்கும். கொம்புகள் நாற் கோணம், பூக்கள் வெள்ளை, வாசனையா யிருக்கும், காய்கள் பளபளப் பும், அண்ட வடிவாயி மிருக்கும், வருஷ முழுவதும் பூக்கும். இதன் காய்க்கு வீக்கம், கட்டிகளைக் கரைக்கவும் சுரோணிதத்தை வெளிப் படுத்துங் குணமும் உண்டு.

இதன் இலைச் சாற்றுடன் எண்ணெய் சேர்த்துச் சூலைப் பிடிப்புக்குத் தடவ வுதவும். காயைக் கருக்கிச் சாம்பலாக்கி, சீதபேதி, வாந்திபேதிக்குக் கொடுக்கலாம். பச்சை இலைகளை இரணம், சிலந்தி, இவைகளுக்கு வைத்துக் கட்ட ஆறிப் புதிய தோலுண்டாகும். இதன் இலையிலிருந்து பௌதீக முறையாய் எடுக்கும் உப்பு ஊழற் புண், குழிப்புண் இவைகளை கழுவவுதவும், வேரினின்று சிவப்புச் சாயம் எடுப்பார்கள். இதன் மரம் மிதியடிக்கட்டை செய்ய உபயோகப்படும். காயைப் பஞ்சக் காலத்தில் தின்பதுண்டு, Noonah tree -Morinda Citrifolia. It is a small tree called also yellow pavetta and turmeric timber tree. Leaves opposite oval alternated at both ends, shining, ovate, shining fruit, flowers white, fragrant, flowering nearly all the year. The fruit of this species is used medicinally as a deobstruent and emmenagogue. The expressed juice of the leaves mixed with oil is applied externally in gout. The ashes of the fruit scorched and given in dysentery and cholera. The leaves applied fresh to wounds and ulcers are said to be very efficacious in promoting their cure by speedily generating a new growth of tissues. by some chemical process a kind of salt is extracted from the leaves which proves very useful in cleansing bad and inveterate ulcers. A scarlet dye is procured from the root. The wood is used by natives in their wooden slippers. Green fruits are eaten by natives in their curries and sometimes used as a famine food.

NOTE: 1. The word நுணா is a general term and it will apply to the various species of the Indian Mulberry plant. In this species the number of stamens varies in the same head of flowers but there are usually only four.

NOTE: 2. A crystalline principle Morindinis isolated from the root bark. The leaves are administered internally as tonic and febrifuge. A decoction of charred leaves and mustared is a useful remedy for infantile diarrhoea unripe berries charred, mixed with salt are applied

successfully to spongy gums; root is cathartic.

நுணா, மஞ்சணாற்றி. இதற்கு மஞ்ச நாறி, நுணா மரம், தணக்கு மரம் எனப்பல பெயர்களுண்டு. இது ஓர் கொடி. அடிபாகம் வழவழப் பாயிருக்கும். பூந்தாது சிறியது. இலைகள் கூர்மை, சிற்றிலை சவ்வைப் போலுண்டு. காம்பு இலையின் பாதி நீளம். பூக்கள் வெண்மை. இதில் மல்லிகைப் போல் நான்கு இதழ்களுண்டு. சிறிது வாசனையாயுமிருக்கும். பூவிதழ் சிறிது நீளம். இது சாதாரணமாகத் தோட்டங் களிலும் கோவில், வீடுகளிலும் பயிராக்கப்படும். அன்றியும், புதர், வேலி, சப்பாத்தி முதலிய விடங்களிலும் காணலாம். இது மருந்துக்கு உபயோகப்படும்.

இவ்விலையுடன் பொடு தலை உத்தாமணியும் சேர்த்துக் கஷாயமிட்டுக் கொடுக்க குழந்தைகள் மாந்த பேதி போம். பட்டையின் கஷாயம் கபசுரம், கரப்பான், புண், கிரந்தி இவைகளுக்குக் கொடுக்கலாம். இலையைச் சூரணித்துச் சாப்பிட மந்தம் மேகம் போம். அன்றியும் இலையை அரைத்து புண், சிரங்கு, ரணம் இவைகளுக்கு வைத்துக் கட்ட ஆறும். இலைச் சாற்றை இடுப்பு வலிக்குப் பூச குணமாகும். இக்காய்களைக் கருக்கி உப்பு சேர்த்துப் பல் விளக்க பல் ரோகங்கள் போம். இலைகளுடன் சில வாசனைச் சரக்குகளையும் சேர்த்து அதிசாரப் பேதிக்குக் கொடுப்பதுண்டு. காய் சட்டினி செய்யலாம். இதன் வேரினின்று மஞ்சள் சிவப்பு சாயம் எடுக்கலாம். small indian dyeing mulberry -Moinda umbellata. Several are the names for this species as turmeric timber, Noona Tanakku small ach tree etc. It is a climbing shrub, glabrous, corolla short leaves pointed, stipules membraneous; peduncles about half the length of the leaves; flowers white, petals four like jasmine, fragrant, petals long. It is generally found grown in gardens, temples and houses and also some times founds in bushes, hedges and amongest prickly pear plant

Native practitioners find its usefulness in several ways. Leaves mixed with those of creeping vervain *(பொடுதலை)* and hedge cotton plant *(உத்தாமணி)* are given as decoction for children's dyspeptic diarrhoea and indigestion; decoction of the bark is used with much advantage in cases of phlegmatic fever, carpaung, sores, syphilitic ulcers etc. powder of dried leaves is a good remedy in venereal complaints. Green leaves are ground and used as a poultice or applied externally for itch, sores and wounds; juice of the leaves is also found useful in lumbago and hip pains. Fruits are scortched into charcoal and used in tooth complaints as tooth powder. leaves are used in conjuction with certain aromatics by Vaidyans in cases of diarrhoea. Fruits when green are used as chutney.

The varieties of Morinda *(நுணா)* are given below:-.

1. பெரு நுணா, Noona tree broad leaved morinda -Morind citrifolia (typica).
2. வெள்ளை நுணா, bracteata dyeing mulberry -Morinda citrifolia (bracteata).
3. சேயல் நுணா, dyeing aul -Morinda citrifolia (elliptica) root bark yields scarlet dye.
4. மஞ்சள் நுணா, panickled mulberry -Morinda tinctoria.
5. சிறு நுணா, small dyeing mulberry- Morinda umbellata.
6. சொணை நுணா, red screw pine tree -Morinda tomentosa root bark yields a dye. The triplicane burial ground is full of this tree.
7. அனி நுணா. இது வே இராம சீத்தா, Rama's fruit -Anona reticulata.
8. பர்மா நுணா, Burmah noon -Morinda braceata.
9. வெண்ணுணா, morinda citrifolia (bracteata).

நுணுக்காய்கிரந்தி, உடம்பில் வெப்பத்தைத் தந்து, தடிப்புகளை உண்டாக்கி, சீதக்கட்டைத் தாக்கி, பிறகு உடம்பு வீக்கத்தால் பருத்து மினுமினுத்து நுணுக்காயைப் போல் அநேக கட்டிகளை எழுப்பும் ஓர் வகை கிரந்தி நோய். இதற்கு வடமொழியில் பங்கிவிசர்ப்பி என்று பெயர். a

kind of syphilitic tumour due to venereal heat. It is characterised by raised patches on the body, affection of mucous glands, swelling with shining of the skin gummy tumours of the size of morinda fruits on the surface of the body.

நுணாப்பரு, see நுணாக்காய்க்கிரந்தி,

நுணாப்பூக்கிரந்தி, உடம்பில் அநேக விடங்களில் நுணாப் பூவைப் போல் வெண் கிரந்திகளை உண்டாக்குமோர் மேக நோய், a syphilitic affection marked by multiple abscesses in various parts of the body of the size of morinda fruit.

நுணாமஞ்சள், ஆத்தி small flowered mountain ebony -Bauhinia racemosa.

நுணாவுதல், நாவால் தடவியுணர்த்தல், feeling the moving the tongue about.

நுணாவெண்ணெய், நுணா இலையின் சாற்றை நல்லெண்ணெயில் மற்ற கடைச்சரக்குகளோடு காய்ச்சி வடித்த எண்ணெய். இதை கிரந்தி நோய்க்குக் கொடுக்க குணமாகும், a medicated oil prepared with the juice of the morinda leaves as chief ingredient along with some bazaar drugs. It is prescribed by Vaidyans in Syphilitic and other venereal diseases.

நுணாவேர், நுணா மரத்தின் வேர். இது சிவப்பு கபில நிறம். வழவழப்பான பட்டை யுடையது. அருவருப்புமானது. இதுகருப்பத்தில் மறித்த பிள்ளையை வெளியாக்க உபயோகப்படும். ach root morinda root -Morinda umbellata. It is reddish brown in colour with a smooth bark having nauseous flavour and bitter taste. The odour of the freshly dug root is acrid and disagreeble. It is used for bringing out the dead foetus from the womb.

நுணி, see நுணுக்கு.

நுணிசம், பூவிந்தி, soap nut -Sapindas trifolius.

நுணித்தல், பொடியாக்குதல், reducing to powder, powdering pulverizing.

நுணுகுதல், கூர்மையாதல், becoming a cute or sharp.

நுணுக்கம், சூட்சம், subtleness; 2. நுண்மை, minuteness; 2. பொன், gold.

நுணுக்கல், see நுணுக்குதல்.

நுணுக்கிருமல், சிணுக்குருமல், dry cough.

நுணுக்கு, see நுணுக்குதல்.

நுணுக்குதல், பொடியாக்கல், see நுணித்தல்; 2. அரைத்தல், grinding; 3. சிதைத்தல், cutting into very small pieces.

நுணுங்குதல், பொடியாதல், becoming or being reduced to powder.

நுண்ணாக்கை, சூக்குமவுடம்பு, subtle body, astral body.

நுண்ணிச்சிறை, கொசுக்கட்டைக் குருவி, an unknown small bird so called probably of its minute and delicate wings.

நுண்ணிடை, நுட்பமான இடுப்பு, delicate waist of women, slender waist.

நுண்ணி நாளம், நுட்பமான நாளம், minute capillaries.

நுண்ணுயிர், சிற்றுயிர், delicate life of small creatures; 2. நுட்பமான உயிர்ப்பூச்சிகள், micro organisms as bacillus etc.

நுண்பொடி, நுட்பமான பொடி, fine powder.

நுண் பொருள், நுட்பமான பொருள், subtle matter, occult and mystic matter.

நுண்மணல், பொடி மணல், fine sand; 2. நுட்பமான மணல், சிறு மணல், grains, small hard massess sand.

நுண் மருங்கல், see நுண்ணிடை.

நுண்மை, கூர்மை, minuteness; 2. அறிவு, நுட்பம், keeness of intellect; 3. சிற்றுண்டி, luncheon.

நுதம்பு, கள், tody; 2. சோறு,cooked rice; 3. see நுதம்புதல்.

நுதம்புதல், நனைத்து இளகச் செய்தல், as வாயிலிட்டு நுதம்புதல், to wet and make soft.

நுதல், நெற்றி, forehead; 2. புருவம், eye brow; 3. தலை, head; 4. குளம், tank.

நுதற்சேதம், நெற்றிவலி, pain in the forehead; 2. தலைவலி, head ache.

நுதித்தோல், ஆண்குறியின் நுனித்தோல், the fore skin of the penis; prepuce.

நுதத்தல், ஆசையடக்கல், suppression of passion or emotion; 2. அவித்தல், quenching; 3. நீக்குதல், removing.

நுந்துதல், தள்ளுதல், thursting; 2. தூண்டுதல், propel.

நுபகம், see நுபம்.

நுபம், எருக்கு giant swallow root -calotropis gigantea.

நுபுவருத்தி, ஆமையோடு, tortoise shell, turtle shell.

நுரை, குமிழி, water bubble; 2. நுரை, froth; 3. கடல் நுரை, cuttle fish bone; 4. வெண்ணெய், butter; 5. வயிரக்குற்றம், a flaw in diamond; 6. வெண்மை, whiteness.

நுரை தள்ளல், வாயினின்று நுரை வெளி வரல். இது காக்கை வலிப்பு, இழுப்பு முதலிய நோய்களில் காணும், issuing of forth from the mouth as it happens in certain diseases -epilepsy, convulsion etc.

நுரைத்தல், நுரைக்குதல், foaming forming froth; 2. மதங் கொள்ளல், sexual fullness.

நுரைத்தெழுதல், பொங்குதல், effervescence.

நுரை நீர், அமுத நீர், liquor amnii.

நுரை படிந்த, நுரையுள்ள, covered with froth; foamy.

நுரைப்பால், நுரை நீங்காது அப்போது கறந்த பால், fresh milk with froth.

நுரை பீர்க்கு, பேய்ப் பீர்க்கு. வடமொழியில் தேவதாளி என்று பெயர். அடித்தண்டு மருந்திற்கு உதவும். ஐங்கோண முள்ளது. சிறிது முசுமுசுப் பாயிருக்கும். இலைகள் ஐந்து பிரிவினையுடைது. முசுமுசுப்பு, ஓரங்களில் வட்டமான அரும்புகள் வாய்ந்தது. இலைக் காம்பு இலை நீளமிருக்கும். காய் கோழி முட்டை வடிவம். சாதிக்காய் பருமனுள்ளது. காய்க்குள் விதைகள் 18. தட்டையாயும், கருப்பாயு மிருக்கும். சதைப் பற்று வெண்மை, விதைகளைக் கவர்ந்து உள்ள நார்ப்பாகம் மிக்க கசப்பு.

இக்காயின் சதைப் பற்றை மற்ற சரக்குகளோடு (சேர்த்து) கூட்டி சுரத்திற்கு கொடுக்கலாம். பாம்பு கடிக்கும் கொடுக்கலாம். காய் கருவைக் கரைக்கும். snake luffa -Luffa echinata alias cucumis sicleatus. Stem herbaceous, five sided, slightly hairy; leaves generally five lobed, some what hairy; margin toothed all round petioles as long as leaves fruit oval about the size of that nut meg. seeds about 18 compressed and black, kernel white, the fibrous substance enclosing the seeds is intensively bitter.

Pulp of fruit which is a frequent ingrediant in the compound decoctions which are prescribed bilious fevers. It is given as an antidote in snake bite. Fruit is an abortifacient.

NOTE: It is also known as LUffa plucketiana. Every part of the plant is remarkably bitter and the fruit is violently cathartic. The kernel of the seeds is said to be an efficient remedy for dysentery. The juice of the roast fruit is applied to cure head ache and the fresh juice to poisonous bites. Powdered dried fruit is used as snuff in jaundice. The root is given with milk and sugar in gonorrhoea. See தேவதாளி.

நுரைப்பு, கொதிப்பு, பொங்குகை, effervescence as in preparations of salts; 2. நுரைத்தல், foaming.

நுரைப்பேரினி, சிறுதாளி, hairy leaved creamy white bindweed - Ipomaea obscura (gemella).

நுரையிண்டு, நீரிண்டு, a sensative plant in water - Mimosa genus.

நுரையிண்டு, வெற்றித்தண்டு.

நுரையிலி, ஊமை.

நுரையிலிகம், சிறுதும்பை, a small variety of leucas plant small leucas flower - Leucas genus.

நுரையீரற்கட்டி, நுரையீரலில் உண்டாகும் கட்டி, an abscess of the lungs - Pulmonary abscess.

நுரையீரலுறை, நுரையீரலைச் சுற்றியுள்ள சவ்வு, பரிப்புப்புசம், a thin membrance investing either lungs - Pleura.

நுரையீரல், மார்பிற்குள் பக்கத்துக் கொன்றாக இருபுறமும்

அமைக்கப் பெற்றுள்ள சுவாச வுறுப்பு, இது நடுவேயுள்ள இருதயத்தினால் வெவ்வேறாக விலகி நிற்கும், வலது புறத்திலுள்ளது மூன்று பகுதியாகவும், இடது புறத்தி லுள்ளது இரண்டு பகுதியாகவும் உள்ளது, இதற்குள் வலையைப் போன்ற அனேக வாயுக் கண்ணறைகளும், வாயு தாரைகளும் அமையப் பெற்றுள்ளன, இவ்வித அமைப்பினால்தான் இரத்தம் சுத்தியாக்கப்படும், இது உயிர்வாழ்க்கைக்கு இருதயம் போல் ஓர் முக்கிய ஆதாரமானவுறுப்பு, புப்புசம், the lungs. Either one of a pair of respiratory organs that occupy the lateral cavities of the chest and are separated from each other by the heart and other mediastinal structures. The right lung has three lobes and the left two. These lobes contain air passages communicating with many aircells surrounded by a net work of capillary blood vessels.

நுரையீரல் தாங்கி, மார்பிற் பகுதிக்கும் வயிற்றிற்கும் நடுவே யிருந்து பிரிக்கும் சதைசவ்வு, இதுவே விதானம், the muscular membraneous partition that separates the abdomen from the thorax - Diaphragm.

நுரையீரல் நாபனம், நுரை யீரலுக்குக் காணும் அழற்சி, inflammation of the lungs - Pneumonia.

NOTE:- This disease is ordinarily the result of cold. It usually comences with chill and high fever. There is also a sort of cough with sticky expectoration white and frothy and latter becomes streaked with blood. There is no acute pain unless combined with pleurisy. This may be favourable in some cases but unfavourable if the breathing becomes more frequent and difficult on the 4th or 5th day. Fever lasts for seven days.

நுரையீரல்கல், நுரையீரலுக் குள்ளாவது அல்லது சுவாசக் குழலிலாவது காணப்படும் சுண்ணாம்புக்கல், calcium calculus found in the bronchi or some portions of the lung tissue - Lung stone or Lung calculus.

நுரையீரல் வீக்கம், a swelling or inflammation due to the presence of air interspace. It may be caused by such diseases as chronic bronchitis and asthma.

நுரையீரல் வீக்கம், நுரையீரலின் வீக்கம், swellings of the lungs; 2. கபமிகுதியாலுண்டாகும் சுரம், phlegmatic fever.

நுரையீரற்சன்னி, நுரையீரலுக்குள் (ளிருக்கும்) மூலப்பகுதிக்குள் இரத்தம் பாய்வதாலேற்படும் சன்னி, apoplexy due to the escape of blood into the parenchyma or the functional elementary part of the lungs - Pulmonary apoplexy.

நுரையீரற்சீழ்க்கூடு, நுரையீரலுக் குள்ளாக சீழ் நிறையப் பெற்ற துவாரங்கள், a lung containing numerous small pus filled cavities - Honey comb lung.

நுரையீரற்சுரம், கபவாதசுரம், fever due to the inflammation of the lungs, lung fever - Croupous pneumonia.

நுரையெழுப்பி, நுரையையுண்டாக்கும் வஸ்து, that which gives rise to forth - Saponin; 2. கோழையை அறுக்கும் மருந்து, a medicine which promotes expectoration - Expectorent.

நுரைவாயன், சரளைவாயன், அதாவது கோழை வடியும் வாயுள்ளோன், one having constant scretion of frothy saliva.

நுரைவாய், நுரை தள்ளும் வாய், foaming mouth.

நுவக்கல், துவட்டல், rubbing the moisture.

நுவணம், தினைமாவு, miller flour; 2. பஞ்சி நூல், cotton thread; 3. மாமரம், mango tree - Mangifera indica; 4. நுண்மை, minuteness; 5. இடித்தமா, pounded flour; 6. பைந்தினை, fresh and green millet.

நுவணை, See நுவணம்; 2. நொச்சில், five leaved notchi - Vitex negundo; 3. மாமரம், mango tree - Mangifera indica.

நுவலம், சிறுதேக்கு, small teak - Cleodendron serratum.

நுவழலோசைப்பூடு, கையாந்தகரை, eclipse plant - Eclypta prostata.

நுவளை, மான், deer.

நுழல், கொற்றுகம்பூடு,an unknown plant.

நுழாய்ப்பாக்கு, முதிராதபாக்கு, green tender arecanut.

நுழுந்துதல், உள்ளே நுழைத்தல், thrusting inside, inserting; 2. மறைத்தல், concealing; 3. நகர்தல், creeping along; 4. நழுவுதல், slipping.

நுழவல், See நுழாய்ப்பாக்கு.

நுழுவுதல், நழுவுதல், slipping, gliding.

நுழை, துவாரம், hole; 2. குகை, cave; நுண்மை, fineness.

நுழைத்தல், உட்புகுத்தல், penetrating; உட்செலுத்தல், inserting, thrusting; 3.நுழையச் செய்தல், causing to enter; 4. திணித்தல், which see.

நுழைநரி, ஓர்வகை நரி, a kind of fox or jackal.

நுழைவழி, நுழைவாசல்வழி, entrance passage.

2. உணவு, நீர் செல்லும் வழி, (in Physiology) the canal through which food and drink pass to the stomach - Oesophagus.

3. காதில் சப்தம் நுழையும் வழி, the passage carrying sound from the external ear to the tympanam - Auditory canal.

4. யோனிவாசல், அதாவது ஆண்குறி புகும்வழி, the canal which receive the penis in copulation - Vagina.

5. சுழிமுனை வாயில், (in Philosophy) the subtle passage functioning in the body of a yogi or other Spiritualists.It extends from the nerve centre at the sacral region upto the cerebral region finding its lodgment at the crown of the head.

நுளம்பு, கொசுகு, mosquito; 2. மின்மினி, fire fly.

நுளும்பு, see நுளம்பு; 2. ஓர் பறவை, a kind of bird.

நுளை, நொள்ளை, அதாவது குருடு, blindness.

நுளைப்புண், ஓர்வித அழி விரணம், இதில் சதை அழுகி,

சீழோடு வெளிவரும், an ulcer marked by sloughing particles in the discharge - Phagedenic ulcer.

நுள்ளான், ஓர் எறும்பு, an ant; 2. கடிக்கும் சிற்றெறும்பு, biting red ant, emmit.

நுள்ளி, ஓர்வகை நீர்ச்செடி, an aquatic plant.

நுள்ளுதல், கிள்ளுதல், pinching.

நுறுக்கல், நொருக்குதல், crushing; 2. பொடியாக்கல், reducing to powder.

நுறுங்கு, குறுநொய், gruel; rice gruel.

நுனி முனை, tip; 2. see நுண்மை; 3.நாக்கு, மூக்கு நுனி, tip of the tongue or nose.

நுனிக்கை, விரல்நுனி, tip of the fingers.

நுனித்தோலழற்சி, ஆண்குறி முன்னந்தோல் வெந்து காணல், inflammation of the fore skin - Balanitis.

நுனித்தோல், ஆண்குறியின் முன் தோல், the fore skin of the penis - Prepuce.

நுனிநா, நாக்குநுனி,tip of the tongue.

நுனிநாசிச்சிலந்தி, மூக்கு முனையில் வரும் ஓர் சிலந்திப்புண் அல்லது புற்று, an ulcer on the tip of the nose.

நுனை, நுனி, tip; 2.முனை, point.

நூ

நூல், thread; 2. எள்ளு, gingelly seed; 3. யானை, elephant.

நூக்கமரம், மலையாளக் கருப்புமரம், malabar black wood cast indian rose wood - Dalbergia genus; 2. தோதகத்தி மரம், dark black wood - Dalbergia latifolia; 3. சீமை நூக்கு, foreign rosewood - Swietence mahogany.

நூக்கம், நூக்கமரம், 2. சிசுமரம், பிச்சை, இம்மரம் 50 அடி உயரம், இலைகள் இறகைப் போலிருக்கும், இலைக் கொழுந்து 3-5, பூக்கள் சிறியன, மஞ்சள் கலந்த வெண்ணிறம், காய்க்குள் 3 விதை, வேனிற் காலத்திற் பூக்கும், சாயங்காலம்

காற்றில் வாசனைவீசும், வீதிகளில் வைத்துப் பயிராக்கப் படும், இதன் மரத்தூள் நோயை நாளுக்கு நாள் குணப்படுத்தி ஆரோக்கியத்தை உண்டாக்கும், இத்தூளினின்று எண்ணெய் எடுத்து வாதப்பிடிப்புக்கு உப யோகிக்கலாம். Sissoo tree - Dalbergia sissoo. Tree 50 ft, leaves pinnate, leaf lets 3 to 5, flowers small, yellowish white, legumes three seeded, flowers in the beginning of hot season, flowers perfume the air in the evening, planted extensively as an avenue tree. Raspings of the wood are alterative in medicine, gives an empyrenmatic medicinal oil.

நூக்கல், தள்ளல், pushing or thrusting aside.

நூக்கு, நொய், crushed rice.

நூக்குதல், முறித்தல், breaking by trusting; *2.* அசைத்தல், removing; *3.* தள்ளுதல், pushing.

நூங்குதல், அதிகமாயிருத்தல், being in excess.

நூடி, சிற்றேலம், small cardamom - Electtaria cardamomum.

நூதவம், சிற்றாமல்லி, narrow leaved jasmine - Jasminum angustifolium.

நூதனசாலி, புதுநெல், new paddy.

நூபம், எருக்கு, sun plant - Calotropis gigantia; *2.* எருது, bull or bullock.

நூபுரம், நீர்க்குளிரி, which see.

நூபுவருத்தி, ஆமையோடு, shell of tortise or turtle.

நூலச்சூகம், சின்னம்மான் பச்சரிசி, thyme leaved spurge - Euphorbia thymifolia alias E macrophylla.

நூலடி, இலிங்கத்தினின்று குதத்திற்குச் செல்லும் நாடி, the artery or vein occupying the prenium between the anus and the genital organ of the male.

நூலளவு, நூன்முறைப்படி ஏற்பட்ட அளவு, proportion fixed in science, scientific proportion.

நூலாங்குருந்து, குருந்தமரம், a tree of the Atlantia genus.

நூலாஞ்செடி, அசன்னியம், an unknown plant.

நூலாதிப்பால், காட்டு மாட்டின் பால், milk of wild cow or buffalo.

நூலாப்பண்ணை, மூங்கில், bamboo tree Bambusa arundinacia.

நூலாமணக்கு, காட்டாமணக்கு, physic nut - purging nut - Jatropha curcus.

நூலாம்படை, ஒட்டகம், camel.

நூலாம்பூச்சி, சிலந்திப்பூச்சி, spider so called from its spinning webs.

நூலான், See நூலான் குருந்து.

நூலான்பிரண்டை, புளியம் பிரண்டை, hairy wild vine - Vitis setosa.

நூலான்புடை, See நூலான்படை.

நூலான்பூச்சி, Seeநூலாம்பூச்சி.

நூலித் தொடக்கி, முக்கருவு, umbilical cord.

நூலிலைமரம், நகுதாளிலை, Common cherry nutmeg - Polyaltria cerasolides, See நெடு நார்.

நூலேணி, ஓர்வகைக் கடல்மீன், a variety of sea fish.

நூல், ஆண்குறி, the genital of a male - Penis; *2.* கலவிநூல், scientic treatise; *3.* குறியைப்பற்றிய நரம்பு, the nerve of the genital organ; *4.* சாஸ்திரம், science; *5.* பஞ்சி நூல், cotton thread;*6.* ஆண்குறி நரம்பு, penis nerve, genital nerve; 7. தந்திரம், tantric science; *8.* மேற்கோள் நூல், any authoritative treatise on any subject. It is also defined as a treatise formed by the continous treatment of a subject, just as a large number of pieces of cotton do get to be thrown together and twisted into a continous thread.

நூல்கோல்கிழங்கு, ஓர் சீமைக்கிழங்கு,turnip.

நூல்பதம், மெழுகுபதம், elastic or wax stage.

நூல் பூச்சி, ஓர் குடற்பூச்சி, thread worm.

நூல்வழக்கு, சாஸ்திர முறை, scientific method or principle.

நூல்விலக்கு, சாஸ்திரப்படி விளக்கியது, that which is prohibited according to science.

நூவு, எள், rape seed.

நூவுநெய், எண்ணெய், rape seed oil.

நூழி, see நூழில்.

நூழில், கொடிக்கொத்தான், palsey curer - Cardiospermum halicacabum; 2. கொத்தான் கொடி, green thread creaper - Cassytha filliformis; 3. யானை, elephant; 4. கொலை, killing.

நூறங்கிழங்கு, See நூறன் கிழங்கு.

நூறன் கிழங்கு, காட்டு வள்ளிக்கிழங்கு, அடித்தண்டு மருந்திற்குதவும் தண்டு பெரிதாயும் வெண்மை யாயுமிருக்கும். திருகியுள்ளது, முட்கள் வாய்ந்தது, இலைகள் பிரிவினையுண்டு, பூக்கள் பச்சை வெண்மை கலந்தது, தண்டு விருவிருப்புள்ளது. ஆண் பூ தின்பதற்குதவும், five leaved yam, mouse root - Dioscorea penta phylla, stem harbaceous tubers large and white twining, prickily, leaves digitate, male flowers greenish white, tubers very acrid male flowers are eaten as greens.

நூறாண்டுமூலி, பசியெடுக்கா திருக்க வேண்டி நூறு வருஷத்திற் கொருமுறை உட்கொள்ளுமோர் மூலிகை,an unknown herb taken by Siddhars once in 100 years to keep them off from hunger.

நூறாண்டுவேம்பு, நூறு வருடம் சென்ற வேப்பமரம், இதன் பட்டை ஓர் காயகற்ப மூலிகை, margoso tree of 100 years old. Its bark is considered to be a rejuvenating drug.

நூறிசா, see சுக்குநாறிமரம்.

நூறுதல், பொடியாக்கல், powdering; 2. இடித்தல், pounding.

நூறும்புகுதல், நூறாண்டு வாழ்தல், centinarian.

நூற்றெண்ணெய், (நூறு + எண்ணெய்).

நூறை, மலங்கு மீன், an eel, a sea fish; 2.ஓர் வகை வள்ளிக் கிழங்கு, a kind of sweet potato.

நூற்றைக் கிழங்கு,see நூறங் கிழங்கு.

நூற்சிலும்பை, மிருதுவான பஞ்சு, இது புண்களுக்கு கட்டவுதவும், linenscraped into a soft substance - Lint. It is used for dressing wounds and sores.

நூற்புழு, நூலைப் போன்ற புழு, thread worm.

நூற் பூச்சி, சிலந்தி, spider.

நூற்றுநிறை, நூறு, hundred palams weight.

நெ

நெகல், கனிதல், ripening; 2. உடைதல் breaking, opening.

நெகிர்ந்து போதல், இளைத்தல், growing weak, emaciating.

நெகிழவரைத்தல், நேர்மை யாகவும், இளகும் படிக்கும் அரைத்தல், grinding minutely so as to become loose and soft as medicine.

நெநெகிழவாட்டல், see நெகிழ வரைத்தல்.

நெகிழ், see நெகிழ்தல்.

நெகிழ்தல், மலர்தல், blossoming; 2. அழுத்தல், pressing; 3. இளகுதல், becoming soft; 4. உலருதல், being melted; 5. குழைதல், becoming viscus; 6. தளர்தல், loosening; 7. நழுவல், slipping; 8. பிரிதல், separating; 9.பொசிதல், oozing; 10. பொடியாதல்; being reduced to powder; 11. விட்டுநீங்கல், getting rid of; 12. நிலை குலைதல், becoming displaced.

நெகிழ்த்தல், இளகச் செய்தல், rendering soft; 2. உருக்குதல், melting; 3. பிரமித்தல், become stunned.

நெகிளம், இரும்பு, iron; soft iron.

நெகுதல், உருகுதல், being melted; 2. கரைதல், dissolving; 3. பொடியாதல், becoming powder.

நெக்குடைதல், இளைத்துருகல், becoming emaciated as in phthisis; 2. நெகிழ்ந்துருகல், waning as from love; 3. மனமுடைதல், dejected in mind.

நெக்குண்டி, வெண்ணொச்சி, white nochy - Vitex negundo.

நெக்குதல், தள்ளல், நெருக்குதல், pressing.

நெக்குரோதம், ஆலமரம், banian tree - Ficus bengalensis.

நெக்குவிடுதல், பிளவுபடுதல், cracking; 2. பொருத்து வாய்விடல், putting out of joint, disjointed; 3. காதலால் மனந்தளர்தல், going or getting dejected as from love.

நெச்சடி, see நெச்சி.

நெச்சி, கடுக்காய், Indian gall nut - Terminalia chebula.

நெஞ்சக்கரம்.

நெஞ்சடித்தல், இதயம் படபடக்கை, violent pulsation of the heart; 2. இதயத் துடிப்புpalpitation as from fear. disease etc.

நெஞ்சடைத்தல், மாரடைத்தல், spasmodic suffocation; 2. தொண்டை யடைத்தல், obstruction of throat as pharangitis.

நெஞ்சடைப்பான், நெஞ்சடைக்கும் நோய், இது நுரையீரல் அழற்சியாற் காணும், obstruction of chest as from inflammation of lungs.

நெஞ்சடைப்பு, மாரடைப்பு, obstruction in the chest.

நெஞ்சடைவாதம், மூச்சுவிட முடியாதபடி மார்பை அடைக்குமோர் வாதம், இது இதய நோயால் நேரிட்டு மயக்கம், தொண்டைவலி முதலிய குணங்கள் காட்டும், a disease marked by paroxysmal throraxic pain with suffocation and syncope due to disease of the heart - Angina pectoris.

நெஞ்சமுக்கம், அமுக்குப் பிசாசம், அதாவது தூக்கத்தில் மார்பை ஒருவர் அமுக்குவது போற் றோன்றி, அதனால் மூச்சுவிட முடியாமல் பயம், பிரமை, மயக்கம் முதலிய குணங்கள் உண்டாகும், a feeling of oppression or suffocation during sleep accompanied by stupefying influence and intense anxiety, fear, horror etc - Night-mare.

நெஞ்சம், மனம், mind, 2. மார்பு, chest.

நெஞ்சம், நெஞ்சு, chest; 2. மனம், mind, heart.

நெஞ்சழிதல், மதிமயங்கல், perplexity of mind; 2. மனம் நிலைகுலைதல், agitation of

mind as from fear disease etc; 3. ஏங்குதல், pining, longuishing.

நெஞ்சமுத்தம், நெஞ்சுறுதி, firmness of mind.

நெஞ்சறை, மார்பின் கூடு, பிஞ்சரம், a box like cavity of the body — Chest; 2. கழுத்திற்கும் வயிற்றிற்கும், இடையே யுள்ள பெட்டியைப் போன்ற பகுதி, இதற்குள் சுவாசக் கருவி, இரத்தோட்டக் கருவி, சுவாசப்பை, இரத்தா சயம், விதனம் முதலிய உறுப்புகள் அமைக்கப்பெற்று அபாயமின்றி இருப்பதற்காக எலும்புகளாலும், முருந்து களாலும் ஆக்கப்பட்ட ஓர் பெரும் பெட்டியைப் போன்ற கூடு, இது மேலே ஒடுக்கமாகவும், கீழே பருத்துமிருக்கும், இதற்கு முன்பக்கம் விலா முருந்தும், நெஞ்செலும்பும், பின் பக்கம் முதுகெலும்புகளும், பக்க விலா வெலும்புகளும் எல்லையாகும்.that portion of the body between the neck and the abdomen. It is regarded as a conical box like cavity containing organs as the lungs, the heart, blood vessels, the diaphragm etc. To be safe, it is well constructed and protected by the small end turned upwards, the back of the box being formed by the spinal column, the sides by the ribs, the front by the cartilages of the ribs and the breast bone, the bottom by the diaphragm and the top by the root of the neck — Thorax.

நெஞ்சறைக்குழி, நெஞ்சுக்கூடு மார்பிற்குள்ளிருக்கும் குழி, throaxic cavity, chest cavity — Venter medius.

நெஞ்சறைசவ்வு, மார்பின் அறையில் கவர்ந்துள்ள சவ்வு, பரிப்புப்புசம், the membrone lining the walls of the thorax or Chest - Pleura.

நெஞ்சறைச்சுவர், மார்பின னுட்புறமுள்ள நான்கு பக்கம், the four sides called walls of the chest — Thoraxic wall.

நெஞ்சறைப்புடைப்பு, மார்பின் நடுப்பாகம் புடைத்துக் காணல், bulging of the chest like a barrel.

நெஞ்சறைவலி, மார்பின் சுவருக்குக் காணும் வலி, pain in the chest wall — Thoracalgia.

நெங்சாங்கட்டை, நெஞ்செலும்பு, இது மார்பின் நடுவே முன் பக்கமாகக் காணப்படும் தட்டை எலும்பு, the narrow flat bone in the medium line of the chest in front called breast bone — Sterum.

நெஞ்சாங்குலை, ஈரற்குலை, the viscera contained in the chest or thoraxic cavity — Thoracic viscera; 2. இருதயம் the heart.

நெஞ்சாங்குழி, மார்புக்குழி, pit of the stomach; 2. தொண்டைக்குழி, the pit in the throat infront of the neck.

நெஞ்சாங்குற்றி, see நெஞ்சாங்கட்டை.

நெஞ்சாங்கொழுந்து, see நெஞ்சாங்குலை,.

நெஞ்சாறல், துக்கம், grief.

நெஞ்சார, மனமார as in நெஞ்சாரக்கூறல், talking or speaking as felt in mind, conscientously.

நெஞ்சிடி, பயம், நோய் முதலிய வைகளால் ஏற்படும் நெஞ்சின் துடிப்பு, palpitation of the heart as from fear disease etc.

நெஞ்சிடித்தல், மார்பு அடித்துக் கொள்ளல்,violent beating of the heart, throbbing of the heart — Pant.

நெஞ்சிற்கட்டல், மார்பில் கபம் கட்டல் accumulation of phlegm in the chest.

நெஞ்சற்கட்டை, மார்பில் கட்டை போட்டது போல் சளி அடைத்துக் கொள்ளல், feeling of obstruction in the chest due to accumulation of phlegm in the passage of respiration.

நெஞ்சிற்கல்போட்டது போலிருத்தல், வாயுவினால் மார்பில் கல்போட்டது போல் கனதியாய் அடைத்துக் கொண்டு மூச்சுவிட மடியாதபடி துன்புறல், a feeling of oppression in the chest as if a stone like lump rising or seated within the throrax. It is ascribed to the action of deranged Vayu.

நெஞ்சிற்புகைதல், தொண்டைப் புகைச்சல், irritation of the throat.

நெஞ்சினோவு, see நெஞ்சுநோவு.

நெஞ்சு, மார்பு, chest; 2. தொண்டை, throat; 3. இருதயம், heart; 4. சுவாசவுறுப்பு, organs of repiration.

நெஞ்சுக்கபக்கட்டு, See நெஞ்சுக்கட்டு.

நெஞ்சுகரித்தல், See நெஞ்சு கரித்தல்.

நெஞ்சுக்கட்டு, நெஞ்சில் சளி கட்டல், accumulation of phlegm or mucous in the chest; 2. கோழை கட்டல், pectoral disease from phlegm; 3. மார்பிலிடும் கட்டு, bondage round the chest.

நெஞ்சுக்கரகரப்பு, மார்பில் ஏற்படும் ஓர் உணர்ச்சி, feeling of a peculiar stimulating, or inflammatory sensation in the chest; 2. தொண்டை கரகரத்தல், irritation of the throat.

நெஞ்சுகரித்தல், அசிரணத்தால் மார்பு அல்லது தொண்டை யிலுண்டாகும் ஓர் வகைக்கரிப்பு, a sensation in the chest or throat due to acidity of the stomach.

நெஞ்சுக் கரிப்பு, see நெஞ்சுக் கரித்தல், குன்மத்தால் உண்டபின் நெஞ்சில் காணப்படும் உணர்ச்சி,feeling of acridity in the throat or chest due to dyspeptic disorders; தொண்டைப் புளிப்பு, sour eructions in the esophagus.

நெஞ்சுக்குத்தல், அன்னரசம் கேடுறுவதனால் வாயு கோளா றடைந்து நெஞ்சில் பித்த கபத்தோடு சேர்ந்து மூச்சுவிட முடியாது குத்தலுடன் துன்புறுத்தல், a disease which the deranged bodily vayu aggrevated by the vitiated chyle and incarcerated in the region of the chest through the action of the other deranged humours as pitha and kapha there by giving rise to pin prick pain in the chest with difficulty of respiration.

நெஞ்சுக்குத்து, மார்புவலி, pain in the chest — Pectoralgia.

நெஞ்சுக் குமட்டல், தொண்டை குமட்டல்,nausia in the throat making an effort to vomit, retching.

நெஞ்சுக்குரிய, மார்பிற்குரிய pertaining to the chest — Pectoral.

நெஞ்சுக்குழி, மார்பின் பள்ளம், pit of the somach scrobiculous cordis — Anticardium.

நெஞ்சுக்குறுகுறுப்பு, மார்பில் சிலேட்டும தோஷத்தினா லேற்படும் கொறு கொறுப்பு, respiratory sound heard in the chest — Rale. 2. சுவாசக் குழாயிலேற்படும் சத்தம், crackling sound heard or produced in the trachea (wind pipe) or the bronchus- Bronchial or tracheal rale; 3. இதயக் குறுகுறுப்பு, unnatural sound heard over the region of the heart. It may be hereditary or otherwise — Murmur.

நெஞ்சுக்கோழை, மார்பில் கட்டும் கோழை, mucous secretion in the chest.

நெஞ்சுச் சளி, மார்பில் கட்டும்சளி, accumulation or collection of phlegm in the chest as from cold.

நெஞ்சுத்திடுக்கிடல், அச்சத்தால் மார்பு கலங்கல், agitation of mind through fear or disease.

நெஞ்சுத்துடிப்புக்கேடு, மார்பின் துடிப்புக் கோளாறு, irregularity or lack of rhythum in the heart's action — Arrhythmia cordis.

நெஞ்சுத்தடிமன், மார்புச்சளி, acute bronchitis attended with constant cough.

நெஞ்சுத்துடிப்பு, நெஞ்சின் படபடப்பு, beating of the heart, pulse beat of the heart — Cardiac rhythum.

Palpitation of the heart arising from sudden and irregular action of the heart and attended with sensation of distress and faintness. It is caused by indigestion, flatulence or tobacco. It often accompanies anaemia, hysteria and amenorrhoea. Palpitation arising from heart disease should be distinguished from those depending on other causes.

நெஞ்சுத்துணிவு, மனத்துணிச்சல், resulutio of mind.

நெஞ்சுநாளம், பொதுவாக மார்பிலோடும் நாளம், veins in the region of the chest; 2. இருதயநாளம், cardiac veins; 3. நுரையீரல் நாளம், veins of the lungs — Pulmonary veins.

நெஞ்சுநோர்தல், நெஞ்சிளைத்தல், emaciation of chest; 2. நெஞ்சொடுங்கல், which see.

நெஞ்சுநோய், மார்புநோய், diseases in general of the chest.

நெஞ்சுநோய், see நெஞ்சுநோவு.

நெஞ்சுநோவு, மார்புவலி, pain in the chest or thorax — Thoracodynia; 2. இதுவே இருதய ரோகம், causes; Disease of the heart is produced by food hot. bitter, or astringent, eating before the last food is fully digested, suppression of natural urgings of stools and urine, mental worry, too much of exertion, violent blow, or other injuries to the chest etc.

Symptoms: Pain in the heart or about the region and palpitation of the heart followed by irregular beats. The disease varies according to the derangement of the three humours in the system besides the extraneous causes such as violent blows or accidental injuries to the chest. sometimes tickling sensations, nausea, swelling of the eyes. fatigue. stupefaction or insensibility of the whole body and giddiness are some of the earlier symptoms.

NOTE: Pain in the chest should not be confounded with the heart disease external injuries as blow or heavy fall, digestive troubles of bilios origin may be responsible for pain in the chest which can be cured by fomentations. sometimes lungs troubles are also mistaken for heart disease.

நெஞ்சுப்புண், தொண்டைப்புண், sore throat.

நெஞ்சமருந்து, மார்பு நுரையீரல் முதலிய நோய்களுக்குக் கொடுக்குமருந்து, medicine for complaints of the heart and lungs — pectoral.

நெஞ்சுரப்பு, மனவுறுதி, . firmness of mind.

நெஞ்சுரம், நெஞ்சு வலிமை, strength or power of mind.

நெஞ்சுலர்தல், மார்புவற்றல், dryness of the chest.

நெஞ்சுவலி, மார்புவலி, pain in the chest;see நெஞ்சுகுத்து.

நெஞ்சுவலியுறுத்தி, இருதயத்தைப் பலப்படுத்தும் மருந்து, cordiac tonic.

நெஞ்சுவறட்சி, see நெஞ்சுலர்தல்.

நெஞ்சுவற்றல், வறட்சியினால் நெஞ்சில்குழிவிழுதல், pit of the stomach, depression of the chest through dryness.

நெஞ்சுவிரணம், நெஞ்சுப்புண், inflammation of the lungs; 2. தொண்டைப்புண், இதற்கு நெரியாசிப்பாலை பிசினைச் சீலைத்துணியில் பூசிக் கொளுத்தி அப்புகையை இழுக்கப்போம், sore throat. styrax liquidus is smeared on a piece of cloth and burnt. Its smoke, when inhaled, cures sore throat.

நெஞ்சுள், உள்மனம், inner conscience.

நெஞ்செரிச்சல், மார்பெரிச்சல், burning sensation in the chest as from disease; 2. இருதய எரிச்சல், heart burn; 3. வயிற்றெரிச்சல், a burning sensation in the oesophagus — cardialgia; 4. புளித்தேப்பம் முதலிய அசீரணக் கோளாறினால் ஏற்படும் வயிறு அல்லது நெஞ்செரிச்சல், burning sensation in the stomach with sour eructations due to acid dysepsia — Pyrosis.

NOTE: It is a feeling of heat in the chest and throat often accompanied by hot or cold acid eructions of watery matter (water brash). This mabady has nothing to do with the heart, but is a symptom of indigestion and should be treated as dyspepsia.

நெஞ்செரிப்பு, see நெஞ்செரிச்சல்.

நெஞ்செரிவு, see நெஞ்செரிச்சல்.

நெஞ்செலும்பு, நெஞ்சறையில் முற்பக்க நடுவில் வாள் போன்ற ஒடுங்கிய தகட்டெலும்பு, dagger like flat bone in the middle front of the chest — Sternum; 2. மார்பெலும்பு, dagger shaped breast bone.

நெஞ்சைப்புகவாள், கருநாய், black dog.

நெஞ்சொடுகிளத்தல்.

நெடலை, ஓர்வகை நாரை, a kind of stork.

நெடி, மருந்தின் காரவாசனை, the pungent smell of medicinal drugs or medicine; 2. காரம். pungency; 3. சிள்வண்டு, small beetle; 4. மிளகாய் நெடி, pungent smell of chilly.

நெடிப்பினை, வங்கமணல், leadore.

நெடிப்பு, நெடுநேரம், long time; 2. காலநீட்சி, lengthening of time.

நெடியவன், seeநெடியவன்.

நெடியவாயன், பெருவாய் மீன், a large kind of seafish with a wide mouth.

நெடியன், நெட்டையன்,a tall man.

நெடியா, குறட்டைச்செடி, round snake gourd — Trichosanthus palmata.

நெடியாமி, தென்னை, cocoanut free — Cocos nucifera.

நெடியோன், துளசி, holy basil — Ocicum sanctum.

நெடிலா, சம்பங்கோரைப்புல், small sedge grass — Cyperus rotundus.

நெடிலி, ஓர் கடற் பறவை, a sea bird.

நெடில், மூங்கில், bamboo tree — Bambusa arundinacea; 2. நீளம், length.

நெடினி, பனை,palmyra tree — Borassus filiformis.

நெடுகல், நீளுதல், growing long, lengthening; 2. உயர்ந்த, souring in height.

நெடுகாசம், பேரிலாதசெடி, an unknown plant.

நெடுகதல், சாதல், dying; 2. உயருதல், heightening; 3. நீளுதல், lengthening; 4. காணாமற் போதல், disappearing.

நெடுங்கடல், கரையடுத்தகடல், that portion of the sea adjoining the shore.

நெடுங்கணவாய், நீண்டகணவாய் மீன், a long cuttle fish.

நெடுங்கண், தூரப்பார்வையுள்ள கண், eye with long sight far sighted ness — Hyperopia.

நெடுகம்பிலிங்கம்.

நெடுங்கழுத்தன், ஒட்டகம், camel.

நெடுங்காலி, கால்நீண்ட பசு, long legged cow.

நெடுங்கிடை, நோயால் நீண்டகாலம் படுக்கையிற் கிடக்கை, bed ridden from disease for a long time.

நெடுங்குடர், மணிக்குடல், small intestines.

நெடுங்குயில், சாவு, death.

நெடுங்குரலன், கழுதை, ass from its bray or harsh cry.

நெடுங்குரல், கூர்மையான நீண்ட குரல், a sharp prolonged cryuttered by a patient as done during operation.

நெடுங்குரல்பாய்ச்சல், நீண்ட குரலோடு பெருஞ்சத்தமிடல், making a prolonged clamour or cry as by a woman bemoaning the loss of her child or husband.

நெடுங்குளிசம், கற்பரிபாஷாணம், a kind of native arsenic.

நெடுங்கையான், யானை, elephant from its long trunk.

நெடுங்கோணி, see நெடுங்கழுத்தன்.

நெடுஞ்சாணை, see நெடுங்கிடை.

நெடுஞ்சாரை, நீண்ட சாரைப்பாம்பு, long rat snake.

நெடுஞ்சுருட்டை, நீண்ட சுருட்டைப்பாம்பு, long carpet snake.

நெடுஞ்சுரை, சுரைக்கொடி, bottle gourd creeper — Calabash or calabash — Cucumber — lagenaria vulgaris.

நெடுஞ்சேவிகம், பனைமரம், palmyra tree — Borassus flabellifer.

நெடுத்தல், நெட்டையாதல் growing tall.

நெடுநாட்சுரம், நீண்டகாலத்து சுரம் long continued fever, chronic fever.

நெடுநாட்டு, கானக்கைதை யென்னும் ஓர் மரம் Travancore lance wood — Sageraea dalzellii.

நெடுநாரை, செந்நாரை, a kind of red stork; 2. ஓரமரம், a tree, fragrant cherry nut meg — Polyauthia fragrans.

நெடுநார், ஓர் காப்பிச்செடி, a kind of dooduga — Polyalthia coffeeoides.

நெடுநீர், கடல், sea.

நெடுநீலி, செந்தாழை, false kateerah —Sterenlia urens; 2. சிவப்புத் தாழை. fragrant screwpine— Pandanus odoratissinus.

நெடுந்துயில், அயர்ந்த நீண்ட, தூக்கம், long sound sleep as from fatigue; 2.சாவு, death.

நெடுப்பிணை, வங்கமணல், lead ore.

நெடுமணம், இரசித பாஷாணம், a kind of prepared arsenic, a mineral poison of silver.

நெடுமன், பாம்பு, snake.

நெடுமி, see நெடுஞ்சேவிகம்; 2. ஒடுங்கி வளர்ந்த மரம், a tall tree.

நெடுமுறல், ஓர்வகை மீன், a kind of needle, fish.

நெடுமூக்கு, நீண்ட மூக்கு, காக்கை மூக்கு, long nose like a crow; 2. தும்பிக்கை —elephant's trunk.

நெடுமூச்சு, பெருமூச்சு, deep respiration, long breath as from grief or melan choly — Sigh; 2. நீண்ட மூச்சு, panting respiration —Polyhnea.

நெடுமூச்செறிதல், பெருமூச்சு விடல், sighing 2. வலியால் நீண்ட மூச்சுவிடல், breathing with pain, heaving; panting.

நெடுமை, பெண்மயிர், woman's hair; 2. ஆழம். depth; 3. உயரம், height, tallness நீளம், length.

நெடும்பட்டை,.

நெடும்பயணம், மரணம், death.

நெடும்பழக்கம், வெகுகாலத்துச் சாதனை, long practice as in yoga; 2. நீண்ட அனுபவம், long experience.

நெடும்பா, ஆடாதொடை, Malabar nut tree — Adhatoda vasica.

நெடும் பாதிரி, நீண்டபாதிரி மரம், a tall fragrant trempet tree — Stereopermum chelonoides.

நெடும்புடல், நீண்ட புடலங்காய், snake guard.

நெடும்புயம், செந்நாவிக் கிழங்கு, red aconite root.

நெடுவசி, ஊசித்தழும்பு, needle scar.

நெடுவல், நீண்ட மனிதன், tall man.

நெடுவாய், உள்ளா மீன், a sea fish — Sphyraena acuti pinnis.

நெடுவாலன், குரங்கு, monkey.

நெடுவாலிக்கோங்கு, see நெடுவாற்கோங்கு.

நெடுவாலூடகம், நீண்ட வாலுடைய ஓர் கடல் மீன், a kind of sea fish with long tail, see திரளி.

நெடுவாறி, நாய்ப்பாகல், dog carolah — Mimordica hispida. alias Bryonia mysorensis.

நெடுவாற்கோங்கு, ஓர் கோங்கு மரம், dipterocarp dammer — Hopea racophloea.

நெடுவாற்றிரளி, see நெடுவாலூடகம்.

நெடுவிரல், ஆடாதொடை see நெடும்பா; 2. நாய்ப்பாகல், see நெடுவாறி, 3. பழுபாகல், prickly carola — Momordica dioica. 4. நீண்டவிரல், long finger.

நெடுவிரியன், நீண்ட விரியன் பாம்பு, long viper.

நெடுவேர், சாயவேர், dye root, chay root Oldenlandia umbellata.

நெட்டகம், மிளகு, black pepper — Piper nigrum.

நெட்டாநாராட்டி, நெடுநார் அல்லது நூலிலை, long fibre plant — Polyalthia cerasoides.

நெட்டப்பிரமட்டை, பேய்மிரட்டி, devil frightener — Anisomeles malabarica.

நெட்டம், வெள்ளை மிளகு, white pepper.

நெட்டாவில், மரவுரி, bark tree — Antiaris toxicaria so called

from the usefulness of the bark for making a fibre coat in olden days as a protection against cold.

நெட்டி, தக்கை, pith; 2. நெட்டிப் புல்; pith grass; 3. முழு வெலும்பு, sheleton; 4. எலும்புக் கணுவின் சத்தம், crackling sound of the joint of the bones; 5. தக்கைச்செடி pith plant -- Aeschynomens aspera; 6. எலும்பு, bone; 7. see நீர்ச்சுண்டி; 8. உடற்பொருத்து, joints of the body; 9. முளி, joints of the hand or feet, See நெட்டை.

நெட்டிக்கோரை, சம்பங் கோரைப்புல், sedge grass.

நெட்டிச்செடி, தக்கைச்செடி, இதற்கு, கொக்கேரி, ஆற்று நெட்டி, சடைச்செடி, கிடைச்சி என்று பலபெயர் வழங்கும், இச்செடி, இரண்டு வருஷத்தில் காய்த்துவிடக் கூடியது. தண்ணீரில் மிதக்கும், கிளைகள் வாய்ந்தது, இலைகள் இறகைப் போன்றது. சிற்றிலை அனேகம், சிறிது பூக்கள், இரண்டிதழ், பூங்காம்பும், இலைக்காம்பும் மொசு மொசுப்பாயிருக்கும், பூக்கள் மஞ்சள், வெள்ளை முதலிய பலநிறம், இதன் சமூலத்தைக் கஷாயமிட்டு, பாண்டுவிற்கு கொடுக்கலாம். இலையைக் கீரையாக உபயோகப்படுத்தித் தின்பதுண்டு. இதன் தக்கை அனேக விதத்தில் உபயோகப் படும். இது அடியிற் கண்டபடி பலவகைப்படும், pith plant — Aeschynomens aspera. It is known by different names as Netty shrub, river pith plant, river cork, sponge wood etc. Perennial floating, some times branched. Leaves pinnate, leaf lets numerous, flowers few, two lipped, pedicles and peduncles rough with hairs, flowers brownish yellow, white etc. The decoction of the plant is a useful remedy in dropsy leaves are used as greens in food. The pith is useful in commerce in many ways. It is of different kinds as mentioned below.

1. கொடி நெட்டி, 2. கோரை நெட்டி, 3. பூநெட்டி, 4. வயல் நெட்டி, 5. மூங்கில் நெட்டி, 6. பெருநெட்டி, 7. நெரிநெட்டி, (சம்பம்புல்) 8. நறுக்கு நெட்டி,

9. ஆற்று நெட்டி, river cork — Aeschynomens indica.

நெட்டிதளம்.

நெட்டிமுட்டி, see அரியியம்.

நெட்டிமுறித்தல், நெட்டை ஒடித்தல், crackling the finger joints.

நெட்டியிடுக்கி, தக்கையைக் குழையினின்று விடுவிக்கும் ஓர் கருவி, Cork screw.

நெட்டிலிங்கி, வானமுட்டி, Indian mast tree — Polyalthia longifolia. alias Uvaria longifolia. it is a tall beautiful ever green tree; 2. அசோகு, which see.

நெட்டிலிங்கு, see நெட்டிலிங்கம்.

நெட்டில், மூங்கில், bamboo — Bombusa arundinacea.

நெட்டு, காம்பு, pedicle; 2. குலை, bunch; 3. அகலம், breath; 4. மூங்கில், bamboo; 5. காரம், நெடி, which see.

நெட்டுகா, ஓர் உகாமரம், sack tree — Salvadora persica.

நெட்டுயிர்.

நெட்டுயிர்ப்பு, பெருமூச்சு, sigh; 2. நீண்ட மூச்சு, long breath; 3. ஆழ்ந்தமூச்சு, deep breath.

நெட்டுயிர்ப்புவீங்கல், see நெட்டுயிர்த்தல்,.

நெட்டுயிர்ப்பெறிதல், see நெட்டுயிர்த்தல்.

நெட்டுலிங்கம், நெட்டிலிங்கு, which see.

நெட்டூதி, ஓர்விதசங்கு, a kind of conch.

நெட்டெழுத்து, வெள்ளெழுத்து, சாலேசரம் என்னும் கண் புகைச்சல், old sight Preslyopia.

நெட்டெழும்பல், காரமெழும்பல், rising of strong pungent smell as from medicine or drugs when grinding. (உ-ம்.துவளவரை நெட்டெழும்பு மட்டும், (கோ.வா.காவியம்).

நெட்டை, See நெட்டி; 2. கைகால் பொருத்து, joints of the limbs; 3. விரற்கணு, joints of the fingers; 4. நீண்டஒலி, crackling notice; 5. நீண்டதன்மை, to become long.

நெட்டைக் கங்காளம், நெட்டை யெலும்பு, பொருத்தெலும்பு, joints of the body.

நெட்டைக்கோரை, tall koray.

நெட்டைநாரத்தை, see நெட்டை நாரட்டி.

நெட்டைப்பிரமட்டை.

நெட்டைப்பேய் மருட்டி, இரட்டைப் பேய் மருட்டி, Malabarical mint — Anisomeles malabarica.

நெட்டைவாங்கல், see நெட்டிமுறித்தல்.

நெணவாசி, புலி tiger.

நெண்டுதல், எதிர்க்களித்தல், eructation.

நெதி, தியானம், contemplation; 2. முத்து, pearl; 3. See நிதி.

நெதுட்டி, மருது, mardah tree — Terminalia alata.

நெத்தகர், ஓர் பூடு, a plant.

நெத்தமண்டலி, இரத்த மண்டலி, இது இரத்த வியர்வை யுண்டாக்கி வருத்தப்படுத்து மோர் தேளினமாதலால் இப்பெயர், It is so called from the perspiration of blood from its poisonous bite. It is poisonous creature of the species of scorpion.

நெத்தம், இரத்தம், blood — a corrupt or slang term.

நெத்தல், நெத்தில், நெய்தோலி which see.

நெபத்திகை, ஓர் பூடு, an unknown drug.

நெமமீன், வாதத்தையுண் டாக்குமோர் வகை மீன், a kind of fish causing rheumatisum.

நெமம், see நெமிசந்தனா.

நெமிசந்தனா, இரத்த வேங்கை, red kino tree — Pterocarpus marsupium (acuminata).

நெய், இரத்தம், blood; 2. நிணம், fat, வெண்ணெய், உருக்கிய நெய், clarified butter; 4. வெண்ணெய், butter; 5. எண்ணெய், oil; 6. தேன், honey; 7. உதிரம், blood,

8. புனுகு, civet; *9.* கிருதம், medicinal ghee; *10.* ஆகாரம், food; *11.* நுரை, foam; *12.* நெய்தல், water lily.

நெய், புரைகுற்றிய பாலைக் கடைவதினாலுண்டாகிய பசையுள்ள வஸ்துவாகிய வெண்ணெய், இவ் வெண்ணெயை, தண்ணீர் போக உருக்கி வடிகட்டியதே நெய்யெனப்படும். சமையல் பாகத்தில் வெண்ணெய்க்குள்ள குணமே இதற்கு முண்டு, சுய நெய் ஊழலெடுக்காமல் நெடு நாளிருக்கும், இது சாதாரணமாக எருமை, பசும் பாலிலிருந்து எடுக்கப் படும், இது உண்பதற்கு நேர்த்தி யாயும் உருசியாயும் இருக்கும். உடம்பிற்கு குளிர்ச்சியையும் தாது புஷ்டியையு முண்டாக்கும், உடம்பினு றுப்புகளில் உண்டாகும், பிசுபிசுப்பைப் போக்கி அவ்விடத்து நெய்ப் பசையை யுண்டாக்கும்.

இது பைத்தியம், காக்கை வலி, மல சலக் கட்டினாலேற் படும் வயிறு வீக்கம் ஆகியவைகளைக் குணப் படுத்தும், இது ஞாபக சக்தியைக் கொடுத்து உடம்பிற்குப் பலத்தை யுண்டாக்கும். அன்றியும் கண் பார்வையைத் தெளிவு படுத்து வதுடன் உடம்பிலிருக்கும் விஷத்தைப் போக்கும், clarified butter. It is obtained by churning fermented milk and cream briskly for sometime, when the fat globules become aggrecated into a mass of butter. The butter when boiled, till it turns into oil, so as to remove the casein water, the whole of the water constituent. It has all the advantages of butter for culinary purposes and this when pure may be kept without rancidity for a long time (6 months). It is made from both, cow and buffalow milk. Only cow's Ghee is used in medicine and for diet.

It is cooling in its essence and potency and is mild and sweet to the taste. It slightly removes slimy secretions of the organs and acts as a lubricating moistener. It proves efficacious in insanity epilepsy and

distension of abdomen from the suppression of stool and urine. It also improves memory intellect and voice and strengthens the body. It improves eye sight and eliminates poison from the body.

Vegetable oils or ghees.

1. ஆமணக்கு நெய், கோரவாதம், குன்மம், குடலேற்றம், தேகளரிச்சல், கண்ணெரிச்சல் போம், castor oil — alleviates acute rheumatism, dyspepsia, displacement of bowels, burning sensation of the body and eyes.
2. சிற்றாமணக்கு நெய், மருந்துஷ்ணம், மூலஉஷ்ணம் போம், small castor seed oil medicinal heat and heat in the anus are cured. This oil should be used for preparing medicines with castor oil.
3. எள்நெய், தேகபலவீனம், கண்காது நோய், கபாலச்சூடு, காசம் போம், Gingelly oil removes obdily weakness diseases of the eyes and ears, brain heat asthma etc.
4. வேப்பெண்ணெய், மகா வாதம், கிரந்தி, கரப்பான், சிரங்கு, விரணம்போம் Margosa oil cures acute rheumatism syphilitic ulcers, ear pain itch fever with delirium.
5. இலுப்பெண்ணெய், கரப்பான், கடி, விஷம், சிரங்கு, விரணம்போம் Mowah oil cures eczema, itch wounds, poisonous bites etc.
6. புங்கெண்ணெய், இரணம், சிரங்கு, சொறி, வெடிப்பு போம், Poongam oil alleviates itch scabbies, fissures, wounds etc. Heals the ulcers easily.
7. வாதுமை நெய், தேகச்சூடு, கபதோஷம் போம், Sweet almond oil removes bodily heat, phlegmatic tendencies.
8. புன்னைநெய், முன்னிசிவு, பின்னிசிவு, வலிப்பு, விரணம், கிருமி போம், Dulbergial oil is good for emprostho tonos, opisthotonos convulsion, wounds, worms etc.
9. தேங்காயெண்ணெய், தீப்புண், படர்தாமரை, சிரங்குபோம் Cocoanut oil is useful in burns and scalding, eczema, itch etc.

). கடுகுநெய், குன்மம், இரத்தபித்தம், குட்டம், மகாவாதம், சயம், முளை, மூலம், சூலை போம்,Mustard oil is useful in dyspepsia, blood pressure, leprosy, rheumatism, phthisis external piles, gout etc.

1. நீரடிமுத்து நெய், சொறி, சிரங்கு, பெருவியாதி, சருமநோய் போம்.Jungle almond or maravetti oil is useful for itch, scabbies, leprosy and other cutaneous affections.

அடியிற்கண்ட மருந்து நெய் அல்லது தைல வகைகளுக் குண்டான குணங்களைப் பற்றி அவற்றுக் குண்டான மூலிகை குணத்தையே பார்க்கவும். In order to know the qualities or properties of the following prepared medicinal oils please refer the other Chief ingredient of which it is prepared.

. ஆவாரை நெய், senna ghee or oil.

. கொன்றைநெய், cassia ghee or oil.

. நாவல் நெய், jaumoon ghee or oil.

4. பொன்னாங்காணி நெய், sessile ghee oil.

5. கடுக்காய் நெய், gallnut ghee or oil.

6. வில்வநெய், bael ghee or oil.

7. அவுரி நெய், Indigo oil or ghee.

8. அறுகம்வேர் நெய், pannicgrass oil.

9. சமுத்திரா பழ நெய், Indian oak ghee or oil.

10. கண்டங்கத்திரிநெய், oil or ghee of prickly night shade.

11. தூதுவளை நெய், oil or ghee prickly shoonday.

12. முலைப்பால் நெய், breast milk ghee.

13. சுக்குநெய், oil or ghee of dry ginger.

14. பிரமி நெய், ghee or oil of diabetes plant.

15. கொடுப்பை நெய், same as No.4.

16. வில்லாரை நெய், ghee or oil of Indian penny wort.

17. சதாவேரிநெய், ghee or oil of water root (asparagus).

18. புளியாரை நெய், ghee or oil of sour sorrel.

19. பூசணி நெய், ghee or oil of ash pumpkin.

20. சோம்பு நெய், ghee or oil of anise.

21. கருவாப்பட்டை நெய், ghee or oil of cinuamam.

22. வெற்றிப்பூ நெய்.

23. நாரத்தை நெய், ghee or oil of bitter orange.

24. எலுமிச்சை நெய், ghee or oil of lime fruit.

25. ஆளிவிதை நெய், ghee or oil of lin seed.

26. கையாப்புடை நெய், ghee or oil of cajeput.

27. கற்பூர நெய், turpentine.

28. நாட்டு அக்ரோட் நெய், candlenut oil.

29. சீமைச்சோம்பு நெய், careway seed oil.

30. இலவங்கெண்ணைய்,oil of cloves.

31. கொத்தமல்லி எண்ணெய், oil of coriander.

32. பருத்திக்கொட்டை நெய், cotton seed oil.

33. திப்பிலிநெய், ghee or oil of long pepper.

34. புன்னை நெய், poon oil.

35. ஓம நெய், oil of omum.

36. நீலகிரி எண்ணெய், eucalyptus oil.

37. மாசிப்பத்திரி நெய், ghee or oil of fleabane.

38. கரிசாலைநெய், ghee or oil of eclipta or கையான்நெய்.

39. சதகுப்பை நெய், oil or ghee of dib.

40. முசுமுசுக்கை நெய், ghee or oil of bristly bryonia.

41. சேரங்கொட்டை நெய், ghee or oil markingnut.

42. தேற்றாங்கொட்டை நெய், ghee or oil of water clearingnut.

Ghee of animal origin:

1. பசுநெய் - தாகம் - உழலைப் பிணி அதிகட்க ரோகம், வாந்தி, பித்தாதிக்கம், விரணம், பிரமேகம், வயிற் றெரிவு, பித்தவிக்கல், இருமல், வயிற்று வலி, குடல் நெளிவு, ஆஸ்தி சூம்பல், மூலம் இவை போம். பத்தியத்திற்குதவும், Cow's ghee cures diseases such as thirst amadypsia or diposis, vomitting billiousness venereal ulcers, burning sensation in the stomach billous hiccup, cough, colic, atrophy of bones, piles etc used in diet.

2. காராம் பசு நெய் - கண்ணொளிவு, தேகபுஷ்டி உண்டாம் கண்புருவம் நெற்றி, சிரசு நோய்கள் போம்; Black cow's ghee gives brightness of vision and grow of flesh in the body and cures diseases of eyebrows, fore head, and the head.

3. எருமை நெய் அறிவு குன்றும், கண்ணொளி மங்கும், தேகஉஷ்ணம் போம். கரப்பான் உண்டாம், Buffaloe's ghee makes intellect and vision dull and developes a sort of Cutaneous diseas- carpaung but removes bodily heat.

4. வெள்ளாட்டு நெய் சிலேட்டுமாதிக்கம் போம், உடம்பை வளர்க்கும், கண்ணுக் கொளியுண்டாக்கும். பத்தியத்திற்குதவும், Goats ghee removes excess of phlegmatic humour, developes body, gives brightness of vision, useful in diet.

5. செம்மறியாட்டு நெய் — கபநோய் அதிகரிக்கும், Sheep's ghee — aggrevates phlegmatic diseases.

6. பள்ளையாட்டு நெய் — பித்த நோய் போம், மந்தம் உண்டாம்.Under sized goat's ghee cures billious diseases but promotes dullness of appetite.

7. குறும்பாட்டு நெய், வாயுவுண்டாம். Woollysheep ghee causes rheumatic affections.

8. கலப்புநெய் — உடம்பின் கொதிப்புபோம். சுக்கில விருத் தியும் பலமும் உண்டாகும். Mixed ghee removes bodily heat, increases secretion of semen, and affords strength.

9. ஒட்டைநெய் — நீரிழிவு, பித்தம்போம், Camel's ghee cures diabetes and bodily heat.

10. பன்றிநெய் — மூத்திரக்கடுப்பு போம். மூலக்கிராணி, வாதக்கடுப்பு போம், Pig's fat cures dysurea haemorroides rheumatism and is very efficious in herpes (அக்கி) if used externaily.

11. உடும்புநெய் — இரத்தக் கிராணி போம், Guana's fat cures chronic dysentery.

12. காக்கை நெய் — காமாலை போம், Crow's fat is useful in jaundice.

13. ஆமைநெய் — இரத்தமூலம் போம்.Turtle fat cures haemorroides.

14. ஓணான்நெய் — பின்னிசிவு தீரும். Lizard's fat for convulsions.

15. கரடி நெய் — வாதவேகம், பாதவெடிப்புபோம். Bear's fat cures rhematic affections and fissure of the foot.

16. மீன்நெய் — மாலைக்கண், இளைப்பு நோய்போம். Fish liver oil, codliver oil cures night blindness, phthisis.

நெய்க்கடம்பு, see நாய்க்கடம்பு.

நெய்க்கடுகு, வெண்ணெய் உருக்கி காய்ச்சியெடுக்கும் போது அடியில் நிற்கும் வண்டல், the sediment deposited at the bottom during melting of butter into ghee; 2. அகஸ்தியர் வல்லாதி 600-ல் சொல்லியிருக்கும் முறைப்படி பசுநெய்யை மற்ற மருந்துச் சரக்குகளோடு சேர்த்துக் காய்ச்சி வடித்த மருந்து நெய், இது வயிற்றில் ஏற்படும் நோய்களுக்குக் கொடுக்கப் படும், a medicated oil prepared with cow's ghee as chief ingredient along with other drugs according to the process laid down in Agastyar vallathy 600. It is prescribed for all diseases of the stomach.

நெய்க்கியாழம், பசுநெய்யுடன் மற்ற கடைச்சரக்குகளைச் சேர்த்துத் தயாரிக்கும் மருந்து நெய், medicated oil in common prepared from cow's ghee mixed with other bazaar drugs.

நெய்க்கிழி எண்ணெய்த் தோய்த்த சீலைத்துண்டு, lint or other cloth soaked in medicinal oil.

நெய்க்குப்பை.

நெய்க்குரணி, ஐங்கோலத் தைலம், அதாவது ஐந்து மாதத்திய தலைப்பிண்டத் தினின்று வடிக்குந்தைலம், a medicinal oil extracted from the first born fetus five months old; 2. அழிஞ்சில் பட்டையி னின்று வடிக்குந் தைலம், இது வாத நோய்களுக்கு மேற்பூச்ச மருந்தாக உபயோகப்படும், a medicated oil from the bark of Alangium by a peculiar process known to Siddhars. It is said to be an useful application in acute rheumatism or other rheumatic affectios.

நெய்க்குறி, தேரையர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், இதில் மூத்திரப் பரீட்சை விசேடித்துச் சொல்லியுள்ளது, a medical Tamil treatise by Theraiyar which treats about the examination of urine and their indications.

நெய்க்கொட்டான், பூவந்தி மரம், soap nut tree - Sapindus trifoliatus (emarginata); 2. தொழுக் கொட்டான் நான்கிலைப் பூவந்தி, four leaved soapnut tree - Hemygyrosa canescens.

நெய்க்கொட்டான்விதை, பூவந்திக் கொட்டை, soap nut.

நெய்க்கொட்டை, see நெய்க் கொட்டான்; 2. சிற்றிலை மடுக்கு, butterfly soapnut - Harpulia cupanoides.

நெய்ச்சசிகரி, சீமைத்தக்காளி, Europe brinjal, tomato - Hycopersicum esculentum.

நெய்ச்சட்டி, செங்கழுநீர், red Indian water lily - Nymphaea odorata; 2. பவளக்குன்றிமணி, jweller's red bead - Abrus precatorius; 3. நெய்ச்சட்டிக் கீரை, see நெய்ச்சட்டி.

நெய்ச்சட்டி, சீதா செங்கழுநீர், இச்செடி வருஷத்திற்கொரு

முறை வளர்ந்து ஓயும், இலை நீண்டு நான்குமூலை, பூக்கள் பிரிவினையுண்டு, பூவிதழ் ஊதாநிறம், வெளி இதழை விட இருமடங்கு நீளம், இது வங்காளம், கொரநாடு, மலையாளம் இவ்விடங்களில் காணலாம்.

இதன் சமூலத்தைக் கஷாயமிட்டுச் சுரத்திற்குக் கொடுக்க வியர்வையை அதிகப் படுத்தும், உட்சூடு போம், மூத்திரப்பை ரோகத்திற்கும், நீர்க் கடுப்பிற்கும் கொடுக்கலாம், கண்ணொளி, வீரிய விருத்தி யுண்டாகும், பசி, அழகு இவை களுண்டாகும், அன்றியும் மேகம், வெள்ளை, இரசகந்த பாஷாணத்தா லேற்பட்ட வாய்ப்புண், வாந்தி, அழற்சி இவைகளைப் போக்கும், இதன் விதையைக் குதிரைக்கு மசாலையாகக் கொடுக்கப்படும். இதன் பூ கண் சிவப்பை மாற்றும், இதன் இலைச்சாற்றை மற்றச் சரக்குகளோடு சேர்த்துத் தைலம் காய்ச்சி முழுக தலைப்பாரம், காமாலை, கைகால் எரிச்சல், கண்ணோய்கள், உட்சூடு இவைகள் போம், இதன் இலைச்சாறு வேப்பெண் ணெய்க் கசப்பை மாற்றி நெய்யாகச் செய்யும், ash coloured fleabane — Vernonia cinerea. It is an annual plant, leaves oblong, flowers panicled, corolla light purple, twice the length of the calyx. It is common in coramandal, Malabar and Bengal. The whole plant is medicinally used in decoction to promote perspiration in febrile affections and also for removing internal heat. It forms a useful remedy in diseases of the bladder, stranguary and for clearness of vision. It also promotes secretion of semen, creates hunger and beauty. It is a useful remedy in urinary diseases as gonorrhoea and in mercurial ptyalism,inflammation of the mouth vomiting etc. The seeds forms a constituent as an anthelmintic in horse masala. Flowers are administered for blood — short eyes. The medicated oil prepared from the juice of the leaves is used in oil bath as a cure for heaviness of head, jaundice, burning of the limbs, eye diseases and

internal heat. The juice of the leaves removes the bitterness and the smell of the margosa oil and converts it into ghee.

நெய்ச்சட்டிக்கீரை, சீதேவியார் செங்கழுநீர், இது வேப் பெண்ணெயை நெய்யாகச் செய்யும், a kind of waterlily — Nymphae odorata or Grewia orbiculata. It converts margosa oil into ghee.

நெய்ச்சாதம், நெய் கலந்த சோறு, rice food mixed cow's ghee.

நெய்ச்சாரிகம், see இரத்த வேங்கை.

நெய்ச்சி, See எண்ணெய்ச்சிக்கு.

நெய்ச்சிக்கு, நெய் குடலில் தங்குவதாலு ண்டாகும் அசீரணம், indigestion due to the presence of ghee in the intestines unassimilated; 2. நெய்ச் சிக்கு நாற்றம், rancid or musty smell of ghee spoiled by age; 3. நெய்யை உடம்பில் பூசிக்கொள்வதா லுண்டான நாற்றம்,ill flavour due to the ghee being smeared over the body.

நெய்ச்சிக்குபேதி, சிக்கு நெய்யை உட்கொள்வதனாலேற்பட்ட பேதி, purging due to taking rancid ghee in food.

நெய்ச்சிக்குபோக்கி, சிகைக்காய் அல்லது சீயக்காய், soap nut.

நெய்ச்சிட்டி, சிற்றிலைச்செடி, small leaved or ash coloured flea bane — Vernania anthelmintica alias coniza cinerea alias vermonia cinerea; 2. நெய்ச்சிட்டி, round sage leaved Indian linden — Grewia orbiculata; 3. சீதேவி செங்கழுநீர், see நெய்ச்சட்டிக் கீரை.

நெய்ச்சிட்டிக்கிழங்கு, செங்கழு நீர்க் கிழங்கு, bulb of Nymphae odorata.

நெய்ச்சிந்தி, பேய்க்கடலை, bitter bengal gram — Cicer genus.

நெய்ச்சீவிகம், நெய்ச்சிந்தி, which see.

நெய்ச்சுட்டி, see நெய்ச்சட்டிக் கீரை.

நெய்ச்சுண்டு, seeநெய்க்கடுகு.

நெய்தலாம்பல், see நெய்தல்.

நெய்தல், வெள்ளாம்பல், white Indian water lily — Nympae alba alias N.pubescense; 2. செங்கழுநீர், red Indian water lily — Nymphae odorata; 3. அல்லி, Indian water lily — Nymphae genus; 4. நெய்தல் நிலம். maritime tract; 5. குவளை, a variety of Egyptian water lily; 6. நெய்தலாம்பல், fringed water lily — Limnanthemum cristatum.

நெய்தல்நிலம், கடலோரதேசம், sea coast countries — maritime tract.

நெய்தல்விளைவு, உப்பு, common salt; 2. மீன், fish; 3. கடற்கரைகளிற் கிடைக்கும் பொருள்கள், அவையாவன, பவளம், முத்து முதலியன; கடல்படு திரவியம், substances obtained from the sea such as coral, pearl amber etc.

நெய்தற்கிழங்கு, ஆம்பற்கிழங்கு, இது சுக்கிலத்தை விருத்தி செய்யும், இக்கிழங்கை அவித்துச் சர்க்கரையிட்டுச் சாப்பிட உடம்பிற்கு குளிர்ச்சி, பித்த எரிச்சல், பிரமேகம், இரத்தபேதி இவைகள் போம், உலர்த்தி மாவாக்கி பாலிலிட்டு உட்கொள்ள குன்மம், பேதி, மூலம் போம்; பெண்கள் கர்ப்பிணியா யிருக்கும் போது மாதாந்த ருது காணில் இது தடுக்கும், அன்றியும் இதனால் அக்கிப் புண்போம், கண்ணுக்குக் குளிர்ச்சி யுண்டாக்கும், the tuberous roots of white Indian water lily (Nymphae pubescens alias N.stellata) taken with sugar after boiling it, not only cools the system but also cures urinary diseases and dysentery. Powdered roots mixed with milk and taken internally is a useful remedy in dyspepsia, diarrhoea and piles. It proves an efficacious remedy in stopping the menstrual discharge found in pregnant women. It is advantageously used in herpes and for cooling the eyes.

நெய்தனிலநீர், உவரி நீர். Salt water.

நெய்தனிலப் பறவை, கடற்காக்கை, sea crow.

நெய்தனில மக்கள், இவர்களுக்கு யானைக்கால், குடலண்ட

விருத்தியுண்டாம், people living in the maritime coastal tract are liable f~ filarial and hernia diseases.

நெய்தனிலமரம், நெய்தநிலத்தில் விளையும், அடம்பு, கோங்கு தாழை, பனை முதலியன, plants and trees growing in the maritime (coastal)tracts as sand binder, golden silk cotton tree screw pine etc.

நெய்த்தண்ணீர்,.

நெய்த்தல், கொழுத்தல், growing fat.

நெய்த்தோர், இரத்தம், blood; 2. ஒதிய மரம், Indian ash tree Odina wodier alias Rhus odina.

நெய்த்தோலி, நெய்ப்பசை அதிகமாயுள்ள ஓர்பொடி மீன், இது அசீரணத்தையுண் டாக்கும், small fish containing much fat and as such it is not easily digestible when eaten. see நெத்திலி.

நெய்நெட்டி, சம்பம்புல், a kind of sedge grass growing in wild or waste plains — Heath; 2. சம்பங்கோரை, elephant sedge grass — Typla eliphantina.

நெய்ப்பசை, எண்ணெய்ப்பசை, oiliness, greasiness.

நெய்ப்பயறு, சிறுதுவரை, small leaved ebony — Diosphyros microphylla.

நெய்ப்பரி, பன்னாடை, the web at the bottom of the palmyra tree the fiberous covering about the base of palmyra tree.

நெய்ப்பற்று, நெய்ப்பசை, stickiness of fat or ghee; 2. கொழுப்பு, fat or grease.

நெய்ப்பாகம், நெய்யினால் செய்யும் பண்டங்கள், ghee preparations.

நெய்ப்பான, கொடுத்த, filled with fat; fatty.

நெய்ப்பிடி, see நெய்ப்பசை.

நெய்ப்பிரியக்காய்ச்சல், எண்ணெய் கக்கும்படி காய்ச்சுதல், boiling down till the material which is boiled gives out or sheds all its oil contents.

நெய்ப்பீர்க்கு, நுரைபீர்க்கு, snake luffa — Cucmis sulcata. alias Luffa eschinata.

நெய்ப்பு, கொழுப்பு, fat. suet; 2.சிதல், white ant;

3.புல்லாமணக்கு, creeping castor plant — Sebastiana chamaclea; 4.சீழ், pus, matter.

நெய்ப்புச்சுவரி, மான் செவிக் கள்ளி, leaf spurge — Euphorbia nercifolia-alias Cacalia kleinia alias. E.nivulia.

நெய்ப்புள்ள, கொழுப்புள்ள, unctuous; 2. எண்ணெய்ப் பசையுள்ள, oleaginous.

நெய்மரம், மதுவிருட்சம்; வெண்ணெய் மரம், இதில் நெய்யைப்போல் உறையும் எண்ணெய் வாய்ந்துளதாலிப் பெயர், name given to several trees, the fruit or bark of which yields a solid oily or fatty substance such as Mowah butter, Cokum butter, Cocoa butter etc. see வெண்ணெய்மரம்.

நெய்மீன், வெள்ளிறால்மீன், a species of white prawns c.f. நெய்த்தோலி.

நெய்முட்டை, நெய்யெடுக்குங் கரண்டி, an oval spoon used for handling ghee.

நெய்மீன், See நெய்மீன்.

நெய்யடிசில், நெய் கலந்த சோறு, see நெய்ச்சாதம்.

நெய்யரி, See நெய்ப்பரி.

நெய்யன்னம், நெய்ச்சோறு, See நெய்ச்சாதம்.

நெய்யாடுதல், நெய்பூசி முழுகுதல், bath with ghee.

நெய்யாட்டல், வெண்ணெய் திரட்டல், collecting butter.

நெய்யுண்ணி, ஐவிரலி, (lit) ghee eater from its medicinal property,creeper known as bryony — Bryonia laciniosa.

நெய்விழுது, கிருதம், medicated ghee; 2. புதிதாகத் திரண்ட வெண்ணெய், fresh butter collected by churning curd i.e.fermented or wagulated milk.

நெய்வெட்டி, ஓர் கடல்மீன், a sea fish.

நெய்வைத்தல், உடம்பில் கொழுப்பேறுதல், becoming fatty; 2. மருந்துநெய், அதாவது கிருதம் தயாரித்தல், preparing medicated ghee.

நெரடுதல், உறுத்தித்தடவல், feeling by pressing; 2. தட்டுப்படுதல் feeling the location.

நெரலைத்தாளி, ஓர்வகைத் தாளிக்கொடி, a kind of hedge bind weed — Ipomaea genus.

நெரி, சொரசொரப்பு, roughness; 2. ஓர் நோய், a disease;3. நொறுக்குதல், crushing;4. நெரித்தல், see நெட்டி முறித்தல், 5. நறுக்குதல், slicing.

நெரிகட்டிசுரம், நெரிவீங்கி சுரம் காணுதல், filarial fever.

நெரிகொட்டை, நறுக்கிய பாக்கு, crushed acreca nut.

நெரிகுரல் படுதல், குழந்தை கட்டுத் தோஷத்தினால் குரல் கம்முதல், affection of throat through cold, sore throat in children due to planetary influence.

நெரிசல், விழி வீக்கத்தால் ஏற்படும் ஓர் கண்ணோய், an eye disease with pressure due to swelling of the eye ball. It is a form of swelling due to eye lids becoming tight over the eye and the eye lids do not completely cover the globe of the eye; 2. பசலை, Indian spinach—Spinosa oleracea.

நெரிசல், ஓர் வகைக் கண்ணோய், கரு விழியிலும் வெள் விழியிலும் தோன்றும், கருவிழி: 1. உஷ்ண நெரிசல், 2. சோணித நெரிசல் வெள்விழி: 1. துளி நெரிசல்; 2. சந்து நெரிசல்; 3. விரண நெரிசல், an eye disease that occurs both in the black and white of the eye. Their varieties are given above See கண்ணோய் வகை.

நெரிஞ்சகத்தி, நெரிஞ்சியிலை, leaf of caltrops — Ground burnut — Tribulus terrestris — leaf of.

நெரிஞ்சி, இது ஓர் முட்செடி, ஒன்றையொன்று பற்றி நிற்கும், இலைகள் நேர் நேராகச் சிறகைப் போன்றது, இலைக்கொழுந்து 5 -6 சோடியாகவும் சம அளவாகவும் இருக்கும், அடியில் மொசு மொசுப் புள்ளது. இலைக் காம்பு இலையை விடக் குட்டையானது; பூக்கள் கிளைகளினின்று பிரிந்து சிறு காம்புகளின் மேல் நிற்கும்; உள்ளிதழ் 5 பிரிவினையா யிருக்கும். இதழ் 5 அகலமாயும், நான்கு மூலையாகவும் இருக்கும்.

காய்கள் சிறியவை. முள் வாய்ந்தவை, பூக்கள் பெரியன, பிரகாசமான மஞ்சள் நிறம், நறுமணம் வாய்ந்தது, வருஷ முழுவதும் பூக்கும், இது எங்கு பார்த்தாலும் பரவியிருக்கும், மைதானம், தோட்டம், ஓரம், வயல், வாய்க்கால் ஓரம், குளம் குட்டைகளின் கரைகளிலும் காணலாம். வீட்டுப் புழக்கடைக் கொல்லைகளில் விசேஷம், இது கொரநாடு, தட்சணம், வங்காளம், திருவனந்தபுரம் முதலியவிடங்களில் மணற்பாங்குள்ள நிலங்களில் சாதாரணமாய்க் காணலாம்.

இதன் காய், இலை, வேர் இவைகளுக்கு நீர் போக்கும் குணமுண்டு, விதையைப் பொடித்துக் கஷாயமாக வைத்து, பாண்டு, வெள்ளைக்குக் கொடுக்கலாம், இக்காய் தசமூலத்தி லொன்றாகக் கருதப்படும். இதன் இளங்கொம்புகளைத் தண்ணீரில் போட்டுக் கலக்க நீருக்குத் தடிப்பேறிக் குழம்பாகக் காணும், இது வாய் கொப்பளிக்க உதவும். இலைக் கொம்பும் இவ்விதமாகிய தண்ணீரைக் குழம்பாக்கும் குணமுடையது, ஆகவே மோர் தடிப்பேறும்படி இதை உபபோகிப்பதுண்டு.

இதன்வேர் நார்த் தன்மையது, காய்கள் ஐங்கோணம், கடலைப் பருமன்; முள்வாய்ந்த தால் நடைப்போக்கு சனங்களுக்கு இடைஞ்சலா யிருக்கும். இக்காய்களுக்கு ஒருவிதமான ருசியும் வாசனையும் கிடையாது. விதைகளோ, சிறிது கசப்புடையவை. இதன் காய் நீர்ச்சுருக்கு, நீரடைப்பு, கல்லடைப்பு, மூத்திரவியாதி முதலிய நோய்களையும், உஷ்ணத்தையும் தணிக்கும், இதன் காயைக் கஷாயமிட்டு அத்துடன் நவச்சாரம் சேர்த்து மூத்திர எரிச்சலுக்குக் கொடுக்கலாம். சமூலத்தைக் கஷாயமிட்டு அத்துடன் சிலாசத்தும் சேர்த்து மேற்கண்ட நோய்க்குக் கொடுப்பதுண்டு; இதன் கஷாயத்துடன் எள், வெள்ளாட்டுப்பால், தேன் சேர்த்து கெட்ட பழக்கத்தினால் நேர்ந்த நபும்சகத்திற்குக் கொடுக்கலாம். இது கீழ்க் கண்டவாறு பலவகையாம், a thorny plant known as cow thorn

— Tribulus lanuginosus alias Tribulus terrestris. Trailing, leaves opposite, abruptly pinnated, leaf lets about 5 or 6 pairs nearly equal with a villous pubescens at the bottom, peduncle shorter than the leaf;flowers axillary, calyx five partite, petals five, broud obtuse bright yellow; fruits fine coccus fruits, small spinny, five cornered about the size of the Bengal gram being armed with prickles. It is a source of musance to foot travellers, the fruit possesses no taste or smell, but the seeds are slightly bitter, flowering through out the year. It will be found grown in all places in South India hedges of garden, ridges of fields, canals, tanks ponds pools, etc., and in plains. In back yards of houses and uncultivated lands it is found in abundance. It is very common in Coromandal, Deccan, Bengal, Travancore and other sandy places.

Fruits, leaves and root are diuretic in decoction, seeds powdered in infusion are used in dropsy and gonorrhoea. Fruits of classified as one of the ten principle drugs. Simple agitation of young branches in water produces a viscid mucilage. It is a good gorgle; the leafy stems are also used in the same way in thickening butter milk. The seeds are used in decoction in cases of painful micturation, stranguary calculous affections, urinary disorders. It is much esteemed as cooling. A decoction of the fruit is given with carbonate of potash in painful micturation. A decoction of the entire plant with bitumen and honey is also given for the said same affections. The decoction mixed with sesamen seeds, goat's milk and honey is said to cure impotency arising from malpractices. The varieties are mentioned below.

1. ஆனை நெரிஞ்சில், big or elephant caltrops — Pedalium murex.
2. செப்பு நெரிஞ்சில், red caltrops or pallair — Indigofera ennephylla alias Hedysarum prostratum.
3. சிறுநெரிஞ்சில், small nerunjil — Tribulus terrestris. .

4. கருநெரிஞ்சில், black pallair — Indigofera echinata alias Hedysarum rotundifolium.
5. கொடிநெரிஞ்சில்,same as சிறு நெரிஞ்சில்.
6. பெரு நெரிஞ்சில், same as யானை நெருஞ்சில்.
7. நல்ல நெரிஞ்சில், same as No.3.

NOTE:- All parts of this plant, especially the dried fruit are laid in high repute in South India as a diuretic. Another favourite mode of administration is to boil the fruit and root with rice, so as to form a medicated congee water, which is taken in large quantities. It is useful in spermatorhoea and diseases of genito urinary system. Water rendered mucilaginous by the plant is drunk as a remedy for impotence and so it serves as a tonic and aphrodisiac. Combined with other drugs it is prescribed for suppression of urine, bloody urine etc. The decoction of the putire plant*(செப்பு நெருஞ்சில்)* red pallair is given by Vaidyans for fevers and coughs and the expressed juice as an alterative in old syphilitic deseases.

நெரிஞ்சிக்கீரை, நெரிஞ்சியிலை, leaves of small caltrops.

நெரிஞ்சிமுள், நெரிஞ்சிக் கொடியின் முள், thistle, brier or thorns of caltrops.

நெரிஞ்சில், see நெருஞ்சில்.

நெரித்தல், நசுக்குதல், squeezing; 2. நொறுக்குதல், crushing; 3. சேர்த்தல், heaping; 4. நிமிட்டல், pinching.

நெரிநெட்டி, சம்பப்புல், reed or pith grass.

நெரிபுலம், கண்புருவம், eye brow.

நெரிநேவி, See நெரிநெட்டி.

நெரிபூசம், சொக்காய்க்கீரை, which see.

நெரிமீட்டான், ஓர் மருந்துப்பூடு, இது நசுங்கிய சதையை ஆற்றும், a medicinal plant used for curing bruises.

நெரியரிசிப்பாலெண்ணெய், see நெரியரிசிப் பாற்செடி.

நெரியரிசிப்பால், seeநெரியரிசி.

நெரியல், மிளகு, black pepper — Piper nigrum.

நெரியாசம், see நெரியரிசி.

நெரியாசிப்பால், நெரியாசிப்பாற் செடியின் பட்டையினின்று வடிக்கும் ஓர்வகைப் பாற்பிசின், இதற்கு சிலாரசம் என்றும் பெயர். இது உடம்பின் உஷ்ணத்தைப் போக்கி கபத்தை அறுக்கும்; அன்றியும் தலைநோய், சலதோஷம், சன்னி, தும்மல், பீனசம், பிரமேகம் முதலிய நோய்களுக்கு உபயோகப் படும்; இதைத் தைல வர்க்கங்களில் சேர்ப்பது முண்டு, இவ்வுறைந்த பாலை மெல்லுவதால் பல்லிறுகும், Indian storax — Altangia excelsa alias Liquid amber altingis. It is a milk resin collected from the bark of the gigantic tree. It is also known as Indian silaurus. It is a useful remedy in cases of internal heat of the body, phlegm, cold, delirium, catarrh of the nose and urinary disorders. It forms an ingredient in the preparation of medicated oils. The dried balsamic drops of the plant chewed acts as preservative of the teeth.

NOTE:— It is a general term for the gum resin of Altingia excelsa and also for those obtained from the trees viz—Altingia norouha (java storax) Liquidambar orientale (Indian storax) or styrax officinale (true storax). It is opaque and semifluid known to chemists as Styrax liquidus. The dried and compressed bark is made into fragrant cakes formerly known as Cortex thymiamatis.

நெரியாசிப்பாற்செடி, நெரியாசிப் பால் மரம், இது மிக்க உயரம், *60-100 அடி* இருக்கும், இலைகள் *3 - 4.5* அங்குலம், இரு புறமும் மொசுமொசுப் பாய் அல்லது இலையின் அடிப்பாகத்தின் நரம்புகளில் இழைகள் பொருந்தியிருக்கும், பட்டை கசப்பு, உறைப்பு, வாசனையுள்ளது; குத்தினால் பால் வரும். இதன் பாலினின்று வடிக்கும் எண்ணெய் சுறுசுறுப்பைக் கொடுப்பதுடன் கபத்தை அறுக்கும் குணமுள்ளதால் நாட்டு வைத்தியர்கள் மருந்துகளிற் சேர்ப்பார்கள், Indian storax tree — Liquidambar orientale. It is a gigantic tree 60-100 ft. leaves 3-4.5 inches glabrous on both surfaces or with tuft of hairs in the axils of the nerves beneath; bark is bitter, hot and aromatic and when wounded affords storax. the balsam contains volatile oil which is a stimulant and expectorant and so it is much used in medicines by native doctors. See எரிகாசு.

நெரிவருணச்சுக்கிரன், கருவிழியில் சிவந்த புள்ளியை வளர்ப்பிக்கும் ஓர்வகைக் கண்ணோய், a red flesh growth in the black of the eye.

நெரிவிஷம், கலப்பைக்கிழங்கு, plough root — Gloriosa superba.

நெரிவிடுதல், நெரிபிடித்தல், unfolding.

நெரிவிளா, நிலாவிரை, which see.

நெரிவு, எலும்பு நொருங்கல், fracture of the bone; *2.* சதைநெரிதல், contusion; 3. see நெரிசல்.

நெருக்கடம், see நெருக்கம்.

நெருக்கம், ஒடுக்கம், closeness; *2.* நோயின் கொடுமை, அல்லது மும்மரம், virulence of disease; *3.* மரணத்தருவாய், period of death.

நெருக்கல், see நெருக்குதல்,.

நெருக்குதல், அமுக்குதல், pressing; *2.* நெருங்கச்செய்தல், compressing; *3.* சுருக்குதல், making short, causing to shrink; *4.* நசுக்குதல், squeezing.

நெருங்கப்பிசைதல், அழுத்தப் பிசைதல், sqeezing by pressing hard with force.

நெருங்கியநாடி, படபடப்பான நாடி, frequent pulse.

நெருங்கிலை.

நெருஞ்சிப்பச்சை, see நெருஞ்சி.

நெருடப்பிரி, பொன்வண்ணச் சாலி, இது சாதிலிங்கத்தை மயினமாக்கும்; சூதத்திற்கு வைரி யெனப்படும், an unknown drug of yellow colour said to reduce vermillion into a past like wax and an enemical drug to mercury.

நெருடுதல், நிமிண்டுதல், pinching; *2.* விரல்களால் அழுத்தித்தடவிப் பார்த்தல், feeling by pressing with fingers.

நெருணாகம், சவ்வரிசி, sago.

நெருநெருப்பு, உள்வலி, internal pain; 2. வயிற்றுவலி, stomach ache; 3. பிரசவ இடுப்பு வலி, labour pain.

நெருப்பாறு, எரிமலையிலிருந்து வழியும் குழம்பு, rockmatter that flows out in a molten state from volcanoes — Lava.

நெருப்பி, கலைச்செம்பு, a superior kind of pure copper.

நெருப்பிடல், புடமெரித்தல், to set up a conflagration of fire for calcining medicines; 2. பிணம் சுடுதல், to set fire to the corpse.

நெருப்பு, தீ, fire; 2. பஞ்சபூதத் தொன்று, (தேயு) one of the five elements, fire; 3. உடற்சூடு, bodily heat; 4. கஸ்தூரி, musk; 5. வெடியுப்பு, nitre; 6. உதாரக்கினி, gastric fire.

நெருப்புக்கல், தீத்தட்டிக்கல், flint; 2. சக்கி முக்கிக்கல், a piece of firestone or piece of quartz used in olden days for stiking fire.

நெருப்புக்காலி, ஓர் சிலந்திப் பூச்சி, a kind of spider.

நெருப்புக்கிரை, பிணம், dead; 2. நீர், water.

நெருப்புக்குணம், கண்டைக்கால் நோவையும், உடம்பு கடுப்பு, வாத சிலேட்ம ரோகம்போம், quality of fire i.e. fomentation will relieve pain of the calf muscles, and pains caused by wind and phlegn humours put together.

நெருப்புக்குள்ளுப்பு, வளையலுப்பு, glass gall — Febvitri.

நெருப்புக்கொப்புளம், தீப்புண், burns.

நெருப்புக்கொள்ளி, கொள்ளிக்கட்டை, fire brand; 2. தேள்கடி, scorpion sting.

நெருப்புக்கோடாமூலி, one that is resistant to fire.

நெருப்புக்கோழி, நெருப்பை விழுங்கும் கோழி, ostrich; 2. வான்கோழிச் சேவல், turkey four (cock).

நெருப்புச்சாணை, ஓர்வகைச் சாணைக்கல், a kind of whet stone.

நெருப்புச்சாலம், see அக்கினிச் சாலம்.

நெருப்புச்செயநீர், அக்கினித் திராவகம், nitric acid.

நெருப்புத்தண்ணீர், தீ நீர், distilled water; 2. கொதிநீர், boiling water; 3. நீராவி, steam; 4. மிதமிஞ்சிய குளிர்நீர், extremely chill water.

நெருப்புத்தம்பம், see அக்கினித் தம்பம்.

நெருப்புத்திராவகம், see அக்கினித் திராவகம்.

நெருப்புப்பட்ட புண், தீப்புண், burns; 2. நான்கு வகையான தீச்சுட்டப் புண்; அவையாவன:- 1. நிறமாற்றுப் புண்; 2. கொப்புளப் புண்; 3. தீய்ந்த புண்; 4. அழிபுண், the four kinds of or degrees of burns viz one with change of colour; 2 one accompained by blister; 3. black without much pain; 4. sloughing wound.

நெருப்புப்பறக்கும் சுரம், சூடும் எரிச்சலுமுள்ள சுரம், fever accompanied by excessive heat and burning sensation — Ardent thermal fever.

நெருப்புண், தீச்சுட்ட புண், burns; 2. வெந்நீரால் விரிவுண்ட அல்லது வழுவுண்ட புண், wound caused by hot water or any hot liquid.

நெருப்புமரம், தில்லை மரம், which see. 2. see சோதிவிருட்சம்.

நெருப்புமூலி, தீச்சுட்டதுபோல் எரிச்சலையுண்டாக்கும் ஓர் பூடு, அதாவது கொடி வேலி, a drug causing burning sensation — lead wort — Plumbago zeylanica; 2. மிக்க சூட்டை யுண்டாக்கு மூலி, drug causing intense heat in the system; 3. கொப்புள மெழுப்பு மூலி, drug causing blisters; 4. சோதிப்புல், burning bush.

நெருப்புமேனி, நெருப்பைப் போன்ற சிவந்தவுடம்பு, red body as bright as fire.

நெருப்புவண்டு, கொப்புள மெழுப்பும் வண்டு, telini fly canth arides raising blisters.

நெருப்புவர்ணம், சிவந்தநிறம், red colour.

நெருப்புவிரணம், see நெருப்புப் புண்.

நெருப்புவிழுங்கி, see நெருப்புக் கோழி, ostrich.

நெருமதங்கைக்குறியான், வெட்டிவேர், cuscus root — Andropogon aromaticus.

நெர்க்குண்டி, see நிர்க்குண்டி,.

நெலவர், நிலவாகை, which see.

நெல், நெற்பயிர், இது ஓர்வக்கை தானியம், இந்தியாவில் வங்காளம், ஆசாம், பர்மா, சென்னை, பம்பாய் மாகாணம் இவ்விடங்களில் இதன் அரிசியையே உணவாகக் கொள்ளப்படும். இது கோதுமை முதலானவைகளை விட மிகச் சிறந்ததாகும். நெல்லைக் குத்திச் சுத்தப் படுத்தியதுதான் அரிசியெனப் படும். இவ்வரிசி எளிதில் சீரணிக்கக் கூடியதால் தனவந்தர் களுக்கும், நோயாளிகளுக்கு முக்கியமான ஆகாரம், போஷிக்கும் வகையில் கோதுமையைவிட அவ்வளவு சிறந்ததல்ல; உஷ்ணதேசத்திய சனங்களுக்கு இது ஓர் சிறந்த உணவுப் பொருளாகும், மிகஎளிதில் சமைக்கக் கூடியது, இதன் கஞ்சி வாலிபர், குழந்தைகள் இவர்களுக்கு முக்கிய ஆகாரமாகும். அதிசார பேதிக்கு இதை உடைத்துக் கஞ்சி காய்ச்சி உபயோகிக் கலாம். சுரம், வைசூரி, வயிற்றுக்கோளாறு, வெள்ளை முதலிய மேகநோய்கள் இவைகளுக்குக் கொடுக் கலாம். கஞ்சித் தண்ணீரை இறுத்து நோயாளிக்கு ஆசன வழியாகவும் புகட்டலாம். இதன் மாவைக் களியாகவும் கிண்டிக் கட்டலாம். அம்மைநோய், அக்கினி விசர்ப்பி, வேர்க்குரு முதலிய சருமநோய்களுக்கு இதன் மாவை மேல் தூவலாம். தீச்சுட்டபுண், வெந்நீர்ப்புண் இவைகளுக்கு இதன்மாவைத் தூவலாம். ஆளி விதைக் கட்டுக்குப் பதிலாக இம்மாவைக் களியாகக் கிண்டி நோய்களுக்குக் கட்டலாம். ஆகவே சமயத்திற்குத் தக்கபடி நெல்லைப் பலவிதமாகப் பதப்படுத்திக் கொள்ளலாம். நெல்லையே பொறியாகவும் அவலாகவும் வறுத்தும் இடித்தும் உணவிலும் நோயாளிக்குப் பத்தியத்திலும் உபயோகிக்கலாம். இவ்வரிசி யினின்றும் காடி, சாராயம் முதலியவை இறக்கப்படும்; நெல் பொதுவாக நிலவளப் பத்திற்கும் தேசத்திற்குத் தக்கபடி விளையுமாதலால் அது அனேக விதப்படும். நமது நாட்டில் வழங்கும் முக்கியமான நெல்வகைகள் அடியிற் கூறப்படும், paddy crop — Oryza sativa. It is one of the most useful food grain forming the staple food of those living in Bengal, Assam, Burma and South India. It is considered in some respects more useful than wheat. Husked paddy is known as rice which is not only nutritious but also easy of digestion and therefore suited to weak stomach. It is chiefly used by richer classes, patients and other debilitated persons. In nutritious value it is not superior to wheat, but it is best suited food for the people of tropical climate and is very easily cooked. For young persons and invalids nothing is so good in the way of puddigs as those prepared from rice. It should be ground before use to correct diarrhaeic tendency. Rice conjee mixed with lime juice forms an excellent remedy in cases of fevers, small pox, measles, gonorrhoea and other urinary disorders and inflammation of all kinds. Plain rice water is also used as an enema in bowel affections. rice and rice flour are utilised in medicine in the form of powder and poultice. It forms a soothing application in small pox, measles, erysipelas, prickly heat, and other inflammatory affections of the skin. It is also considered as an excellent remedy in cases of burns and scalds. Rice poultice is used also as substitute for linseed meal. Paddy and rice are prepared in different ways according to its use in Medicine or commerce and the process or method are clearly described in medical works and other commercial treatises. The paddy itself prepared as Pori and Aval (flakes) and used as an ordinary food and in diet. alcoholic liquor vinegar are also prepared from rice by way of fermentation. Paddy consists of different varieties according to the climatic condition of the place and the nature of the soil. The following are the chief varieties grown in the Tamil country.

1. அறுவதாங் கொட்டை அல்லது குருவை, 60 days or two months growth to harvest.

2. ஆனைக்கொம்பன், elephant's tusk from its colour.

3. கடம்பு, ஓர்வகைக் கார்நெல், a kind of black paddy.

4. கலிங்கசம்பா, paddy introduced from Andra districts, same as வாளைச் சம்பா.

5. நாநூா, dark or wild paddy; red rice.

6. கல்லுண்டை, hard round rice.

7. கற்றாழை, paddy sown broad cast in Tanjore.

8. மடங்கல், a summer catch crop.

9. மணக்கத்தை, a third sort of paddy (black and white).

10. மானவாரி, sky rain paddy grown without irrigation.

11. மிளகு அல்லது மிளகுசம்பா, Black pepper paddy.

12. மோசணம், same what red and yellow paddy requiring not much water.

13. நரியன், wild paddy.

14. நவரை, ninety days paddy.

15. நீலச்சம்பா, some what black paddy grown without irrigation.

16. நீர்வெள்ளை, Eight months paddy (white).

17. ஒட்டடன், rough hairy grain sticking to clothes.

18. பிசானம், white tawny paddy — Title from colour of husk.

19. பிசினி, paddy grown on high level.

20. பூம்பாளை, flower sathe from colour of grain.

21. காடைக் கழுத்தன், Quail necked paddy.

22. சிறுமணியன், small grain (white and red).

23. ஈசுரக்கோவை, brown rice paddy.

24. சுருணைவெள்ளை, white curl paddy.

25. சம்பா copper coloured grain with various varieties.

26. தில்லை, Chidembaram rice paddy from S.Arcot.

27. திருவரங்கம், reddish crop originally from Srirangam.

28. துய்யமல்லி, clear white and soft grain.

29. வரிச்சம்பா, title from stripes or spots on paddy.

30. வாடைச்சம்பா, ship sumbah.

31. வாலான், long tailed grain.

32. வெள்ளைமிளகு, white round paddy.

NOTE: The transplanting system is considered to be more

advantageous for the poorer description of soil and better class of paddies are obtained by nursery process. There are also wild paddies in some swamps expanses. rice flour and water is used as a chemical antidote in poisoning by preparations of mercury, copper, zinc, silver and lead. The conjee from rice is a good demulcent and refrigerent drink in febrile and inflammatory diseases. Rice is of a less asperient quality than any other grain and is therefore the sofest and best food in bowel complaints.

Vaidyans are particular as to the kinds of rice they prescribe only when the rices of different crops are supposed to have very different effects. Ordinary rice which forms the staple food of a very large population is a valuable food abounding in starch, not destitute of albuminates and salts, easily grown, easily cooked and easily digested. It is deficient in nitrogenous element and so considered the lowest of the cereals and hence it demands the addition of meat fish, leguminous seeds as dholl etc., of milk and ghee or other fat to be added. It is generally insipid and needs the aid of condiments.

Rice should be kept at least for 6 months before it is used as food, otherwise indigestion, diarrhoea are likely to follow. Parboiled rice is for better than what is called table rice used by Europeans and Brahmins. Rice flour is also in use for the preparations of cakes sweet meats, hoppers etc.

நெல், நெல்லி, Indian gooseberry, கீழாநெல்லி, which see.

நெல்காரிகம், கருங்குருவையரிசி, red rice with black husk.

நெல்மணி, நெல், paddy seed.

நெல்முளைக்கிருமி, சிலேட்டு மத்தால் இரைப்பையில் உற்பத்தியாகி உள்ளாக உலாவும் ஓர்வகைப் பூச்சி, a very small worm or organism found to be moving about in the stomach, the existence of which is due to phlegmatic causes.

நெல்லம்புல், வைக்கோல், paddy straw.

நெல்லரிசி, நெல்குத்திய அரிசி, rice from husked paddy.

நெல்லவல், அரிசியவல், pounded flat rice (flaked rice) obtained from fried paddy.

நெல்லளவு, நெல்லிடையளவு, paddy grain weight.

நெல்லாணி, Guinea peach — sarcocephalus cordatus.

நெல்லி, நெல்லிக்காய்மரம், இது சாதாரணமாய் எங்கும் காணக்கூடிய மரமாதலால் அதிகமாக விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இம்மரம் கோணலாயும், மனித வுடம்பைப்போல் கனதியாயு மிருக்கும். இதன் இலைகள் மாறிமாறி யிருக்கும். இரு பிளவுண்டு, சிறகைப் போன்றது, பூக்கும் மரம், இலைக் கொழுந்து அனேகம், இலைக்காம்பு நீளம், வட்டம், பூவிதழ் ஆறு பிரிவி னையுடையது, பூக்கள் இரண்டுவிதம், ஆண்பூ, பெண்பூ, காய் உருண்டை, சதைப்பற்றுள்ளது, கொட்டை முக்கோணம், 3 அறை, ஒவ்வொன்றிலும் 2 விதை களிருக்கும், பூக்கள் சிறியவை, பச்சை கலந்த மஞ்சள் நிறம், சித்திரை முதல் கார்த்திகை வரை பூக்கும். இது கொரநாடு, மலையாளம், தட்சணம், வங்காளம் முதலிய இடங்களில் விசேஷமாய்க் காணப்படும், கடற்கரை ஓரங்களிலும் காணலாம், காயைப்பார்த்தே மரத்தை நிர்ணயிக்கலாம், இதன் காய்க்குணத்தைப் பற்றி நெல்லிக்காய்க்கீழ்க் காணவும், உடம்பின் குளிர்ச்சிக்காகவும், பித்தாதிக்கம், வாந்தி இவைகளைப் போக்கவும் இதன் விதையை உள்ளுக்குக் கொடுப்பதுண்டு, இவ்விதைக் கஷாயம் வைத்துச் சுரத்திற்குக் கொடுக்கப்படும், அன்றியும் நீரழிவுக்கும் இதை உபயோ கிப்பதுண்டு. இலைகளை ஊறற் கஷாயமாகத் தயார் செய்து கண்ணோய்க்கு உபயோ கிக்கலாம், இதன் வேர்ப் பட்டையைச் சூரணித்துத் தேனில் குழைத்து வாய்ப்புண்ணுக்குத் தடவ லாம். மரத்தின் பட்டைக்குத் துவர்ப்புக் குணமுண்டு. ஆகவே, இதைத் தோலுக்குப் பதப்படுத்த உபயோகப் படுத்தலாம். அதிசார பேதிக்கு இப்பட்டைச் சூரணத்தை உள்ளுக்குக் கொடுக்கலாம். இதன் இலைக் கொழுந்தை அரைத்து மோருடன் கலந்து வைத்தியர்கள் சீதபேதிக்குக் கொடுப்பதுண்டு, இதன் இலைகளைக் கிணறு, குட்டை முதலியவைகளிற் போட்டு வைக்க, அவைகளிலுள்ள மாசுகள் நீங்கித் தண்ணீர் சுத்தப்படும்.

இதன் வேரினால் வாந்தி, அருசி, திரிதோஷ கோபம், மலச்சிக்கல், சுரதோஷம், சன்னிதோஷம் இவைகள் போம், பச்சை வேர்ப்பட்டைச் சாற்றினோடு சிறிது தேனும் சேர்த்துக் கொடுக்கப் பிரமேகம் போம், இதன் இலைக்கஷாயத்தை வாய் கொப்புளிக்க வாய்ப்புண் ஆறும், இதன் பூவிற்கு உஷ்ணத்தை தணித்து மலத்தை இளக்கச் செய்யும் குணமுண்டு, காயைப் போலவே பட்டைக்கும் துவர்ப்புக் குணமுள்ளதால் மருந்தில் உபயோகமாகும். வேரினின்று தயாரிக்கப்படும் நெல்லிப் புளிப்பு காமாலை, குன்மம், இருமல் முதலியவைகளைப் போக்கும். இலையூறற் கஷாயத்துடன் சோம்பு சேர்த்துக் கொடுக்க கிராணிக் கழிச்சல் போம், இக்கசப்புக் கஷாயம் பலவிருத்தி மருந்தாகவும் கொள்ளலாம். இக்காயினின்று இறக்கிய எண்ணெய் கூந்தல்வளர உபயோகமாகும். இலையினின்று வாலை ரூபமாய் வடித்த எண்ணெய் வாசனைச் சரக்கோடு சேர்க்கப்படும். நெல்லி வற்றல் மலச்சிக்கலைப் போக்கும், அன்றியும் சீரண வுறுப்புக்களுக்குப் பலத்தைக் கொடுக்கும். இதன் வேரை உலர்த்தி இடித்துச் சூரணித்து அத்துடன் மேல்தோல் போக்கின எள்ளையும் சேர்த்துச் சாப்பிட மூளையின் நரம்புகளுக்குப் பலமுண்டாகி ஞாபக சக்தியை விருத்தி செய்யும். ஆகவே மூளையின் உறுப்புகளைப் பலப்படுத்த இது ஒரு சிறந்த மருந்தாகக் கொள்ளப்படும், இம்மரத்தி னின்று பிசின் எடுக்கலாம். அடியிற் கண்டபடி இது பலவகைப்படும். garden gooseberry — Phyllanthus emblica. This tree is very common and is found almost everywhere and so needs not much description and detail. Tree, crooked and thick as a man's body, leaves alternate, bifarious, pinnate and flower bearing, leaflets numerous, petioles striated and round, calyx, six parted, flowers in the male very numerous in the female few, stigma three, drupe globular, fleshy smooth for further descriptions see நெல்லிக்காய். The tree is known by its fruit. In fusion of the dried fruits is cooling remedy and is used for biliousness and nausea.

Decoction of the fruits is given internally for fever and diabetes, infusion of leaves is applied to sore eyes. Bark of root mixed with honey is applied, to aphthous, bark is useful in diarrhoea. As the bark itself is an astringent it is used for tanning purposes. The young (tender) leaves mixed with sour milk are given by Native Doctors ;in dysentery. The young branches are put in to the wells, tanks etc., to impart a pleasent flavour in the water especially if it is muddy or impaired from the accummulation of vegetable matter or other causes.

A decoction of the root forms a useful remedy in cases of nausea or vomiting, aggravated condition of the three bodily humours etc. Juice of the fresh root mixed with honey is generally prescribed for venereal affections and urinary disorders. decoction of the leaves is used as a gorgle in aphthae. The flowers are employed for refrigerent and aperient qualities. The bark partakes of the astringency of the ripe fruit and as such it is used in medicine. A fermented liquor prepared from the root is used in jaundice, dyspepsia, cough etc. The leaves are used as infusion with fenugreek seeds in chronic dysentery and also as a bitter tenic. A fixed oil obtained from the berries is used for promoting the growth of hair. The essential oil distilled from the leaves is largely employed in perfumery. The fruit made into a confection is useful in habitual constipation. It is employed with much benefit in various complaints connected with digestive organs. Powdered dried roots mixed with an equal quantity of the powder of black sesamum removed of its black coating, forms an effecient remedy in strengthening the nerve cells of the brain and affording retentive memory. It has a wonderful virtue of bestowing super strength, vigour and life to the brain cells and fibres. The tree yields gum. It consists of different kinds as follows.

1. நில நெல்லி, lowly nelly—Phyllanthus madras patensis.
2. தோப்புநெல்லி, garden nelly — Emblica officinalis.
3. காட்டு நெல்லி, the same as நெல்லி.

4. கருநெல்லி, black honey shrub — Phyllanthus reticulatus.
5. கொடி நெல்லி, an unknown variety.
6. சீமை நெல்லி, Barbadoes cherry — Eugenia uniflora. 2. common ovate leaved Barbadoes cherry — Malpeghia coccigera.
7. அருநெல்லி, countrystar gooseberry — Phyllanthus distichus.
8. செந்நெல்லி, a red variety of nelly (unidentified).
9. மேலா நெல்லி, same as No.4.
10. கீழா நெல்லி, Indian annual phyllanthus — Phyllanthus niruri.
11. நீர்நெல்லி, same as No.4.
12. சிறுநெல்லி, the same as No.7.
13. வெண்ணெல்லி, white nelly — Phylanthus Pendulous.

NOTE: Though No.4 is botanically given out as Phyllanthus reticulata it is not the one referred to in Siddhars Tamil Medicine See Tamil Materia Medica p.p. 65 and Bogar Nigandu (vocabulary) P.P.297. It is a rejuvenating drug as described there in, said to be found only in forests. Item No.5 is also an unknown variety but is known as also a rejuvenating drug. Nothing is known about item No.8 which is a red variety.

நெல்லி, ஐங்காயம், which see; 2. காட்டுக் கீழா நெல்லி, same as பூலா, which see; 3. நாறுநெல்லி, same as முன்னை, which see; 4. பெருநெல்லி, same as நெல்லி, which see.

நெல்லிக்கந்தகம், see நெல்லிக் காய்க் கந்தகம். which see.

நெல்லிக்கந்தகம், se eநெல்லிக்காய்க் கந்தகம்.

நெல்லிக்காயடை, பச்சை நெல்லிக்காயைக் கொட்டை நீக்கி அரைத்து அடையாகத் தட்டி காயவைத்தது, a thin round cake prepared by grinding the pulp of the fresh Indian goose berry and making it like a cake and drying it under the sun.

நெல்லிக்காயரிட்டம், நெல்லிக் காய் இரசம் அல்லது சாற்றை அடியிற்கண்டபடி புளிக்க வைத்து இறுத்த இரசம், மேற்படி இரசத்துடன் 1/8

பாகம் தேனையும் கூட்டி அதில் திப்பிலித்தூளும் சர்க்கரையும் சேர்த்து, கொதிக்க வைத்து, சாடியில் ஊற்றிப் புளிக்கும்படி சிலநாள் வைத்திருப்பது, இதை காமாலை, குன்மம், அசீரணம், இருமல் முதலியவைகளுக்குக் கொடுக்கலாம், fermented liquor of embolic myrobalan is prepared as follows:- Fresh juice of the fruit mixed with 1/8 quantity of honey, powdered long pepper and sugar is boiled sufficiently for a while and then allowed to ferment in an earthern jar. It is prescribed for jaundice, dyspepsia, indigestion, cough etc.

நெல்லிக்காயூறுகாய், பச்சை நெல்லிக்காயை உப்பிலிட்டு ஊறப்போட்டாவது, அல்லது முழுக்காயோடு உப்பும், மசாலையும் சேர்த்து நல்லெண்ணெயில் ஊறப் போட்டு பதப்படுத்தியாவது தயாரிக்கப்படுவது, prickle of embolic myrobalan simply soaked in common salt and condiments added to it and preserved in gingelly oil. The fruits may be preserved with the common salt only.

நெல்லிக்காயெண்ணெய், நெல்லிக் காய்ச் சாற்றுடன் மற்ற கடைச்சரக்குகளை விதிப்படி கலந்து காய்ச்சி வடித்த தைலம், medicated oil prepared with the juice of embolic myrobalan as the chief ingredient with other bazaar drugs added to it and then boiled down as per rules laid down.

2. பிஞ்சு நெல்லிக்காயினின்று வடித்த எண்ணெய், இதனால் தலைமயிர் வளரும், a fixed oil obtained from the berries has the effect of strengthening and promoting the growth of hair.

3. நெல்லி மரத்தின் இலைகளி னின்று தயாரித்த எண்ணெய், இதை வாசனைச் சரக்குகளுடன் சேர்க்கப்படும், the essential oil extracted from or distilled from the leaves; it is largely employed in perfumery.

நெல்லிக்காய், நெல்லிமரத்தின் காய், இக்காய்க்குக் கொடி எலுமிச்சம்பழத்திற்கேற்ற இரசம், குணம், வீரியம் இவைகளுண்டு, இது மஞ்சள் நிறம், நாருள்ளது, சதைப்பற்றிருக்கும், புளிப்பும்

துவர்ப்பும் வாய்ந்தது, இதன் இடையே முக்கோணக் கொட்டையிருக்கும். இது குளிர்ச்சியைத் தரும். பித்தத்தை நீக்கும், இதை ஊறுகாய் போட்டுச் சாப்பிட பீனசம், வாந்தி, கபம், மலபந்தம், தலைசுற்றல் போம், ஆகவே, உணவில் இதை வடையாகவும், துவையல் அல்லது பச்சடியாகவும் செய்து சாப்பிட மேற்கண்ட நோய்களும், பைத்தியம், வாய்நீர் சுரப்பு, மலபந்தம், பிரமேகம் நீங்கும். இதன் வற்றல் கஷாயம் சூடு, பித்தமயக்கம், ஒக்காளம், அரோசிகம் முதலிய நோய்களைக் குணப்படுத்தும், இதன் காய்ந்த காய்கள் கொட்டையும் விதையும் இல்லாமலே கடைகளில் கிடைக்கும்.

இது சீதளகாரி, மூத்திர வர்த்தனகாரி, இலகுமலகாரி, உதரவாதகரகாரி, (எனப் பெயரால் வழங்கும்) உலர்ந்த காயோடு இரும்பைச் சேர்த்துக் கொடுக்க, சோகை, காமாலை, குன்மம் போம், பச்சை நெல்லியை அரைத்து, தொப்புளின் கீழ்ப்பூச நீர்க்கட்டு உடையும், உலர்ந்த நெல்லிக்காய் ஊரற்கஷாயம் கண்சிவப்பு முதலிய கண் ணோய்க்கு பயோகிக்கலாம், the fruit of Indian goose berry — Emblica myrobalam. In essence quality and potency, it very much resembles these lemon creeper. It is yellow, fibrous and fleshy. It is sour with astringency, in the centre will be found the nut triangular in shape. It is cooling and can remove biliousness. It is pickled and prescribed for catarrh of the nose, vomiting, phlegm, constipation and vertigo. In food it is used in different forms such as dried cakes, paste, chutney and pickles, when it is said to cure not only the above mentioned diseases but also insanity in salivation, constipation, urinary disorders etc. Decoction of dried cakes is a useful remedy for bodily heat, giddiness through bilious affections, nausea and loss of appetite. The dried fruit free from nut and seeds are being sold in the bazaars. The fruit is refrigerent,diuretic laxative and carminative. The dried fruit

mixed with iron is a valuable remedy in anemia, jaundice and dyspepsia. A paste of the fresh fruit is on useful external application over the public region in irritability of the bladder. An infusion of the dried fruit is used as a collyrium in ophthatmia, inflammation of the conjunctive and other eye Complaints.

N:- The last of the pulp of the fruit is acid astringent and some what acrid. The dried fruit is about the size of a cobnut, wrinkled of a greyish black colour if collected when immature, but yellowish brown if mature. Fruit in fresh state has purgative properties but when dry astringent, contains a large proportion of gallic acid. The fruit is substituted for British gentian and calamba, it is used as an adjunct to hair dyes.

நெல்லிக்காய்க் கந்தகம், நெல்லிக் காயைப் போல் மஞ்சள் நிறமான கந்தகம், இது படிகாரத்தைப் போல் துண்டு துண்டுகளாகக் கிடைக்கும், பிரகாசமான மஞ்சள் நிறமும் சிறிது பச்சை நிறமும் கலந்துள்ளது, கடையில் கிடைக்கும், எல்லாவித கந்தகத்தைப் பார்க்கிலும் இது மிக்க சுத்தமானது, பதார்த்த குணசிந்தாமணிப்படி இதற்கு 18 குட்டம், அலசம், வல்லைக்கட்டி, கவிசை, மகோ தரம், குன்மம், குந்தநோய், மகாவிஷம், மேகநோய், வாதசுரம், வாதாதிசாரம், கபக்கிராணி, கபாதிக்கம் இவைகள் போம், myrobalan ghandac. It occurs in crystatline pieces like those of alum (rhombic crystals). It is of a bright yellow colour with a shaded of green. It is considered as the purest of all forms of sulphur available in the markets and as such it is widely used in Tamil Medicine.

According to the Tamil Materia Medica, it is found to be a useful remedy in cases of eighteen kinds of cuteneous affections, indigestion in children, ovarian tumour, ascites dropsy, dyspepsia, protrusion of the cornea, poisoning venereal complaints, rheumatic fever, diarrhoea through disorders of wind humour, chronic diarrhoea through phlegmatic causes, aggravated phlegm etc.

நெல்லிக்காய்சர்பத், பச்சை நெல்லிக் காயினின்று தயாரிக்கும் சர்க்கரைப்பாகு சேர்ந்த ஓர்பானம், இது உடம்பிற்கு குளிர்ச்சியைத் தருவதுமல்லாமல் மூத்தி ரத்தைப் போக்கும், the shrup prepared from fresh fruit, it is a cooling drink which is said to have diuretic effect.

நெல்லிக்காய்ச்சாறு, பச்சை நெல்லிக் காயினின்று, பிழிந்தசாறு, அதாவது இரசம், இதற்கு மலத்தை இளக்கி மூத்திரத்தைப் போக்கும் குணமுண்டு, குளிர்ச்சியையும் தரும், juice extracted from embolic myrobalam. It is a laxative and diuretic.

நெல்லிக்காய்த் துவையல், பச்சை நெல்லிக்காயை அடுப்புக் கும்பியில் செருகி, நீர் வற்றியபின் கொட்டை நீக்கி அத்துடன் கொத்த மல்லியிலை, கொப்பரைத் தேங்காய், வெங்காயம், பூண்டு, உப்பு, பச்சை மிளகாய் முதலியவைகளைத் திட்டப் படி சேர்த்து, பழச்சாறு விட்டரைத்துத் துவையலாகச் செய்து தினப்படி சுண்டைக் காய்ப் பிரமாணம் சோற்றில் கூட்டியுண்ண, பசி தீபனத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து உடம்பின் சூட்டையும் பித்தத்தையும் தணிக்கும், condiment paste of embolic myrobalam. It is a paste prepared in the kitchen in the following manner. The fruit is burried in the hot ashes of the oven and taken out after sometime when the water is completely dried out. The nut is removed and to the pulp is added corriander leaves, dried cocoanut, onion, garlic, common salt, green chillies etc.,and ground into a paste with the juice of lime or lemon. This paste of the size of chundai (Indian current tomato) taken daily mixed with food (cooked rice) is considered a stimulant and as promoting hunger or appetite. It is said to allay the bodily heat and excess of bile.

நெல்லிக்காய்த்தைலம், see நெல்லிக்காயெண்ணெய்.

நெல்லிக்காய்ப்பற்று, கொட்டை நீக்கிய பச்சை நெல்லிக்காயை

அரைத்துத் தொப்புளின் கீழ்ப்பற்றுப்போட மூத்திரப் பை அழற்சியைப் போக்கும், a paste of Indian goosberry after removing the nut is a useful external application over the public region in irritability or inflammation of the bladder.

நெல்லிக்காய்முறப்பா, நெல்லிக் காயைக் கொட்டை நீக்கித் தறித்துத் தேனிலிட்டு ஊறவைக்கும் ஓர் யுனானி மருந்துமுறை, இதனால் சுரம், அரோசிகம், தாகம் போம், a Unani medical preparation in which the fresh embolic myrobalan is deprived of its nut and then cut in small pieces and preserved in honey the whole fruit is also preserved in honey.

நெல்லிச்சாறு, see நெல்லிக் காய்ச்சாறு.

நெல்லிடை, நெல்லினளவு, the weight of a paddy grain.

நெல்லித்தாளி, செம்பை, sesban — Coronilla sesban.

நெல்லித்துத்தி, ஓர்வகைத் துத்தி, an unknown variety of Indian mallow perhap mistaken for நிலத்துத்தி.

நெல்லிப்பசை, see நெல்லிக்காய்ப்பற்று.

நெல்லிப்பருப்பு, நெல்லிக் கொட்டையின் பருப்பு, the kernel inside the nut of embelic myrobalan.

நெல்லிப்பூ, நெல்லிமரத்தின் பூ, இது உஷ்ணத்தைத் தணித்து மலத்தை இளக்கும், flowers of embelic myrobalan. They are refrigerent and aperient.

நெல்லிமாதிகம்,
நெல்லிப்பட்டை, the bark of Indian gooseberry tree — Emblica officinalis.

நெல்லிமுள்ளி, பெருநெல்லி வற்றல், இதனால் உடற்சூடு, சோபரோகம், ருதுதோஷம், அஸ்திசிராவம், தூம்பிரம், இரத்தபித்தம், விந்துநட்டம், பித்த வாந்தி, ஆண்குறிக் கொப்புளம், பிரமேகம் இவைகள் போம், இதைக் கஷாயமிட்டு சர்க்கரை கூட்டிக் கொடுக்க பெண்குறி எரிச்சல் அடங்கும், the dried fruit of Emblica officinalis. It is capable of curing internal heat, dropsy, haemorrhage, spermatoria, vomiting, gonorrhoea etc; 2. கற்பவகையிலொன்று, one of the rejuvenating drugs.

நெல்லிமுள்ளி லேகியம், பெருநெல்லி வற்றலைக் கொண்டு செய்யும் லேகியம், இது அகத்தியர் வல்லாதிப்படி காமாலை, பித்தபாண்டு, சோகை முதலிய நோய்களுக்குக் கொடுக்கப் படும், an electuary prepared with the dried fruits of embelic myrobalan as the chief ingredient as per process laid down in Agastiya Vallathi. It is said to cure dropy anaemia etc.

நெலலிவறறல, காயவைத்த நெல்லிக்காய், இது ஓர் கடைச்சரக்கு, இதில் துவர்ப்பு திராவகம் அதிக அளவில் இருப்பதால் இரத்த வொழுக்கை நிறுத்தும், அன்றியும் அதிசாரம், சீதபேதி இவைகளுக்குக் கொடுக்கக் குணமாகும், இதைத் தண்ணீரில் ஊறப்போட்டு வைத்து அத்தண்ணீரை இறுத்துக் கண்ணோய்க்கு உபயோகிக்கலாம், the dried fruit of embolic myrobalan. It is a bazaar drug containing a large proportion of gallic acid and is therefore very useful in haemorrhage, diarrhoea and dysentery. It is immersed in water for a whole night and the infusion so obtained is used as collyrium in opthalmia. துயில் நீங்கியவுடன் அதிகாலையில் நெல்லி, தான்றி, கடுக்காய் ஊறியநீரிலே சூடனைக் கரைத்துக் கண்ணைக் கழுவுவது தென் னாட்டுப் பழக்கம், People in the olden days washed their eyes in the early morning with the lotion of the cold infusion of gooseberry, chebula and belerica fruits mixed with camphor.

நெல்லிவேர், நெல்லிமரத்தின் வேர், root of Emblica officinalis.

நெல்லிற்புதைத்தல்,
நெல்மறைவில் புடமிடுதல், அதாவது நெல்லுக்குள் சிலநாள் புதைத்து வைத்தல், preserving by burying under the heap of paddy for sometime but generally for forty days.

நெல்லு, நெற்பயிர், paddy crops; 2. நெல், which see.

நெல்லுப்புல், சாமை, millet.

நெல்லுப்பொரி, see நெற்பொரி.

நெல்வரகு, ஓர்வகைப்பூடு, an unknown plant.

நெழில், கொடிக்கொற்றான், green thread creeper — Cassytha filiformis.

நெளிசம், தங்கரளி, exile oleander — Tecoma staus.

நெளிச்சல், வளைவு, curvature.

நெளிதல், உடம்பை இருபக்கமும் மாறிமாறி அசைத்து வளைத்தல், moving and bending the sides of the body alternatively; 2. ஊர்ந்து செல்லல், crawling.

நெளித்தகுண்டி, பிட்டம் பின் பக்கம் மிகுதியாக வளைந்து காணல் projecting buttocks.

நெளித்தல், வளைத்தல், bending; 2. அசைத்தல், moving.

நெளியலன், கூனன், hunch back (male).

நெளியலி, கூனி, hunch back (female).

நெளியன், ஓர்வகைப்புழு, a kind of worm; 2. ஓர்வகைக் கடல்மீன், a variety of sea fish.

நெளிவு, வளைவு, curvature; 2. வளைகை, the act of bending.

நெளிவுசுளிவு, இரகசியம் மர்மம்,the secret.

நெளிவெடுத்தல், வளைவு நீக்குதல், removing the curvature and making straight.

நெறி, கண் மண்டைக்குழி, the socket of the eye; 2. சன்மார்க்கம், virtuous path, moral ways; 3. சுளுக்கு, sprain; 4. நெறிக்கட்டி, sympathetic gland, lymph gland; 5. புருவநெறி, shrink of the eye brows; 6. வாழைப் பட்டையின் உள்பாகம், the inner side of the plantain bark; 7. குணம்,quality; 8. மார்க்கம், path; 9. வளைவு, bend; 10. சுருள், fold; 11. விதி, rule; 12. நல்லொழுக்கம், good behaviour; 13. மனநிலை, state of mind.

நெறிகட்டி, see நெறிக்கட்டி.

நெறிக்கடடி, காயம், விரணம். புண் இவைகள் காணும் காலத்தில் அதற்கு சார்பாக உடற்சந்து அரை, அக்குள், கழுத்து முதலான இடங்களில் கட்டியைப்போல் திரண்டு காணும் ஓர் சோஷண கிரந்தி வீக்கம் (வபா குறும்பி வீக்கம்), a bubo or swelling caused by injury, wound, sore etc., due to irritation, friction etc., and not arising from infection — Sympathetic bubo.

நெறிக்கட்டிக் காய்ச்சல், யானைக்கால் அல்லது யானைப்பிடுக்கு காண்பதற்கு

முன்னம் இரண்டு தொடைச்சந்தில் நெறிகட்டிக் காய்ச்சல், (சுரம்) ஏற்படும், filarial fever; fever accompanying the swelling of the lymphglands.

நெறிக்கட்டு, see நெறிக்கட்டி,.

நெறிக்கல், சுக்கான்கல், lime stone.

நெறிக்காய்ச்சல், see நெறிக் கட்டிக் காய்ச்சல்.

நெறிக்கோரை, நெறிநெட்டிக் கோரை, a kind of sedge grass — Pith grass.

நெறித்தல், புருவத்தை வளைத்தல், shrinking the eye brows; 2. முறியும்படி செய்தல், as குரல்வளை நெறித்தல், crushing or fracturing; 3. ஒடித் தல், breaking; 4. வளைத்தல், bending; 5. மயிர் சுருளல் curling of the hairs; 6. செவ்வேநிற்றல், standing erect.

நெறிநீர், கடல், ocean; sea.

நெறிப்பு, சிலிர்ப்பு, sprouting; 2. முரிப்பு, break; 3. நிமிர்ந்திருக்கை, being erect.

நெறிமயிர், சிலிர்த்தமயிர், hair standing on ends.

நெறியாணங்கை, see சிறியாணங்கை.

நெறிவிஷம், கொடியவிஷம், virulent poison; 2. see நிருவிஷம்.

நெறதழநாவி, அலரி, oleander.

நெறுமுதல், கடித்தல், biting; 2. பல்லால் நசித்தல், injury by biting.

நெறுநெறெனல், பல்லை ஓசையுறும் படி கடித்தல், gnauring the teeth; biting repeatedly, grinding teeth while sleeping.

நெறுநெறுவென்று கடித்தல், See நெறுநெறெனல்.

நெற்கடை, ஒரு நெல்லளவு கொண்ட இடம், space occupied by a paddy.

நெற்கனம், நெல் பருமன், as thick as paddy.

நெற்காரிகம், கருங்குருவை, red rice having husk.

நெற்குண்டி, நிர்க்குண்டி, which see.

நெற்குருவை, see நெற்காரிகம்.

நெற்குழியிலிடல், see நெல்விற்புதைத்தல்,.

நெற்கூர், நெல்லின்வால்the tail end of paddy.

நெற்சப்பி நெற்பயிரைக் கெடுக்கும் ஓர் புல், a kind of grass affecting the growth of paddy a weed.

நெற்சோளம், இருங்குசோளம், which see.

நெற்பழம், மதத்தினால் வெடித்தநெல், a split paddy from its fertility.

நெற்பாசினி, சுணைவெண்டை, bendy (ladies finger) covered with rough hairs as opposed to smooth bendy.

நெற்பிரமாணம். நெல்லளவு, இது *8 எள் கொண்ட அளவு*, size of paddy which is equivalent to that of 8 seasamum seeds.

நெற்பு, *சீழ்*,pus; *2.* மெலிவு, weakness.

நெற்புகொள்ளல், *சீழ்* கொள்ளல், the process or state of suppurating or producing pus as in a wound or abscess; *2. பால்* கொள்ளல், pustules containing pus as in small pox.

நெற்புடம், தயாரித்த மருந்துகளையும், தைல வர்க்கங்களையும் *1* வருடம் சென்ற பழைய நெல்லுக்குள் *40* நாள் புதைத்து வைத்துப்பிறகு எடுக்கும் ஓர் சுத்தி முறை. a process or method of purification of prepared medicines and medicated oils which are kept buried under heaps of one year old paddy for a peiod of forty days.

நெற்பொரி, நெல்லைச் சூடுகாட்டி வறுப்பதினால் உண்டாகும் பொரிந்து மலர்ந்த அரிசி, இதனால் அதிதாகம், மந்தாக்கினி, மதரோகம், மூர்ச்சை, அரோசிகம் போம், fried or parched paddy from which is derived expanded rice. It is said to cure excess thirst, loss of appetite, nausea, corpulency and fainting. It is a good diet for small pox patients.

நெற்பொரிக்கஞ்சி, நெற்பொரி யினால் மலர்ந்த அரிசியைக் கொண்டு காய்ச்சும் கஞ்சி, இதைப் பலவீன நோயாளிகளுக்குக் கொடுக்க எளிதில் சீரணமாகும், பசியின் களைப்பையாற்றும், இதனால் உஷ்ணம், பைத்திய தோஷம், வயிற்றுச்சிக்கல் மார்பு நோய்போம், the boiled conjee prepared from the expanded rice of the fried paddy is very useful for debilitated patients. It is easily digestible and affords much relief to patients tired of hunger.

நெற்பொரிமாக்காடி, நெற் பொரியை மாவாக அரைத்துத் தண்ணீரில் கரைத்துப் புளிக்க வைத்த காடி, a fermented liquor prepared out of a solution of expanded rice flour.

நெற்பொரியுருண்டை, பொரியை வெல்லப் பாகிலிட்டுப் பிடித்தவுருண்டை, ball of. a expanded rice of fried paddy mixed with jaggery syrup.

நெற்போலாகி, மூக்கறட்டை, cat's jasmine — Boerhaeia repens alias B.diandra.

நெற்றலி, ஓர் சிறுமீன், a small fish, see நெய்த்தோலி.

நெற்றி, புருவத்திற்கு மேலுள்ள முகத்தின் பகுதி, tht part of the face above the eye brows — fore head; 2. **தலையின் முற்பகுதி**. the front part of head, forehead; 3. **ஆகாயம்**, sky; 4. **முன்பக்கம்**, front portion.

நெற்றிக்கண், ஞானக்கண், (in Psychology) eye of wisdom third eye; 2. சுழிமுனை, (in yoga philosophy) the part between the eye brows. It is a place gazed at by yogis for concentrating mind.

நெற்றிக்கண்ணன், சிவனார் வேம்பு, Shiva's neem — Indigofera aspalathoides.

நெற்றித்தலம், நெற்றியின் பகுதி, the region of fore head.

நெற்றிநாளம், நெற்றியின் நடுவே யோடும் இரண்டு நாளம், a pair of veins which rundown the middle line of forehead — Frontal vein.

நெற்றிப்பற்று, தலைவலி, மண்டைக்குத்தல் முதலிய நோய்களுக்கு நெற்றியில் போடும் மருந்துப்பற்று, an ointment, or liniment or paste applied to forehead in cases of head ache cold, neuralgia and other nervous effections.

நெற்றிப்பார்வை, ஞானதிருஷ்டி, second thought.

நெற்றிப்பால், நெற்றிக்குப் பற்றுபோடும் முலைப்பால், woman's breast milk as a linement to the forehead. it reduces the temperature.

நெற்றிப்புருவம்,கண்புருவம், eye brow.

நெற்றிப்புல்.

நெற்றிமூஞ்சி, see நெற்றிக்கண்.

நெற்றியுதயம், பிரசவத்தில் ஏற்படும் நெற்றி உதயம், (in Midwifery) presentation of forehead in delivery.

நெற்றியெலும்பு, நெற்றியிலுள்ள எலும்பு, bones of the forehead — Osfrontis.

நெற்றியோடு, see நெற்றி யெலும்பு.

நெற்றிலி, see நெய்த்தோலி.

நெற்று, உலர்ந்தபழம், dried well riped fruit or nut; 2. பழமுதிர்ச்சி, maturity or ripeness of the fruit; 3. முதிர்ந்து காய்ந்த காய், அதாவது கொப்பரை, dried well matured cocoanut fit for planting.

நெற்றுதல், முதிர்ந்து உலர்தல், becoming matured and dried.

நென்மணி, நெல்லிடை, 3/8 of a grain weight used by gold smiths.

நென்மா, அரிசிமாவு, rice flour.

நே

நே , நேசம், love, affection; 2. ஈரம், moisture.

நேக, மிகப்பொடியாக, state of fine powder; 2. நேர்மையாக as நேக வரைத்தல், fine state, as in grinding.

நேகவரைத்தல், நன்றாகத் தூளாகும்படி அரைத்தல், reducing to dust or fine powder when grinding, pulverising, machined into a pulp.

நேசத்தி, பேய்க்கடலை, bitter bengal gram.

நேசயம், நிலப்பனை, ground palm — Curculigo orchioides.

நேசல், பொடிமணல், fine sand.

நேடன், நாவல்மரம், jaumoon tree — Eugenia jambolina.

நேடி, மூங்கில், bamboo.

நேட்டகாதுவரப்பி, இலவம்பிசின், gum of silk cotton tree — Bombax malabarica.

நேத்தி, நேர்த்தி, beauty; 2. துத்தம், vitriol.

நேத்திர அபிசியந்தம், ஓர் கண்ணோய், இதற்கு கற்பூரசிலாசத்து, கடுக்காய், மரமஞ்சள், காவிக்கல், இந்துப்பு, சமனிடையாக சலத்திலரைத்து கண்களுக்குப் பற்று போட அபிசியந்தம் குணப்படும், an eye disease. It is cured by applying of a paste of the drugs mentioned above with water.

நேத்திர உபத்திரவாதம், see கண்மயக்குவாதம்.

நேத்திரகண்டு, கண்தினவு, itching of the eye.

நேத்திரகமலி, நேத்திரஞ்சிமிட்டி, a kind of plant, see கண் சிமிட்டிப்பூடு.

நேத்திரகாசம், கண்காசம்,cataract; 2. கண்பூ, opacity of the cornea, see கண் காசம்.

நேத்திரக்கடுப்பு, கண்கடுப்பு, irritation of the eyes.

நேத்திரக்கழுநீர், கண்ணோயில் கண்ணைக் கழுவ உபயோகிக்கும் ஓர் மருந்து நீர், lotion for cleaning the diseased eyes — eye wash.

நேத்திரக்குத்தல், கண்குத்தல், penetrating or pin prick pain in the eye.

நேத்திரக்குமுதம், கண்ணின் கருவிழியில் சதை வளர்ச்சி, morbid growth of flesh over the pupil or in the black of the eye.

நேத்திரங்காட்டி, see நேத்திர நாயகம்.

நேத்திரசம், கண்ணீர், tears.

நேத்திரசிராவம், கண்ணினின்று நீரும் பீளையும் வடிந்து கொண்டிருக்கும் ஓர்வகைக் கண்ணோய், an eye disease marked by slimy secretion and mucopurulent discharge from the eyes.

நேத்திரசுக்கிலம், கண்ணினின்று விந்துவைப்போல் வெண்மை யான பிசுபிசுப்புள்ள நீர் வடியும் கண்ணோய், an eye disease attended with white slimy secretion from the eyes.

நேத்திரசூலை, கண்ணிலுண் டாகும் குத்தல்வலி, acute pain in the eyes —Ophthal modynia.

நேத்திரச்சுடர், கற்பூரம், camphor.

நேத்திரதாரகா மண்டலம், கருவிழி, black of the eye.

நேத்திரத்தம்பம், வாதத்தினால் கண்விழி உணர்ச்சியறல், paralysis of the eye.

நேத்திரத்தம்பவாதம், கண்களைக் கையால் தடவிப்பார்க்கில் ஒட்டாங் கிளிஞ்சலைப் போல் தோற்றும்படி தம்பிக்கும் ஓர்வகைக் கண்ணோய்; இது வாதத்தால் ஏற்படும், a disease in which the eye ball is so hardened that when touched, it makes one feel as if it is a bivalve shell. It is said to be due to windly humour of the system.

நேத்திரத்தம்பவாதம், உணவு நடைமுதலிய குற்றங்களினால் விழிகளின் மூலத்தில் வாயு அதிகரித்து, கண் புருவம், இமையாகிய இடங்களில் உணர்ச்சியற்று, கண்களைத் தம்பிக்கச் செய்யும் ஓர்வகை வாத நோய்; இதை வடமொழியில் திர்க்குஸ்தம்ப வாதம் என்பர், an eye disease marked by loss of sensation in the eye brows, eye lids and pupil. It is a kind of paralysis of the muscles of the eyes said to be due derangement of windy humour of the system arising from the errors in diet and defects of physical functions.

நேத்திரத்தர்ப்பணம், கண் நோய்க்குப் பொதுவாகச் செய்யும் ஓர் ஆயுர்வேத சிகிச்சை; அதாவது காற் றோட்டம், தும்பு, தூசி இவைகளில்லாவிடத்தில் நோயாளியை படுக்க வைத்து உளுத்த மாவை தண்ணீரில் பிசைந்து இரண்டு கண்களைச் சுற்றிலும் பற்றுப்போட்டு, கண்களை மூடிக்கொண்டு இளஞ் சூடுள்ள நெய்யை இரப்பை அமிழும்வரை ஊற்றி யபின் கண்களை மெள்ள மெள்ளத் திறந்துவிடச் செய்யு மோர் சிகிச்சை முறை, a treatment given in general to the diseases of the eye according to the process of Ayurveda. It is as follows. The patient is made to be down in a dustless room where there is no breeze. The flour of black gram mixed water is applied around the eyes and a lukewarm cow's ghee is poured on the eyes till the eye lids get completely immersed or covered with ghee. Then, the eyes are opened frequently so as to allow the ghee enter into the eyes.

நேத்திரத்திமிர், கண் திமிரம், loss of vision or blindness due to the affection or loss of sensation in the optic nerve — Amanvosis.

நேத்திரத்துலக்கம், கண்விளக்கம், clearness of vision.

நேத்திரத்தோஷம், கண்ணுக்குரிய அல்லது வேறு காரணங் களினால் ஏற்படும் குற்றங்கள், natural or cangenital predisposition to diseases of the eye: 2. பார்வை தோஷம். evil effects of malignant eyes.

நேத்திர நரம்பு, கண்ணரம்பு, nerves of the eye — Eye string.

நேத்திரநாசி, பொன்னாங்காணி, an edible green bearing white flowers, sessible plant — Illecibrum sessile.

நேத்திரநாடி, வாதாதி தோஷங்கள், நரம்புகளின் மார்க்கத்தினால் விழிச்சந்தில் புகுந்து தோஷங் களின் பிரகோபத் தின்படி இரத்தம் அல்லது சீழைவடியச் செய்யும்; இது நான்கு விதப்படும், அவை யாவன; a disease of the eye marked by discharge of blood or pus. It is said to be due to aggrevated or exciting conditions of three humours in the interspaces between the eyelid and the eye ball.

1. இமைச்சந்தில் வீக்கம் உண்டாகி, பழுத்துடைந்து சீழ் வடிந்து சன்னிபாத லட்சணத் துடன் கூடியிருந்தால் பூய சிராவம் என்று பெயர்.

2. வெண்மையாயும் கடினமாயும் சீதம் போல் சீழ்வடிந்தால் சிலேட்டும் சிரவம் என்றும்.

3. இரத்தப் பிரகோபத்தினால் அதிகமாயும் சூடாயும் இரத்தம் வடிந்தால் இரத்தச் சிராவம் என்றும்.

4. இமைச் சந்தில் மஞ்சள் நிறமாயும் உஷ்ணமாயும் நீர் வடிந்தால் பித்தசிராவ மென்றும் பெயர். The above are the four varieties of the disease marked by various symptoms.

நேத்திரநாயகம், கண்கட்டிப்பூடு, a plant used in the abscess of the eye lids.

நேத்திரநிருமாலி, சிறு சண்பகம், cananga flower tree — Canagium odaratum.

நேத்திரநோக்கம், கண்பார்வை, eye sight, vision.

நேத்திரநோய், கண்ணோய், disease of the eye in general;2. கண்வலி, pain in the eye.

நேத்திரபரியந்தம், கடைக்கண், corner of the eye.

நேத்திரபிந்து, கண்ணுக்கு விடும் திராவக மருந்து, eye drops; 2. கண்சிவப்பு, inflammation of the eye — Ophthalmia.

நேத்திரபுட்பி, செங்கத்தாரி, false peacock's foot tree — Niebuhria linearis.

நேத்திரபூஷணம், அன்னபேதி, sulphate of iron.

நேத்திரபூளை, கண்பீளைச்செடி, long leaved trumpet plant — Dolichondrone rheedi.

நேத்திரபோஷஜம், கண் வைத்தியம், ophthalmic treatment — Eye infirmery.

நேத்திரபேதி, கண்களில் நிற்கும் துர்நீர்கள் கழலும்படி கண்ணுக்குத் தடவுமருந்து, a collyrium to the eyes for purposes of bring out the collection of morbid fluid.

நேத்திரப்பச்சை, கதிர்ப்பச்சை, a fragrant plant used in perfumes.

நேத்திரப்படலம், வெள்விழியில் மாசுபடரும் ஓர்வகைக் கண்ணோய், coats or films over the sclerotic of the eye.

நேத்திரப்பால், பனங்கள், palmyra toddy.

நேத்திரப்பிண்டம், கண்விழி, eye ball.

நேத்திரப்பிளவை, deep abscess in the eye.

நேத்திரப்புகை, கண்புகைச்சல், smoky affection of the eye.

நேத்திரமஞ்சம், மிளிறை, an unknown plant.

நேத்திரமருத்துவம், கண் வைத்தியம், ophthalmic treatment.

நேத்திரமலம், கண்பீளை, gummy secretions from the eye-muco purulence.

நேத்திரமாலி, சிறுசண்பகம், cananga flower tree — Canangium odoratm.

நேத்திரம், கண், eye; 2. கண்வேர், nerves and blood vessels of the eye; 3. மருந்துகளை ஆசன வழியாய் உள்ளே புகட்டு வதற்காக அமைத்த ஓர்கருவி, an apparatus for introducing or throwing liquid into the rectum — Enema can.

நேத்திரராசி, இருவாட்சி, a kind of jasmine — Jasminum sambae (flore manorae pleno).

நேத்திரரோகம், கண்ணோய், disease of the eye in general.

நேத்திரரோகாக்கினி, தேற்றாங் கொட்டை, water clearing nut — Strychnos potatorum.

நேத்திரவர்த்தமம், கண்ணிமை, eye laid; 2. கண்ணிமைரோகம், diseases of the eye lid; 3. கண்ணின் துவாரம் அல்லது புரை, the course of a sinus or cavity occuring in the region of the eyes.

நேத்திரவலி, கண்வலி, eye pain; 2. கண்வலிப்பூஞ்செடி, a flowering plant used in eye disease; 3. கண் சிவத்தல், inflammation of the eye — Ophthalmia.

நேத்திரவாயு, வாயுக் கோளாறி னாலேற்படும் கண்ணோய், a disease of the eye due to the derangement of Vayu in the system inflammation of the eyes — Ophthalmia.

நேத்திரவாயு, கண்ணரம்புவாயு, wind humour affecting the eye.

நேத்திரவாரி, கண்ணீர், tears.

நேத்திரவாழை, வாழையிற் கடைப்பட்ட சாதி, இது மேற்றிசைக் கடற்கரைத் தேசங்களில் (மலையாளத்தில்) விளையும், நோயணுகாதிருக்க வேண்டி இதைச்சுட்டுக் கறி சமைப்பார்கள், an inferior special of plantain tree grown in the western coast (Malabar). It is baked and used in curries as a preventive for diseases. Chips prepared out of it are very tasty, ripe fruits are also eaten.

நேத்திரவிதி, நயனவிதி, அதாவது கண்ணோய்களைப் பற்றிய நூல், the science relating to the diseases of the eye — Ophthamology.

நேத்திரவிரணம், கண்ணின் விரணம், ulceration of the eye.

நேத்திரவிரணம் போக்கி, காட்டுச்சதகுப்பை, இதுவே சதகுப்பை சக்களத்தி, a plantakin to common dill — Anethum graeolens. It is a bazaar drug.

நேத்திரவுபத்திரவாதம், see கண்மயக்குவாதம்.

நேத்திரவைத்தியம், கண்வைத்தியம், ophthalmic treatment.

நேத்திரவைத்தியன், கண்வைத்தியன், one skilled in diseases of the eye — oculist.

நேத்திராஞ்சனம், கண்மருந்து, collyrium for the eye salve; 2. இமையைப் பற்றிய ஓர்வகைக் கண்ணோய், a disease of the eye lid — Blepharo atheroma; 3. கண்ணிலிடும் ஓர் மந்திரீக மை, a magic paint used for finding hidden treasured by applying it to the eye.

நேத்திராஞ்சனம், நாகசிந்தூரம், இரசகற்பூரம், வெண்காரம், சவ்வீராஞ்சனம், படிகாரம், தாம்பூர பற்பம், அயசிந்தூரம், பச்சைக் கற்பூரம், கடுகு ரோகணி, தேத்தாங் கொட்டை, இந்துப்பு, பால்துத்தம், திரி கடுகு, திரிபலம், அதிமதுரம் சமயிடை கொண்டு புங்கம் பட்டைச் சாற்றிலரைத்து மாத்திரை செய்து கண்ணிற் கிடும் கலிங்கம், இதனால் கருட திருஷ்டிக்குச் சமானமான பார்வையுண்டாகும், a pill rubbed with water and applied to the eyes to improve its vision. It is prepared with various drugs as mentioned in the text above.

நேத்திராதி, நோக்கு நோக்கிச் செடி, an unknown plant probably used to improve the vision.

நேத்திராமயம், கண் முழுவதும் பற்றிய நோய், a disease affecting the whole eye.

நேத்திராமியம், நேத்திராமயம், which see.

நேத்திராம்பு, கண்ணீர், tears.

நேத்திராரி, கள்ளிமரம், any spurge tree — Euphorbia genus.

நேத்திராவுடதம், நேத்திராவுடதம், medicines — Collyrium eye salve.

நேத்திரௌஷதம், நேத்திராவுடதம், medicines applicable to the diseases of the eye.

நேந்தாடுபாவை, see சேந்தாடு பாவை, an unknown plant.

நேந்திரம், ஓர்வகை வாழை, see நேந்திர வாழை.

நேபம், கண்ணீர், tears; 2. தண்ணீர் ordinary water.

நேபாலிகை, ஓர்வகை பாஷாணம், a kind of poison perhaps arsenic found in Nepal.

நேபாளக் கரும்பு, நேபாள தேசத்தில் விளையும் கரும்பு, sugar cane grown in Nepal.

நேபாளங்கொட்டை, நேர்வாளங் கொட்டை.

நேபாளசம், ஓர்வகை களிம்பேறிய செம்பு, இது நேபாளத்தில் அகப்படுவது போலும், a kind of impure copper probably found in Nepal.

NOTE:- This kind of copper is supposed to contain less of verdigris and as such it is generally used in medicinal preparations. In the other kind 'milecham' (*மிலேச்சம்*), it is very difficult to remove the verdigris as it will always remain black even after cleansing process.

நேபாளம், நேர்வாளம், purgative plant — Croton tigilium; 2. *சீமை யாமணக்கு*, Nepal castrol plant — Balios permum montana alias croton polyandrum.

நேபாள வேம்பு, நேபாளத்தில் விளையும் வேப்பமரம், margosa tree of Nepal.

நேபாளி, இருவாட்சி, see நேத்திரராசி.

நேமநாற்சுகம், கருப்பு அகரம், a bazaar drug.

நேமம், சாயுங்காலம், evening time; 2.பங்கு share; 3. வேர், root; 4. காலம், period; 5. பாதி, half.

நேமி, கடல், ocean; 2. பத்தியம், diet. 3. பூமி,earth; 4. மூங்கில், bamboo; 5. சக்கரவாகப்புள், the ruddy goose; 6. எலிச் செவிப்பூடு; rat's ear plant — Ipomaea reniformis alias Evolvulous emarginatus; 7. சந்தனம், sandal wood; 8. வேங்கை, East Indian Kino — Ptercarpus marsupium; 9. பழமுண்ணிப் பாலை, edible palay — Minusops kanki.

நேமி, தேர்மரம், தேர்கட்ட உபயோகப் படுவதால் இப்பெயர், இதினின்று சிவப்பு துவர்ப்புப் பிசின் எடுக்கப் படும். இதன் பட்டை குடல் வியாதிக்குபயோக மாகும் மரத்திலிருந்து ஓர்வித அயச்சத்து எடுக்கப்படும், chariot tree — Dalbergia oojeinesis so called from its usefulness for making chariots. Gives astringent red gum; bark is useful in bowel complaints. A crystalline substance like magnesia is sometimes found in the wood.

நேமிசந்தனா, வேங்கை; see நேமி.

நேமிசாரம், சத்திசாரம், which see.

நேமிப்புள், சக்கிரவாகப்புல், the ruddy grass.

நேமியங்கனி, திராட்சை, grapes — vitis vinifera.

நேமியம், நிலப்பனை, ground palm — Curculigo orchioides.

நேயமரம், ஊக்கினாமரம், an unknown tree.

நேயம், எண்ணெய், gingelly oil; 2. நெய், ghee; 3. நிலப்பனை, see நேமியம்; 4. பனை மரம், palmyra tree — Borassus filiformis; 5. சுக்கிலம், semen; 6. நேசம், love, affection.

நேயா, see நேயமரம்; 2. பெருமருந்து; Indian birth wort — Aristolochia indica.

நேரகாலம், தற்பொழுது, present time; 2. கெடுதியான காலம், bad or evil time; 3. விதிகாலம், fateful days.

நேரக்கனி, ஓர் அங்கக்கரியை, see நௌரக்கனி.

நேரங்காட்டி, சூரிய காந்திச்செடி, sunflower plant — Helianthus indicus.

நேரடம், நாவல், Jaumoon — Eugenia jambolina.

நேரம், காலம், time; 2. முன் நேரம், forenoon; 3. பின்நேரம், after noon; 4. குறித்த காலம், appointed time.

நேரளைதாளி.

நேராக, சமமாக, equally; 2. சமநிறையாக, equal weight.

நேராக்குதல், சம அளவாகச் செய்தல், equalising, 2. நேராகச் செய்தல், straightening.

நேரியல், மிளகு, black pepper — Piper nigrum.

நேரிளமிகுதி, சூனியம், non entity, nothingness.

நேரேடம், நாவல்மரம், see நேரடம்.

நேரேடு, நேரேடம், which see.

நேரேயிருக்க வொட்டாமை, கிடை கொடுக்காமை, restlessness.

நேரொத்ததூமம், குருந்தக்கல், a variety of corundum — Emery.

நேர், பாதி, half; 2. நேர்தல், growing thin, emaciating; 3. சம்பவித்தல், happening, occurring.

நேர்கூட்டல், சமன் சேர்த்தல், adding equal quantity.

நேர்கட்டை, நெட்டி, solah pith.

நேர்தவம், வாய்க்காற் சடைச்சி, a kind of pith plant found near Channels.

நேர்நஞ்சு, கல்மதம், rock alum; bitumen.

நேர்நெட்டி, நீளநெட்டி, long pith.

நேர்ப்பிசின், ஓர் செடி, பூவின் அழகையும் வாசனையையும் கருதி இதைத் தோட்டங்களில் வைத்துப் பயிராக்கப்படும். இலைகள் பெரியன, வேர் உட்டுளையுள்ளது. பூக்கள் நெருங்கவிருக்கும், வாசனை பொருந்தியவை, வெண் மையும் ஊதாவும் கலந்த நிறம். இலைகள் உதிர்ந்து விடும். வேர் விரல் பருமனுள்ளது, சித்திரையில் பூக்கும், வேர் வெளிப்புறம் சாம்பல் நிறம், உட்புறம் வெண்மை, இஞ்சி வாசனை, நாவிற்கு இஞ்சியைப்போல் உறைப்பாயிருக்கும், இதன் சமூலத்தைப் பொடி செய்து புற்று புண்களுக்குத் தடவ ஆறும். வீக்கத்தை வாங்கும், உள்ளுக்குச் சாப்பிட புண்ணின் இரத்தக் கட்டை உடைத்துச் சுத்தி செய்யும், வேர், துர்நீர் சேர்ந்த பாண்டு முதலிய வீக்கத்திற்குபயோகிக்கலாம், a false zedoary — Kempperia rotunda. It is a deciduous plant much cultivated in garden for the beauty and fragrance of its flowers, root tuberous, flowers large, fragrant, purplish white. When in flower, the plant is destitute of leaves. root is about the thickness of a finger, flowering in April, root ash coloured outside and white inside. The whole plant is reduced into powder and used as an ointment to wounds and bruesis and for cancerous ulcers, reduce swelling, taken internally as decoction will remove coagulated or any purulent matter. The root is useful in anasareous swellings, it has a hot ginger taste.

NOTE:- It is a plant with round leaves and fragrant flowers. The almost globular roots have an aromatie camphoraceous taste, some what resembling zedoary. The fresh bruised tubers are good for reducing the swellings of wounds.

நேர்முட்டுசெடிச்சி, பேய்த் தும்பை, bitter leucas.

நேர்மை, நுண்மை, minuteness; fineness.

நேர்மையாய் நுணுக்கல், சன்னத்தூளாக்கல், reducing to fine powder pulverising.

நேர்வளாந்தான், சுக்கு, dried ginger.

நேர்வாளக்கொட்டை, நேர்வாளப் பருப்பின் கொட்டை, croton seed or nut.

நேர்வாளசுத்தி, பசுஞ்சாணியைக் கரைத்து அதில் கொட்டையைப் போட்டு வேகவைத்து எடுத்து மேற்றோல் நீக்கி உள்ளிருக்கும் பருப்பைப் பிளந்து முளையை நீக்கி பிறகு பருப்பை முடிச்சுக்கட்டி பால் உலையிலிட்ட நொய்யரிசி வெந்தபதத்தில் முடிச்சையெடுத்துப் பருப்பை அலம்பி எலுமிச்சம்பழச் சாற்றில் ஒருநாள் ஊறப்போட்டு எடுத்து, பிறகு நெய்யில் வறுக்கச் சுத்தியாம்; 2. ஒருபலம் நேர்வாளத்தை சிறிது நேரம் வெய்யிலிலுலர்த்தி ஒட்டை உடைத்து உள்ளிருக்கும் பருப்பையெடுத்து துணியில் தளத்தியாக முடிந்து ஒரு மட்பாண்டத்தில் போட்டு அதில் எருமைச்சானி, எருமை மூத்திரம் விட்டு அதற்குச் சரியாக கரிசாலைச் சாறு, ஆற்றிசலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நன்றாய் வேகும்வரை எரித்து இறக்கி வெந்த பருப்பைச் சலம் விட்டு அலசிக்கழுவி அதை இரண்டாய்ப் பிளந்து உள்ளிருக்கும் முளையைக் களைந்து கழுவியுலர்த்தியபின் எலுமிச்சைச் சாற்றில் ஊறப் போட்டுப் பிறகு சட்டியிலிட்டு சிறுக வறுத்துக் கொள்ளவும், இதுவே சுத்தி முறை, பிறகு மருந்தில் சேர்க்கலாம். two methods or processes of purifying the croton seeds are given here. 1. Croton seeds are boiled in the cow dung solution. Then the shell is removed and the cotyledons together with plumule that are inside the pulp are also removed. The pulp is then bundled and boiled along with broken rice in milk. When the broken rice is cooked the bundle is taken out and the pulp is washed in water and soaked in the juice of lime fruit for a day. Then it is fried in cow's Ghee. 2. The seeds are dried and the shell is removed. The pulp is lookely bundled and boiled in the solution of buffalo's urine and dung and the juice of eclipse plant and river water. After it is cooked, it is taken out, the pulp is washed in water and the plumule with cotyledons (first leaves) are removed and dried. Then it is soaked in the juice of lime fruit for a day and then fried and taken for use.

நேர்வாளபூச தைலம், நேர்வாளத் தெண்ணெய், இது மேற்பூச்சு மருந்தாக உபயோகப்படும், oil extracted from croton seed. It is used as liniment.

நேர்வாளமரம், நேர்வாளக் கொட்டை, மரம், இது ஓர் சிறிய மரம், பரவிய சில கிளைகள் வாய்ந்தது, இலைகள் மாறிமாறியும் அண்ட வடிவாயும், கோணங்கள் வாய்ந்ததும் வளவளப்பாயு மிருக்கும், இலையின் அடிப்பக்கம் 3-5 நரம்பு களோடியது, கொழுந்தோ மொசு மொசுப் பாயிருக்கும், பூவிதழ் 5. கூர்மை யாகவிருக்கும், ஆண்பூ மேலாகவும் பெண்பூகீழாகவும் உள்ளன, விதைகள் ஒரு பக்கம் மேடாகவிருக்கும். இது ஓடு கவர்ந்துள்ளது. பூக்கள் சிறியவை, பச்சை மஞ்சள் நிறம், சித்திரை வைகாசியில் பூக்கும், இதன் விதைக்கும் எண்ணெய்க்கும் பேதி குணமுண்டு. இலைகளை நசுக்கித் தண்ணீரில் ஊறப் போட்டுக் கொடுக்கப் பேதியாகும். இலையை உலர்த்தித்தூள் செய்து பாம்பு கடிக்கு உபயோகிக்கப்படும். இலைகளை மெல்லுவதால் எரிச்சலையுண்டாக்கி வாய் உதடு வெந்து வீங்கும். இது இந்தியாவில் சில பாகங்களிலும், இலங்கை மலையாதேசம் முதலான விடங்களிலும் விளையும், வங்காளம், ஆசாம் இவ்விடங்களில் விசேஷமாய்க் காணலாம், இது நேபாளத்திலிருந்து மிகுதியாக வருவதால் (நேபாளம்) இது நேர்வாளம் எனப்பெயர் கொண்டது போலும், (நேபாளம்=நேர்வாளம் என மருவியது; croton seed plant — Croton tigilium. It is a small tree with a few spreading branches, leaves alternate 3-5 nerved at the base; young leaves covered with minute hairs, upper flowers male, lower ones female. seed convex on one side, enveloped in a thin shell, flowers small. greenish yellow. Flowers in April and May. The seeds and oil have purgative properties.

Leaves ribbed and soaked in water are also purgative. When dried and powdered are good application for snake bites. If the leaves are chewed, they inflame the mouth and lips and cause them to swell having a burning sensation. It is found in some parts of India, Ceylon, Malaya and in abundance in Bengal and Assam. In Nepal it is found in plenty and is exported from there and hence it name நேர்வாளம்.

NOTE: This tree is analogous to Sillicypria which is Greece grow spontaneously in the banks of the rivers and lakes. These when planted in Egypt bear abundance of fruit but of an affensive smell.

நேர்வாளம், நேர்வாளப் பருப்பு, இதற்கு நீர்வாளம், நேபாளம், வாளம், கீழ் நோக்கி என்றும் பெயர். அன்றியும் இதில் மூன்று வகையுண்டு; *(1)* பொதுவாக சீனா நேர்வாளம். இது காப்பிக் கொட்டையைப் போல், *(2)* சஞ்சரிநேர்வாளம், இது சிறியதாயிருக்கும்; *(3)* இந்து நேர்வாளம், இது ஆமணக்கைப் போலிருக்கும், 1-ம் — 3ம் — முக்கிய மானவை, பருப்பின் மத்தியில் முளையும் தைலப் பசையு முள்ளன. இப்பருப்பைப் பிளந்து உள்ளிருக்கும் முளையை எடுக்காமல் உபயோகித்தால் வயிறு கடுப்பும் வாந்தியு முண்டாகும், புதிய பருப்பு பச்சையும் வெள்ளையும் கலந்த நிறமாகவு மிருக்கும். அதிகப் பழைய பருப்பு நஞ்சுக்குச் சமமானது, உருசிக்கக் கசப்பும், கரகரப் புள்ளாதா யுமிருக்கும், இது வெகுட்டலையும் வாந்தி யையும் பேதியையு முண்டாக்குவதில் மிகக் கொடியது. ஆகவே, நமது நாட்டு வைத்தியர்கள் சுத்தி முறையைச் சரிவர அனுசரிக் காமல் உபயோகித்தால் அனேக கோளாறுகளையும் அபாயத்தையும் உண்டு பண்ணுவது திண்ணம், ஆனால் சுத்தி செய்து மருந்தில். உபயோகித்தால் நல்ல குணமுண்டாகும், இதினின்று எடுக்கும் எண்ணெய் அல்லது தைலத்திற்கும் இதுவே குணமாகும். இவ்வெண்ணெய் பழுப்பு நிறமாயிருக்கும்; இது மிகக் கொடிய பேதி மருந்தாகக் கொள்ளப்படும். சாதாரணமாக இவ்விதையை வறுத்துத் தான் எண்ணெய்

எடுக்கப்படும். மற்ற எண்ணெய்களோடு கலக்கக் கூடியது. இதைப்பற்றி நேர்வாள எண்ணெய் கீழ்ப்பார்க்கவும், பொதுவாக இப்பருப்பு கொடிய பேதியை உண்டாக்குந் தன்மையது. அதிக அளவில் மயக்கத்தை யுண்டாக்கும். கொடிய விஷம், அதிகமாக பேதியாகவேண்டிய சில வியாதிகளுக்கு அதாவது சன்னி, வலிப்பு, உன்மத்தம், கொடிய சுரம் முதலானவை களுக்கு இது கொடுக்கப்படும். இதன் பருப்பை மிக்க சிறிய அளவில் காசுக்கட்டி அல்லது வேலம்பிசின், தேன் இவைகளிற் கலந்து கொடுக்கலாம். இப்பருப்பை விளக்கு நெருப்பில் காட்டி, புகையை முகர காசத்தின் இழுப்பை குணமாக்கும். இப்பருப்பை தண்ணீரில் அரைத்துத் தேனில் குழப்பி உடையாத கட்டிகளுக்கு மேலே தடவலாம். இது கர்ப்பிணிகளுக்கு உதவாது, நமது நாட்டு வைத்தியர்கள் இதை மற்ற கடை சரக்குகளோடு சேர்த்து மாத்திரைகளாகச் செய்து சுரம், மலச்சிக்கல், கவிசை, பாண்டு முதலிய நோய்களுக்கும் இரசம் கந்தகம் மற்ற கடைச் சரக்குகளோடு சேர்த்து வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, கவிசை முதலியவைகளுக்கும் நீர்ப் பேதி மருந்தாகக் கொடுப்பார்கள்; ஆகவே இதை தனியாகக் கொடுப்ப தில்லை, மற்ற சரக்குகளுடன் கலந்துதான் மாத்திரை, மெழுகு, எண்ணெய் முதலிய வைகளாகச் செய்து பேதி யாகும்படி தருவதுண்டு. croton seed from croton seed tree — Croton tigilium. It is also known as Purging croton, Nepal croton oil tree. The seeds consist of three classes viz. (1) Chinese croton seed resembling coffee seeds (2) small croton seed. (3) Hindu croton seed resembling castor seeds, of these 1 and 3 are important. The seed contains oil and germs in the middle and so it is necessary that this germ (plumel with cotyledon - first leaf) should be removed before it is cleaned for the reason that its presence will cause irritation of the stomach and vomiting. Fresh seed is of greenish white colour where as the old one is of yellowis black colour. The old seeds are quite unfit for use in medicine being considered as

a poison. It is bitter and acrid in taste. It causes nausea and violent vomiting and purging. So native doctors should be very careful as it cannot be administered without be purified according to the process laid down in Tamil Medicine and if this is neglected several disorders with complications, dangerous to life will ensure. So it should be very carefully handled. The oil extracted from the seeds has also the same property. This oil which is brown in colour is also a powerful drastic purgative. The usual way to get the oil to roast the seeds first and then compress them. It is soluble in fixed and volatile oils. For other details see under its proper heading (Nerala yennai) 'நேர்வாள எண்ணெய்'.

Generally, the croton seed is a powerful, drastic, purgative; in overdoses it is an narcotic poison. It should be given only in cases where strong purgative is considered essential. Externally, it is of great value as a stimulant, rubifacient and counter irritant. The seeds are employed after purification in very minute doses in the form of pills prepared with great care or along with castor oil. Generally, it is mixed with extract catcheu or gum acasia and honey. They are half roasted over a lamp flame and the smoke inhaled through nostrils to get relief from an attack of fits and from asthma. The seeds are rubbed in water mixed with honey and applied externally to obstinate bubos and abscesses. Under no grounds, it should be administered to pregnant women Vaidyans are always careful and very careful in employing this as a pill mixed with other bazaar drugs and prescribed for fevers with constipation, ascites, anasarca etc. The purfied seeds are added with mercury, suplhur etc., in sufficient quantities to a make a pill mass, which is given in tympanites, colic, ascites etc., as a drastic purgative. It should never be given singly, so it always administered in the form of pills, wax like balls, medicated oils etc., mixed with other ingredients as a drastic purgative.

NOTE: Seeds have been known to kill horses by producing the most violent diarrhoea. The wood which is bitter in taste is gently emetic, and powerfully sudorific. Decoction of the cumin seeds fried in honey is a good antidote for

the ill effects of the medicine containing croton seed such as too many purgings, vomiting, griping pain etc.

நேர்வாளயெண்ணெய்,

நேர்வாளப் பருப்பினின்று வடிக்கும் எண்ணெய், இது மூத்திரத்தை அதிகரிக்கச் செய்யும், பேதியையுண்டாக்கும்; தோலைச் சிவப்பாக்கி எரிச்சலையுண்டாக்கும், இவ்வெண்ணெயை சன்னி ஆரம்பம், குடற்சிக்கல், பாண்டு இவைகளுக்குக் கொடுக்கலாம். அன்றியும் சருமநோய், கீல்வாயு, நரம்பிழுப்பு, அள்ளுமாந்தம், நீர்க்கோர்வை, உடம்புவலி இவைகளுக்குபயோகிக்கலாம்; தைலமாகச் செய்து ஆண்குறியில் பூச ஆண்மையுண்டாகும். ஆனால் கொப்புளத்தை எழுப்பி எரிச்சலையுண்டாக்கும். இதைத் தேங்கா யெண்ணெயோடு கலந்து கீல்வாயு, கண்டம், கழுத்துவலி இவைகளுக்குப் பூசலாம். இவ்வெண்ணெயில் ஒரு துளி நாவில் வைக்க, சன்னி, தொண்டை வாதம், மூச்சுவிட முடியாமை முதலியவைகளால் பிடிக்கப்பட்டு உணர்ச்சியற்றிருந்தாலும் குணமாகும்; வாதப்பிடிப்பு, எழும்பாதகட்டி இவைகளுக்கும் மேற்பூசலாம். இதை நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் முதலிய வைகளோடு சேர்த்து மேற்பூச்சு மருந்தாக உபயோகிக்கலாம். இவ்வெண்ணெய் தனிப்பட சருமத்தில் தடவ கொப்புளங்களை யெழுப்பும். இதைப் பாரிசவாயு, கீல்வாயு, சயம், இரைப்பு இவைகளுக்குக் கொடுக்கலாம். தாளிறுத்து சன்னி, பைத்தியம் முதலிய நோய்களில் இவ்வெண்ணெயில் இரண்டுதுளி அடி நாக்கிலிட குடலைச் சுத்திப் படுத்திக் குணமாக்கும். இதைக் கடுகெண்ணெயோடு சேர்த்து குழந்தையின் கோழை இருமல், காசம், வாதப் பிடிப்பு, மூட்டுப்பிடிப்பு இவைகளுக்கு பூசுமருந்தாக உபயோகப்படுத்தலாம். croton oil extracted from croton seeds

Oleum crotonis. It is a diuretic, purgative and rebificient. It is chiefly employed incipent apoplexy visceral obstructions and occasionally in dropsy. Moreover it is found useful application in fits, convulsive fits in children affecting inter costal muscles, accumulation of serous fluids in the body, bodily pain

etc. Ointment, prepared from this, is applied to penis in case of impotency although such application causes blister and burning sensation. This oil mixed with the sesamum, cocoanut or other bland oil forms a useful liniment in chronic rheumatism, paralysis, diseases of the joints, phthis and chronic bronchitis and pain in the neck and nape. A single drop of the oil applied to the tongue is considered sufficient to ensure the full results especially in apoplexy, paralysis of the throat or difficulty of breathing arising from these causes even should the patient be insensible at the time. It is also a good remedy in rheumatism and indolent tumours.

The oil is a powerful vesicant producing pustular eruptions, a few drops placed at the base of the tongue will be of great advantage in lock jaw and mania by producing catharsis. The oil diluted with mustard oil is a useful liniment in infantile bronchitis asthma, paralysis, chronic rheumatism and arthritis.

NOTE: If the taking of this oil should cause griping, vomiting or too violent purging a good draught of the juice of lime is the best antidote and it may be safely repeated if the vomiting etc., continue. This oil is slightly viscid from pale yellow to brownish yellow colour of a disagreeble odour and acrid taste. It is a powerful irritant used in obstinate constipation and in cerebral affections. The acridity of the croton oil may be greatly diminished and the activity of the castor oil increased only if they are added one to four.

நேர்வானிகம், *புரசமரம்*, Butea frondosa.

நேலமட்டிச்சக்கை.

நேளி, *தாமரை*, lotus flower — Nelumbium speciosum.

நேறிட்டதாகை, *கரிசலாங்கண்ணி*, eclipse plant — Eclipta prostata.

நேறுகுழை, *வச்சிரக்கல்*, *இதுவே வைரம்* diamond.

நேற்றி, *முன்னைநாள்*, the previous day; *2. சற்றுமுன் காலம்*, a short time before.

நேனம், *பைத்தியம்*, lunacy.

நை

நை நைதல், breaking off by wear and tear; *2. காயமடைதல்*, being injured; *3. நொந்தல்*, being reduced in circumstances; *4. வாடல்*, fading.

நைகமேஷக்கிரகம், *குழந்தைகளைத் தாக்கும் ஓர் கிரக நோய், இதனால் வாந்தியில் நுரை தள்ளல், முதுகு வளைதல், மிரண்ட பார்வை, இளைப்பு, மூர்ச்சை முதலிய குணங்களுண் டாகும்*, a disease in children due to the evil influence of a star. It is characterised by frothy vomits, bending the middle of the trunk, anxious look, constant eructations and unconciousness.

நைசர்க்கிகம், *சுபாவம்*, nature; *2. இயற்கையாகத் தோன்றும் கை*, natural appearance of occurrence.

நைசல், *நோய்*, disease, ailment.

நைசிகம், *நாசியிற் புகுட்டு மருந்து*, any medicinal powder taken by nose — Sternulatory; *2. காக்கை*, crow; *3. காக்கைக் கொல்லி*, crow killer — Cocculous indica.

நைசிகரவேம்பு, *சூரத்து நிலவேம்பு*, surat chiretta.

நைசியம், see *நைசிகம்*; *2. களைக்கொட்டி*, a kind of water lily root as *கொட்டிக் கிழங்கு*.

நைசிரவம், *துவரை*, red gram — Cajanus indicus.

நைச்சி, *காகம்*, crow; *2. பாம்பு*, snake.

நைட்டிகம், *ஆயுள் முழுதும் பிரமசாரியாயிருத்தல்*, the state of remaining a bachelor till one's life time — Life bachelor ship; life bachelor hord; *2. நிட்டை அதாவது மனம் அசைவற் றிருத்தல்*, fixedness of mind.

நைதல், *நை*,which see.

நைதிகை, *முல்லைக்கொடி*, smooth jasmine — Jasminum trichotomum; *2. ஊசி மல்லிகை*, needle jasmine.

நைத்தல், *கெடுத்தல்*, destroying; *2. தளர்த்தல்*, loosening; *3. துக்கப் படுத்தல்*, causing to be distressed in mind; *4. வருந்தல்*, suffering.

நைந்தசோறு, குழைந்த சோறு, over cooked or boiled rice; 2. பதனழிந்த சோறு, stale cooked rice; rotten cooked rice.

நைந்திகை, see நைதிகை.

நைந்தபழம், கனிந்து இளகிய பழம், over riped fruit.

நைபாரிசம், செங்கரும்பு, red sugarcane.

நைபாலி, அடுக்குமல்லிகை; multi whorled jasmine — jasminum sambae (flore manarae); 2. சிவந்த பாஷாணம், red arsenic; 3. சீர்பந்த பாஷாணம், a prepared poison; 4. நிலம், blue.

நைபாலிகம், see நைபாலி; 2. தாமிரம், copper; 3. பித்தளை, brass.

நைபானி, அடுக்கு மல்லிகை, see நைபாலி,

நைப்பாளை, ஆடுதின்னாம் பாலை, ulcer plant — Aristolochia bracteata.

நைப்பூதிகம், சூலி, toon tree — Cedula toona.

நைப்பூலிகம், காரை, thorny webera — Canthium parviflorum.

நைமாமிசம், வெங்காயப்பூடு, onion plant — Allium cepa.

நையத்தட்டல், தூளாகும்படி தட்டுதல், striking to make into powder.

நையநறுக்குதல், பொடியாக நறுக்குதல், to cut or crush into very small pieces.

நையப்புடைத்தல், மொத்தை யாக்கல், beating into a pulpy mass — Mashing.

நையமசிதல், நன்றாய் அரைபடல், grinding to fineness.

நையம், see நைசியம்.

நையல், வைசூரி, small pox; 2. கிரந்தி நோய், syphililic sore; 3. மெலியச் செய்யும் நோய், wasting disease; 4. மெலிவு, emaciation; 5. துன்பம், suffering.

நையவேகல், குழைதல், becoming soft by over boiling.

நைராசியம், ஆசையின்மை being free from desire.

நைர்மல்லியம், சுத்தம், cleanliness; purity; 2. மாசின்மை, free from stain or flaw; free from all defects.

நைலம், கடற்பாசி மருந்து, medicine prepared from sea moss; 2. கடற்பாசி, sea moss.

நைவாதல், வருந்துதல், to be grieved at; being distressed.

நைவு, நைந்தது, that which is over riped, 2. வாடினது, that which has faded or drooped; 3. நோய், disease; 4. மெலிவு emaciation.

நொ

நொ, துன்பம், distress; 2. வலி, pain; 3. நோய், ailment; sickness; 4. வருத்தம். suffering.

நொக்கட்டா, இலக்கோட்டிப் பழம், Japan medlar — Briobotriya japonica, see நோக்கட்டாமரம்.

நொக்காங்குலை, நுங்குக்குலை, bunch of young palmyra fruits.

நொக்கு, வெடிப்பு, fissure, crack; crevice.

நொக்குதல், குறையச் செய்தல், cause to decrease; 2. அடித்தல், striking, beating.

நொங்கு, see நுங்கு.

நொங்குதல், விழுங்குதல், swallowing.

நொசி, வருந்துதல், suffering; 2. see நொசிதல்.

நொசிகம், வெண்சீந்தில், moon creeper — Tinosphora cordifolia.

நொசிதல், துவளல், being relaxed, 2. நுண்மையாதல், becoming a fine powder, 3. வளைதல், bending, 4. seeநொசிவு.

நொசிப்பு, மனதை ஒருவழிப் படுத்தல், concentration of mind; 2. சமாதி, silent contemplation.

நொசியிடை, நுட்பமான இடுப்பு, slender waist.

நொசிவு, நுண்மை, minuteness; 2. வாட்டம்; fading; 3. வளைந்தநிலை, a state of being bent.

நொச்சி, வெண்ணொச்சி, இதற்கு நிற்குண்டி, சிந்துவாரம், சுவேதசுரம், ஐந்திலை நொச்சியென்றும் பல பெயருண்டு, இது ஓர் சிறிய மரம்; கிளைக்கொம்புகள், இலைக்காம்புகள், மொசு மொசுப் பாயுள்ளன; இலைகள் நீண்ட காம்புகள் வாய்ந்தன; இலைக்கு 3-5 பிரிவினையுண்டு.

பூவின் புறவிதழ் ஐந்து பிரிவினை, பூக்கள் சிறியவை, நீலநிறம், வருஷ முழுவதும்

பூக்கும்; இந்தியாவில் எங்கும் பரவியுள்ளது. நாட்டு வைத்தியத்தில் மிக்க பேர்வாய்ந்தது. கட்டிகளைக் கரைத்துக் கெட்ட மாசுகளை வெளிப்படுத்துவதில் இதன் இலைக்கு நிகராக எந்த மூலிகைகளையும் சொல்ல முடியாது. ஆகவே, வாதப் பிடிப்பின் அழற்சியால் நேர்ந்த வீக்கத்தைக் கரைப்பது மல்லாமல் வெட்டை தடை படுவதால் ஏற்பட்ட அண்ட வீக்கத்தையும் போக்கும்; பறித்த இலைகளை வதக்கி வீக்கமுள்ள இடங்களில் சூடு பொறுக்க வைத்துக்கட்ட 3-4 தடவைக்குள் வீக்கம் போம். இவ்விலையைத் தண்ணீரி லிட்டு, கொதிக்க வைத்து அந்த ஆவியை வேதுபிடிக்க சுரம், நீர்க்கோவை, வாதப்பிடிப்பு குணமாகும், பிரசவித்த பெண்களுக்கு இதைத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சிக் குளியலாட்டலாம், தலைவலி, நீர்க்கோவைக்கு உலர்ந்த இலையைப் புகைச்சுருட்டாக உபயோகிக் கலாம், இதன் உலர்ந்த காய் குடற் பூச்சிகளை அழிக்கும்.

இதன் வேர் பலவிருத் தியைத் தரும்; சுரத்தைப் போக்கி, கோழையை அறுக்கும், இலைக்கஷாயம் நோயைத் தணித்தும், நீரைப் போக்கியும், மாதவிடாயை வெளிப்படுத்தும் தன்மையது. இலையால் பீனசம், சுரம், இரைப்பு, தந்தவலி, இருமல், நீரேற்றம் முதலியவைகள் போம். இலையுடன் சிறிது மிளகுகூட்டி அரைத்து சுண்டை பிரமாணம் கொள்ள குளிர்சுரம், அசீரணம், கைகால் பிடிப்பு, உடம்புவலி போம், நொச்சிப் பட்டைக்கும், இக்குணங்கள் உண்டு; இலைச்சாற்றினால் புண்களின் கழிவுகள் நீங்கும், அன்றியும் அதிலுள்ள பூச்சிகளும் சாகும், இதன் வேர்ப்பட்டைக் கஷாயம் மூத்திரப்பை அழற்சியையும் வாதப் பிடிப்பையும் போக்கும், இதன் பூக்கள் துவர்ப்பாகலின் அதிசார பேதி, வாந்தி பேதி, சுரம், ஈரல் நோய், மார்புவலி முதலியவைகளுக்கும் கொடுப் பதுண்டு, வேர்ச் சூரணம் மூலம் சீதபேதியில் ஆனசக் கடுப்பை நீக்கும். விதையைச்சரும வியாதிக்கும் குட்டத்திற்கும் உபயோகிப்ப துண்டு, பூக் களையும் இலைக் காம்பு களையும் சூரணம் செய்து வயிற்றிலும் குடலிலும் இருந்து வெளிப் படும் இரத்தப் போக்குக்குக் கொடுப்ப துண்டு. இதன் இலைச் சாற்றை எண்ணெ யிலிட்டுக் காய்ச்சிப் புரை யோடும் புண், கண்ட மாலை விரணம் இவைகளுக்கு உபயோகிக்கலாம்; மூவிலை நொச்சியும் குணத்தில் இதற்குச் சமமாகவே சொல்ல லாம், இதன் வேர்க்கஷாயம் கசப்பாதலால் முறை சுரத்திற்கும் சன்னிபாத சுரத்திற்கும் கொடுக்கலாம், இலையை வதக்கி ஒத்தடங் கொடுக்க வாதப் பிடிப்பும், நரம்பு சுளுக்கும் போம், மேலும் இலையை கண்களின் பலவீனத்திற்கும், வேரை அரிசிக் கஞ்சியில் அரைத்து புண்களை ஆற்றவும் உயபோ கிக்கலாம், இலைச்சாற்றை நல்லெண்ணெ யிலிட்டுக் காய்ச்சி தலைமயிர் வளரப் பூசுவதுண்டு, இதில் அடியிற் கண்டவாறு பல வகையுண்டு.

அவையாவன, the white notchi — Vitex negundo. It is also known as Nirgundi, Sindwar (preventing flow) white juice, five leaved chaste tree. It is a small tree; branchlets and petioles pubescently tomentose; leaves long petioled; 3-5 foliate; Calyx five toothed; flowers small, blue; flowering nearly all the year. It is widely distributed throughout India and has long established high tribute in native practice.It is anodyne, diuretic and emmenagogue and testifies to the value of fomentations and baths prepared with this noble herb. The leaves are discutient and their efficacy in dispelling inflammatory swellings of the joints from acute rheumatism and of the testis from suppersssed gonorrhoea is very well known.

The fresh leaves are heated over a fire till they are as hot as can be borne without pain, and then applied to the affected part and kept in situ by a bandage; the application is repeated three or four times daily untill the swelling subsides. Febrile catarrhal and rh.umatic affections are treated by means of a sort rude vapour bath prepared with this plant. A decoction of the aromatic leaves helps to form the warm bath for women after delivery. Dried leaves are smoked in cases of head ache and catarrh.

The dried fruit is deemed a vermifuge. The root is tonic, febrifuge, and expectorant. decoction of the leaves is aperient, diuretic and emmenagogue. Leaves are useful in cases of catarrh of the nose, fever, bronchitis tooth pain, cough, accumulation of morbid fluid etc. Leaves ground with black pepper, rolled into balls of shoonday size and taken internally alleviates ague, indigestion, rheumatic affections of the limbs and bodily pain. The bark of the tree is said to possess the same properties as disease and leprosy. The flowers and stalks reduced to powder are also given in cases of discharge of blood from the stomach and bowels. An oil prepared with the juice of the leaves is applied to sinuses and scrofulous sores.

Vitex trifolia is not in any way inferior to this variety in properties. The root in decoction is pleasant bitter and administered in cases of intermittent and typhus fevers. Leaves are simply warmed and applied as fomentation in cases of rheumatism and sprain. The leaves are employed in weakness of the eyes; the root ground with the rice conjee are good for healing the ulcers. An ointment is made from juice of the leaves and used for promoting the growth of hair. The plant consists of different varieties viz.

1. வெண்ணொச்சி, five leaved chaste tree see நொச்சி.
2. கரு நொச்சி, black notchy, common gendarussa — Justicia gendarussa.
3. நீர் நொச்சி, water notchy — Vitex integerrima.
4. சிறு நொச்சி, sessile leaf let chaste tree.
5. காட்டு நொச்சி, tall chaste tree — Vitex altissima.
6. மயிலடி நொச்சி, peacock's foot tree — Vitex pubes.
7. மலைநொச்சி, hill notchy — Wallrothia articulata.
8. மூவிலை நொச்சி, three leaved chaste tree — vitex trifolia.
9. ஆற்று நொச்சி, small leaved glory tree. Cleodendron inerme.
10. வயல் நொச்சி, field notchy — Vitex leucoxylon.
11. ஐந்திலை நொச்சி, see நொச்சி.

NOTE:- The plant is known as 'Sinduvaram' since it is used to prevent flow of humours and laxity. Ashes of the plant are used as mordant. The கருநொச்சி referred to in item No.2 belongs to different genus and it refers only to the blue variety commonly found. But the one contemplated in Siddha science is quite distinct variety for the details of which see under 'கரு நொச்சி'. The common plant is highly extolled in the treatment of beriberi and in the allied and obscure affections as burning of the feet Ignipeditis. Compare also plants in othergenus.

1. நீர் நொச்சி, Cleodendron inerme.
2. கார் நொச்சி, Jatropha ancas.
3. கருநொச்சி, Justicia gendarussa.
4. நீர் நொச்சி, Vernonia anthilmintica.

நொச்சி, சதகுப்பை which see; 2. பதினென் மூலிகைகளி லொன்று, one of the eighteen drugs.

நொச்சுலம், முல்லை, cared jasmine — Jasminum angustifolium.

நொச்சுளி, ஆவிற்புங்கு, a variety of Pungu — Dalbergia genus.

நொடி, கைந்நொடி, time of a snap of the finger; 2. கால நுட்பம், minuteness of time, 3. நோய்த் துன்பம், suffering from a disease.

நொடிப்பு, கணப்பொழுது, a minute time.

நொடியாதிப்பூடு, கொத்தான், air creeper — Cassytha filiformis.

நொடிவேதை, நொடிப்பொழுதில் அதாவது சிறிய கால அளவில் செய்யும் வாதவித்தை, transmuling metals into gold in a minute time with in a short time.

நொடுநொடுத்தல், சிறிது பரபரப்பாய் நடத்தல், walking little briskly.

நொட்டாங்கை, பழக்கமாக உபயோகிக்கும் இடது கை, left hand used in habit with more dexterity than the right.

நொதிவாயு, சேற்றுக்கும்பியி லிருந்து எழும் வாயு, the carbon hydrogen gas rising in swamphy or boggy places — Marsh gas.

நொதுநொதுத்தல், அதிகமாய்ப் புளித்து நுரையெழும்பல்,

rising of froth from excessive fermentation.

நொந்தகைமை, நோய், disease; 2. பலவீனம், weakness.

நொந்தசோறு, பதனமிழுந்த அன்னம், rotten cooked rice — Stale rice.

நொந்தசோறுண்ணல், இதனால் வயிற்றுக் கோளாறு, அக்கினி மந்தம், வாதநோய் இவை களுண்டாம், eating cooked rice that has become stale. This brings on bowel complaints, loss of appetite and rheumatic complaints.

நொந்தபுண், அழிந்தபுண், rotten sore. sloughing wound.

நொந்தலை, see நொந்தகைமை, 2. தீ முறிப்பூடு, an unknown plant suspending the action of fire.

நொந்தன்னம், see நொந்தசோறு.

நொந்தாகிரி, சூரிய காந்தி, sun flower — Helianthus indicus alias H. annuus; 2. பாதிரிமரம். trumpet flower tree — Bignonia chela noidus.

நொந்தாவிகம், சூழ்ப்பிராய், which see.

நொந்திரா, கச்சந்திராய், Indian chickweed — Mollugo parviflora.

நொந்துபோதல், see நொந்துதல்.

நொப்பு, அழுக்கு, dirt; 2. நுரை, froth.

நொப்புநுரை, காய்ச்சும்பொழுது நுரையும், the impurities arising on the top surface when boiling a solution.

நொய், குறுணை, crushed or broken rice, 2. குறுநொய், minute particles as of grains — rice etc; 3. நொய்யரிசி, broken rice; 4. பன்னீர், rose water; 5. தவிடு bran.

நொய்தல், நுண்மை, minuteness.

நொய்தல், நுண்மையாதல், crushing into minute and fine particles.

நொய்தாக்கல், நுண்மையாக்குதல், reducing to fine particles making subtle; subtilising.

நொய்துகம், நரிவழுக்கை, diabetis plant — Graliola monieri.

நொய்தெனல், மெல்லியதாதல், becoming small and soft.

நொய்ம்மீன், சிறிய அல்லது பொடிமீன், small little fish; 2. அயிரை மீன், small river fish; herring fish.

நொய்ம்மை, இலேசம், lightness; 2. நுண்மை softness.

நொய்யபூதம், சூக்கும பூதம், subtle element.

நொய்யம்மை, குருவம்மை, very small pink macules.

நொய்யரிசி, குருநெல், broken or crushed rice; sharp grain.

நொய்யவன், பலவீனன், weakness, weakling;

நொய்வு, see நொய்மை; 2. மனவருத்தம், mental worry.

நொரு, காய்ப்பு மாறிய பின்னரும்பும் பிஞ்சு small fruits or shoots sprouting after the season; 2. பயிரினடியில் முளைப்பது, small weeds at the bottom of crops.

நொருகை, தின்பண்டம், eatables.

நொருக்கல், see நொருக்குதல்,.

நொருக்காய், குருக்காய், see நொரு.

நொருக்குதல், நருக்குதல், crushing; 2. அடித்தல், beating.

நொருங்கல், See நொருங்குதல்.

நொருங்கவிடித்தல், பொடியாகும் படி இடித்தல், pounding so as to become powder or small particles.

நொருங்குதல், பொடியாதல், being pulverised.

நொருச்சி, காட்டுத்துளசி, wild basil — Ocimum adscendens.

நொருவல், நொருங்குண்ட தூள், crushed powder; 2. தின் பண்டம்.

நொலை, அப்பவருக்கம், different varieties of cakes or confectionaries; 2. அப்பம், rice cake.

நொலையன், see நொலை.

நொவ்வு, நோய், disease; 2. வலி, pain; 3. மெலிந்துபோதல் wasting away, getting emaciated; 4. see நோய்வு; 5. மெலிவு, thinness.

நொழுந்துதல், நுழைத்தல், thursting; penetrating.

நொள்கல், See நொள்குதல்.

நொள்குதல், சுருங்குதல், withering; 2. இளைத்தல், emaciating.

நொள்ளல், குருடு, blindness; 2. பார்வையற்றுக் கண் குழிந்த நிலை, sunkenness of eyes following blindness; 3. கொசுகு, mosquito.

நொள்ளுதல், விழுங்குதல், swallowing.

நொள்ளை, குருடு, blindness; 2. நாகரவண்டு golden or yellow coloured beetle — Cantharides,

See நாகரவண்டு; 3. நொள்ளைக் கண், sunken blind eyes.

நொள்ளைக்கண், ஆழ்ந்து பார்வை மாறிய கண் eye that has lost its sight.

நொள்ளைமடையான, வயல்மடையான், paddy bird — Ardeola leucopetra — Commonly frequenting paddy fields and ponds. It is so called from its oblique vision. It is also known as pond heron.

நொறுகை, நொருவை, lunch; 2. தின்பண்டம், eatables.

நொறுக்கரிசி, நொறுக்கிய அரிசி, crushed rice; 2. பாதிவெந்த சோறு, half cooked rice.

நொறுக்குவெள்ளி, தங்கத்தோடு சேர்த்து உருக்கி மட்டப் பொன்னாகச் செய்விக்கு மோர்வித இராசயன வெள்ளி, a chemical silver used for mixing with gold so as to get an inferior gold.

நொறுங்கல், see நொறுங்குதல்,

நொறுங்கு, நொய், broken rice; 2. see நொறுங்குதல்,

நொறுங்குதல், பொடியாதல், being reduced to powder, நொருங்குதல், becoming fine powder.

நொறுவை, see நொறுகை.

நொற்பம், நொறுகை, eatables.

நொன்றி, மான், deer.

நோ

நோ, நோய், disease; 2. துன்பம், afftiction; 3. பலவீனம், weakness; 4. வேதனைப் படல், feeling pain; 5. வலி, pain; 6. வேதனை, suffering from pain.

நோக்கப்பண்ணல், வலியுண்டாகச் செய்தல், causing pain; 2. துன்பப்படுத்தல், causing distress.

நோகுதல், see நோதல்.

நோக்காடு, நோய்,disease; 2. வலி, pain; 3. மனநோவு, mental agony.

நோக்கு, கண், eye; 2. பார்வை, sight; 3. அழகு, beauty; 4. எண்ணம், thought, intention;5. வினோதக்கூத்து, novel dance; 6. அறிவு, intellect.

நோக்குநோக்கி, ஆள்வாடைத் தட்டி, an unknown plant.

நோசரிகம், நித்தக்கத்தரி, long brinjal — Solaman melongena.

நோசல், நோவு, pain; 3. நோய், disease, sickness.

நோசிதம், கொடிக்குறிஞ்சா, small Indian ipecacunha — Gymnema sylvestris.

நோசசோளம், வெண்சோளம், white maize.

நோஞ்சல், see நோய்ஞ்சல், இளைப்பு weakness; 3. மெலிவு, emaciation, thinness.

நோஞ்சவம், மல்லாக்கொட்டை, ground nut — Manilla ground nut.

நோதல், நோகுதல், paining; 2. துன்புறல், suffering;3. நோயுறல், falling ill;4. பலவீனம், weakness.

நோதளை, பிராய்முட்டி, Ceylon pavonia — Poania zeylanica.

நோபித்திரினி, நோய், disease; 2. கேடு, bad health.

நோப்படுதல், காயப்படுதல், sustaining injury, being injured; 2. நோயினால் துன்பப்படல்,suffering from pain or disease.

நோம்புவலி, குதிரைவாலிப்பூடு, a family of plants resembling horse tail as horse tail grass — Panicum brizoides, horse tail millet — Panicumerticillatum.

நோம்புவிரலி, மஞ்சட் கொத்து, turmeric plant.

நோம்பூகயம், see நிலப்பூசனி.

நோம்பூரிகம், சர்க்கரைப்பூசனி, yellow pumpkin — Cucurbita pepo.

நோயக்கலல், உடம்பினின்று வியாதி நீங்குதல், getting cured or free from diseases Disappearance of the disease from the body.

நோயணுகல், நோய்படல், falling ill, getting struck by disease.

நோயணுகாவிதி, இது ஓர் சுகாதாரத்தைப் போன்றது, a treatise by Theriyar dealing with rules on prevention of diseases. It is a work similar to Hygeine.

நோயறை, நோயாளிகள் இருக்கும் அறை.patien's room.

நோயற்றவுடம்பு, சுகசரீரம், healthy body.

நோயிரட்டித்தல், நோய் திரும்பக்காணல், relapse of a disease;2. நோய் சிக்குண்டு அதிகரித்தல், complication of a disease; 3. நோய் கொடுமையாதல், disease getting virulent.

நோயிருத்தி, சமனத்துவயம், a kind of plant subsiding the virulency of a disease; 2. நோயை நிலைக்கச் செய்யும் மூலிகை, any plant or drug rendering a disease chronic or lingering.

நோயிலக்கணம், நோயைப் பற்றிய குணபாடம், that branch of medical science which treats of classification of diseases - Nosology;2. நோயின் குறியைப்பற்றிச் சொல்லு நூல், that branch of science which treats of symptoms - Symptamatology; 3. நோய்க்குறி, the characteristic symptoms of a disease.

நோயிலாதாளி, see, நொளைதாளி.

நோயில்நாடி, மூன்று நாடியும் தன் மாத்திரையில் குறையாது உடம்பின் நோயின்மையைக் காட்டும் நாடி நடைகள், the regular pulse beat in respect of the three humours without any deviation or varied changes - a clear indication of healthy body.

நோய், உடம்பில் பல விகற்பங்கள் ஏற்பட்டு அதின் சக்தி அதிகரித்து, இருக்கும்போது, அதை எதிர்க்க தேக சுபாவத்திற்கு முடியாத தன்மை; (in pathology)that condition arising from inability of bodily nature to meet with or neutralise the increased morbid effectsresulting from the vaied changed taking place in the system.

2. உடம்பையாவது உயிர் வாழ்க்கையையாவது அல்லது இரண்டையுமே தாக்குவது, இத்தகைய நிலை, உடம்பு மனோபாவம் அல்லது தெய்வீகம் என்பதின் குணத்தைப் பற்றியே நிற்கும், (in philosophy) anything that afflicts either the body or the living personality — self or both. It may be either physical mental or spiritual in its character.

3. உடம்பிலிருக்கும் வாதபித்த சிலேட்டமங்கள் தத்தம் மாத்திரையினின்று உடம்பிற்கு ஏற்படும் கெடுதி, அப்படி யல்லாமல் சமனிலையில் நிற்பதே ஆரோக்கியம்.(in Humoural pathology) malady or disorder in the loving body arising from deviation in the system; when in equlibrium they bring about freedom from disease ie healthy state.

4. வாதபித்த சிலேட்டும மாகிய மூன்று சக்திகளுக்குண்டான வேறுபாட்டினால் சப்த தாதுக்களின் தொழிலை மாறுபடச் செய்வதனால் அவ்வவ்வற்குற்ற தன்மைகள் குறைந்தும் மிகுந்தும் போவதினால் உடம்பிற்கு ஏற்படும் நிலைமை, இது காரணம் பற்றியே திருவள்ளுவரும் ''மிகினும் குறையினும் நோய் செய்யும் மேலோர். வலி முதலா வெண்ணிய மூன்று'' என்று கூறியுள்ளார்.

நோய்ச்சல், நோய்கொள்ளல், getting afflicted with disease.

நோய்ஞ்சல், இளைத்துப் போதல், to become emaciated.

நோய்ஞ்சான், மெலிந்தவன், a weak person; 2. நோயாளி, sick person.

நோய்ஞ்சி, see நோஞ்சியன்.

நோய்ஞ்சியன், நோயாளி, patient; 2. மெலிந்தவன், an emaciated person; one who is emaciated from disease.

நோய்தடுக்கி, பிணி வாராமல் தடுக்குமருந்து, preventie remedies as vaccine; medicines preventing disease — Prophylactics.

நோய்தடுக்கும், பிணி வாராமற் காக்கும், tending toward off disease — Prophylactics; Prophylactical.

நோய்தவருண்டல், பிணி தீரல், curingof a disease.

நோய்தீர்க்குமருந்து, பிணியைக் குணப்படுத்துமருந்து, curing medicine curatives;2. நாளாவட்டத்தில் பிணியை நீக்கி ஆரோக்கியத்தை தரும் மருந்து, medicine which produces favourable change and reestablishes healthy function of the body — Aterative.

நோய்தெரித்தல், பிணி நீங்கல், getting rid of disease being free from disease.

நோய்த்த, நோய்கொண்ட, being affected with disease marked with sickness — Sickly.

நோய்(த்)திடம், பிணியின் வன்மை, strength of a disease; 2. நோயின் உண்மை, reality of disease.

நோய்நொடி, பிணியும் துன்பமும், disease with its sufferings.

நோய்படல், நோயுறல், falling sick.

நோய்பீதி, உடம்பிற்கு அசௌக்கிய மேற்படுமென்ற கவலை அல்லது பயம், இது சாதாரணமாய் மண்ணீரலின் கோளாறினால் ஏற்படுவதாகக் கருதப்படும்.

நோய்புகலும்பாண்டம், பிணிபுகும் உடம்பு, body liable to disease.

நோய்ப்பூச்சி, நோய்ப்புழு, organisms which cause disease — germ; bacillus.

நோய்மக்களித்தல், நோய் திரும்பல், relapse of disease.

நோய்மருந்தளவு, சாப்பிடும் மருந்தளவைக் குறிக்கும் தேரையர் செய்த ஓர் தமிழ்

வைத்தியநூல், a Tamil medical work by Theraiyar on prescriptions and administration of remedies;2. நோய்க்கு தக்கவாறு நிர்ணயிக்கும் மருந்தளவு, preportion of medicine determined according to the nature of and requirement for a particular disease — Prescription.

நோய்மருந்து, நோய்க்குரிய மருந்து, a remedy specially indicated for any particular diseases.

நோய்மும்மரம், நோயின் வேகம். இது திடிரெனச் சம்பவிக்கும், sudden recurrence or intensification of symptoms — Paroxysm.

நோய்முறிதல், நோய்கெட்டு உடம்பினின்று அகலல், the separation of a disease from the system after its being oer powdered.

நோய்வரப்பண்ணல், நோயை உண்டாக்குதல், to cause a disease as is done i animals for observing the effect of medicine; 2. நோய்க்கிடங் கொடுத்தல், accomodating disease by intemperate habits.

நோய்வன்மை, நோயின் கொடுமை, severity of a disease.

நோய்விழலாய்ப் போதல், நோய்ப் பிரயோசனமற்றுப் போதல், diseases being rendered inert of inactive.

நோய்விழுதல், செடி அல்லது பயிர்களில் பூச்சி விழுந்து கெடல், plants and crops falling prey to insects or worms which cause disease.

நோலாகிதம்,திருநீற்றுப்பச்சை, holy ashes leaf — Ocimum basilicum.

நோலிகம், நின்றிடந் தீய்ஞ்சான், அதாவது குருவிச்சை,honey suckle mistletoe — Loranthus elasticus.

நோலை, எள்ளுருண்டை, rape and seed ball boiled in jaggery.

நோலைத்தாளி, seeநொளைதாளி.

நோவல், வலியெடுத்தல், see நோதல்.

நோவறை, Seeநோயறை

நோவாற்றுமருந்து, வலியைத் தணிக்கும் மருந்து, அபினி முதலியவை.

நோவு, நோய், disease.2. மஞ்சள்,saffron; 3. வலி,smart pain;4. மெலிவு, borne down with pain;5. வருத்தம், affliction; 6. பிரசவ வேதனை, labour pain.

நோவுகொள்ளல், See நோய்கொள்ளல்.

நோவுங்கால், முடவாட்டுக்கால், lame leg of a sheep.

நோவுண்டாக்கல்,வலியை உண்டுபண்ணல் causing pain.

நோவுண்டாதல், வலியெடுத்தல், pain coming on as labour pain.

நோவுபோக்கி, நேர்வாளம், croton seed, purging nut so called of its eliminiating certain diseases from the system.

நோவுவாங்கல், வலிதீர்த்தல், ceasing of pain.

நோனி, பெண் கறி, female genital.

நோன்பு, கொன்று தின்னாமை, remaining without killing or eating flesh; 2. கௌரி பாஷாணம், yellow arsenic.

நோன்பென்றபெண், நோன்பு, vow.

நௌ

நௌகதாரி,செங்கத்தாரி, இதன் சமூலமும் பட்டையும், மருத்திற்குதவும். orbicular — Capparia pedunculosa. The entire plant and the bark have medicinal value.

நௌகாகிதம், சூரை, jackal, jujubi — Ziziphus napeca alias Z.oenaplia.

நௌகாசரை, எட்டிமரம், nuxvomica tree — Strych nine nuxvomica.

நௌகாசினி, சாணாக்கீரை, a kind of greens — Olender — leaved cacalic.

நௌகாபத்திரி, சாதிபத்திரி, mace — Myristica fragrans.

நௌளகு, சிறு சூழந்துக்குச்சி, a small or medium torch tree small jungle geranium — Ixora parviflora (zeylanica).

நௌபத்தோமம், குரோசாணி ஓமம், Khorassan ajwaun common henbane — Hyoscyamus niger.

நௌபந்திகை, மோகணத்தி யென்றும் ஓர் வகை வாழை, a species of plantain tree — Musaparadisiaca genus.

நௌலி, புல்லுருவி, a parasitic plant — Loranthus genus.

நௌபுல்லுருவி, a parasitic plant — Loranthus genus.

நௌவி, மான், deer.

நௌவுகி, சூரத்து நிலாவாரை, surat senna, foreign senna — Cassia acutifolia.

நௌவுகு, கையாந்தகரை, eclipse plant — Eclîptaprostata.